திவாகரம்

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை

இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்

1993

திவாகரம்

இரண்டாம் தொகுதி

திவாகரம்

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை

இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்

1993

திவாகரம் (இரண்டாம் தொகுதி)
A Critical Edition of Tivakara Nikantu (Volume II)

முதல் பதிப்பு 1993

விலை: ரூ. 110–00

நூல்கள் கிடைக்குமிடம்

இயக்குநர்
பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

அச்சிட்டோர்:
ஜனசக்தி அச்சகம்
சென்னை.

திவாகரம்
இரண்டாம் தொகுதி

பொருளடக்கம்

9.	செயல் பற்றிய பெயர்த் தொகுதி	519—596
10.	ஒலி பற்றிய பெயர்த் தொகுதி	597—758
11.	ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி	759—844
12.	பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி	845—950
	சொற்பொருள் அகராதி	951—1192
	தலைப்புப் பெயர் அகராதி	1193—1229

பதிப்புரை

தமிழ் மொழியின் வளத்தையும் சொற்பொருட் செறிவின் நுட்பத்தையும் நிகண்டு நூல்கள் காலந்தோறும் வெளிப்படுத்தி யுள்ளன. இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கு நிகண்டு நூல்களே கருவி நூல்களாகத் திகழ்ந்தமையை முன்னையோர் கூற்றுகளி னின்றும் அறிய முடிகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நிகண்டு நூல்களுள் முதன்மை வாய்ந்ததாகத் திகழ்வது திவாகரர் இயற்றிய திவாகர நிகண்டு ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூலுள் அக்காலத்திற்கு முன்னர் வழங்கிய பல ஆயிரம் சொற்கள் நன்கு வகைதொகைசெய்து தரப்பெற் றுள்ளன. இச் சொற்களின் தொகுதியால் அக்காலத்திற்கு முன்னைய பல்வேறு பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் நன்கு புலனாகும். பண்பாட்டு அடிப்படையில் ஆய்வதற்கு இந்நூலுள் பல களங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முதன் முதலில் 1839 ஆம் ஆண்டில் இந்நூல் சென்னைக் கல்விச் சங்கத்துப் புலவர் தாண்டவராய முதலியார் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. இதற்குப் பின்னர் பல பதிப்புகள் தோன்றிடினும் பல்வேறு சுவடிகளையும் ஆராய்ந்து உரிய பாட வேறுபாடுகளுடன் பதிப்பிக்கப் பெறவில்லை. திவாகரம் இன்னும் நன்கு ஆராய்ந்து பதிப்பிக்கப்பட வேண்டிய இன்றியமை யாமையைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தம் முடைய பதிப்புகளில் வற்புறுத்தியுள்ளார்கள். அவரும் இந்நூல் குறித்து ஆராய்வதற்காகப் பல்வேறு சுவடிகளையும் தொகுத்து வைத்திருந்தமை இங்கு எண்ணுதற்குரியது. அச்சுவடிகள் அனைத்தும் இன்று கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

திவாகர ஆய்வுப் பதிப்புத் திட்டத்திற்குப் பல்கலைக் கழக நிதிநல்கைக்குழு 1976 ஆம் ஆண்டு இசைவு வழங்கியது. அதன் உதவியால் பழஞ்சுவடிகள் உள்ள நூலகங்கள் அனைத்திற்கும் நேரில் சென்று ஆய்வுக் குறிப்புகள் திரட்டப் பெற்றன. கல்கத் தாவில் உள்ள தேசிய நூலகம், திருவனந்தபுரம் பல்கலைக் கழகச் சுவடி நூலகம், மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், சென்னை அரசினர் சுவடி நூலகம் முதலிய பல நிறுவனங்கட்கும் சென்று சுவடிகளை ஆய்ந்து குறிப்புகள் திரட்டப் பெற்றன. தனியார் தொகுப்புகளினின்றும் சில சுவடிகள் பயன்

பட்டன. இந்நிறுவனங்களில் பணியாற்றிய அன்பர்களும், பிற நண்பர்களும், இப்பணியின் போது பேருதவி புரிந்தனர். இவர் கட்கெல்லாம் அன்பு நிறைந்த நன்றி உரியது.

திவாகர ஆய்வுப் பதிப்பு இரு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. முதல் தொகுதியில் ஆய்வு முன்னுரையும், தெய்வப்பெயர்த் தொகுதி தொடங்கிப் பண்பு பற்றிய பெயர்த் தொகுதி ஈறாக முதல் எட்டுத் தொகுதிகளும் உள்ளன.

முதல் தொகுதியில் அமைந்துள்ள ஆய்வு முன்னுரையில் நிகண்டின் தோற்றமும் வளர்ச்சியும், திவாகர நூல் அமைப்பு, திவாகரப் பதிப்புகள், திவாகர ஆய்வுப் பதிப்பு அமைந்துள்ள முறை ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

இத்தொகுதியில் இறுதி நான்கு தொகுதிகளும் நிகண்டில் அமைந்துள்ள சொற்பொருள் அடைவும் தலைப்புப் பெயர் அகராதியும் உள்ளன.

சொற்பொருளடைவு மிக விரிந்த நிலையில் பல்வேறு நிலைகளிலும் பொருள் காண்பதற்குத் துணையாகும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இப்பதிப்பு நன்முறையில் உருவாவதற்குத் துணை நின்ற பெரு மக்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பதிப்புத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டு நிதியுதவி நல்கிய பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவிற்கும், இப்பதிப்பினை வெளியிடுவதற்கு இசைவளித்த சென்னைப் பல்கலைக் கழக மாண்பமை துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பதிவாளர், பதிப்புத் துறையினர் அனைவருக்கும் நன்றி உரியது.

ஆண்டுகள் பலவாயினும் நன்முறையில் அச்சிட்டுதவிய ஜனசக்தி அச்சகத்தார்க்கும், அச்சாகும் போது அவ்வப்போது உறுதுணை புரிந்த ஆய்வு மாணவர்கட்கும் நன்றி உரியது.

பல்லாண்டு முயற்சியின் பயனாக இப்பெரு நூற்பதிப்பு வெளிவருவதற்கு இன்னும் பல நண்பர்கள் துணைநின்று ஊக்குவித்தனர். இவர்கட்கெல்லாம் எங்கள் உளங்கனிந்த நன்றி உரியது.

நிகண்டுப் பதிப்புகளுக்கெல்லாம் முன்னோடியாகவும் வழி காட்டியாயும் விளங்கிய பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நினைவாக இவ்விரு தொகுதிகளையும் வெளியிடுவதில், பெருமகிழ்வு கொள்கிறோம்.

தமிழ் மொழியின் சொற்பொருள் வளத்தை அறிஞருலகு இப்பதிப்பு நூலின் வழி அறிந்து மகிழும் என்று நம்புகின்றோம். தமிழ்கூறு நல்லுலகம் இதனை ஏற்றுப் போற்றி வரவேற்குமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

சென்னை
2.10—93

மு. சண்முகம் பிள்ளை
இ. சுந்தரமூர்த்தி
பதிப்பாசிரியர்

ஒன்பதாவது

செயல்பற்றிய பெயர்த்தொகுதி

ஒன்பதாவது

செயல்பற்றிய பெயர்த்தொகுதி

1558. தொழிலின் பெயர்

கருமமும், செயலும், தருமமும், **தொழிலும்**
வினையும் ஒருபொருள விதியும் ஆகும்.

தொழிலின் பெயர் : (6)

1. கருமம், 2. செயல், 3. தருமம், 4. தொழில், 5. வினை, 6. விதி. (1)

1559. தொழிற்பயில்வின் பெயர்

தொறு என் கிளவி **தொழிற்பயில்வு** ஆகும்.

தொழிற்பயில்வின் பெயர் : (1)

தொறு. (2)

1560. தொழில் செய்தலின் பெயர்

அயர்தல், குயிற்றல், ஆற்றல், இழைத்தல்,
வனைதல், **செய்தல்** மாற்றம் ஆகும்.

தொழில் செய்தலின் பெயர் : (5)

1. அயர்தல், 2. குயிற்றல், 3. ஆற்றல், 4. இழைத்தல், 5. வனைதல். (3

1561. மகளிர் விளையாட்டின் பெயர்

ஓரை, பண்ணை, கெடவரல், பொய்தல்,
உண்டாட்டு, கிரீடை, உப்பு, கேளி,
வண்டல், தொடலை, **மகளிர் விளையாட்டு**,

மகளிர் விளையாட்டின் பெயர் : (10)

1. ஒரை, 2. பண்ணை, 3. கெடவரல், 4. பொய்தல், 5. உண்டாட்டு, 6. கிரீடை, 7. உப்பு, 8. கேளி, 9. வண்டல், 10. தொடலை.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனோடு,

'விலாசனை யென்பது மவர்விளையாட்டே'

என்பது இந்நூற்பாவின் இறுதியடியாக அச்சுப் பிரதியில் உள்ளது. ஆனால், பழமையான திவாகரச் சுவடிகளில் இவ்வடி இல்லை.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

பிறப்பித்தலின் பெயர்

226. ★ நியமித்தல் விதித்த னிருமித்தல் சிட்டித்தல்
படைத்தல் பிறப்பித்தல் பாரித் தலுமாம். (4)

1562. கொண்டாடலின் பெயர்

பாராட்டு என்பது பரிந்து **கொண்டாடல்.**

கொண்டாடலின் பெயர் : (1)

பாராட்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொண்டாடற் பெயர், கொண்டாட்டின் பெயர்.

'பாராட்டல் மெச்சல் பரிந்து கொண்டாடல்' என்பது அச்சுப்பிரதிப் பாடம். (5)

1563. விளையாடலின் பெயர்

வினோதம் (பொழுது கழித்தல்) **விளையாட்டு.**

விளையாடலின் பெயர் : (1)

வினோதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பொழுது கழித்து விளையாடலின் பெயர், விளையாட்டின் பெயர்.

3—4 கழித்து விளையாடல். (6)

1564. புதுமணத்தின் பெயர்

வதுவை, கடியே, மன்றல்இம் மூன்றும்
புதுமணப் பெயர்எனப் புகல்வர் புலவர்.

புதுமணத்தின் பெயர் : (3)

1. வதுவை, 2. கடி, 3. மன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 வதுவைகடி மன்றல் என்றிவை மூன்றும்

2 : 3 புகன்றனர். (7)

1565. கைப்பற்றலின் பெயர்

கடியும், தீவேள்வியும் **கைப்பற்றல்** ஆகும்.

கைப்பற்றலின் பெயர் : (2)

1. கடி, 2. தீவேள்வி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 வேள்வியும்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

மற்றும் கைப்பற்றலின் பெயர்

227. ★ விதியுளி வேட்டல் மணங்கல் யாணந்
தீவலஞ் செய்தலுஞ் செப்பற் பால. (8)

1566. விழாவின் பெயர்

முருகும், சாறும், சேறும், **விழாவே.**

விழாவின் பெயர் : (3)

1. முருகு, 2. சாறு, 3. சேறு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திருவிழாவின் பெயர்.

இதனோடு, 'உயர்துணங் கறலு முற்சவமு மாகும்' என ஓர் அடி அதிகமாக அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. **(9)**

1567. ஒப்பனையின் பெயர்

மண்ணல், கைசெய்தல், பொற்பு, அலங்கரித்தல்,
புனைதல், மிலைதல், வேய்தல், அணிதல்,
வனைதல், ஒப்பனை மாற்றம் ஆகும்.

ஒப்பனையின் பெயர் : (9)

1. மண்ணல், 2. கைசெய்தல், 3. பொற்பு, 4. அலங்கரித்தல், 5. புனைதல், 6. மிலைதல், 7. வேய்தல், 8. அணிதல், 9. வனைதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2 அகைதல், தகைதல், கைவைத்தல், பந்தித்தல். **(10)**

1568. சூடுதலின் பெயர்

மிலைதலும், மலைதலும், வேய்தலும் சூடுதல்.

சூடுதலின் பெயர் : (3)

1. மிலைதல், 2. மலைதல், 3. வேய்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து மூன்று நூற்பாக்கள் ஒருசில பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றன. அவை வருமாறு :

அப்புதலின் பெயர்

கொட்டலுஞ் சதுர்த்தலு மப்புத லாகும்.

பூசுதலின் பெயர்

புலர்த்தலும் வரித்தலும் பூசுதலாகும்.

சொருகுதலின் பெயர்

அடைச்சல் செருகுத லாஞ்சொரு குதற்கே

சொருகுதலின் பெயர் மட்டும் அச்சுப்பிரதியிலும் காணப் படுகிறது. (11)

1569. அடிசிலூண் தொழிலின் பெயர்

அயிறலும், மிசைதலும், **அடிசிலூண் தொழிலே,**
(பகரின்) கைதொடலும், பாரணமும், ஆகும்.

அடிசிலூண் தொழிலின் பெயர் : (4)

1. அயிறல், 2. மிசைதல், 3. கைதொடல், 4. பாரணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உண்டலின் பெயர்.

1 : 3—4 அடிசிலூண் டொழிலே

2 : 1—2 பகரிற்கை தொட்டலும். (12)

1570. உண்ணலின் பெயர்

துய்த்தல், அருந்துதல், ஆர்தல், துவ்வுதல்,
துற்றல், நுகர்தல், மாந்தல், அயிறல்,
உண்டல், தின்றல், பருகுதல் என்றுஇவை
பண்பின் தொழிலைப் பருகும் கிளவி.

உண்ணலின் பண்பிற்றொழிற் பெயர் : (11)

1. துய்த்தல், 2. அருந்துதல், 3. ஆர்தல், 4. துவ்வுதல், 5. துற்றல், 6. நுகர்தல், 7. மாந்தல், 8. அயிறல், 9. உண்டல், 10. தின்றல், 11. பருகுதல்,

பாடவேறுபாடு—தலைப்பு

தலைப்பு : உண்ணும் பண்பின் தொழிலின் பெயர், உண்டல் தின்றல் பருகுதலின் பெயர்.

3 : 4 விலையுணும், விலையுண்ணும். (13)

1571. நுகர்தலின் பெயர்

நுங்கல், விழுங்கல், நொண்டல், **நுகர்தல்.**

நுகர்தலின் பெயர் : (3)

1. நுங்கல், 2. விழுங்கல், 3. நொண்டல்.

பாடவேறுபாடு—தலைப்பு

இந்நூற்பாவை விழுங்கலின் பெயர், நுகர்தலின் பெயர் என இரு வேறு நூற்பாக்களாகவும் ஒரு சில பிரதிகள் கொண்டுள்ளன. அவை வருமாறு :

விழுங்கலின் பெயர்

நுங்கல் விழுங்கல்.

நுகர்தலின் பெயர்

நொண்ட னுகர்தல். (14)

1572. துயிறலின் பெயர்

கண்படை, கண்வளர்தல், கனவோடு, அனந்தல்,
துஞ்சல், பள்ளி, துயிறல் ஆகும்.

துயிறலின் பெயர் : (6)

1. கண்படை, 2. கண்வளர்தல், 3. கனவு, 4. அனந்தல், 5. துஞ்சல், 6. பள்ளி.

பாடவேறுபாடு—தலைப்பு

தலைப்பு : உறங்குதலின் பெயர், உறங்கலின் பெயர்.

1 : 4 அனந்தர்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு .

மற்றுந் துயிறலின் பெயர் :

228. ✶ உறங்கலும் பண்டயு முரைப்ப ரதற்கே.

இதன் பின் அச்சுப்பிரதியில்,

நிரம்பாத் தூக்கத்தின் பெயர்

'தூங்க னிரம்பாத் தூக்க மென்ப'

என்னும் நூற்பா காணப்படுகிறது. ஆனால், இது பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (15)

1573. களவின் பெயர்

கரப்பு, கட்டல், கள்ளல், கயவு,
கரவடத் தோடு, பட்டிமை களவே,

களவின் பெயர் : (6)

1. கரப்பு, 2. கட்டல், 3. கள்ளல், 4. கயவு, 5. கரவடம், 6. பட்டிமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 கரவு—அச்சுப் பிரதி.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா :

மற்றுங் களவின் பெயர்

229. ★ தேயந் தேனு சௌரியஞ் சோரம்
பட்டி திருட்டு படிறுமற்றதுவே.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில்,

சித்தின் பெயர்

சம்பிர தஞ்சித் தின்பெயர் மேற்றே.

என ஒரு நூற்பா உளது. இந்நூற்பா பழம்பிரதிகளில் இல்லை. (16)

1574. ஏறுதலின் பெயர்

எஃகலும், எக்கலும், இவர்தலும் ஏறுதல்.

ஏறுதலின் பெயர் : (3)

1. எஃகல், 2. எக்கல், 3. இவர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

'எஃகலு மிவர்தலு மேறுத லாகும்' என்றும் பாடம் உண்டு. (17)

1575. வளைத்தலின் பெயர்

ஒசித்தல், கோட்டல், ஒடித்தல், அகைத்தல்,
ஞெமிர்தல், இறுத்தல், வளைத்தல் ஆகும்.

வளைத்தலின் பெயர் : (6)

1. ஒசித்தல், 2. கோட்டல், 3. ஒலித்தல், 4. அகைத்தல், 5. ஞெமிர்தல், 6. இறுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முறித்தலின் பெயர்.

2 : 3—4 முறித்த லாகும்—அச்சுப் பிரதி.

வளைதலின் பெயர்

ஒசிதல் கோட லொடித லசைதல்
ஞெமிர்த லிறுத லொசித லாகும்.

என்றும் வேறுபடச் சில பிரதிகளில் மிகையாக இது உள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாவாவது :

மற்று முறித்தலின் பெயர்

230. ★ இசித்த லென்று மியம்பற் பாற்றே. (18)

1576. வெறுப்பின் பெயர்

ஒசித்தலும், செறுத்தலும், வெறுப்பின் மேன.

வெறுப்பின் பெயர் : (2)

1. ஒசித்தல், 2. செறுத்தல். (19)

1577. உயர்தலின் பெயர்

ஒய்யலும், ஒசித்தலும் உயர்தலை உரைக்கும்.

உயர்தலின் பெயர் : (2)

1. ஒய்யல், 2. ஒசித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உயர்தலின் பெயர், உயர்த்தலின் பெயர், ஒய்தலின் பெயர், தளர்தலின் பெயர்.

1—3 ஒய்த்தலு மொசித்தலு முயர்தலை

**1—4 ஒய்தலு மொசித்தலுந் தளர்தலை யுரைக்கும்.
ஒசிதலுந் தளர்தலு மோய்தலை யுரைக்கும்**
—அச்சுப்பிரதி. (20)

1578. தாழ்தலின் பெயர்

இறைஞ்சல், குரங்கல், **தாழ்தல்** ஆகும்.

தாழ்தலின் பெயர் : *(2)*

1. இறைஞ்சல், *2.* குரங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 இறைஞ்சுதல் குரங்கல், குரங்குத லிறைஞ்சல்.
(21)

1579. துவளலின் பெயர்

திவளம், திவண்டல், துவண்டல், **துவளல்.**

துவளலின் பெயர் : *(3)*

1. திவளல், *2.* திவண்டல், *3.* துவண்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா இருவேறு தலைப்பில் இருநூற்பாக்களாகவும் சில பிரதிகளில் அமைந்துள்ளன.

அசைதலின் பெயர்

திவள றிவண்டல்.

வாடுதலின் பெயர்

துவள றுவண்டல். (22)

1580. அழுதலின் பெயர்

கலுழல், கலக்கம், கசிதல், **அழுதல்.**

அழுதலின் பெயர்: *(3)*

1. கலுழல், *2.* கலக்கம், *3.* கசிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 கலுழ்வே, கழுமே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

மற்றும் அழுதலின் பெயர்

231. ★ விம்மல் பொருமு லேங்க லூரோதன
மிரங்க லென்று மிசைக்கற் பாற்றே. (23)

1581. கோபத்தின் பெயர்

கறுப்பு, குரோதம், கலாமே, உடன்றல்,
சிவத்தல், வெயர்த்தல், விளிவே, செற்றம்,
முனைவே, காய்தல், பைத்தல், விடைத்தல்,
சினமே, வேகம், கதமே, வெகுளி,
முனிவே, சீறல், உருத்தல், **கோபம்.**

கோபத்தின் பெயர் : (19)

1. கறுப்பு, 2. குரோதம், 3. கலாம், 4. உடன்றல், 5. சிவத்தல், 6. வெயர்த்தல், 7. விளிவு, 8. செற்றம், 9. முனைவு, 10. காய்தல், 11. பைத்தல், 12. விடைத்தல், 13. சினம், 14. வேகம், 15. கதம், 16. வெகுளி, 17. முனிவு, 18. சீறல், 19. உருத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 யுடறல்

2 : 2 வேர்த்தல், கூர்த்தல்.

3 : 4 விடைதல்.

'இது பண்புப் பெயர்த் தொகுதியில் சேரற்பாலது. இங்கு வந்தது கவனித்தற்பாலது' என்று பேராசிரியர் மு. இராகவையங்கார் தம்முடைய பிரதியில் குறிப்பு எழுதியுள்ளார்.

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. (24)

1582. ஊடல் முதிர்ச்சியின் பெயர்

ஊடலின் முதிர்தல் ஆகும் புலவி.

ஊடல் முதிர்ச்சியின் பெயர் : *(1)*

புலவி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புலவியென்னும் பெயர்.

3—4 புலவி யாகும். (25)

1583. புலவி நீட்டத்தின் பெயர்

அதனின் நீடுதல் துனி எனப் படுமே.

புலவி நீட்டத்தின் பெயர் : *(1)*

துனி,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : துனியென்னும் பெயர்.

புலவியென்னும் பெயர், துனியென்னும் பெயர் என்னும் தலைப்பில் 1582, 1583 ஆம் நூற்பாக்களைப் பின்வருமாறு ஒன்றாயிணைத்து ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

ஊடலின் முதிர்தலாம் புலவி யதனி
னீடுத றுனியென நிகழ்த்தப் படுமே.

இப்பாடம் பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் காணப்படுகிறது. (26)

1584. முடிவிடத்தின் பெயர்

ஒல்லலும், சிவணலும் **முடிவிடன்** உரைக்கும்.

முடிவிடத்தின் பெயர் : (2)

1. ஒல்லல், 2. சிவணல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 ஒல்லுஞ் சிரலும்—அச்சுப் பிரதி. (27)

1585. கடத்தலின் பெயர்

இகத்தல், உகளுதல், தாவுதல், வாவுதல்,

குதித்தல், அகறல், குப்புறல், நீடுதல்,
தத்தல், ஒன்பதும் தாண்டலும் **கடத்தல்.**

கடத்தலின் பெயர் : (10)

1. இகத்தல், 2. உகளுதல், 3. தாவுதல், 4. வாவுதல், 5. குதித்தல், 6. அகறல், 7. குப்புறல், 8. நீடுதல், 9. தத்தல், 10. தாண்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தாண்டுதலின் பெயர்.

1 : 1—2 இருத லுகளல்,

3 : 1—2 தத்தலென வொன்பதும்

3 விதித்த வெட்டுந் தாண்டலுங் கடத்தல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

மற்றுங் கடத்தின் பெயர்

232 ★ பரிகரி சேறல் பாறுத லோவன்
மீறுலு மதற்கே விளம்ப லாகும். (28)

1586. போகலின் பெயர்

படர்தல், சேறல், தீர்தல், நீத்தல்,
இயங்கல், விடுதல், வழங்கல், நீங்கல்,
இறத்தல், தணத்தல், இகத்தல், ஏகல்
கடத்தல், பெயர்தல், செலவு இவற்றொடு
நடத்தல் ஈரெட்டும் **போகல்** ஆகும்.

போகலின் பெயர் : (16)

1. படர்தல், 2. சேறல், 3. தீர்தல், 4. நீத்தல், 5. இயங்கல், 6. விடுதல், 7. வழங்கல், 8. நீங்கல், 9. இறத்தல், 10. தணத்தல், 11. இகத்தல், 12. ஏகல், 13. கடத்தல், 14. பெயர்தல், 15. செலவு, 16 நடத்தல்,

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2—4 தீர்தல் பிரிதல் சேறல்—அச்சுப்பிரதி.

4 : 2 போதல்

இந்நூற்பாவில் அமைந்த பெயர்கள் முன்பின் மாற வெவ்வேறு வகையிலும் இந்நூற்பாவின் வடிவம் வேறுபடப் பிரதிகளில் உள்ளது.

படர்தல் சேற றீர்தல் விடுதல்
வழங்க லியங்கல் நீங்க லிறத்தல்

தணத்த லிகத்த லொதுங்கல் கடத்தல்
பெயர்தல் செலவே ஏக லிவற்றொடு
நடத்த லீரெட்டும் போக லாகும்.
படர்தல் சேறல் தீர்த்தல் தீர்தல்
பிரித லியங்கல் விடுதல் வழங்கல்
உயங்கல் நீங்குதல் இறத்தல் தணத்தல்
இகத்தல் கடத்தல் பெயர்தல் செலவென்
றவற்றொடு நடக்கும் ஈரெட்டும் போகல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு:

மற்றும் போகலின் பெயர்

233. ★ இல்ல லொதுக்கங் கழித லிவறல்
சொல்லிய நான்குந் தொடருமற் றதற்கே. (29)

1587. விரைவின் பெயர்

கதழ்வும், வல்லையும், ஒல்லையும், கடுகலும்,
துனைவும், நொறிலும், துவறலும், முடுகலும்
விரைவின் கிளவி வேகமும் ஆகும்.

விரைவின் பெயர்: (9)

1. கதழ்வு, 2. வல்லை, 3. ஒல்லை, 4. கடுகல், 5. துனைவு, 6. நொறில், 7. துவறல், 8. முடுகல், 9. வேகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3 தவறலும், துவரலும், துவர்தலும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்றும் விரைவின் பெயர்

234. ★ கவனந் தாரை சடிதி சீக்கிரம்
ஈண்டு விதுப்பு விசையு மதுவே. (30)

1588. விரைவுக் குறிப்பின் பெயர்

ஞெள்ளல், சண்டப், குத்திரம், வெம்மை,
பொள்ளே, கோரம் எனஇரு மூன்றொடும்
ஐதெனல், கதுமெனல், பொருக்கெனல், நொய்தெனல்,
வெய்தெனல் இன்னவும் **விரைவுக் குறிப்பே.**

விரைவுக் குறிப்பின் பெயர் : (11)

1. ஞெள்ளல், 2. சண்டம், 3. குத்திரம், 4. வெம்மை, 5. பொள், 6. கோரம், 7. ஐதெனல், 8. கதுமெனல், 9. பொருக்கெனல், 10. நொய்தெனல், 11. வெய்தெனல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 4 மூன்றும்.

3 : 1 ஐயெனல்

4 : 3—4 விரைவின் கிளவி.

விரைவின் பெயர், விரைவுக் குறிப்பின் பெயர் என்னும் தலைப்பில் இரண்டும் (1587, 1588) விரைவின் பெயரின்கீழ் ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள். (31)

1589. கடுகலின் பெயர்

கவனமும் துரிதமும் **கடுப்பு** ஆகும்மே.

கடுகலின் பெயர் : (2)

1. கவனம், 2. துரிதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கடுப்பின் பெயர், அதிவிரைவின் பெயர்.

2 துருதமும்

கதனந் துரிதல் கவனங் கடுப்பே—அச்சுப்பிரதி. (32)

1590. முறுகலின் பெயர்

திருகல், **முறுகல்.**

முறுகலின் பெயர் : (1)

திருகல்.

பாடவேறுபாடு—விளக்கம்

'திருகல் முறுக லாகு மென்ப' **என்றும் சிலபிரதிகளில் பாடம்.**

திருகல் முறுகல் கஞலுதல் கஞறல்.

திருகன் முறுகல் கஞறல் கன்றல்—**அச்சுப் பிரதி.** (33)

1591. நெருங்குதலின் பெயர்

கஞறுதல், கஞறல், அமறல், நிமிரல்,
மறுதரல், மிடைதல், **நெருங்குதல்** ஆகும்.

நெருங்குதலின் பெயர் : (6)

1. கஞறுதல், 2. கஞறல், 3. அமறல், 4. நிமிரல், 5. மறுதரல், 6. மிடைதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

அமறன் மிடைத நெருங்குத லாகும்.
நிமிர்தன் மிடைத னெருங்குத லாகும்
—அச்சுப்பிரதி. (34)

1592. திரிதரலின் பெயர்

உழிதரல், கொட்பு, **திரிதரல்** ஆகும்.

திரிதரலின் பெயர் : (2)

1. உழிதரல், 2. கொட்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திரிதரலின் பெயர், கழறலின் பெயர்.
உழிதரல் கொட்டபே திரித லாகும்.

உழிதரல் கொட்புத் திரிதல் சுரியல்
சுழற லாகச் சொல்லுவர் புலவர், (35)

1593. நீர்ச்சுழியின் பெயர்

உந்தியும், சுரியலும், **நீர்ச்சுழி** ஆகும்.

நீர்ச்சுழியின் பெயர் : (2)

1. உந்தி, 2. சுரியல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நீர்ச்சுழலின் பெயர், நீர்ச்சுழல்வின் பெயர்.
2 : 4 சுரிதலு நீர்ச்சுழல் வாகும். (36)

1594. சுழலுதலின் பெயர்

சுரியல் **சுழலுதல்** ஆகலும் உரித்தே.

சுழலுதலின் பெயர் : (1)

சுரியல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. (37)

1595. மீளுதலின் பெயர்

மறிதரல் என்பது மீளுதல் ஆகும்.

மீளுதலின் பெயர் : (1)

மறிதரல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 மறுதரல், மறிதல். (38)

1596. கொடுபோதலின் பெயர்

போதரல், **கொடுபோதல்.**

கொடுபோதலின் பெயர் : (1)

போதரல். (39)

1597. உலாப் போதலின் பெயர்

பவனி, உலாப்போதல்.

உலாப் போதலின் பெயர் : (1)

பவனி.

பாடவேறுபாடு—விளக்கம்

கொடுபோதலுக்கும் உலாப் போதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1596, 1597 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (40)

1598. ஓடலின் பெயர்

நெரிதரல், பாறல் இரிதல், **ஓடல்.**

ஓடலின் பெயர் : (3)

1. நெரிதரல், 2. பாறல், 3. இரிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

மற்றுமோடலின் பெயர்

235. ★ நிமிர்த னீளுத னிகழ்த்துப வதற்கே.
பின்றலும் பிறக்கிடலும் பிறகிட லாகும். (41)

1599. பிறகிடலின் பெயர்

பின்றலும், பிறக்கிடலும், **பிறகிடல்** ஆகும்.

பிறகிடலின் பெயர் : (2)

1. பின்றல், 2. பிறக்கிடல். (42)

1600. உராய்ப்போதலின் பெயர்

உராய்ப்போதல், உளர்தல், உரிஞ்சல்.

உராய்ப்போதலின் பெயர் : (2)

1. உளர்தல், 2. உரிஞ்சல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உராய்ப் பெயர்தலின் பெயர், உரிஞ்சலின் பெயர்.

உராய்தல் பெயர்தல் ஊர்த லுரிஞ்சல்—என்றும் சில பிரதிகள்.

3—4 லுரோஞ்ச லுரிஞ்சல்—அச்சுப்பிரதி.

லுரோஞ்ச லுரிஞ்ச லாகும்—பிற பதிப்புக்கள்.

(43)

1601. வழிப்படுதலின் பெயர்

ஆற்றுப்படையே **வழிப்படுத்தல்** ஆகும்.

வழிப்படுத்தலின் பெயர் : (1)

ஆற்றுப்படை. (44)

1602. வலியழித்தலின் பெயர்

ஆற்றறுத் தல்லே, **வலியழித்தல்** ஆகும்.

வலியழித்தலின் பெயர் : (1)

ஆற்றறுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வலியறுத்தலின் பெயர்.

1—2 ஆறறுத் தல்லே, ஆற்ற லறுத்தல்.

8—4 வலியறுத்த லாகும். (45)

1603. பாய்தலின் பெயர்

குப்புறல், உகளல், குதித்தல், **பாய்தல்.**

பாய்தலின் பெயர் : (3)

1. குப்புறல், 2. உகளல், 3, குதித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 குப்புற லுகளுதல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

மற்றும் பாய்தலின் பெயர்

236. ★ உறுக்கலு மிதித்தலு முறைப்ப ரதற்கே. (46)

1604. சாரிகை வருதலின் பெயர்

மாதியும், வாளியும், **சாரிகையும்** மண்டிலம்.

சாரிகை வருதலின் பெயர் : (3)

1. மாதி, 2. வாளி, 3. மண்டிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மண்டிலத்தின் பெயர், மண்டிலமாயோடலின் பெயர், சாரியின் பெயர்.

மாதியுஞ் சுற்றுஞ் சாரிகை தன்னொடு
வாளியு மண்டில மாவோட லாகும்—அச்சுப்பிரதி. (47)

1605. நேரோடுதலின் பெயர்

ஆதியும் வீதியும் **நேரோடுதல்** ஆம்.

நேரோடுதலின் பெயர் : (2)

1. ஆதி, 2. வீதி.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 வாலாதி வீதி
3-4 நேரோட லாகும். (48)

1606. செலுத்துதலின் பெயர்

செலுத்தல், கடத்தல், துரத்தல், தூண்டல்
உகைத்தல், ஊர்தல், உய்தல், ஒரு பொருள்.

செலுத்துதலின் பெயர் : (6)

1. கடத்தல், 2. துரத்தல், 3. தூண்டல், 4. உகைத்தல், 5. ஊர்தல், 6. உய்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : செலுத்துதலின் பெயர்.

1 : 3—4 ஊர்த றூண்டல்.

2 உகைய்த்த றுய்தல் ஒரு பொருளாகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா :

மற்றும் செலுத்தலின் பெயர்

237. ★ நடவ லெய்த லோட்டலு மாகும். (49)

1607. அணுகலின் பெயர்

நண்ணல், நேர்தல், நணுகல், குறுகல்,
துன்னல், சார்தல், அண்ணல், **அணுகல்.**

அணுகலின் பெயர் : (9)

1. நண்ணல், 2. நேர்தல், 3. நணுகல், 4. குறுகல், 5. துன்னல், 6. சார்தல், 7. அண்ணல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அணுகுதலின் பெயர்.

2—4 அணுகுதல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு;

மற்றும் அணுகுதலின் பெயர்

238. ★ மருவுதல் புல்லலருகுறல் சிவண
லப்பெயர்க் குரியரிவன் றறைந்தனர் புலவர். (50)

1608. கூடுதலின் பெயர்

பணத்தல், **கூடுதல்.**

கூடுதலின் பெயர் : (1)

மணத்தல். (51)

1609. பிரிதலின் பெயர்

தணத்தல், **பிரிதல்.**

பிரிதலின் பெயர் : (1)

தணத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

கூடுதலின் பெயர் பிரிதலின் பெயர் என்னும் தலைப்பில், *1608, 1609*-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (52)

1610. நீங்குதலின் பெயர்

*நீத்தலும், துறத்தலும், ஒருவலும், **நீங்குதல்**.*

நீங்குதலின் பெயர் : (3)

1. *நீத்தல், 2. துறத்தல், 3. ஒருவல்* (53)

1611. நீக்குதலின் பெயர்

சொல்லென் கிளவி நீக்குதல் ஆகும்.

பாடவேறுபாடு—விளக்கம்

நீக்குதலின் பெயர் : சொல்

1—2 சேறலென் கிளவி.

இந்நூற்பா அச்சுப் பிரதியில் இல்லை. (54)

1612. தங்கலின் பெயர்

அசைதல், தெவிட்டல், ஆர்தல் இறுத்தல்,
வதிதல், இங்குதல், **தங்கல்** மாற்றம்.

தங்கலின் பெயர் : (6)

1. அசைதல், 2. தெவிட்டல், 3. ஆர்தல், 4. இறுத்தல், 5. வதிதல், 6. இங்குதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3—4 லார்த றெவுலை

2 வதித லிங்குதல் வைகுத றங்கல்

வதிதல் வைகல் தங்கலாகும் (55)

1613. நிலைபேற்றின் பெயர்

புரத்தல், துஞ்சல், அல்குதல், மன்னல்,
*நிலைத்தல் ஐந்தும் **நிலைபேறு** ஆகும்.*

நிலைபேற்றின் பெயர் : (5)

1. புரத்தல், 2. துஞ்சல், 3. அல்கதல், 4. மன்னல், 5. நிலைத்தல்.

பாடவேறுபாடு விளக்கம்

தலைப்பு : நிலைபெறுதலின் பெயர், நிலையின் பெயர்.

1 : 3 ஏற்கல் (56)

1614. சுமத்தலின் பெயர்

பரித்தலும், பொறுத்தலும், **சுமத்தல்** ஆகும்.

சுமத்தலின் பெயர் : ( )

1. பரித்தல், 2. பொறுத்தல். (57)

1615. முயற்சியின் பெயர்

உஞற்று, உழப்பு, தாளாண்மை, ஆள்வினை, ஊக்கம், இயற்றல் என்று இவை **முயற்சி** ஆகும்.

முயற்சியின் பெயர் : (6)

1. உஞற்று, 2. உழப்பு, 3. தாளாண்மை, 4. ஆள்வினை, 5. ஊக்கம், 6. இயற்றல். (58)

1616. மிக்க செயலின் பெயர்

ஊராண்மை, **மிக்க செயல்.**

மிக்க செயலின் பெயர் : (1)

ஊராண்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மிக்க செய்தலின் பெயர், மிக்குச் செய்தலின் பெயர்.

(59)

1617. அரிய செயலின் பெயர்

பேராண்மை, **அரியசெயல்.**

அரிய செயலின் பெயர் : *(1)*

பேராண்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

மிக்குச் செயலுக்கும் அரிய செயலுக்கும் பெயர் **என்னும்** தலைப்பில் 1616, 1617 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (60)

1618. எண்ணலின் பெயர்

சூழ்ச்சி, உசாவே, தேர்ச்சி, நூல்என
யாப்புற **எண்ணல்—கிளவி** ஆகும்.

எண்ணலின் பெயர் : *(4)*

1. சூழ்ச்சி, 2. உசா, 3. தேர்ச்சி, 4. நூல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆலோசனையின் பெயர்

1 : 1 சூட்சி, 4. நூலே (61)

1619. ஆராய்தலின் பெயர்

தேர்தல், தூக்கல், ஆய்தல், தெரிதல்,
ஓர்தல், தெளிதல், ஆய்வு, **ஆராய்தல்.**

ஆராய்தலின் பெயர் : *(7)*

1. தேர்தல், 2. தூக்கல், 3. ஆய்தல், 4. தெரிதல், 5. ஓர்தல், 6. தெளிதல், 7. ஆய்வு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆய்தலின் பெயர்.

2 : 3—4. ஆராய் வாராய்தல். (62)

1620. தேடலின் பெயர்

நாடலும் நேடலும் **தேடல்** ஆகும்;
கூடும், கையரிக் கொள்ளலும் அதற்கே.

தேடலின் பெயர் : (3)

1. நாடல், 2. தேடல், 3. கையரிக் கொள்ளல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3 கொளலும் (63)

1621. ஒற்றுமையின் பெயர்

ஒற்றுமை, குறிக்கோள்.

ஒற்றுமையின் பெயர் : (1)

குறிக்கோள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குறிக்கோளின் பெயர். (64)

1622. ஒற்றின் பெயர்

ஒற்றல், வேயே.

ஒற்றின் பெயர் : (1)

வேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒற்றறிதலின் பெயர்.

ஒற்று வேவுவேய்—அச்சுப்பிரதி,

ஒற்றுமைக்கும் ஒற்றலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1621, 1622ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர் (65)

1623. வரையறுத்தலின் பெயர்

கணித்தல், குணித்தல், **வரையறுத்தல் ஆகும்**

வரையறுத்தலின் பெயர் : (2)

1. கணித்தல், 2. குணித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 கணித்தலுங் குணித்தலும் (66)

1624. விலையின் பெயர்

விற்றல், பகர்தல், நொடை, **விலை** ஆகும்.

விலையின் பெயர் : (3)

1. விற்றல், 2. பகர்தல், 3. நொடை. (67)

1625. கலக்கத்தின் பெயர்

வெறுப்பு, வெதிர், துருமம், புலம்பு, கவனம்,
முதிர்ப்பு, கலங்கல், **கலக்கம்** ஆகும்.

கலக்கத்தின் பெயர் : (7)

1. வெறுப்பு, 2. வெதிர், 3. துருமம், 4. புலம்பு, 5. கவனம், 6. முதிர்ப்பு, 7. கலங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1—2 வெறிப்பு வெதில்

1 : 1—4 வெறுப்பு விதிர்ப்புத் துருமம் புலம்புதல்

2 : 1 அதிர்ப்பு (68)

1626. நடுக்கத்தின் பெயர்

விதிர்ப்பு, பனிப்பு, விதலை, கம்பம்,
அதிர்ப்பு, பொதிர்ப்பு, **நடுக்கம்** ஆகும்.

நடுக்கத்தின் பெயர் : (6)

1. விதிர்ப்பு, 2. பனிப்பு, 3. விதலை, 4. கம்பம், 5. அதிர்ப்பு, 6. பொதிர்ப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 பனித்தல்.

விதிர்ப்பும் பொதிர்ப்பு நடுக்க மாகும்—என்று சில பிரதிகளில் காணப்படுகிறது. (69)

1627. தியாகத்தின் பெயர்

வேள்வி, வண்மை, வேளாண்மை, உதவி,
கொடை, உபகாரம், கவிகை, பொழிதல்,

இடுதல், இகுத்தல், பணித்தல், ஈதல்,
தருதல், வழங்கல், வீசல், நல்கல்,
அருளல், அளித்தல், புரத்தல், **தியாகம்.**

தியாகத்தின் பெயர் : (19)

1. வேள்வி, 2. வண்மை, 3. வேளாண்மை, 4. உதவி, 5. கொடை, 6. உபகாரம், 7. கவிகை, 8. பொழிதல், 9. இடுதல், 10. இகுத்தல், 11. பணித்தல், 12. ஈதல், 13. தருதல், 14. வழங்கல், 15. வீசல், 16 நல்கல், 17. அருளல், 18. அளித்தல், 19. புரத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொடையின் பெயர்.

3 இடுத லுதாரந் தான மீதல் (70)

1628. வரையாது கொடுத்தலின் பெயர்

(திடமொழி அம்பர்ச் சேந்தனை ஏய்ந்த)

கொடை மடம், **வரையாது கொடுத்தல்** ஆகும்.

வரையாது கொடுத்தலின் பெயர் : கொடைமடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொடை மடம் என்னும் பெயர். (71)

1629. வேள்வியின் பெயர்

ஓமம், கிருதுவே, எச்சம், யாகம்,
இட்டி, யூபம், மகம் இவை **வேள்வி.**

வேள்வியின் பெயர் : (7)

1. ஓமம், 2. கிருது, 3. எச்சம், 4. யாகம், 5. இட்டி, 6. யூபம், 7. மகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 ஹோதம் 2. கிருது, கிருதே (72)

1630. பாதுகாத்தலின் பெயர்

போற்றலும், ஓம்பலும், **பாதுகாத்தல்.**

பாதுகாத்தலின் பெயர் : (2)

1. போற்றல், 2. ஓம்பல். (73)

1631. தலைக்காவலின் பெயர்

இளை என் கிளவி **தலைக்காவல்** ஆகும்.

தலைக்காவலின் பெயர் : (1)

இளை. (74)

1632. அகத்திடுதலின் பெயர்

கவவு, **அகத்திடுதல்.**

அகத்திடுதலின் பெயர் (1)

கவவு.

பாடவேறுபாடு—விளக்கம்

கவவே யகத்தீடு. (75)

1633. கொளற்பொருட்டின் பெயர்

தெவு, **கொளற் பொருட்டே.**

பாடவேறுபாடு—விளக்கம்

1. தெவ்வுக்

அகத்திடுதலுக்கும் கொளற்பொருட்டுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1632, 1633 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (76)

1634. பிச்சையின் பெயர்

பலியும், ஐயமும், பிண்டமும், பாகமும்,
சரியையும் **பிச்சையின்** பெயர்எனச் சாற்றுவர்.

பிச்சையின் பெயர் : (5)

1. பலி, 2. ஐயம், 3. பிண்டம், 4. பாகம், 5. சரியை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1 சரியும், சருவும், சரிதையும். (77)

1635. இரத்தலின் பெயர்

இரவே, **இரத்தல்.**

இரத்தலின் பெயர் : (1)

இரவு. (78)

1636. கரத்தலின் பெயர்

கரவே, **கரத்தல்.**

கரத்தலின் பெயர் : (1)

கரவு.

பாடவேறுபாடு—விளக்கம்

இரத்தலுக்கும் கரத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1635, 1636 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர். (79)

1637. தொழுதலின் பெயர்

வணங்கல், பணிதல், அஞ்சலி, வந்தனை,
இறைஞ்சல், பரவுதல், தாழுதல், **தொழுதல்.**

தொழுதலின் பெயர் : (7)

1. வணங்கல், 2. பணிதல், 3. அஞ்சலி, 4. வந்தனை, 5. இறைஞ்சல், 6. பரவுதல், 7. தாழுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3 தாழ்தல். (80)

1638. பூசனையின் பெயர்

ஆராதனையே, அருச்சனை, வழிபாடு,
பூசனை என்னப் புகன்றனர் புலவர்.

பூசனையின் பெயர் : (3)

1. ஆராதனை, 2. அருச்சனை, 3. வழிபாடு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பூசையின் பெயர். (81)

1639. பெறுதலின் பெயர்

வாய்த்தலும், பயத்தலும், **பெறுதல் மாற்றம்.**

பெறுதலின் பெயர் : (2)

1. வாய்த்தல், 2. பயத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. பலித்தலும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

மற்றும் பெறுதலின் பெயர்

239. ★ கிடைத்தலு மதுவெனக் கிளத்தற் பாற்றே. (82)

1640. உண்டாதலின் பெயர்

பூத்தலும், பயத்தலும், **உண்டாதற் பொருள.**

உண்டாதலின் பெயர் : (2)

1. பூத்தல், 2. பயத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4. பொருள், பொருட்டே. (83)

1641. புணர்வின் பெயர்

இணை, விழைச்சு என்ப **புணர்வுப்** பெயரே.

புணர்வின் பெயர் : (2)

1. இணை, 2. விழைச்சு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புணர்ச்சியின் பெயர்.

இணை விழைச்சுப் புணர்வு—என்றும் சில பிரதிகள்.

இணைவிழைச்சு மைதுனம் புணர்வுப் பெயரே
—அச்சுப்பிரதி. (84)

1642. தீவினைத் தொடர்பின் பெயர்

காதரம், **தீவினைத் தொடர்பது** ஆகும்.

தீவினைத் தொடர்பின் பெயர் : (1)

காதரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4. தொடர்வதாகும், தொடர்பா கும்மே.

காதரந் தீவினைத் துடர்பு—என்றும் சில பிரதிகள் (85)

1643. கலத்தலின் பெயர்

கலவியும் புணர்ச்சியும் **கலத்தல்** ஆகும்.

கலத்தலின் பெயர் : (2)

1. கலவி, 2. புணர்ச்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

மற்றுங் கலத்தலின் பெயர்

240.★ கலாவல் கலம்பக மளாவல்சங் கிரண
நிலாவு மதற்கே நிகழ்த்துப மேலோர். (86)

1644. பயிறலின் பெயர்

நவிறல், கெழுமல், **பயிறல்** ஆகும்.

பயிறலின் பெயர் : (2)

1. நவிறல், 2. கெழுமல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பழக்கத்தின் பெயர்.

2. கெழும்பல். (87)

1645. அறுத்தலின் பெயர்

வகிர்தல், பிளத்தல், துமித்தல், துணித்தல்,
அரிதல், துண்டித்தல், தடிதல், பரிதல்,
அறுத்தல் ஆகும்என்று அறைந்தனர் புலவர்.

அறுத்தலின் பெயர் : *(8)*

1. வகிர்தல், 2. பிளத்தல், 3. துமித்தல், 4. துணித்தல், 5. அரிதல், 6. துண்டித்தல், 7. தடிதல், 8. பரிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2—3 துண்டித்த லகைத்தல்,

3 : 1—2 அறுத்த லாமென்.

அறுத்த லாகு மென்மனார் புலவர். (88)

1646. பறித்தலின் பெயர்

குற்றல், **பறித்தல்.**

பறித்தலின் பெயர் : *(1)*

குற்றல். (89)

1647. களைதலின் பெயர்

கட்டல், **களைதல்.**

களைதலின் பெயர் : *(1)*

கட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

பறித்தலுக்கும் களைதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1646, 1647 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கணிப்பர்.

அச்சுப்பிரதியில் **பறித்தலின் பெயர்** என்னும் தலைப்பில்

பின்வருமாறு அமைந்துள்ளது :

களைதல் குற்றல் கட்டல் பறித்தல். (90)

1648. பியத்தலின் பெயர்

புய்த்தலும், பூய்த்தலும் **பியத்தல் ஆகும்.**

பியத்தலின் பெயர் : (2)

1. புய்த்தல், 2. பூய்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பயத்தலின் பெயர்.

புய்த்தலும் பூத்தலும் **பயத்த லாகும்.** (91)

1649. நெரித்தலின் பெயர்

நெரித்தல், நெறித்தல்.

நெரித்தலின் பெயர் : (1)

1. நெறித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

நெரித்த றெறுதல்—அச்சுப்பிரதி. (92)

1650. அழுந்தலின் பெயர்

ஞெமுங்கல், **அழுந்தல்.**

அழுந்தலின் பெயர் : (1)

ஞெமுங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அமுங்கலின் பெயர்

2. அமுங்கல்.

நெரித்தலுக்கும் **அழுந்தலுக்கும்** பெயர் **என்னும்** தலைப்பில் 1649, 1650 ஆம் நூற்பாக்களை ஓரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

நெரித்தலின் பெயர் என்னும் தலைப்பிலும் ஒருசில பிரதிகள் இவற்றை ஒரே நூற்பாவாக அமைத்துள்ளன. (93

1651. கொல்லுதலின் பெயர்

நெருக்குதல், காதுதல், எற்றுதல், தேய்த்தல்,
முருக்குதல், ஒழித்தலும் **கோறலை** மொழிப.

கொல்லுதலின் பெயர் : (6)

1. நெருக்குதல், 2. காதுதல், 3. எற்றுதல், 4. தேய்த்தல், 5. முருக்குதல், 6. ஒழித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 ஈருக்குதல், ஒருக்குதல்.

2 : 4 மொழியும்.

இதன் மேலும் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

மற்றுங் கொல்லுதலின் பெயர்

241. ★ வெட்டல் வீட்டுதல் படுத்தன் மாரணமு
மம்மொழிப் பாலவென் றறையல் வேண்டும்.

(94)

1652. அழித்தலின் பெயர்

சவட்டல், செகுத்தல், தெறுதல், சட்டித்தல்,
செவிட்டல், சிதைத்தல், **அழித்தல்** ஆகும்.

அழித்தலின் பெயர் : (6)

1. சவட்டல், 2. செகுத்தல், 3. தெறுதல், 4. சட்டித்தல், 5. செவிட்டல், 6. சிதைத்தல். (95)

1653. எறிதலின் பெயர்

விலங்குதல், **எறிதல்**, ஓச்சல், செலவிடுதல்.

எறிதலின் பெயர் : (3)

1. விலங்குதல், 2. ஓச்சல், 3. செலவிடுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : **வீசுதலின் பெயர்**, எற்றுதலின் பெயர்.

1—2 வீசுத லெறிதல். (96)

1654. வெட்டலின் பெயர்

துமித்தல், துணித்தல், துண்டித்தல், **வெட்டல்**.

வெட்டலின் பெயர் : (3)

1. துமித்தல், 2. துணித்தல், 3. துண்டித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 துமாவல் வெட்டல்.

இதன் மேலும் முதற் பதிப்பாசிரியர் **இணைத்த** புது நூற்பா :

மற்றும் வெட்டலின் பெயர்

242. ★ பரிதல் கண்டித்தல் பகுத்திட றடித
எற்ற றறித்தலு மேற்கு மென்ப. (97)

1655. கிளறுதலின் பெயர்

கிண்டல், கிளைத்தல், **கிளறுதல்** ஆகும்.

கிளறுதலின் பெயர் : (2)

1. கிண்டல், 2. கிளைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கிண்டலின் பெயர். (98)

1656. போழ்தலின் பெயர்

கீழ்தல் என்பது **போழ்தல்** ஆகும்.

போழ்தலின் பெயர் : (1)

கீழ்தல். (99)

1657. கிழித்தலின் பெயர்

கீழ்தல், கீண்டல், **கிழித்தல்** ஆகும்.

கிழித்தலின் பெயர் : (2)

1. கீழ்தல், 2. கீண்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

கீழ்தல் கீண்டல் கீறல் **கிழித்தல்**—அச்சுப்பிரதி. (100)

1658. குலைதலின் பெயர்

குலைதல், குன்றல்.

குலைதலின் பெயர் : (1)

குன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குன்றலின் பெயர்.

குலைதல் குறைதல் லவிதல் குன்றுதல்—என்றும் சில பிரதிகள். (101)

1659. சூறலின் பெயர்

சூறல், சூன்றல்.

சூறலின் பெயர் : (1)

சூன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சூலுதலின் பெயர்.

1. சூர்தல், சூலுதல்.

சூறல் சூன்ற றோண்ட லாகும்—அச்சுப்பிரதி.

குலைதலுக்கும் சூறலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1658, 1659 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (102)

1660. தோண்டலின் பெயர்

தொட்டல், **தோண்டல்.**

தோண்டலின் பெயர் : (1)

தொட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

'தொட்ட றொடுந றோண்ட லாகும்' என்றும்

'தொட்ட றொடுத றோண்ட லகழ்தல்' என்றும் பாட வேறுபாடு காணப்படுகிறது.

அச்சுப்பிரதியில்,

தோண்டலின் பெயர்

சூறல் சூன்ற றோண்ட லாகும்.

என்றும், தொடர்ந்து,

மற்றும் தோண்டலின் பெயர் என்னும் தலைப்பின்கீழ்

தொட்டலுந் தொடுதலு மகழ்தலு மதற்கே

என்றும் தரப்பட்டுள்ளது. பிற்பதிப்புக்களிலும் இரண்டையும் ஒன்றாக்கி ஒரு நூற்பாவாகத் தந்துள்ளனர். (103)

1661. துளைத்தலின் பெயர்

தொள்கல், குய்ற்றல், **துளைத்தல்** ஆகும்.

துளைத்தலின் பெயர் : (2)

1. தொள்கல், 2. குயிற்றல்.

பாடவேறுபாடு – விளக்கம்

1. தொள்ளல், தோளல். (104)

1662. கொழித்தலின் பெயர்

வரன்றல், வாருதல், வார்தல், **கொழித்தல்.**

கொழித்தலின் பெயர் : (3)

1. வரன்றல், 2. வாருதல், 3. வார்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தெள்ளுதலின் பெயர், வாருதலின் பெயர்.

இந்நூற்பா இருவேறு தலைப்பில் இருநூற்பாவாகவும் ஒருசில பிரதிகளில் காணப்படுகிறது.

வாருதலின் பெயர்

வரன்றல் வாருதல்.

கொழித்தலின் பெயர்

வார்தல் கொழித்தல்.

இதற்கு 'வரன்றல் கொழித்தல்' என்றும் பாடமுண்டு. இந்நூற்பாவை அடுத்து முதற்பதிப்பாசிரியர் அமைத்த புதுநூற்பா :

மற்றும் கொழித்தலின் பெயர்

243. ★ *தெள்ளுத லெனவுஞ் செப்பற் பாற்றே.* *(105)*

1663. தெரிதலின் பெயர்

வரன்றல் என்பது **தெரிதல்** ஆகும்.

தெரிதலின் பெயர் : *(1)*

வரன்றல். *(106)*

1664. தூய்மைச் செயலின் பெயர்

உவளித்தல் **தூய்மைச்** செயலை உணர்த்தும்.

தூய்மைச் செயலின் பெயர் : *(1)*

உவளித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைட்பு : வாய்மைச் செயலின் பெயர்.

1 *உவனித்தல்*

2—3 *வாய்மைச் செயலை*

இதனை *அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :*

மற்றுந் தூய்மைச் செயலின் பெயர்

244. ★ *உபலா ளனமென் றுணர்த்தவும் படுமே.* *(107)*

1665. கடைதலின் பெயர்

கவர்தல், குடைதல், ஞெலிதல், **கடைதல்.**

கடைதலின் பெயர் : (3)

1. கவர்தல், 2. குடைதல், 3. **ஞெலிதல்.**

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 தவர்தல் குடைதல். **(108)**

1666. சிந்துதலின் பெயர்

சிதர்தலும், ததர்தலும், **சிந்துதல் ஆகும்.**

சிந்துதலின் பெயர் : (2)

1. சிதர்தல், 2. ததர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 **தகர்தலும்,** தூவலும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் **அமைத்த புது நூற்பா :**

மற்றுஞ் சிந்துதலின் பெயர்

245. ★ உகுத்தலு முளர்தரு முரியமற் றதற்கே,

உகுத்தலு முளர்த்தலும்— **பிற்பதிப்புக்கள்.** **(109)**

1667. வடுப்படுதலின் பெயர்

கதுவாய், **வடுப்படுதல்.**

வடுப்படுதலின் பெயர் : (1)

கதுவாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வடுப்படுத்தலின் பெயர்.

2 வயப்படுதல். **(110)**

1668. தினவின் பெயர்

கண்டூதி, **தினவே,**

தினவின் பெயர் : (1)

கண்டூதி.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா.

மற்றுந் தினவின் பெயர்

246. ★ சொறியென் கிளவியுஞ் சொல்லுப வதற்கே.

வயப்படுத்தலுக்குந் தினவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1667, 1668 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (111)

1669. அடுத்தலின் பெயர்

அடுத்தல், கூடுதல்

அடுத்தலின் பெயர் : (1)

கூடுதல். (112)

1670. வழிப்பறியின் பெயர்

ஆறலை, **வழிப்பறி.**

வழிப்பறியின் பெயர் : (1)

ஆறலை.

பாடவேறுபாடு— விளக்கம்

தலைப்பு : வழிப்பறித்தலின் பெயர்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றும் வழிப்பறித்தலின் பெயர்

247. ★ அதர்கோளு மற்றதற் காகு மென்ப.

அடுத்தலுக்கும் வழிப்பறித்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1669, 1670ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (113)

1671. நெருங்கலின் பெயர்

இடங்கழிமை **நெருங்கல்,** மீதூர்தல் ஆகும்,

நெருங்கலின் பெயர் : (2)

1. இடங்கழிமை, . மீதூர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 மீதூரலாகும். *(114)*

1672. அலைப்பின் பெயர்

உலைத்தல், ஒறுத்தல், தீர்த்தல், அடல், மிறைசெயல்,
அகைத்தல், வேதனை, **அலைப்பு** என மொழிப.

அலைப்பின் பெயர் : (7)

1. உலைத்தல், *2.* ஒறுத்தல், *3.* தீர்த்தல், *4.* அடல், *5.* மிறைசெயல், *6.* அகைத்தல், *7.* வேதனை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அலைத்தலின் பெயர், உலைப்பின் பெயர்.

1 : 3—4 லுயங்கன் மிறை செயல்

2 : 3—4 யுலைப்பாமென மொழிப, *(115)*

1673. மடங்கலின் பெயர்

நுணங்கே, முடங்கல், **மடங்கல்** ஆகும்.

மடங்கலின் பெயர் : (2)

1. நுணங்கு, *2.* முடங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நுடங்கலின் பெயர்

1—2 நுணங்கே நுடங்கல், குணங்கே நுணங்கன்.

இந்நூற்பாவை இருவேறு தலைப்புக்களில் இருநூற்பாவாகவும் சில பிரதிகள் தந்துள்ளன. அவை வருமாறு :

நுணங்கலின் பெயர்

நுணங்கே நுடங்கல்.

மடங்கலின் பெயர்

முடங்கன் மடங்கல், *(116)*

1674. சாதலின் பெயர்

துஞ்சல், பொன்றல், விளிதல், வீதல்,
முஞ்சல், துவன்றல், முடிவு, உலத்தல், வீடல்,
மாய்தல், இறத்தல், மாளல், தபுதல்,
சாதல் என்னச் சாற்றினர் புலவர்.

சாதலின் பெயர் : (13)

1. துஞ்சல், 2. பொன்றல், 3. விளிதல், 4. வீதல், 5. முஞ்சல், 6. துவன்றல், 7. முடிவு, 8. உலத்தல், 9. வீடல் 10. மாய்தல், 11. இறத்தல், 12. மாளல், 13. தபுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2—4 துவண்டன் முடிதல் வீடல்

3 : 3 மாளுதல். (117)

1675. கொலை செய்தலின் பெயர்

அடுதல், வீட்டல், அணங்கல், வெட்டல்,
படுத்தல் என்றுஇவை **கொலைசெயற் பால.**

கொலை செய்தலின் பெயர் : (5)

1. அடுதல், 2. வீட்டல், 3. அணங்கல், 4. வெட்டல் 5. படுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3 வறுத்தல். (118)

1676. வேறுபடலின் பெயர்

வீற்றும், பேதும், விள்ளலும், திரிவும்,
வேற்றுமையும் கொள்ப **வேறுபடல்** பொருட்டே.

வேறுபடலின் பெயர் : (5)

1. வீற்று, 2. பேது, 3. விள்ளல், 4. திரிவு, 5. வேற்றுமை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேறுபாட்டின் பெயர்.

1 : 2—4 பேதமும் விள்ளலும் திரிபும்.

2 : 3—4 வேறுபடற் பொருளே. (119)

1677. குன்றலின் பெயர்

சிங்கலும், எஞ்சலும், தவலும், **குன்றல்.**

குன்றலின் பெயர் : (3)

1. சிங்கல், 2. எஞ்சல், 3. தவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. தவறலும். (120)

1678. அழிதலின் பெயர்

உலைதலும், முருங்கலும், **அழிதல்** ஆகும்.

அழிதலின் பெயர் : (2)

1. உலைதல், 2. முருங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அழித்தலின் பெயர்.

2 முருகலும், முருக்கலும்.

உலைத்தலு முருக்கலு மழித்த லாகும். (121)

1679. தளர்தலின் பெயர்

ஒல்கலும், இழுக்கலும், **தளர்தலை** உரைக்கும்.

தளர்தலின் பெயர் : (2)

1. ஒல்கல், 2. இழுக்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தளர்வின் பேர். (122)

1680. வளைத்தலின் பெயர்

சுற்றுதல், கோலல், சூழ்போதல், வரையறுத்தல்,
முற்றுதல், சூழ்தல், வளாவல், **வளைத்தல்.**

வளைத்தலின் பெயர் : (7)

1. சுற்றுதல், 2. கோலல், 3. சூழ்போதல், 4. வரையறுத்தல், 5. முற்றுதல், 6. சூழ்தல், 7. வளாவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவையே மூவேறு தலைப்பில் மூன்று நூற்பாவாகவும் சில பிரதிகள் பின்வருமாறு கொண்டுள்ளன :

சுற்றுதலின் பெயர்
சுற்றுதல் கோலல்.

வரையறுத்தலின் பெயர்
சூழ்போல் வரையறுத்தல்.

வளைத்தலின் பெயர்
முற்றுதல் சூழ்தல் வளாவல் வளைத்தல். (123)

1681. பிடித்தலின் பெயர்

தொட்டல், **பிடித்தல்,** தொடுத்தல், வளைத்தல்.

பிடித்தலின் பெயர் : (3)

1. தொட்டல், 2. தொடுத்தல், 3. வளைத்தல். (124)

1682. கட்டலின் பெயர்

விசித்தல், சிமிழ்த்தல், வீக்கல், சுருக்கல்,
அசைத்தல், ஆப்பே, யாப்பே, இமிழ்த்தல்,
யாத்தல், பிணித்தல், தொடுத்தல், தொடர்தல்,
ஆர்த்தல் **கட்டல்** ஆம்என அறைவர்.

கட்டலின் பெயர் : (13)

1. விசித்தல், 2. சிமிழ்த்தல், 3. வீக்கல், 4. சுருக்கல், 5. அசைத்தல், 6. ஆப்பு, 7. யாப்பு, 8. இமிழ்த்தல்,

9. யாத்தல், 10. பிணித்தல், 11. தொடுத்தல் 12. தொடர்தல், 13. ஆர்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கட்டுதலின் பெயர்.

4 : 4 உரைப்பர்.

கட்டலின் பெயர் என்னும் தலைப்பில் 1681, 1682 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர்.

தொட்டல் பிடித்தல் வளைத்தல் பந்தித்தல்
விசித்தல் சிமிழ்த்தல் வீக்கல் சுருக்க
வசைத்த லிசைத்தல் யாப்பே யிமிழ்த்த
றொடுத்த லாத்தல் யாத்த றொடர்த
லார்த்தல் பிணித்தல் கட்ட லாகும்—அச்சுப்பிரதி.

3 : 1—2 ஆசைத்த லாப்பே

4 : 3 வரித்தல். (125)

1683. சுற்றுதலின் பெயர்

சுலவல், **சுற்றுதல்.**

சுற்றுதலின் பெயர் : (1)

சுலவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. சுலாவல். (126)

1684. நிணத்தலின் பெயர்

வலத்தல், **நிணத்தல்.**

நிணத்தலின் பெயர் : (1)

வலத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

சுற்றுதலுக்கும் நிணத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1683, 1684 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (127)

1685. விடுதலின் பெயர்

தீர்தலும், தீர்த்தலும், விடற்பொருட்டு ஆகும்.

விடுதலின் பெயர் : (2)

1. தீர்தல், 2. தீர்த்தல். (128)

1686. பூசலின் பெயர்

உறழ்வு, வெஞ்சமம், மொய், செரு, ஞாட்பே,
இரணம், தாக்கே, இகல், ஆயோதனம்,
அமர், போர், உடன்றல், ஆர்ப்பு, நிகர்ப்பு,
மலைதல், நேர்தல், குறும்பே, உடலுதல்,
ஆகவம், மண்டல், தெவ்வு, வினை, ஆடல்,
திறல், மறல், மறம், முரண், சினம், சமர், சலிகம்,
ஆர்த்தல், சங்கிராமம், தும்பை, கூட்டம் என்று
ஈது எண்ணான்கோடு இரண்டும் பூசல்.

பூசலின் பெயர் : (34)

1. உறழ்வு, 2. வெஞ்சமம், 3. மொய், 4. செரு, 5. ஞாட்பு, 6. இரணம், 7. தாக்கு, 8. இகல், 9. ஆயோதனம், 10. அமர். 11. போர், 12. உடன்றல், 13. ஆர்ப்பு, 14. நிகர்ப்பு, 15. மலைதல், 16. நேர்தல், 17. குறும்பு, 18. உடலுதல், 19. ஆகவம், 20. மண்டல், 21. தெவ்வு, 22. வினை, 23. ஆடல், 24. திறல், 25. மறல், 26. மறம், 27. முரண், 28. சினம், 29. சமர், 30. சலிகம், 31. ஆர்த்தல், 32. சங்கிராமம், 33. தும்பை, 34. கூட்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பொருதலின் பெயர், போர் செய்தலின் பெயர்.

1 : 1 உழவு

5 : 2—3 மண்டலம் தெவ்வு வினை, மண்டிலந் தெவ்வு வினை.

6 : 1—2 திறல் முயல் முரணே, 4 சமீரம், கமரம்.

6 ஆம் அடியை முதலடியாகக் கொண்டும் சில பிரதிகள்.

திறல்முயல் முரணே சினவுதல் சமரம்
உறழ்வுபடை வெஞ்சமம் மொய்செரு ஞாட்பே
இரணந் தாக்கே யிகலா யோதனம்
அமர்போ ருடன்ற லார்ப்பு நிகர்ப்பு
மலைவு நேர்தல் மாறுகுறும்பே யுடலுதல்
ஆகவ மரண மண்டல் தெவ்வினை போராடல்
ஆர்த்தல் சங்கிராமந் தும்பை கட்டமென்
றீரெண் ணன்கோ டிரண்டும் பூசல்

என்றும் பிரதிபேதம் உண்டு. **(129)**

1687. தோற்றுதலின் பெயர்

பாரித்தல், **தோற்றுதல்.**

தோற்றுதலின் பெயர் : *(1)*

பாரித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

பாரித்த றோற்றரவு. **(130)**

1688. மிகுத்தலின் பெயர்

பூரித்தல், **மிகுத்தல்.**

மிகுத்தலின் பெயர் : *(1)*

பூரித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தோற்றுதலுக்கும் மிகுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1687, 1688 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். **(131)**

1689. தடுத்தலின் பெயர்

வாரித்தல், வாரணம், **தடுத்தல்** மாற்றம்.

தடுத்தலின் பெயர் : (2)

1. **வாரித்தல்,** *2.* **வாரணம்.**

பாடவேறுபாடு — விளக்கம்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

மற்றுந் தடுத்தலின் பெயர்

248. ★ ஆணை தட்ட றகைத்தலு மதுவே. *(132)*

1690. கொற்றவள்ளை என்னும் பெயர்

கூடலர் நாடுஅழிவு **கொற்றவள்ளை.**

கொற்றவள்ளை என்னும் பெயர் : (1)

கூடலர் நாடுஅழிவு.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு : கொற்றவள்ளை என்னும் சொற்பொருட் பெயர், கூடலர் நாடழிவின் பெயர். **(133)**

1691. தழிஞ்சி என்னும் பெயர்

சாய்ந்தார்மேல் படராமை **தழிஞ்சி** ஆகும்.

தழிஞ்சி என்னும் பெயர் : (1)

சாய்ந்தார்மேல் படராமை. **(134)**

1692. பாதீட்டின் பெயர்

அளித்தல், பெய்தல், **பாதீடு** ஆகும்.

பாதீட்டின் பெயர் : (2)

1. அளித்தல், *2.* பெய்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா ;

மற்றும் பாதீட்டின் பெயர்

249. ★ செறித்தலு **மது**வெனச் செப்பற் பாற்றே. (135)

1693. கொட்டாவியின் பெயர்

ஆவித்தல், **கொட்டாவி.**

கொட்டாவியின் பெயர் : (1)

ஆவித்தல். (136)

1694. உயிர்ப்பின் பெயர்

ஆவி, **உயிர்ப்பே.**

உயிர்ப்பின் பெயர் : (1)

ஆவி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உயிரின் பெயர்

ஆவி யுயிரே.

கொட்டாவிக்கும் உயிர்ப்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1693, 1694 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (137)

1695. வருத்தம் தீர்தலின் பெயர்

அயர்வுயிர்த்தல், **வருத்தம் தீர்தல்** ஆகும்.

வருத்தம் தீர்தலின் பெயர் : (1)

அயர்வுயிர்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

அயாவுயிர்த்தல்.

இந்நூற்பா 1693 ஆம் நூற்பாவாகிய கொட்டாவியின் பெயரை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. (138)

1696. வியர்த்தலின் பெயர்

வியர்த்தல், வேரரும்பல்.

வியர்த்தலின் பெயர் : (1)

வேரரும்பல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வெயர்த்தலின் பெயர்.

வெயிர்த்தல் வெயிர்வரும்பல். (139)

1697. போதரவிடுதலின் பெயர்

உயிர்த்தல், **போதரவிடல்.**

போதரவிடுதலின் பெயர் : (1)

உயிர்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : போகவிடுதலின் பெயர், வாய்விடலின் பெயர்.

உயிர்த்தல் வாய்விடல்—அச்சுப்பிரதி.

வெயர்த்தலுக்கும் போதரவிடலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1696, 1697 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (140)

1698. காய்தலின் பெயர்

முளிதல், வறத்தல், உலறுதல், **காய்தல்.**

காய்தலின் பெயர் : (3)

1. முளிதல், 2. வறத்தல், 3. உலறுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. முனிதல், 2. முனித்தல், 3. உறுத்தல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் தந்த புது நூற்பா :

மற்றுங் காய்தலின் பெயர்

250. ★ முதிர்ந்திட லென்பது மொழியுமற் றதற்கே. (141)

1699. தூவுதலின் பெயர்

பிலிற்றலும் பில்கலும் **தூவுதற் பொருள.**

தூவுதலின் பெயர் : (2)

1. பிலிற்றல், 2. பில்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உமிழ்தலின் பெயர்

1. பிலித்தலும் 3—4 உமிழ்தற் பொருள. 4. பொருளே பொழிதல் டனித்த விடுத லெக்கல். (142)

1700. சொரிதலின் பெயர்

பொழிதல், பனித்தல், இடுதல், எக்கல்,
சொரித லாகச் சொல்லுவர் புலவர்.

சொரிதலின் பெயர் : (4)

1. பொழிதல், 2. பனித்தல், 3. இடுதல், 4. எக்கல்.

பாடவேறுபாடு - விளக்கம்

1 : 4 எக்கர் — அச்சுப்பிரதி. (143)

1701. தெவிட்டலின் பெயர்

உமிழ்தலும், இமிழ்தலும், தெவிட்டலை இசைக்கும்.

தெவிட்டலின் பெயர் : (2)

1. உமிழ்தல், 2. இமிழ்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இமிழ்தலு முமிழ்தலும், இமிழ்த்தலு முமிழ்த்தலும்.
உமிழ்த்தலு மிமிழ்த்தலுந் தெவிட்டலை யுரைக்கும்.
(144)

1702. துவலைவிடுதலின் பெயர்

துவற்றல், துவலை விடுதல் ஆகும்.

துவலைவிடுதலின் பெயர் : (1)

துவற்றல்.

பாடவேறுபாடு விளக்கம்

துவறல்

துவலை துவறல் விடுத லாகும். **(145)**

1703. உடன்படலின் பெயர்

ஒட்டலும், வலித்தலும், நேரலும் **உடன்படல்.**

உடன்படலின் பெயர் : *(3)*

1. ஒட்டல், 2. வலித்தல், 3. நேரல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. நேர்தலும். **(146)**

1704. பொழுது நீட்டித்தலின் பெயர்

நெடித்தல், பாணித்தல், **பொழுது நீட்டித்தல்.**

பொழுது நீட்டித்தலின் பெயர் : *(2)*

1. நெடித்தல், 2. பாணித்தல். **(147)**

1705. ஒருங்கின் பெயர்

உடங்கு **ஒருங்கு** ஆகும்.

ஒருங்கின் பெயர் : (1)

உடங்கு. **(148)**

1706. உறுத்தலின் பெயர்

ஒற்றுதல், **உறுத்தல்.**

உறுத்தலின் பெயர் : (1)

ஒற்றுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : **உறுதலின் பெயர்**

ஒற்றுத லுறுதல்.

ஒருங்குக்கும் உறுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1705, 1706 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (149)

1707. எழுப்பலின் பெயர்

எற்றல், உணர்த்தல், எடுப்பல், **எழுப்பல்**.

எழுப்பலின் பெயர் : (3)

1. எற்றல், 2. உணர்த்தல், 3. எடுப்புல்.

பாடவேறுபாடு--விளக்கம்

தலைப்பு : எழுப்புதலின் பெயர், ஏத்தலின் பெயர், ஏற்றலின் பெயர்.

1. எடுத்தல்

இதனை இருவேறு தலைப்பில் இரு நூற்பாக்களாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

உணர்த்தலின் பெயர்

எற்ற லுணர்த்தல்.

எழுப்பலின் பெயர்

எடுப்ப லெழுப்பல். (150)

1708. சோர்வின் பெயர்

கயக்கு, **சோர்வு**.

சோர்வின் பெயர் : (1)

கயக்கு. (151)

1709. வழுவின் பெயர்

பிறக்கு **வழுவே**.

வழுவின் பெயர் (1)

பிறக்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

வழுவின் பெயர் என்னும் தலைப்பில்,

கயக்கு சோர்வு பிறக்கு வழுவே

என்றும் சில பிரதிகளில் பாடம்.

சோர்வுக்கும் வழுவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1708, 1709ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (15)

1710. இசைவின் பெயர்

இயைபே, புணர்ச்சி, இயைப்பு, இசைவு ஆகும்.

இசைவின் பெயர் : (3)

1. இயைபு, 2. புணர்ச்சி, 3. இயைப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இசைத்தலின் பெயர்

1. இயைவே

இந்நூற்பாவை இருவேறு தலைப்பில் இருநூற்பாவாகவும் சில பிரதிகள் தந்துள்ளன.

புணர்ச்சியின் பெயர்

இயைபே புணர்ச்சி.

இசைப்பின் பெயர்

இசைப்பிசை யாகும். (153)

1711. மூடுதலின் பெயர்

மூய்தலும், கவித்தலும், மூடுதல் ஆகும்.

மூடுதலின் பெயர் : (2)

1. மூய்தல், 2. கவித்தல். (154)

1712. மொய்த்தலின் பெயர்

மூழ்தலும், மூசலும், மொஞ்சலும், மொய்த்தல்.

மொய்த்தலின் பெயர் : (3)

1. மூழ்தல், 2. மூசல், 3. மொஞ்சல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2—3 முஞ்சலும் மொஞ்சலும்

3 முஞ்சலுப், மூஞ்சலும் **(155)**

1713. அரசிறையின் பெயர்

அரசிறை, திறையே.

அரசிறையின் பெயர் : (1)

திறை.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 அரசிறை திறை.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்று மரசிறையின் பெயர்

251. ★ கட்பழ மிறையுங் காட்டு மதுவே. **(156)**

1714. சுங்கவிறையின் பெயர்

உல்கு, **சுங்கவிறை** ஆம்.

சுங்கவிறையின் பெயர் : (1)

உல்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

2. சுங்கவிறை யாகும்.

உல்கு சுங்கவிறை—**அச்சுப்பிரதி.**

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்றுஞ் சுங்கவிறையின் பெயர்

252. ★ ஆயஞ் சாரிகை யஃதென மொழிப.

அரசிறைக்கும் சுங்கவிறைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1713, 1714 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். **(157)**

1715. குடியிறையின் பெயர்

கரமும், கடனும், கறையும் **குடியிறை**யே.

குடியிறையின் பெயர் : *(3)*

1. கரம், 2. கடன், 3. கறை.

பாடவேறுபாடு—விளக்கம்

4, குடியிறை

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றுங் குடியிறையின் பெயர்

253. ★ இறுப்பும் வரியு மேற்கு மதற்கே. **(158)**

1716. தேய்த்தலின் பெயர்

பாற்றல். **தேய்த்தல்.**

தேய்த்தலின் பெயர் : *(1)*

பாற்றல். **(159)**

1717. பிறக்கலின் பெயர்

போற்றல், **பிறக்கல்.**

பிறக்கலின் பெயர் : *(1)*

போற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பெற்றலின் பெயர்

பெற்றல் பிறக்கம்.

தேய்த்தலுக்கும் பிறக்கலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1716, 1717 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். **(160)**

1718. எழுச்சியின் மிகுதிப் பெயர்

கதித்தல், பம்பல், கஞறல், கன்றல்,

எழுச்சியின் மிகுதிக்கு எய்தும் பெயரே.

எழுச்சியின் மிகுதிப் பெயர் : (4)

1. கதித்தல், 2. பம்பல், 3. கஞறல், 4. கன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : எழுச்சியின் மிகுதிப் பெயர், எழுச்சி மிகுதிப் பெயர்.

1 : 2 பம்மல், 4. கஞன்றல். (161)

1719. எழுதலின் பெயர்

ஆக்கம், மலர்ச்சி, உறுமல், இவர்தல்,
ஓக்கம், உகைத்தல், **எழுதல்** ஆகும்.

எழுதலின் பெயர் : (6)

1. ஆக்கம், 2. மலர்ச்சி, 3. உறுமல், 4. இவர்தல், 5. ஒக்கம், 6. உகைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1 ஒழுக்கல் (162)

1720. தளிர்த்தலின் பெயர்

இலிர்த்தலும் சிலிர்த்தலும் **தளிர்த்தல்** ஆகும்.

தளிர்த்தலின் பெயர் : (2)

1. இலிர்த்தல், 2. சிலிர்த்தல்.

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. (163)

1721. தழீஇக் கோடலின் பெயர்

விள்ளல், முயங்கல், **தழீஇக்கோடல்** ஆகும்.

தழீஇக்கோடலின் பெயர் : (2)

1. விள்ளல், 2. முயங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தழுவலின் பெயர்

விள்ளல் விளாவன் முயங்க றழீஇக்கோடல்—அச்சுப்பிரதி (164)

1722. சார்தலின் பெயர்

அண்ணுதல், தோய்வு, சார்ச்சி, அணவுதல்,
நண்ணுதல், தொடல், புல்லல், நணுகல், புணர்தல் என்று
எண்ணிய ஒன்பதும் படிதலும் **சார்தல்.**

சார்தலின் பெயர் : (10)

1. அண்ணுதல், 2. தோய்வு, 3. சார்ச்சி, 4. அணவுதல், 5. நண்ணுதல், 6. தொடல், 7. புல்லல், 8. நணுகல், 9. புணர்தல், 10. படிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3 நணுகுதல்

3 : 3—4 பிடித்தலுஞ் சார்வே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றுஞ்சார்தலின் பெயர்

254. ★ மருவுத லணுக லருகுறல் சிவண
றுன்னலு மதுவெனச் சொல்லற் பால. (165)

1723. கலத்தலின் பெயர்

கலாவலும், துழாவலும், அளாவலும், **கலத்தல்.**

கலத்தலின் பெயர் : (3)

1. கலாவல், 2. துழாவல், 3. அளாவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. வளாவலும், விழாவலும், விளாவலும். (166)

1724. தடவலின் பெயர்

தைவரல், வருடல், நீவுதல், **தடவல்.**

தடவலின் பெயர் : (3)

1. தைவரல், 2. வருடல், 3. நீவுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தடவுதலின் பெயர், வருடலின் பெயர்.

'தைவர னீவுத றடவல் வருடல்' என்றும் சில பிரதிகள். (167)

1725. திமிர்தலின் பெயர்

துவருதல், **திமிர்தல்.**

திமிர்தலின் பெயர் : (1)

துவருதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திமிர்தற் பெயர்.

1. துவர்தல். (168)

1726. வளைதலின் பெயர்

வக்கிரம், **வளைதல்.**

வளைதலின்பெயர் : (1)

வக்கிரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

திமிர்தலுக்கும் வளைதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1745, 1746ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (169)

1727. வற்புறுத்தலின் பெயர்

வருட்டலும், தெருட்டலும் **வற்புறுத்தல்** ஆகும்.

வற்புறுத்தலின் பெயர் : (2)

1. வருட்டல், 2. தெருட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 வருட்ட றெருட்டல்.

இதன் பின்னர் அச்சுப்பிரதியில் பின்வரும் நூற்பாக் காணப்படுகிறது.

ஒழுக்கத்தின் பெயர்

இயல்பு மாலையு நிழலு நடையுஞ்

செயலுஞ் சரிதையுங் கையாறு மொழுக்கம்.

இந்நூற்பா இங்குப் பிரதிகளில் தென்படவில்லை. **1743**ஆம் நூற்பாவாக இஃது உள்ளது. (170)

1728. குற்றுதலின் பெயர்

அவைத்தல், **குற்றுதல்.**

குற்றுதலின் பெயர் : (1)

அவைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. குத்துதல்.

குத்துதலின் **பெயர் என்னும்** தலைப்பில்,

அவைத்தல் குற்றுதல் கோறல் குத்துதல்

என்றும் சில பிரதிகளில் பாடம். இதனைக் குற்றுதலுக்கும் குத்துதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் அமைத்தாரும் உளர். இதனால் இந்நூற்பா, 'அவைத்தல் குற்றுதல்' என்றும் 'கோறல் குத்துதல்' என்றும் இரு நூற்பாவாகவும் சிலர் கொண்டமை பெறப்படும். (171)

1729. அடைவின் பெயர்

ஆம்பல், **அடைவே.**

அடைவின் பெயர் : (1)

ஆம்பல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : படுதலின் பெயர்.

ஆம்பல் படுத லாகு மென்ப. (172)

1730. முளைத்தலின் பெயர்

உருத்தல், நாறுதல், பொடித்தல், தோற்றல் என

வடித்த நான்கும் **முளைத்தல்** ஆகும்.

முளைத்தலின் பெயர் : (4)

1. உருத்தல், 2. நாறுதல், 3. பொடித்தல், 4. தோற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2—4 லுறுதல் பொடித்தல் பொடிதலென. (173)

1731. விரிதலின் பெயர்

எதிர்தல், மலர்தல், அலர்தல், **விரிதல்.**

விரிதலின் பெயர் : (3)

1. எதிர்தல், 2. மலர்தல், 3. அலர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனோடு,

அலர்த லலர்த்தல் விரித்த லாகும்

என்றும் ஓரடி சில பிரதிகளில் உள்ளது.

எதிர்தல் மலர்தல் பாவல் பரத்தல்
அலர்த லலர்த்தல் விரித லாகும்

என்றும்,

எதிர்தல் மலர்தல் பரத்த லலர்தல்
விரித லாகுமென் மனார் புலவர்

என்றும் பாடவேறுபாடுகள் உண்டு.

எதிர்தல் மலர்த லலர்தல் விரிதல்
விள்ளலு மவிழ்தலு விளம்பு மதற்கே—அச்சுப்பிரதி.

(174)

1732. ஊழ்த்தல் என்னும் பெயர்

ஊழ்த்தல் செவ்வியும் பதனழிவும் ஆகும்.

ஊழ்த்தல் என்னும் பெயர் : (2)

1. செவ்வி, 2. பதனழிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஊழ்த்தல் என்னும் சொற்பொருட் பெயர்.

பதனழிவின் பெயர் என்னும் தலைப்பில்,

ஊழ்த்தல் செவ்வி யுறுபத னழிவே

என அச்சுப்பிரதி அமைந்துள்ளது.

'ஊழ்த்தலுஞ் செவ்வியும் பதனழிவாகும் என்ற பாடமும் உண்டு. இது தவறாகும். சூடாமணி 11 : 107 பார்க்க' என குறிப்புத் தந்துள்ளார் பேராசிரியர் மு. இராகவையங்கார்.

இதன்பின் அசைதலின் பெயர் (1736) ஒட்டுதலின் பெயர் (1737), பொருந்துதலின் பெயர் (1738) ஆகியவற்றைச் சில பிரதிகள் அமைத்துள்ளன. (175)

1733. சமைத்தலின் பெயர்

சமைத்தல், சேர்த்தல், அமைத்தல் ஆகும்.

சமைத்தலின் பெயர் : (2)

1. சேர்த்தல், 2. அமைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அமைத்தலின் பெயர். (176)

1734. மறிதலின் பெயர்

இகுதல், வீழ்தல், விளிதல், மறிதல்.

மறிதலின் பெயர் : (3)

1. இகுதல், 2. வீழ்தல், 3. விளிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மறித்தலின் பெயர்

இகுத்தல் வீழ்த்தல் விளித்தல் மறித்தல்—அச்சுப்பிரதி. (177)

1735. மேவலின் பெயர்

வீழ்தலும், அமர்தலும், மேவல் ஆகும்.

மேவலின் பெயர் : *(2)*

1. வீழ்தல், 2, அமர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விருப்பத்தின் பெயர்.

1—2 **வீழ்தலும் மாழ்தலும் மேவ லாகும்.**

3—4 மேவுத லாகும். **(178)**

1736. அசைதலின் பெயர்

அசைதல், துயல்வரல்.

அசைதலின் பெயர் : *(1)*

துயல் வரல். **(179)**

1737. எட்டுதலின் பெயர்

அணவரல், **எட்டுதல்.**

எட்டுதலின் பெயர் : *(1)*

அணவரல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒட்டுதலின் பெயர்

அணவ லெட்டுதல்

தணவுத லெட்டுதல். அச்சுப்பிரதி.

அணவ லொட்டுதல்.

அசைதலுக்கும் எட்டுதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1736, 1737ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாக வும் சிலர் கொள்வர். **(180)**

1738. கூடலின் பெயர்

ஒல்லல், சிவணல், பொருந்தல், **கூடல்.**

கூடலின் பெயர் : *(3)*

1. ஒல்லல், 2. சிவணல், 3. பொருந்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கூடுதலின் பெயர், பொருந்துதலின் பெயர்.

4. கூடுதல் (181)

1739. சரண்புகலின் பெயர்

மறைபுகல் (கிளவி), சரண்புகல் ஆகும்.

சரண்புகலின் பெயர் : (1)

மறைபுகல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சரண்புகுதலின் பெயர்

3—4 சரண்புகுதலாகும். (182)

1740. காவலின் பெயர்

சிறையும், அரணமும், சேமமும், ஏமமும்,
கடியும், கதவும், கட்டும், காவல்.

காவலின் பெயர் : (7)

1. சிறை, 2. அரணம், 3. சேமம், 4. ஏமம், 5. கடி, 6. கதவு, 7. கட்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3—4 ஏமமும் சேமமும். (183)

1741. ஏவலின் பெயர்

வியங்கோள், ஏவல்.

ஏவலின் பெயர் : (1)

வியங்கோள். (184)

1742. வறுமையின் பெயர்

வீதல், வறுமை.

வறுமையின் பெயர் : (1)

வீதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

வீதல் வெறுமை என்றும் பாடம்.

ஏவலுக்கும் வறுமைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1741, 1742ஆம் நூற்பாக்களை ஒன்றாகவும் சிலர் கொள்வர். (185)

1743. ஒழுக்கத்தின் பெயர்

இயல்பும், மாலையும், நடையும், நிழலும்,
செயலுஞ், சரிதையும், கையாறும், ஒழுக்கம்.

ஒழுக்கத்தின் பெயர் : (7)

1. இயல்பு 2. மாலை, 3. நடை, 4. நிழல், 5. செயல், 6. சரிதை, 7. கையாறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3—4 நிழலு நடையும்

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இங்குத் தரப்படவில்லை. வற்புறுத்தலின் பெயரை (1727) அடுத்துக் காணப்படுகிறது. (186)

1744. அவித்தலின் பெயர்

நவித்தலும், நுதுத்தலும், நொகுத்தலும் அவித்தல்.

அவித்தலின் பெயர் : (3)

1. நவித்தல், 2. நுதுத்தல், 3. நொகுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. நுகுக்கலுங், நொருத்தலும், 3. நுதுத்தலும், துய்த்தலும்.

நதுத்தலு நொசுத்தலு நுதுத்தலு மவித்தல்
—அச்சுப்பிரதி. (187)

1745. மூட்டலின் பெயர்

மாட்டலும், பொருத்தலும், **மூட்டல்** ஆகும்.

மூட்டலின் பெயர் : (2)

1. மாட்டல், 2. பொருத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மூட்டுதலின் பெயர்.

3—4 மூட்டுத லாகும். (188)

1746. குளித்தலின் பெயர்

குளித்தலும் மூழ்கலும் செறித்தலைக் கூறும்.

குளித்தலின் பெயர் : (2)

1. மூழ்கல், 2. செறித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : செறித்தலின் பெயர். (189)

1747. கூட்டத்தின் பெயர்

யோகம், **கூட்டம்.**

கூட்டத்தின் பெயர் (1)

யோகம். (190)

1748. விடுதலின் பெயர்

வியோகம், **விடுதல்.**

விடுதலின் பெயர் : (1)

வியோகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

கூட்டத்துக்கும் விடுதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1747, 1748 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றும் விடுதலின் பெயர்

255. ★ மோசன மோக்கம் விதலு மதுவே. (191)

1749. கடுமையின் பெயர்

வேகம், **கடுமை** எனவிளம் பினரே.

கடுமையின் பெயர் : (1)

வேகம். (192)

1750. செய்கடனின் பெயர்

நியமமும், நியதியும், நிகழ்வும், **செய்கடன்.**

செய்கடனின் பெயர் : (3)

1 நியமம், 2. நியதி, 3. நிகழ்வு.

பாடவேறுபாடு—விளக்கம்

3. நிகழும். (193)

1751. குயிலுவம் என்னும் பெயர்

குயிலுவத் தொழிலே நரப்புக் கருவி
பயிலும் பாடற் பண்பிற்று ஆகும்.

குயிலுவம் என்னும் பெயர் : நரம்புக் கருவி பயிலும் பாடற் பண்பு. (நரம்புக் கருவியால் பாடுவது).

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குயிலுவத் தொழில் என்பது.

3—4 நரப்பு முன் கருவி—பிற்பதிப்புக்கள். (194)

1752. கூத்தின் பெயர்

நடமே, நாடகம், கண்ணுள், நட்டம்,
படிதம், ஆடல், தாண்டவம், பரதம்,

ஆலுதல், துணங்கை, தூங்கல், பாணி,
குரவை, நிருத்தம், கூத்துஎனப் படுமே.

கூத்தின் பெயர் : (14)

1. நடம், 2. நாடகம், 3. கண்ணுள், 4. நட்டம், 5. படிதம், 6. ஆடல், 7. தாண்டவம், 8. பரதம், 9. ஆலுதல், 10. துணங்கை, 11 தூங்கல், 12. பாணி, 13. குரவை, 14. நிருத்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. ஆலுத றூங்கல் பாணி குரவை ; 3 : 4 வாணி

4. நிலய நிருத்தங் கூத்தெனப் படுமே
இலய நிலய நிருத்தங் கூத்தே

4 : 1 நிலையம்

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றுங் கூத்தின் பெயர்

256. ★ நடனந் தூக்கு நாட்டிய நட்டண
நடையு மதற்கே நவிலப் படுமே. (195)

1753. சிவனாடலின் பெயர்

பாண்டரங்கம், காபாலம், கொடுகொட்டி என்று இவை
மூன்றும் முக்கணன் ஆடலைக் கூறும்.

சிவனாடலின் பெயர் : (3)

1. பாண்டரங்கம், 2. காபாலம், 3. கொடுகொட்டி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பரமனாடலின் பெயர்.

பாண்டரங்கங் காபாலங் கொடுகொட்டி பரமனாடல்.

1 : 2 கபாலம்

2 : 3—4 ஆடலை மொழிப

பாண்டரங் கங்கபா லங்கொடு கொட்டி
யென்றிவை மூன்று முக்கண ணாடல்
—அச்சுப்பிரதி. (96)

1754. குமரனாடலின் பெயர்

கொட்டியும், குடையும், குமரன் ஆடற்கு
ஒட்டிய பேரிற்கு உரித்தா கும்மே.

குமரனாடலின் பெயர் : (2)

1. கொட்டி, 2. குடை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முருகனாடலின் பெயர்.

கொட்டியுங் குடையுங் குமரனா டற்பெயர்.

கொட்டியுங் குடையுங் குமரனாடல்—அச்சுப்பிரதி. (197)

1755. மாயோனாடலின் பெயர்

அல்லியம், குடமாடல், மல்லே, மரக்கால்,
எல்ஒளி மாயோன் ஆடல் ஆகும்.

மாயோனாடலின் பெயர் : (4)

1. அல்லியம், 2. குடமாடல், 3. மல், 4. மரக்கால்.

பாடவேறுபாடு—விளக்கம்

முருகனாடல், மாயோனாடல், சிவனாடல் (1754, 1755, 1753) என்னும் வரிசை முறை பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் காணப்படுகிறது.

அச்சுப்பிரதியில் மாயோனாடல், சிவனாடல், முருகனாடல் (1755, 1753, 1754) என்னும் அடைவு முறை காணப்படுகிறது. (198)

1756. திருமகளாடலின் பெயர்

பாவை என்பது திருமகள் ஆடல்.

திருமகளாடலின் பெயர் : (1)

பாவை. (199)

1757. அயிராணியாடலின் பெயர்

அயிராணி ஆடற்பெயர் கடையம் ஆகும்.

அயிராணியாடலின் பெயர் : (1)

கடையம்.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு : இந்திராணியாடலின் பெயர்

2 : 3 ஆடல் கடையம்

இதன்பின் **துர்க்கையாடலின் பெயர்** என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் பின்வரும் நூற்பா காணப்படுகிறது:

மரக்காற் கூத்தே துர்க்கை யாடல்.

இந்நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. **(200)**

1758. சத்தமாதாக்களாடலின் பெயர்

எழுவர் மங்கையர் ஆடலும் துடியே.

சத்தமாதாக்களாடலின் பெயர் : (1)

துடி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சத்தமாதரா_லின் பெயர். **(201)**

1759. காமனாடலின் பெயர்

பேடு ஆடல் **காமன் ஆடல்** ஆகும்.

காமனாடலின் பெயர் : (1)

பேடு. **(202)**

1760. கூத்துவிகற்பத்தின் பெயர்

கரணம், வித்தம், மலைப்புப், பவுரி,
பிரமரி, விரட டானம், குனிப்பே,
உள்ளாளம், கடகம் என்ன ஒன்பதும்
ஒள்ளிய **கூத்தின் விகற்பம்** ஆகும்.

கூத்து விகற்பத்தின் பெயர் : (9)

1. கரணம், 2. வித்தம், 3. மலைப்பு, 4. பவுரி,

5. பிரமரி, 6. வீரட்டானம், 7. குனிப்பு, 8. உள்ளாளம், 9. கடகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கூத்தின் விகற் த்தின் பெயர்.

1 : 4 பவுரி

2 : 4 குனிப்டம்

3. உள்ளாளனங் கடக மெனவே யொன்பதும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்றுங்கூத்தின் விகற்பத்தின் பெயர்

257. ★ உம்பிதம் புரிய மிலயம் பரதமு
மப்பெயர்க் காமென் றறைந்தனர் புலவர். (203)

1761. கைகோத்தாடலின் பெயர்

குரவைக் கூத்தே **கைகோத்து ஆடல்.**

கைகோத்தாடலின் பெயர்: (1)

குரவைக்கூத்து.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குர வைக் கூத் தென்னும் பெயர் (204)

1762. துணங்கை என்னும் பெயர்

முடக்கை இருகை பழுப்புடை ஒற்றித்
துடக்கிய நடையது **துணங்கை** ஆகும்.

துணங்கை என்னும் பெயர்: முடக்கிய இருகைப் பழுப்புடை ஒற்றி ஆடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: துணங்கை என்னும் சொற்பொருட் பெயர். (205)

1763. வேலனாடலின் பெயர்

வெறியும், அணங்கும், கழங்கும் **வேலன் ஆடல்**

வேலனாடலின் பெயர் : (3)

1. வெறி, 2. அணங்கு, 3. கழங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

1—2 அணங்கும் வெறியுங் (206)

1764. வட்டணை பொறுத்தலின் பெயர்

வட்டித்தல், தட்டல், **வட்டணை பொறுத்தல்.**

வட்டணை பொறுத்தலின் பெயர் : (2)

1. வட்டித்தல், 2. தட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒற்றறுத்தலின் பெயர், ஒத்தறுத்தலின் பெயர்.

3—4 வட்டணையொற் றறுத்தல் (207)

1765. அங்கை குவித்துக் கொட்டலின் பெயர்

கொம்மை, **அங்கை குவித்துக் கொட்டல்.**

அங்கை குவித்துக் கொட்டலின் பெயர் : (1)

கொம்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொம்மை கொட்டலின் பெயர், கைகுவித்துக் கொட்டலின் பெயர்

கொம்மை கொட்டல் கைகுவித்துக் கொட்டல்
—அச்சுப்பிரதி. (208)

1766. ஆர்த்துவாய்புடைத்தலின் பெயர்

ஆவலங் கொட்டல், **ஆர்த்துவாய் புடைத்தல்.**

ஆர்த்துவாய் புடைத்தலின் பெயர் : (1)

ஆவலங்கொட்டல். (209)

1767. குந்தி நிற்றலின் பெயர்

குந்திய கால்நிலை, குஞ்சித்தல் ஆகும்.

குந்தி நிற்றலின் பெயர் : (1)

குஞ்சித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குஞ்சித்தலின் பெயர், குந்திய நிலையின் பெயர். (210)

1768. குடந்தம் என்னும் பெயர்

குடந்தம், கைகூப்பி மெய்கோட்டி நிற்றல்.

குடந்தம் என்னும் பெயர் : (1)

கைகூப்பி மெய்கோட்டி நிற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கைகூப்பி மெய்கோட்டி நிற்றலின் பெயர்.

3—4 மெய்கோட்டி நிற்றல். (211)

1769. தாளவொற்றின் பெயர்

சதியும், சீரும் **தாளவொற்றின் பெயரே.**

தாளவொற்றின் பெயர் : (2)

1. சதி, 2. சீர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தாள வொத்தின் பெயர்.

3—4 தாள வொற்றே (212)

1770. நடம் என்னும் பெயர்

அதனின் நடிப்பது நடம் ஆகும்மே.

நடம் என்னும் பெயர் : (1)

தாள வொற்றிற்கு ஏற்ப நடிப்பது.

பாடவேறுபாடு — விளக்கம்

தலைப்பு : அதனின டித்தலின் பெயர்.

1—2 அதனிவ டப்பது.

இதன் பின்னர் இத்தொகுதி முடிவு வரையில் அச்சுப் பிரதியில் காணப்படும் நூற்பாக்கள் ஏடுகளில் காணப்பட வில்லை. இவற்றைத் தாம் புதுவதாக ஆக்கிய நூற்பா என முதற்பதிப்பாசிரியர் உடுக்குறியிட்டுச் சுட்டவும் இல்லை. பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்களும் இவை ஏட்டுப் பிரதியில் இல்லை என்பதைத் தம் கையெழுத்துப் பிரதியில் இருதலைப் பகர வளைவுக் குறியிட்டுத் [ ] தெளிவுபடுத்தியுள்ளார். ஐயத்திற்கிடமாயுள்ள இந்நூற் பாக்கள் முதற்பதிப்பில் கண்டவாறே இங்கும் தரப்படு கின்றன. முதற்பதிப்பாசிரியர் இடையிடையே சேர்த் துள்ள புது நூற்பாக்களைப் போலப் பிற்காலத்து வந்த ஒருவர் இவற்றை எழுதிச் சேர்த்து விட்டனராதல் வேண்டும்.

கீறலின் பெயர்

கீளல் கீண்டல் கிழித்திடல் கீன்றல்

கீழ்தல் பீறல் கீறலின் பெயரே.

கிளைத்தலின் பெயர்

பிளிறன் ஞெண்டல் கிண்டல் கிளைத்தல்.

கத்தறித்தலின் பெயர்

கொய்தல் கத்தரித்தல்.

குட்டுதலின் பெயர்

தகர்த்தல் குட்டுத லுடைத்தலு மாகும்.

அடுக்குதலின் பெயர்

ஏற்ற லடுக்குதல்.

ஒழிதலின் பெயர்

ஓவ லொழிதல்.

மாற்றலின் பெயர்

விலக்கல் மாற்றல்.

மிசையின் பெயர்

மீமிசை மிசையே.

தாபித்தலின் பெயர்

நிலைபடச் செய்த றாபித்த லாகும்.

நிறுத்தலின் பெயர்

றோன்ற றானே நிறுத்த லென்ப.

சொலித்திடலின் பெயர்

இடத்தல் சொலித்திட லென்னற் றாற்றே.

வகிர்தலின் பெயர்

துவர்தல் வகிர்த லாகச் சொல்லுவர்.

குத்தலின் பெயர்

புடைத்த லெறித்த லெற்றலிம் மூன்றுங்
குத்த லென்னக் கூறப் படுமே.

அடித்தலின் பெயர்

கொட்டன் மொத்த லறைத லகைத்த
லெற்ற லதுக்கன் மோதல்வழுக்க
லென்றிவை யெட்டு மடித்த லென்ப.

வசமாக்குதலின் பெயர்

வடித்தல் வசமாக் குதலின் மாற்றே.

முண்டித மாக்கலின் பெயர்

மழித்தல் முண்டித மாக்க லென்ப.

வாருதலின் பெயர்

வளைத்தல் கவர்தல் வெளவல் கொளலிவை
வாருத லென்ன வகுக்கற் பால.

கொள்ளையின் பெயர்

நொண்டி சூறை கொள்ளை யாகும்.

பரத்தலின் பெயர்

பாரித்தல் விரியல் பரத்த லென்ப.

முகத்தலின் பெயர்

தோண்ட னோண்டன் முகத்த லென்ப.

காத்தலின் பெயர்

திதிநிலை பெறுத்த னோக்கல் புரத்தல்
காத்த லென்னக் கழறப் படுமே.

பங்கீட்டின் பெயர்

பருத்தல் பாத்தல் பாகம் பாதி
பங்கீ டென்னப் பகரற் பால.

விரித்தலின் பெயர்

இகுத்தல் விரித்தல்.

பொதிதலின் பெயர்

வீக்கம் பொதிதல்.

சித்தின் பெயர்

சம்பிரதஞ் சித்தின் மேற்றே.

அருவலின் பெயர்

பருவர லருவல்.

நீக்கலின் பெயர்

வரைவு நீக்கல்.

மாறுபாட்டின் பெயர்

தெற்ற லென்பது மாறுபா டென்ப.

சுடலின் பெயர்

தாபிதஞ் சந்தாபஞ் சுடலெனப் படுமே.

மறைப்பின் பெயர்

மாய்த லாவரண மறைப்பின் பெயரே.

தள்ளலின் பெயர்

நூக்க லூன்ற னோன்ற றள்ளல்.

அவமதிச் சிரிப்பின் பெயர்

அசிய மவமதிச்சிரிப் பாமென வறைவர்.
ஆசியம்—மு. ரா.

பிணக்கின் பெயர்

மறலரி லபரந் துவக்குப் பிணக்கே.

கொப்பளித்தலின் பெயர்

பிளிற்றல் பில்கல் காலல் கொப்பளித்த
லுமிழ்தலு மாமென வுரைக்கற் பாற்றே

அலையலின் பெயர்

அலைசன் ஞெகிழ்தன் ஞொள்க லாஞ்சி
அலையலின் பெயரென வறைதற் குரிய.

சத்தி செயலின் பெயர்

உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி.
உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி
செயலின் பெயரெனச் செப்பினர் புலவர்–பிற்பதிப்புக்கள்.

மூச்சின் பெயர்

தும்மல் சுவாச மூச்செனச் சொல்லும்.

தாழ்தலின் பெயர்

குரங்க லிறைஞ்சல் கூறுப தாழ்தல்.

இறக்குதலின் பெயர்

இறக்குத லிறங்குதல் குனிவு மாகும்

இதன் பின்னர் 1770 ஆம் நூற்பாவை முதற்பதிப்பும் அதன் வழிவந்த பிற்பதிப்புக்களும் அமைத்துள்ளன.

1771. சேந்தன் பெரும்புகழ்

அண்ணல் சம்புஆதிக் காணி யாட்டியை,
பெண்ணணங்கை, மூவுலகும் பெற்ற அம்மையை,
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன், அம்பர்க் காவலன், சேந்தன்
உயர்வுற்ற திவாகரத்து ஒன்பதாவது
செயல்பற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1—2 அண்ணல் செம்பாதிக்
4 : 2—3 அம்பற் காவலன்
5 ; 1—2 செய்கையுற்ற, இயல்வுற்ற (214)

பத்தாவது

ஒலி பற்றிய பெயர்த்தொகுதி

பத்தாவது

ஒலி பற்றிய பெயர்த் தொகுதி

1772. எழுத்தினோசைச் சொல்லின் பெயர்

நொடியும், கதையும், பனுவலும், கிளவியும்,
பறையும், இசையும், கூற்றும், மாற்றமும்,
அறையும், மொழியும், வாணியும், புகறலும்
உரையும், எழுத்தின் ஆகிய ஓசைச் சொல்.

எழுத்தினோசைச் சொல்லின் பெயர் : (13)

1. நொடி, 2. கதை, 3. பனுவல், 4. கிளவி, 5. பறை, 6. இசை, 7. கூற்று, 8. மாற்றம், 9. அறை, 10. மொழி, 11. வாணி, 12. புகறல், 13. உரை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3—4 கிளவியும் பனுவலும்

3 : 4 வினாவும்

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. அச்சுப்பிரதியில் காணப்படும் 'விரித்தல் கதைத்தல்' எனத் தொடங்கும் நூற்பா ஏடுகளில் காணப்படவில்லை. அது வருமாறு :

சொல்லுதலின் பெயர்

விரித்தல் கதைத்த லுரைத்தல் கூற
றெரித்த லாட னொடித்த லவிலல்
சாற்றல் பணித்தன் மொழிதல் வலித்திட
லேற்றமுந் நான்குஞ் சொல்லுதற் கிசையும். (1)

1773. சொல்லின் பொதுப்பெயர்

பகர்தல், செப்பல், இயம்பல், பரவல்,

குயிறல், இறுத்தல், கூறல், புகறல்,
கட்டுரை, விளம்பல், கரைதல், ஓதல்,
சொற்றல், வழங்கல், வசனம், காதை,
பேசல், பேச்சு, கிளப்பே, அறைதல்,
இசைப்பு, தேர்தல், மிழற்றல், வாணி,
அசைப்பு என்று இன்னவை சொல்என அறைவர்.

சொல்லின் பொதுபெயர் : (25)

1. பகர்தல், 2. செப்பல், 3. இயம்பல், 4. பரவல், 5. குயிறல், 6. இறுத்தல், 7. கூறல், 8. புகறல், 9. கட்டுரை, 10. விளம்பல், 11. கரைதல், 12. ஓதல், 13. சொற்றல், 14. வழங்கல், 15. வசனம், 16. காதை, 17. பேசல், 18. பேச்சு, 19. கிளப்பு, 20. அறைதல், 21. இசைப்பு, 22. தேர்தல், 23. மிழற்றல், 24. வாணி, 25. அசைப்பு.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு : சொல்லின் பெயர், சொல்லுதலின் பெயர்.

6 : 1—2 இசைப்புக் கோதல்

7 : 1—2 அசைப்புக் கீரோடு

இதன் பின்னர் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த நான்கு நூற்பாக்கள் வருமாறு :

மற்றுச் சொல்லின் பெயர்

258. ★ குயில்வினா வெதிர்ப்புக் கீர்நுவல் பாணி
யியம்வாக் கென்பவுஞ் சொல்லின் பால.

பிற்பதிப்புக்கள் இதனை முந்திய நூற்பாவோடு இணைத்து அதன் அங்கமாக அமைத்துள்ளன.

பதத்தின் பெயர்

259. ★ பாழியு முரையும் பதமென வுரைப்பர்.

வாசகத்தின் பெயர்

260. ★ வார்த்தை வசனம் வசித்தல் பாசுரஞ்
சேர்த்த நான்கும் வாசகஞ் செப்பும்.

பல்கால் விளம்புதலின் பெயர்

261. ★ மீதுரை பல்கால் விளம்புத லாகும்.

இதனை அடுத்து முதற் பதிப்பில் 'சத்தியத்தின் பெயர்' என்னும் தலைப்பின் கீழ்வரும் நூற்பாவும் பிரதிகளில் காணப் படவில்லை. அது வருமாறு :

சத்தியத்தின் பெயர்

ஆணை விரதம் வட்டித்தல் சூள்பிர
மாணம் வஞ்சினஞ் சபதஞ் சத்தியம். (2)

1774. மெய்யின் பெயர்

வாய்மையும், சரதமும், பரமும், வாயும்,
ஆணையும், திடமும், மெய் என அறைவர்.

மெய்யின் பெயர் : (6)

1. வாய்மை, 2. சரதம், 3. பரம், 4. வாய், 5. ஆணை, 6. திடம்.

பாடவேறுபாடு – விளக்கம்

1 வாய்மை சாதஞ் சரதஞ் சரிதம்வாய்,
வாய்மைசாதஞ் சரத முண்மைவாய்—அச்சுப்பிரதி.

2 : 2 திடனும்

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்று மெய்யின் பெயர்

262. ★ சத்திய மன்ற நிலைமை வேளாண்மை
நிச்சய மென்பவு மெய்யென நிகழும். (3)

1775. பொய்யின் பெயர்

மடி, வஞ்சம், மாயம், அனுசிதம், படிறு,
சடம், வக்கிரம், விகிர்தம், நிசிதம், பொய்யே.

பொய்யின் பெயர் : (9)

1. மடி, 2. வஞ்சம், 3. மாயம், 4. அனுசிதம்,

5. படிறு, 6. சடம், 7. வக்கிரம், 8. விகிர்தம், 9. நிசிதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2— மாயை 3 அனிசிதம், அனுசுதம்

2 சடமே வக்கிரம் விகிர்த மனிசிதம்
பொய்யே யென்னப் புகன்றனர் புலவர்
தமனிய மென்றுஞ் சாற்று மதற்கே.

2 சடம்வக் கிரம்விகிர்தம் பிசியிவை பொய்யே
சடம்வக் கிரம்விகிர்த நிசிதமிவை பொய்யே.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பாவும் ஏடுகளில் இல்லை.

மற்றும் பொய்யின் பெயர்

★ மிச்சை வலக்காரந் தள்ளல் வழுது
வெட்டு சாதனை பொய்யின் கூற்றே.

இது 1840 ஆம் ஆண்டுப் பதிப்பில் உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. (4)

1776. குறளையின் பெயர்

குஞ்சம், பிசினம், குறளை ஆகும்.

குறளையின் பெயர் : (2)

1. குஞ்சம், 2. பிசினம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பிசுனம். (5)

1777. புறங்கூற்றின் பெயர்

கொடுவாய் என்பது புறங்கூற் றாகும்.

புறங்கூற்றின் பெயர் : (1)

கொடுவாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 புறங்கூற லாகும்.

இதனை அடுத்து வெறும்புறங்கூறலின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பா ஏடுகளில் இல்லை.

வெறும்புறங்கூறலின் பெயர்

★ கொண்டியந் தொடுப்பு வெறும்புறங்கூறல். (6)

1778. வாழ்த்தின் பெயர்

ஆசிடை, **வாழ்த்தே.**

வாழ்த்தின் பெயர் : (1)

ஆசிடை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: ஆசிடை வாழ்த்தின் பெயர், ஆசில்வாழ்த்தின் பெயர்.

ஆசிடை யென்பது ஆசில் வாழ்த்தே.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

மற்றும் ஆசில்வாழ்த்தின் பெயர்

263. ★ பல்லாண் டாசிகை வாரஞ் சோபனஞ்
சொல்லிய நான்கும் வாழ்த்தினைச் செப்பும். (7)

1779. திசைச்சொல்லின் பெயர்

தேசிகம், **திசைச்சொல்.**

திசைச் சொல்லின் பெயர் : (1)

தேசிகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

வாழ்த்துக்கும் திசைச் சொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1778, 1779 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (8)

1780. துதித்தலின் பெயர்

வழுத்தல், பரவுதல், ஏத்தல் **துதித்தல்.**

துதித்தலின் பெயர் : (3)

1. வழுத்தல், 2. பரவுதல், 3. ஏத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. பரவல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

மற்றுந் துதித்தலின் பெயர்

264. ★ போற்றல் பரசுத றோத்திர மெச்சல்
சாற்றிய நான்கு மதன்பாற் சாரும்.

பிற்பதிப்புக்கள் இதனையும் திவாகரர் வாக்குடன் இணைத்து ஒன்றாய்த் தந்துள்ளன. (9)

1781. வாழ்த்தின் பெயர்

பழிச்சல், புகழ்தல், **வாழ்த்து** எனப்படுமே.

வாழ்த்தின் பெயர் : (2)

1. பழிச்சல், 2. புகழ்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தெய்வ வாழ்த்தின் பெயர்.

2 புகழ்ச்சி, பரவுதல்.

புகழ்தலின் பெயர் என்னும் தலைப்பில் 1780, 1781 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணைத்தும் சில பிரதிகளில் பாடம்.

புகழ்தலின் பெயர்

வழுத்தல் பரவ லேற்ற றுதித்தல்
பழிச்சல் புகழ்ச்சி வாழ்த்தெனப் படுமே. (10)

1782. பலரறிசொல்லின் பெயர்

பலரறிசொல், பெருஞ்சொல்.

பலரறி சொல்லின் பெயர் : (1)

பெருஞ்சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பெருஞ்சொல்லின் பெயர்.

பலரறி சொல்லே பெருஞ்சொல் லென்ப—என்பது பிற்பதிப்பு. (11)

1783. சிறுசொல்லின் பெயர்

சிறுசொல், பழித்தல்.

சிறுசொல்லின் பெயர் : (1)

பழித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பழித்தலின் பெயர்

1 சிறுச்சொல்

பலரறி சொல்லுக்கும் சிறுசொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1782, 1783 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (12)

1784. பழிமொழியின் பெயர்

அம்பல், கவ்வை, ஏச்சு, அலர், **பழிமொழி.**

பழிமொழியின் பெயர் : (4)

1. அம்பல், 2. கவ்வை, 3. ஏச்சு, 4. அலர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பழிச்சொல்லின் பெயர்.

3—4 யேசல் பழிச்சொல்.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

மற்றும் பழிச்சொல்லின் பெயர்

265. ★ பரிவாதந் தீச்சொல் பழிச்சொல் லாகும்.

மேலும், 'விடாது பேசலின் பெயர்' என அச்சுப்பிரதியில் உள்ள நூற்பா ஏடுகளில் காணப்படவில்லை.

விடாது பேசலின் பெயர் :

பிதற்றுதல் விடாது பேச லாகும். (13)

1785. அம்பல் என்னும் பெயர்

அம்பல், சிலர் அறிந்து தம்முள் புறங்கூறல்.

அம்பல் என்னும் பெயர் : (1)

சிலர் அறிந்து தம்முள் புறங்கூறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அம்பலென்னும் சொற்பொருட் பெயர் : தம்முட் புறங் கூறலின் பெயர், சிலர் அறிந்து தம்முள் புறங்கூறலின் பெயர். (14)

1786. அலர் என்னும் பெயர்

அலரே, பலரும் அறிந்து புறம்தூற்றல்.

அலர் என்னும் பெயர் : (1)

பலரும் அறிந்து புறம் தூற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அலர் என்னும் சொற்பொருட் பெயர், பழிதூற்றலின் பெயர், பலரும் அறிந்து பழிதூற்றுதலின் பெயர்.

3—4 அறிந்து அலர் தூற்றல்.

இதன்பின்னர் அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

இகழ்ச்சிச் சொல்லின் பெயர்

ஏயே சீச்சீ யென்னிளி யேளன
மாய நான்கு மிகிழ்ச்சியி னாகும்.

அதட்டலின் பெயர்

அதிர்த்திட டெழித்த லுரப்ப லதட்டல். (15)

1787. இடக்கர் என்னும் பெயர்

இடக்கர் என்பது மறைத்து மொழி கிளவி.

இடக்கர் என்னும் பெயர் : (1)

மறைத்து மொழி கிளவி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இடக்கர் என்னும் சொற்பொருட் பெயர்.

மறைத்து மொழியும் சொல்லின் பெயர்.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் ஒரு நூற்பா ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

மற்று மறைத்து மொழியுஞ் சொல்லின் பெயர்

★ மற்றுங் கூதன மறைத்துரைக் குஞ்சொல். (1.)

1840 ஆம் ஆண்டுப் பதிப்பில் இதற்கு உடுக்குறி இடப்பட்டுள்ளது.

1788. புகழின் பெயர்

கீர்த்தி, மேம்பாடு, மீக்கூற்று, ஒளியொடு,
சீர்த்தி, இசை, **புகழ்** ஆம்எனச் செப்புவர்.

புகழின் பெயர் : (6)

1. கீர்த்தி, 2. மேம்பாடு, 3. மீக்கூற்று, 4. ஒளி, 5. சீர்த்தி, 6. இசை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 றொளிசீர், றொளியிசை

2 சீர்த்தியென்றிவை புகழெனச் செப்பினர்
சீர்த்தி யென்றிவை புகழெனப் படுமே
சீர்த்தி யிசையொடு புகழெனச் செப்பினர் (17)

1789. ஏற்றமொழியின் பெயர்

தோற்றமும் சொல்மாலையும் **ஏற்றம்** ஆகும்.

ஏற்றமொழியின் பெயர் : *(2)*

1. தோற்றம், 2. சொன்மாலை.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 ஏற்றமொழியாகும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா.

மற்று மேற்ற மொழியின் பெயர்

266. ★ மெய்ப்பு சுலோகஞ்சீ ரேற்ற மொழி யென்ப.

இதன் பின் அச்சுப்பிரதியில் காணப்படும் பின்வரும் நூற்பாவும் ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

ஏற்றத்தின் பெயர்

கியாதக் கிளவி யேற்றங் கிளக்கும். (18)

1790. மிகுபுகழின் பெயர்

சீர்த்தியும் கீர்த்தியும் மிகுபுகழ் ஆகும்.

மிகுபுகழின் பெயர் : (2)

1. சீர்த்தி, 2. கீர்த்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் பின்வரும் நூற்பா ஏடுகளில் இல்லை.

மேம்பாட்டின் பெயர்

உற்ற மேம்பாட்டின் பெயரா கும்மே. (19)

1791. ஓர்தலின் பெயர்

ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம் என்று
ஆர்த்த புலவர் அறிந்திசி னோரே.

ஓர்தலின் பெயர் : *(3)*

1. கடைப்பிடி, 2. குறிக்கோள், 3. தேற்றம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தேற்றத்தின் பெயர், ஆராய்தலின் பெயர்.

2 3 3—4 அறிந்துரைத்தனரே. (20)

1792. தேற்றமொழியின் பெயர்

மாற்று என் கிளவியும், மன்றஎன் கிளவியும்,
தேற்று என் கிளவியும், தேற்றம் ஆகும்.

தேற்ற மொழியின் பெயர் : (3)

1. மாற்று, 2. மன்ற, 3. தேற்று.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 மாறென், மற்றென், 3. மன்றென்
2 : 1 தெற்றென், தேறென். (21

1793. உறுதிக் கட்டுரையின் பெயர்

கழறலும், இடித்தலும் உறுதிக் கட்டுரை.

உறுதிக் கட்டுரையின் பெயர் : (2)

1. கழறல், 2. இடித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உறுதிச் சொல்லின் பெயர். (22)

1794. நிரம்பா மென்சொல்லின் பெயர்

நிழற்றலும், மிழற்றலும் நிரம்பா மென்சொல்.

நிரம்பா மென்சொல்லின் பெயர் : (2)

1. நிழற்றல், 2. மிழற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் நூற்பா ஏடுகளில் இல்லை.

மற்றுநிரம்பா மென்சொல்லின் பெயர்

மழலை கொஞ்சல் குதலையும் லாப
மிழலை யெனவும் விளம்பு மதற்கே. (23)

1795. கூறியது கூறலின் பெயர்

கூறியது கூறல் புனருத்திக் கூற்றே.

கூறியது கூறலின் பெயர் : (1)

புனருத்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புனருத்தியின் பெயர், புனருத்தியென்பதன் பெயர். **(24)**

1796. சூளுறவின் பெயர்

சூளே, வஞ்சினம், சபதம், **சூளுறவே.**

சூளுறவின் பெயர் : (3)

1. சூள், 2. வஞ்சினம், 3. சபதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சபதஞ் சொல்லுதலின் பெயர்.

2 வஞ்சம். **(25)**

1797. வாளாது என்னும் பெயர்

வாளாது என் கிளவி பேசாது என்று ஆகும்.

வாளாது என்னும் பெயர் : (1)

பேசாது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : (1) வாளாவென்னும் பெயர், பேசாவென்னும் பெயர், பேசாமையின் பெயர்.

வாளாவென் கிளவி பேசாவென் றாகும்
—அச்சுப்பிரதி. **(26)**

1798. நன்னிமித்தத்தின் பெயர்

விரிச்சியும், வாய்ப்புள்ளும் **நற்சொல் நிமித்தம்.**

நன்னிமித்தத்தின் பெயர் : (2)

1. **விரிச்சி**, 2. வாய்ப்புள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: நன்னிமித்தப் பெயர், **நன்னிமித்தச் சொல்லின்** பெயர். (27)

1799. அழைத்தலின் பெயர்

கூவலும், விளித்தலும், உளைத்தலும், கரைதலும், வாவெனலும் **அழைத்தல் மாற்றம்** ஆகும்.

அழைத்தலின் பெயர் : (5)

1. கூவல், 2. விளித்தல், 3. உளைத்தல், 4. **கரை**தல், 5. வாவெனல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து அச்சுப் பிரதியில் காணும் நூற்பா ஏடுகளில் இல்லை.

கமையிலாதழைத்தலின் பெயர்

கத்தல் கூப்பிடல் கதறு லலறு
லொத்த நான்குங் கமையிலா தழைத்தல்.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

மற்றுங் கமையிலாதழைத்தலின் பெயர்

267. ★ இகுத்தல் கேத லாக ருடனை
அகவ னான்கு மழைத்த லாகும். (28)

1800. பொரவழைத்தலின் பெயர்

அறைகூவல், **பொர அழைத்தல்.**

பொரவழைத்தலின் பெயர் : (1)

அறைகூவல். (29)

1801. கீழறுத்தலின் பெயர்

அறைபோதல், **கீழறுத்தல்.**

கீழறுத்தலின் பெயர் : *(1)*

அறைபோதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

போரவழைத்தலுக்கும் கீழறுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1800, 1801 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (30)

1802. முதுச்சொல்லின் பெயர்

மொழிமை, **முதுச்சொல்.**

முதுச்சொல்லின் பெயர் : *(1)*

மொழிமை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முதுசொல்லின் பெயர்

மொழிமை முதுசொல்—அச்சுப்பிரதி. (31)

1803. காரணச் சொல்லின் பெயர்

கதை, **காரணச்சொல்.**

காரணச் சொல்லின் பெயர் : *(1)*

கதை.

பாடவேறுபாடு—விளக்கம்

முதுசொல்லுக்கும் காரணச் சொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1802, 1803 ஆம் நூற்பாக்களை 'முதுமை முது சொல் கதைகா ரணச் சொல்' என ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (32)

1804. உபசாரச் சொல்லின் பெயர்

முகமனும், நன்னயக் கிளவியும், **உபசாரம்.**

உபசாரச் சொல்லின் பெயர் : *(2)*

1. முகமன், 2. நன்னயக் கிளவி.

பாடவேறுபாடு—விளக்கம்

4 உபசாரச் சொல்.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் தொடுத்த புது நூற்பா ;

மற்றுமுபசாரச் சொல்லின் பெயர்

268. ★ சம்மானமு முபசாரச் சொல்லே. (33)

1805. நயச் சொல்லின் பெயர்

அசதி, நகையே, **நயக்கிளவி** ஆகும்.

நயச் சொல்லின் பெயர் : (2)

1. அசதி, 2. நகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பரியாசச் சொல்லின் பெயர்

அசதி நகைநயக் கிளவி யாகும்—என்றும் பாடம். (34)

1806. வினாவலின் பெயர்

வினாவல், கடாவல்.

வினாவலின் பெயர் : (1)

கடாவல். (35)

1807. எதிர்மொழியின் பெயர்

விடை, அதற்கு **எதிர்மொழி.**

எதிர்மொழியின் பெயர் : (1)

விடை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வினாவிற் கெதிர்மொழியின் பெயர்.

வினாவலுக்கும் அதற்கெதிர்மொழிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1806, 1807 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் இருநூற்பாக்கள் ஏடுகளில் இல்லை.

வினாவும் விடையுங் கூடிய பொருள்

சல்லாபம் வினாவிடை தழுவும் பொருளே.

பொருளின்மையின் பெயர்

அநர்த்தம் பொருளின்மை யாகு மென்ப. **(36)**

1808. நெடுமொழி என்னும் பெயர்

நெடுமொழி, *தன்மேம் பாடுதான் நிகழ்த்தல்.*

நெடுமொழி என்னும் பெயர் : (1)

தன் மேம்பாடு தான் நிகழ்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நெடுமொழியின் பெயர், தன் மேம்பாடு கூறுதலின் பெயர். **(37)**

1809. அசைச்சொல்லின் பெயர்

அன்றுஎன் கிளவியும், இன்றுஎன் கிளவியும்
ஆம்என் கிளவியும் ஆகும் **அசைச்சொல்.**

அசைச் சொல்லின் பெயர் : (3)

1. அன்று, 2. இன்று, 3. ஆம்.

பாடவேறுபாடு— விளக்கம்

தலைப்பு : ஆமென்னுஞ் சொல்லின் பெயர்.
2 : 3—4 ஆகு மென்ப. **(38)**

1810. அம்ம என்னும் பெயர்

அம்ம, *கேட்பிக்கும்.*

அம்ம என்னும் பெயர் : *(1)*

கேட்பிக்கும் கூற்று.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கேட்பிக்கும் உரையசைச் சொல்லின் பெயர், எதிர்முகமாக்குஞ் சொல்லின் பெயர். (39)

1811. உரையசையின் பெயர்

ஆங்க, **உரையசை.**

உரையசையின் பெயர்: (1)

ஆங்க.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: உரையசைச் சொல்லின் பெயர்.

அம்ம என்னும் பெயர் உரையசைச் சொல்லின் பெயர் என்னும் தலைப்பில் 1810, 1811 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர். (40)

1812. முன்னிலையசைச் சொல்லின் பெயர்

மியா, இக, மோ, மதி, இகும், சின், என்னும்
ஆவயின் ஆறும் **முன்னிலை அசைச்சொல்.**

முன்னிலையசைச் சொல்லின் பெயர்: (6)

1. மியா, 2. இக, 3. மோ, 4. மதி, 5. இகும், 6. சின். (41)

1813. அசைச் சொல்லின் பெயர்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வரூஉம்
ஆயேழ் சொல்லும் **அசைநிலைக் கிளவி.**

அசைச் சொல்லின் பெயர்: (7)

1. யா, 2. கா, 3. பிற, 4. பிறக்கு, 5. அரோ, 6. போ, 7. மாது.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 ஆகாபிற. (42)

1814. இசைநிறையசைநிலையின் பெயர்

ஏயும் குரையும் **இசைநிறை அசைநிலை**
ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப
ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும்.

இசைநிறையசைநிலையின் பெயர் : *(3)*

1. ஏ, 2. குரை, 3. போலும்.

பாடவேறுபாடு—விளக்கம்

அச்சுப் பிரதியில் இந்நூற்பா சற்று வேறுபட
ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை
என்றும்,
ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்
என்றும் இருநூற்பாக்களாகத் தரப்பட்டுள்ளன. **(43)**

1815. ஒடு என்னும் பெயர்

ஒடுஎன் கிளவி உடனிகழ்வு ஆகும்.

ஒடு என்னும் பெயர் : (1)

உடனிகழ்வு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உடனிகழ்வின் பெயர், உடனிகழ்விடைச் சொல்லின் பெயர். **(44)**

1816. சாரியையின் பெயர்

இன்னே, வற்றே, அத்தே, அம்மே,
ஒன்னே, ஆனே, அக்கே, இக்கே,
அன்என் கிளவி உளப்படப் பிறவும்.
அன்ன என்ப **சாரியை** மொழியே.

சாரியையின் பெயர் : (9)

1. இன், 2. வற்று, 3. அத்து, 4. அம், 5. ஒன், 6. ஆன், 7. அக்கு, 8. இக்கு 9. அன்,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சாரியை மொழியின் பெயர்.

1 : 3 அற்றே

3 : 3 உட்படப். (45)

1817. இடைச்சொல்லின் பெயர்

அம், ஆம், எம், ஏம், நம், தம், நும், ஏ,
உம்மே, அன், ஆன், முறை, கெழு, ஞான்றே,
அல், ஆல், அன்றே, எனவே, மன்னே,
தில்லை, வான், பாக்கு, தெய்யவும் **இடைச்சொல்.**

இடைச்சொல்லின் பெயர் : (23)

1. அம், 2. ஆம், 3. எம், 4. ஏம், 5. நம், 6. தம், 7. நும், 8. ஏ, 9. உம், 10. அன், 11. ஆன், 12. முறை, 13. கெழு, 14. ஞான்று, 15. அல், 16. ஆல், 17. அன்று, 18. என, 19. மன், 20. தில்லை, 21. வான், 22. பாக்கு, 23. தெய்ய.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3 தம்நம்

2 : 3 உறைகெழு—அச்சுப்பிரதி

4 : 1 தில்லே பான். (46)

1818. எழுத்தின் சாரியையின் பெயர்

காரமும், கரமும், கானொடு, சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை
ஏனமும், ஓனமும் எழுத்தின் சாரியை.

எழுத்தின் சாரியையின் பெயர் : (5)

1. காரம், 2. கரம், 3. கான், 4. ஏனம், 5. ஓனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : எழுத்துச்சாரியையின் பெயர்.

3 : 12 ஏனவு மோனவு

இறுதியடி சில பிரதிகளில் இல்லை ; அச்சுப் பிரதியிலும் இல்லை. **(47)**

1819. வேற்றுமையின் பெயர்

ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும்
அவ் ஆறு என்ப **வேற்றுமை** உருபே.

வேற்றுமையின் பெயர் : (6)

1. ஐ, 2. ஒடு, 3. கு, 4. இன், 5. அது, 6. கண்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேற்றுமை யுருவின் பெயர். **(48)**

1820. சுட்டின் பெயர்

அ, இ, உ, அம்மூன்றும் **சுட்டே.**

சுட்டின் பெயர் : (3)

1. அ, 2. இ, 3. உ.

பாடவேறுபாடு—விளக்கம்

2 இம்மூன்று—பிற்பதிப்புக்கள். **(49)**

1821. வினாவின் பெயர்

ஆ, ஏ, ஓ, அம் மூன்றும் **வினா.**

வினாவின் பெயர் : (3)

1. ஆ, 2. ஏ, 3. ஓ. **(50)**

1822. ஐயுற்ற சொல்லின் பெயர்

யாதும், எவனும், கொல்லும், என்னையும்
ஆகும் என்ப, **ஐயுற்ற கிளவி.**

ஐயுற்ற சொல்லின் பெயர் : (4)

1. யாது, 2. எவன், 3. கொல், 4. என்னை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: ஐயுறு சொல்லின் பெயர்.

1 யாதுங் கொல்லு மெவனு மென்னையும்

2 3—4 ஐயுறற் கிளவி. (51)

1823. இடத்தின் ஐயுற்ற சொல்லின் பெயர்

யாண்டையும் யாங்கும் இடத்தி னையுற்ற சொல்.

இடத்தின் ஐயுற்ற சொல்லின் பெயர்: (2)

1. யாண்டை, 2. யாங்கு.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு: இட ஐய்யச் சொல்லின் பெயர். (52)

1824. கல்வியின் பெயர்

உறுதியும், சால்பும், ஓதியும், அறிவும்,

கலையும், கேள்வியும் **கல்வி** ஆகும்.

கல்வியின் பெயர்: (6)

1. உறுதி, 2. சால்பு, 3. ஓதி, 4. அறிவு, 5. கலை, 6. கேள்வி.

பாடவேறுபாடு—விளக்கம்

2: 2 கிளவியும்

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த நூற்பா:

மற்றுங் கல்வியின் பெயர்

269. ★ வித்தை சாலம் விஞ்சை யூதிய

மற்றிந் நான்குங் கல்வியி னாமம்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணும் பின்வரும் நூற்பா ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

கற்றலின் பெயர்

தவிலல் கெழுமல் பயிலலுங் கற்றல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

படித்தலின் பெயர்

270. ★ பாடல் வாசித்தல் பயிலல் கற்ற
லோத லத்தி யயனமும் படித்தல். (53)

1825. வேதத்தின் பெயர்

சுருதி, மறை, சாகை, எழுதாக் கிளவி,
ஆதிநூல் என்ப **வேதநூல் பெயரே.**

வேதத்தின் பெயர் : (5)

1. சுருதி, 2. மறை, 3. சாகை, 4. எழுதாக்கிளவி, 5. ஆதிநூல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : எழுதாக் கேள்வியின் பெயர், வேதநூலின் பெயர்.

1 : 3—4 எழுதாக் கேள்வி—அச்சுப்பிரதி.

இதன் முதலடியை 'எழுதாக்கேள்வியின் பெயர்' என்றும், இரண்டாம் அடியை 'வேதநூலின் பெயர்' என்றும் தலைப்பிட்டுத் தனித்தனி நூற்பாக்களாக அச்சுப்பிரதி கொண்டுள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

மற்றும் வேதநூலின் பெயர்

271. ★ இருக்கோத் தாரணம் வேத மென்ப.

பிற்பதிப்புக்களில் இதனையும் முந்திய நூற்பாவுடன் இணைத்து வேதநூலின் பெயர் என ஒரு நூற்பாவாக அமைத்துள்ளனர். (54)

1826. வேதத்தின் இருவகைப்பொருளின் பெயர்

ஞான பாகையும், கரும பாகையும்
ஆயிரு பாற்பொருள் வேதநூற்கே.

வேதத்தின் இருவகைப் பொருளின் பெயர் : (2)

1. ஞானபாகை, 2. கருமபாகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேதநூலின் இருவகைப் பொருளின் பெயர்

2 : 2 பாற்பொருள. (55)

1827. ஆரணம் என்னும் பெயர்

ஆரணம், வேதத்தின் ஞான பாகை.

ஆரணம் என்னும் பெயர் : (1)

வேதத்தின் ஞானபாகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேதத்தின் ஞானபாகையின் பெயர், ஞானப கையின் பெயர். (56)

1828. உபநிடதம் என்னும் பெயர்

உபநிடதம், வேதத்தின் உட்பொருள் நுட்பம்.

உபநிடதம் என்னும் பெயர் : (1)

வேதத்தின் உட்பொருள் நுட்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உபநிடதத்தின் பெயர்

1 உபநிடம் 2 ஆரணத்தி 3—4 உட்பொருளி நுட்பம். (57)

1829. வைதிகத்தின் பெயர்

வைதிகம், வேதமொழி மாற்றம் ஆகும்.

வைதிகத்தின் பெயர் (1)

வேதமொழி மாற்றம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வைதீகத்தின் பெயர், **வைதிகம் என்னும்** சொற்பொருட் பெயர்.

1 வைதீகம் *3* மார்க்கம், மாற்கம் **(58)**

1830. முதல் வேதத்தின் பெயர்

இருக்கு **முதல் வேதம்**, பவுடிகம் எனப்படும்.

முதல் வேதத்தின் பெயர் : *(2)*

1. இருக்கு, *2.* **பவுடிகம்.**

பாடவேறுபாடு—விளக்கம்

3 பௌடிகம், பௌழிகம். **(59)**

1831. இரண்டாம் வேதத்தின் பெயர்

இரண்டாம் வேதம் தயித்திரியம் **எனப்படும்.**

இரண்டாம் வேதத்தின் பெயர் : (1)

தயித்திரியம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 தைத்திரிய மென்ப, **தைத்திரிய மெனவே. (60)**

1832. மூன்றாம் வேதத்தின் பெயர்

மூன்றாவது சாமவேதம், கீதநடை ஆகும்.

மூன்றாம் வேதத்தின் பெயர் : *(1)*

சாம வேதம், கீதநடையது.

பாடவேறுபாடு—விளக்கம்

மூன்றாம் வேதம் சாம மாகும்.

மூன்றாவது சாமங் கீதநடை சாரும் - **அச்சுப்பிரதி. (61)**

1833. நான்காம் வேதத்தின் பெயர்

நான்காம் வேதம் அதர்வணம் எனப்படும்,

நான்காம் வேதத்தின் பெயர் : (4)

அதர்வணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 அதர்வண மாகும். (62)

1834. நூலின் பெயர்

அதிகாரம், ஆரிடம், பனுவல், ஆகமம்,
பிடகம், தந்திரம் **நூலின் பெயரே.**

நூலின் பெயர் : (6)

1. அதிகாரம், 2. ஆரிடம், 3. பனுவல், 4. ஆகமம், 5. பிடகம், 6. தந்திரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை இரு நூற்பாக்களாக அச்சுப்பிரதி பின்வருமாறு கொண்டுள்ளது; சில பிரதிகளும் அவ்வாறு உள்ளன.

பனுவலின் பெயர்

அதிகார மாரிடம் பனுவலாகும்.

நூலின் பெயர்

பிடகம் தந்திரம் நூலின் பெயரே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

மற்று நூலின் பெயர்

272. ★ ஆகமம் பனுவ லாரிடஞ் சமயஞ்
சூத்திர மைந்து நூலினைத் துலக்கும்.

இதன் பின் நூல்முடிபின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் காணும் பின்வரும் நூற்பா ஏடுகளில் இல்லை.

நூன்முடிபின் பெயர்

படலஞ் சருக்கம் பரிச்சேதங் காண்ட
மிலம்பக மத்தியாய மெய்துநூன் முடிபே. (63)

1835. பாயிரத்தின் பெயர்

பாயிரம், நூன்முகம், புறவுரை எனப்படும்.

பாயிரத்தின் பெயர் : (2)

1. நூன்முகம், 2. புறவுரை.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 புறவுரையெனப் படுமே.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா.

மற்றும் பாயிரத்தின் பெயர்

273. ★ பதிகம் புனைந்துரை தந்துரையு மதுவே.

இதனையும் முந்திய நூற்பாவுடன் இணைத்து ஒரே நூற்பாவாகப் பிற பதிப்புக்கள் தரும். (64)

1836. மூதுரையின் பெயர்

மூதுரை, பழமொழி, முதுமொழி எனப்படும்.

மூதுரையின் பெயர் : (2)

1. பழமொழி, 2. முதுமொழி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பழமொழியின் பெயர்.

3—4 முதுமையு மெனப்படும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

மற்று மூதுரையின் பெயர் :

274. ★ மொழிமை முன்சொல் முதுசொல் பழஞ்சொன்
மொழிந்த நான்கும் மூதுரை யென்ப. (65)

1837. பாடத்தின் பெயர்

ஓதன்மை யாடல், **பாடம்** ஆகும்.

பாடத்தின் பெயர் : (1)

ஒதன்மையாடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒதலின் பெயர்

3—4 பாட லாகும். (66)

1838. நூற்பாவகவலின் பெயர்

நூற்பா—அகவல் நுணங்க நாடின்
சூத்திரம் குறித்த யாப்பிற்று ஆகி,
அடிவரை இன்றி விழுமிதின் நடக்கும்.

நூற்பாவகலின் பெயர் :

சூத்திரம் குறித்த யாப்பிற்றாகி அடிவரையின்றிச் சிறப்புற நடப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நூற்பாவகலென்பது, நூற்பாவகவல் என்னும் சொற்பொருட் பெயர்.

2 : 3—4 யாப்பினவாகி

3 : 1—2 இசைவரம் பின்றி. (67)

1839. ஓத்தின் பெயர்

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓர் இனப் பொருளை ஒருவழி வைப்பது
ஒத்துஎன மொழிப உயர்மொழிப் புலவர்.

ஒத்தின் பெயர் :

ஒருவகையான மணிகளை வரிசைப் பட வைப்பது போல ஓர் இனமான பொருள்களை ஒன்றாக அமைப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஒத்தென்னும் பெயர், ஒத்தென்னும் சொற்பொருட் பெயர்.

3 : 3 உயர்நடைப், உயர்நிலைப். **(68)**

1840. படலம் என்னும் பெயர்

ஒரு நெறி **இன்**றி **விரவிய** பொருளால்
பொதுமொழி தொடரின், அது **படலம்** ஆகும்,

படலம் என்னும் பெயர் :

ஒரு முறையாலன்றிக் கலந்த வேறு பொருள்களும் ஒரு பொதுப் பெயரின் கீழ் வருவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : படலமென்னும் சொற்பொருட் பெயர்.

(69)

1841. வேற்றிசைப்பா என்னும் பெயர்

சருக்க முடிவினும் இலம்பக முடிவினும்
விருத்த நடையது **வேற்றிசைப் பாவே.**

வேற்றிசைப்பா என்னும் பெயர் :

சருக்கமுடிவினும் இலம்பக முடிவினும் **வேறுபட்ட** சந்த நடையில் அமைவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேறிசைப்பாவின் பெயர், **வேற்றிசைப்பா** என்னும் சொற்பொருட் பெயர், **வேற்றிசைப் பென்னும்** சொற்பொருட் பெயர்.

3—4 வேறிசைப்பாவே, வேறிசைப் பாகும். **(70)**

1842. உரைப்பொருளின் பெயர்

விரித்துரை (மெய்) **உரைப் பொருளது** ஆகும்.

உரைப் பொருளின் பெயர் : *(1)*

விரித்துரை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விரித்துரையின் பெயர்

3—4 பொருள வாகும்
விரித்துரை மெய்யுரை உரைப்பொரு ளாகும்
—அச்சுப்பிரதி. (71)

1843. பொழிப்பு என்னும் பெயர்

பொழிப்பு எனப்படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டு உரைப் பதுவே.

பொழிப்பு என்னும் பெயர்: (*1*)

பாடலுள் பொருளைத் திரட்டித் தொகுத்து உரைப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பொழிப்புரைப் பெயர், பொழிப்புரையின் பெயர். (72)

1844. பதிகம் என்னும் பெயர்

பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் ஆகும்.

பதிகம் என்னும் பெயர்: (*1*)

நூலுள் அமைந்த பலவகையான பொருள்களையும் தொகுத்து உரைப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பதிகம் என்னும் சொற்பொருட் பெயர்.

2 : 3—4 சொல்லுவ தாகும், சொல்லுதறானே, சொல்லுவர் புலவர். (73)

1845. இலக்கியத்தின் பெயர்

இலக்கியம், உதாரணம், எடுத்துக் காட்டல்.
ஞாபகமும் பிசியும் அப்பொருள் நடைய.

இலக்கியத்தின் பெயர் : (*4*)

1. உதாரணம், **2.** எடுத்துக்காட்டல், 3. ஞாபகம், **4.** பிசி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இலக்கியம் என்னும் பெயர், உதாரணத்தின் பெயர்.

அச்சுப்பிரதியில் நூற்பா அமைப்பு பின்வருமாறு :

இலக்கியத்தின் பெயர்

இலக்கிய முதாரண மெடுத்துக் காட்டல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த நூற்பா :

மற்றுமிலக்கியத்தின் பெயர்

275. ✕ இதிகா சமுமே யிலக்கிய மாகும்.

இந்நூற்பாவைப் பிற்பதிப்புக்களில் இலக்கியத்தின் பெயர் கூறும் முந்திய நூற்பாவுடன் ஒருசேர இணைத்து அமைத்துள்ளனர்.

இதன் பின்னர்,

அரும்பொருளின் பெயர்

ஞாபகமும் பிசியு மரும்பொரு ளுடைய. (74)

1846. பாவின் பெயர்

தூக்கும், யாப்பும், செய்யுளும், கவியும்,
பாட்டும், கவிதையும் பாஎனப் படுமே.

பாவின் பெயர் : (6)

1. தூக்கு, 2. யாப்பு, 3. செய்யுள், 4. கவி, 5. பாட்டு, 6. கவிதை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 தூக்குங் கவியுஞ் செய்யுளுந் தொடர்பும்
தூக்குந் தொடர்புஞ் செய்யுளுங் கவியும். (75)

1847. வெண்பாவின் பெயர்

முதற்பா, வெண்பா.

வெண்பாவின் பெயர் : (1)

முதற்பா.

பாடவேறுபாடு—விளக்கம்

1. முதுப்பா. (76)

1848. கலிப்பாவின் பெயர்

முரற்கை, **கலிப்பா.**

கலிப்பாவின் பெயர் : (1)

முரற்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 முரட்கை, முரக்கை

வெண்பாவுக்கும் கலிப்பாவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1847, 1848 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (77)

1849. ஆசிரியப்பாவின் பெயர்

அகவலும், தொகையும் **ஆசிரியப் பாவே.**

ஆசிரியப்பாவின் பெயர் : (2)

1. அகவல், 2. தொகை. (78)

1850. வண்ணத்தின் பெயர்

அராகம், முடுகியல், **வண்ணம்** ஆகும்.

வண்ணத்தின் பெயர் : (2)

1. அராகம், 2. முடுகியல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வண்ணகத்தின் பெயர் — அச்சுப்பிரதி

3—4 வண்ணக மாகும் — அச்சுப்பிரதி, (79)

1851. குளகச் செய்யுளின் பெயர்

குற்றெழுத்துத் தொடரின், அது **குளகச் செய்யுள்.**

குளகச் செய்யுளின் பெயர் :

குற்றெழுத்துத் தொடர்ந்து வரும் செய்யுள் வகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குளகச் செய்யுள் என்னும் பெயர் (80)

1852. சந்தப்பாட்டின் பெயர்

இருபது மேலும் இருமூன்று எழுத்து நான்கு
அடியும் வருவது **சந்தப் பாட்டே,**

சந்தப்பாட்டின் பெயர் :

அடிதோறும் இருபத்தாறு எழுத்தைக் கொண்டு அமையும் நான்கடிச் செய்யுள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1—2 இருபதின் மேலும், 4 எழுத்து, எழுத்தும்.
2 வருவது சந்தப் பாட்டாகும்மே.
வருவது சந்தப் பாட்டென வழங்கும். (81)

1853. தாண்டகம் என்னும் பெயர்

மற்று அதன் மிகுத்த சொல் தரும்பெயர்த் **தாண்டகம்.**

தாண்டகம் என்னும் பெயர் :

அடிக்கு இருபத்தாறு எழுத்தின் மேற்படவரும் சொற்களைக் கொண்ட பாட்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

2—4 மிகுதிச் சொற்பெயர் தாண்டகம். (82)

1854. கணக்கின் பெயர்

எழுத்தும், எண்ணும், **கணக்கு** எனப்படுமே.

கணக்கின் பெயர். (2)

1. எழுத்து, 2. எண்.

பாடவேறுபாடு விளக்கம்

தலைப்பு: கணக்கு என்னும் சொற்பொருட்பெயர் (83)

1855. எண்ணின் பெயர்

எண்ணே, கரணம், கணிதம் என்ப.

எண்ணின் பெயர் (2)

1. கரணம், 2. கணிதம்,

பாட வேறுபாடு விளக்கம்

எண்ணே கணிதம் கரண மலகே
எண்ணே கரணங் கணித மலகே-அச்சுப்பிரதி (84)

1856. நால்வகை எழுத்தின் பெயர்

வடிவெழுத்து, பெயரெழுத்து, முடிவெழுத்து, தன்மை யெழுத்து என எழுத்தின் பெயர்இயம் பினரே.

நால்வகை எழுத்தின் பெயர்: (4)

1, வடிவெழுத்து, 2. பெயரெழுத்து, 3. முடிவெழுத்து, 4. தன்மையெழுத்து.

பாடவேறுபாடு -விளக்கம்

தலைப்பு: எழுத்தினத்தின் பெயர், எழுத்தாவன.

பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
2: 2: 3 எழுத்துப் பெயர் (85)

1857. ஒற்றெழுத்தின் பெயர்

விராமமும், புலுதமும், மெய்யும் **ஒற்று எழுத்தே.**

ஒற்றெழுத்தின் பெயர் (3)

1. விராமம், 2. புலுதம், 3. மெய்,

பாடவேறுபாடு-விளக்கம்

1. விராமையும்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்று மொற்றெழுத்தின் பெயர்

276. தனிநிலை புள்ளி யாய்த மொற்றெழுத்தே,

பிற்பதிப்புகள் இந்நூற்பாவுக்கு **ஆய்தத்தின் பெயர்**

என்று தலைப்பிட்டு,
தனிநிலை புள்ளி யாய்த வெழுத்தே
எனச் சிறிது மாற்றியமைத்துள்ளன. (86)

1858. முதுகாஞ்சி என்னும் பெயர்

நல்லவர் உறைஉலகம் எய்த, அப் புலவர்
ஒழுக்கம் கொளுத்துமுறை உயிர்முது காஞ்சி

முதுகாஞ்சிஎன்லும் பெயர்:

நல்லவர் உலகம் எய்தும் வகை புலவர்
ஒழுக்கம் கொளுத்தும் முறையது.

பாடவேறுபாடு -விளக்கம்

தலைப்பு: உயர் மொழிக்காஞ்சி என்பது - **அச்சுப்பிரதி.**
1: 3-4 எய்தப் புலவர்- அச்சுப்பிரதி.
2: 3-4 உயிர்மொழிக் காஞ்சி -அச்சுப்பிரதி. (87)

1859. முதுமொழிக்காஞ்சி என்னும் பெயர்

கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய
முறைமை ஆகும் முதுமொழிக் காஞ்சி.

முதுமொழிக்காஞ்சி என்னும் பெயர்:
கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய முறையது,

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு: முதுமொழிக் காஞ்சியின் பெயர், முதுமொழிக் காஞ்சி (88)

1860. பேரியற் காஞ்சி என்னும் பெயர்

கேட்டியல்பு உரைப்பது பேரியற் காஞ்சி.

பேரியற் காஞ்சி என்னும் பெயர்: கேட்டியல்பு உரைப்பது.

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு: பேரியற் காஞ்சியின் பெயர்,
பேரியற் காஞ்சியென்பது.
2. உரைத்தல், உரைத்தது (89)

1861. பொருண்மொழிக் காஞ்சி என்னும் பெயர்

அருள்மொழி மெய்ப்பொருள் பொருள் மொழிக் காஞ்சி.

பொருண் மொழிக் காஞ்சி என்னும் பெயர்: அருள்மொழி மெய்ப் பொருள் உரைப்பது.

பாடவேறுபாடு — விளக்கம்

தலைப்பு: பொருண்மொழிக் காஞ்சியின் பெயர், பொருண் மொழிக் காஞ்சி யென்பது. (90)

1862. முதுபாலை என்னும் பெயர்

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பல் முதுபாலை ஆகும்.

முதுபாலை என்னும் பெயர்: சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்புவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: முதுபாலையின் பெயர், முதுபாலை யென்பது.
2:2 புலம்பியது. (91)

1863. குறுங்கலி என்னும் பெயர்

நன்னுதல் துறந்தவட்கு உற்று இசைப்புழி ஆவவ்
முன் நின்று உரைத்தல் குறுங்கலி ஆகும்.

குறுங்கலி என்னும் பெயர்: நன்னுதலைத் துறந்தவளைக் கண்டு இசைப்புழி அவள் முன் நின்று உரைப்பது.

பாட வேறுபாடு விளக்கம்

தலைப்பு: குறுங்கலியின் பெயர். குறுங்கலி யென்பது
2:2 உரைப்பது (92)

1864. பாசறைமுல்லை என்னும் பெயர்

பாசறை முல்லைத் தலைவன் பாசறைக் கண்
மாதரை உள்ளும் மரபிற்று ஆகும்.

பாசறைமுல்லை என்னும் பெயர்: தலைவன் பாசறைக்கண் தலைவியை உள்ளும் மரபிற்று.

பாட வேறுபாடு விளக்கம்

தலைப்பு: பாசறை முல்லை யென்பது, பாசறைத் தலைவன் தலைவியை நினையும் பெயர்.

2:2 உள்கும் (93)

1865. இல்லாண் முல்லை என்னும் பெயர்

இல்லாண் முல்லை பாசறைத் தலைவனை
நல்லாண் நினையும் நலத்தது ஆகும்.

இல்லாண்முல்லை என்னும் பெயர்: பாசறைத் தலைவனை நல்லாள் நினையும் நலத்தது.

பாட வேறுபாடு விளக்கம்

தலைப்பு: இல்லாண் முல்லையின் பேர், இல்லாண் முல்லை யென்பது, தலைமகள் பாசறைத் தலைவனை நினையும் பெயர்.

இதன்பின் யாழ்நரம்பினோசையின் பெயர் என்பதும் வள்ளைப்பாட்டு என்பது குறித்தும் அமைந்த நூற்பாக்கள் சில பிரதிகளில் காணப்படுகின்றன. இவை 1872, 1873 ஆம் நூற்பாக்களாக இப்பதிப்பில் உள்ளமை காண்க. (94)

1866. இசைப்பாட்டின் பெயர்

பாணி, வரி, பண், இசை, கானம், கொளையே
பாணே, கீதம், கந்தருவம், கேயம்,
காமரம் என்று இவை இசைப்பாட்டு ஆம்கு.

இசைப்பாட்டின் பெயர் (11)
1. பாணி, 2. வரி, 3. பண், 4. இசை, 5. கானம், 6. கொளை, 7. பாண், 8. கீதம், 9. கந்தருவம், 10, கேயம், 11. காமரம். (95)

1867. ஏனை என்னும் பெயர்

ஏனை என்பது ஓர் இசைவிகற்பம் ஆகும்.

ஏனை என்னும் பெயர்: ஓர் இசை விகற்பம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இசை விகற்பத்தின் பெயர்

1—2 ஏனைய தென்பதோ

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் வல்லிசையின் பெயர்) என்னும் தலைப்பில் பின்வரும் நூற்பா காணப்படுகிறது.

உச்சந் தார மோங்கும் வல்லிசை.

ஏட்டுப் பிரதிகளில் இஃது இல்லை. (96

1868. மந்தவிசையின் பெயர்

காகுளி, மந்த இசை.

மந்தவிசையின் பெயர்: [1] காகுளி (97)

1869. இன்னிசையின் பெயர்

இராகம், இன்னிசை.

இன்னிசையின் பெயர் : (1) இராகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

மந்தவிசைக்கும் இன்னிசைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1868, 1869 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (98)

1870. சமனிசையின் பெயர்

மந்தம், மத்திமம், வழங்கும் சமனிசை.

சமனிசையின்பெயர் (2)
1. மந்தம், 2, மத்திமம்,
இந்நூற்பாச் சில பிரதிகளில் காணப்படவில்லை. (99)

1871. பல்லியந் தழுவுபாடலின் பெயர்

சங்கீதம் பல்லியம் பாடல்.

பல்லியந் தழுவு பாடலின் பெயர் (1) *சங்கீதம்*

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சங்கீதம் என்னும் பெயர், கீதம் பாடலின் பெயர் (100)

1872. யாழ்நரம்பின் ஓசையின் பெயர்

எழாலே, தந்திரி, நரம்பின் ஓசை.

யாழ் நரம்பின் ஓசையின் பெயர் (2)

1. *எழால்* 2. *தந்திரி*

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தந்திரி நரம்பினோசைக்கும் பெயர். (101)

1873. வள்ளைப்பாட்டு என்னும் பெயர்

ஊழ்முறை உலக்கை யோச்சி, வாழிய
தருமனைக் கிழவர் தம்வளம் கூறி,
மகளிர் பாடுவது வள்ளைப் பாட்டே.

வள்ளைப்பாட்டு என்னும் பெயர்: *ஊழ்முறை உலக்கை ஓச்சி மனைக்கிழவர் தம் வளம் கூறி மகளிர் பாடுவது.*

பாட வேறுபாடு—விளக்கம்

தலைப்பு: வள்ளைப்பாட்டென்னும் சொற்பொருட் பெயர்

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படும் மூன்று நூற்பாக்கள் ஏட்டுப் பிரதிகளில் இல்லை. அவையாவன:

பண்ணென்னும் பெயர்: *(பண்ணென்பது)*
நிறைநரம் பிற்றே பண் என லாகும்.

திறமென்னும் பெயர் *(திறமென்பது)*
குறைநரம் பிற்றே திறமெனப் படுமே.

நால்வகை யாழின் பெயர்: *(நால்வகை யாழாவன)*
பேரியாழ் சகோடயாழ் மருதயாழ் செங்கோட்
டியாழென நான்கு நால்வகை யாழ்ப்பெயர். (102)

1874. நாற்பெரும் பண்ணின் பெயர்

யாமை யாழ்ப்பெயர், குறிஞ்சி யாழும்,
செவ்வழி யாழ்ப்பெயர், முல்லை யாழும்,
பாலை யாழும், மருத யாழும் என
நால்வகை யாழும் நாற்பெரும் பண்ணே.

நாற்பெரும் பண்ணின் பெயர்: (4)

1. *யாமை அல்லது குறிஞ்சி யாழ்,* 2. *செவ்வழி அல்லது முல்லை யாழ்,* 3. *பாலையாழ்,* 4. *மருதயாழ்.*

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நால்வகை யாழின் பெயர்

1:4 *யாகும்*
1:4 *யாகும்*

இந்நூற்பா பின்வருமாறு மூவேறு தலைப்பில் மூன்று நூற் பாக்களாகவும் சில பிரதிகளில் காணப்படுகிறது.

குறிஞ்சி யாழின் பெயர்

யாமை யாழ்ப்பெயர் குறிஞ்சி யாகும்.

முல்லையாழின் பெயர்

செவ்வழி யாழ்ப்பெயர் முல்லையா மாகும்.

நால்வகை யாழின் பண்ணின் பெயர்

பாலை யாழு மருத யாழுமென
நால் வகை யாழும் நாற்பெரும் பண்ணே. (103)

1875. நெய்தல் யாழின் பெயர்

திறனில் யாழ்ப்பெயர் **நெய்தல் யாழ் ஆம்.**

நெய்தல் யாழின் பெயர் (1) *திறனில் யாழ்*

இந் நூற்பா சில பிரதிகளில் இல்லை. (104)

1876. குறிஞ்சி யாழ்த்திறத்தின் பெயர்

நைவளம், காந்தாரம், (மெய்படு) மலையம்,
பஞ்சுரம், மருள். அயிர்ப்பு, அரற்று, செந்திறம்
என்று இவை எட்டும் குறிஞ்சியாழ்த் திறனே.

குறிஞ்சியாழ்த்திறத்தின் பெயர்: (8)

1. *நைவளம்,* 2. *காந்தாரம்,* 3. *மலையம்,* 4. *பஞ்சுரம்,* 5. *மருள்,* 6. *அயிர்ப்பு,*7. *அரற்று,* 8. *செந்திறம்.* (105)

1877. செவ்வழியாழ்த் திறத்தின் பெயர்

நேர்திறம், பெயர் திறம், யாமை யாழ், சாதாரி
என்று இவை *நான்கும்* **செவ்வழியாழ்த் திறனே.**

செவ்வழியாழ்த் திறத்தின் பெயர்: (4)

1. *நேர்திறம்,* 2. *பெயர்திறம்,* 3. *யாமையாழ்,* 4. *சாதாரி*

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு: முல்லை யாழ்த்திறனின் பெயர்
1:1-2 *நோதிறம் பேர்திறம்*
2:3-4 *செவ்வழி யாழ்த்திறம், முல்லையாழ்த் திறனே.* (106)

1878. பாலை யாழ்த்திறத்தின் பெயர்

அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி,
ஆசான் ஐந்தும் பாலை யாழ்த் திறனே.
படுமலைப் பாலை, செவ்வழிப் பாலை,
செம்பாலை, விளரிப் பாலை. கொடிப்பாலை
மேற்செம் பாலை, அரும்பாலை என்று இவை
ஏழும் பாலை யாழ்த்திறன் என்ப.

பாலையாழ்த்திறத்தின் பெயர் (12)

1. அராகம், 2. நேர்திறம், (நோதிறம்) 3. உறுப்பு, 4. குறுங்கலி, 5. ஆசான், 6. படுமலைப் பாலை, 7. செவ்வழிப்பாலை, 8. செம்பாலை, 9. விளரிப்பாலை, 10. கொடிப்பாலை, 11. மேற்செம்பாலை, 12. அரும்பாலை.

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு: பாலையாழ்த் திறனின் பெயர்.
1, 2 நோதிறம்
3-4 செம்பாலை விளரிப் பாலை யரும்பாலை
கொடிச்செம் பாலை மேற்செம் பாலை
ஏழும் பாலை யாழின் நிறனே.

செம்பாலை விளரிப்பாலை, செங்கொடிப் பாலை. (107)

1879. மருதயாழ்த்திறத்தின் பெயர்

நவிர், படு, குறிஞ்சி, பியந்தை யிந் நான்கும்
மருத யாழின் திறன்ஆ கும்மே.

மருதயாழ்த்திறத்தின் பெயர் (4)

1. நவிர், 2. படு, 3. குறிஞ்சி, 4. பியந்தை.

பாடவேறுபாடு - விளக்கம்

2. மருத யாழ்த்திற னாகு மென்ப, (108)

1880. நெய்தல்யாழ்த் திறத்தின் பெயர்

திறனில்யாழ், விளரி, நெய்தல் நிலம் சிவணும்.

நெய்தல் யாழ்த் திறத்தின் பெயர் (2)

1. திறனில் யாழ், 2. விளரி.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு: நெய்தல் யாழின் பெயர்.
திறனில் விளரியாழ் நெய்தனிலன் சிவணும்.

குறிஞ்சி யாழ், பாலையாழ், மருதயாழ், செவ்வழி யாழ், நெய்தல் யாழ் (1876, 1878, 1879, 1877, 1880) என்னும் அடைவிலும் சில பிரதிகளில் காணப்படுகிறது. (109)

1881. பாடற்பாட்டின் பெயர்

செந்துறைப் பாட்டே பாடற்கு ஏற்பது.

பாடற்பாட்டின் பெயர் (1)

செந்துறைப் பாட்டு (110)

1882. ஆடற்பாட்டின் பெயர்

வெண்டுறைப் பாட்டே ஆடற்கு ஏற்பது.

ஆடற்பாட்டின் பெயர் (1)

வெண்டுறைப்பாட்டு.

பாடவேறுபாடு - விளக்கம்.

பாட லாடற்றுறைப் பாட்டின் பெயர் அல்லது பாடற் கேற்கும் பாட்டின் பெயர் ஆடற்கேற்கும் பாட்டின் பெயர் எனத் தலைப்பிட்டு 1881, 1882 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணையவும் சற்று மாறுபாட்டுடன் சில பிரதிகளிலும் அச்சுப்பிரதியிலும் பின்வருமாறு காணப்படுகிறது:

செந்துறை வெண்டுறை பாடற் கேற்பன
அம்மென் பாட்டே யாடற் கேற்பன. (111)

1883. அகமார்க்கம் என்னும் பெயர்

அருமையிற் பாடல் அகமார்க்கம் ஆகும்.

அகமார்க்கம் என்னும் பெயர்: (1)

அருமையிற் பாடுவது.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு: அகமார்க்கமென்பது, அருமையிற் பாடலின் பெயர், அருமைப் பாட்டின் பெயர்.
2. பாட்டே 3 அகமாற்கம். (112)

1884. ஏழிசையின் பெயர்

குரலே, துத்தம், கைக்கிளை, உழையே
இளியே, விளரி, தாரம் என்ப
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே

ஏழிசையின் பெயர் (1)

1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5, இளி, 6. விளரி, 7. தாரம். (113)

1885. ஏழிசையின் ஓசைப்பெயர்

சங்கு, குயில், மயில், யானை, புரவி,
(செங்கால்) அன்னம், காடை, அவற்று ஓசை.

ஏழிசையின் ஓசைப் பெயர். (7)

1. சங்கு, 2. குயில், 3. மயில், 4. யானை, 5, புரவி, 6. அன்னம், 7. காடை.

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு; அவற்றினோசையின் பெயர்

2 அங்க வன்னங் காடை யவற்றோசை- அச்சுப்பிரதி.
2 அங்கவ் வன்னங் காடை யவற்றிசை
இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா

மற்று மேழிசையோசையின் பெயர்

277. ★ வண்டு கிள்ளை வாசிமத யானை
தவளை தேனுவா டேழிசை யோசை, [114]

இதனை மேலை நூற்பாவோடு ஒன்றாகப் பிறபதிப்புக்கள் அமைத்துள்ளன.

1886. ஏழிசையினெழுத்தின் பெயர்

சவ்வும், ரிவ்வும், கவ்வும், மவ்வும்,
பவ்வும், தவ்வும், நிவ்வும் என்று இவை
ஏழும் அவற்றின் எழுத்தே ஆகும்.

ஏழிசையினெழுத்தின் பெயர் (1) ச, ரி, க, ம, ப, த, நி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: அவற்றினெழுத்தின் பெயர்

இதன் பின்னரும் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா:

மற்றுமேழிசையின் பெயர்

278. ✻ வண்டு கிள்ளை வாசிமால் யானை
தவளை தேனுவோ டாடிசை யோசை...

இது முந்திய நூற்பாவினை (1885) அடுத்து முதற் பதிப்பாசிரியர் தந்த நூற்பாவே யாகும். கூறியது கூறலாய் மீண்டும் அவர் அமைத்ததன் பயன் விளங்கவில்லை. இதனை அடுத்து மறு ஆண்டில் (1940) வெளிவந்த பதிப்பிலும் இவ்வாறே உள்ளது. பிற்பட்ட பதிப்புக்களில் இது நீக்கப்பட்டிருக்கிறது.

ஏழிசையின் எழுத்தினை அறிவிக்கும் இந்நூற்பாவினை அடுத்து ஐந்து நூற்பாக்கள் முதற் பதிப்பிலேயே காணப்படு கின்றன. ஆனால், இவை ஏட்டுப் பிரதிகளில் காணப்பட வில்லை.

அந்த ஐந்து நூற்பாக்களும் வருமாறு:

இவற்றினெழுத்தின் பெயர்:

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ எனும்
இவ்வேறெழுத்து மேழிசைக் குரிய

இதனை மேலை நூற்பாவினோடு (1886) ஒன்றாக வைத்துப் பிற் பதிப்புகள் அடைவு படுத்தியுள்ளன.

இவற்றின் பிறப்பிடத்தின் பெயர்

மிடறுந் தாலு மண்ணமுஞ் சிரமு
நெற்றியு நெஞ்சு நாசியு முறையே
குரலாதி யேழிசைக் குப்பிறப் பிடமே.

இவற்றின் மாத்திரையின் பெயர்

இளிது தங்குரற் கேற்குநந் நான்கே
கிளையும் விளரியு மும்மூன் றுழையுந்
தாரமு விவ்விரண் டேழிசை மாத்திரை

இவற்றின்மனத்தின் பெயர்

மௌவன் முல்லை கடம்பு வஞ்சி
நெய்தல் வீரை புன்னையு மிசைமணம்.

இவற்றிற்கு ஈசரின் பெயர்

விசுவா மித்திர னியம னங்கி
சதியே வெய்யோன் கௌதமன் காசிபன்
இவ்வேழ் பெயரு மேழிசைக் கீசர், (115)

★

1887. இராகத்தின் பெயர்

தக்க ராகம், துக்க ராகம்,
பழந்தக்க ராகம், நட்ட ராகம்
இன்ன ராகம், சங்கின்ன ராகம்,
நிருபதுங்க ராகம் என்ன வருபவை
இராகப் பெயர்என இசைத்தனர் புலவர்,

இராகப் பெயர் (7)

1. தக்கராகம், 2. துக்கராகம், 3. பழந்தக்கராகம், 4. நட்ட ராகம், 5. கின்ன ராகம், 6. சங்கின்னராகம், 7. நிருபதுங்கராகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: இராகங்களின் பெயர்
5. இராக வண்பெய ராகு மென்ப. (116)

1888. கொல்லியின் பெயர்

சாயவேளா கொல்லி, ஆரியவேளா கொல்லி,
சித்திரவேளா கொல்லி, விசித்திரவேளா கொல்லி,
இத்திறம் **கொல்லிப் பெயர்** என இசைப்பர்.

கொல்லியின் பெயர். (4)

1. சாயவேளா கொல்லி, 2. ஆரியவேளா கொல்லி, 3. சித்திரவேளா கொல்லி, 4. விசித்திரவேளா கொல்லி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கொல்லி வகையின் பெயர், கொல்லித் திறத்தின் பெயர்.

1 : 1 சாயவேளர் 3. ஆரியவேளர்
2 : 1 சித்திரவேளர் 3. விசித்திர வேளர்.
சாயவேளர் கொல்லி சித்திரவேளர் கொல்லி
இத்திறங் கொல்லிப் பெயரென விசைப்பர்—
அச்சுப்பிரதி (117)

1889. வராடியின் பெயர்

ஆரிய வராடி, கொல்லி வராடி
தீப வராடி என ஒரு மூன்றும்
ஆகும் **வராடிக்கு** அடைத்தபல் பெயரே

வராடியின் பெயர் (3)

1. ஆரியவராடி, 2. கொல்லி வராடி, 3. தீபவராடி.

பாடவேறுபாடு விளக்கம்

தலைப்பு : வராடிவகையின் பெயர், வராடித்திறத்தின் பெயர்.

1 : 3—4 கொல்லிய வராடி
2 : 1—4 தீப வராடி சோக வராடி
2 : 3—4 யென்னுந் திறமும்
3 : 3 அமைத்தபல் (118)

1890. குறிஞ்சியின் பெயர்

சாவகன் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி,
வியாளக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி
ஆகும் **குறிஞ்சிக்கு** அடைத்த பல்பெயரே.

குறிஞ்சியின் பெயர்: (4)

1. சாவகன் குறிஞ்சி, 2. மேகராகக் குறிஞ்சி, 3. வியாளக் குறிஞ்சி, 4. அந்தாளிக்குறிஞ்சி.

பாடவேறுபாடு--விளக்கம்

தலைப்பு: குறிஞ்சி வகையின் பெயர்
2:1-2 யாளக் குறிஞ்சி
3:3 கடுத்தபல் (119)

1891. பஞ்சமத்தின் பெயர்

காந்தார பஞ்சமம், உருத்திர பஞ்சமம்.

பஞ்சமத்தின் பெயர் (2)
1. காந்தார பஞ்சமம், 2. உருத்திரபஞ்சமம்.

பாடவேறுபாடு —விளக்கம்

பஞ்சம மருள்பஞ் சமப்பெய ராகும். (120)

1892. தக்கேசியின் பெயர்

பஞ்சமம், காம்போதி, பாண்டி, தக்கேசி.

தக்கேசியின் பெயர் (3)
1. பஞ்சமம், 2. காம்போதி,3, பாண்டி.

பாடவேறுபாடு—விளக்கம்

காம்போதி பாண்டி கேசிதக் கேசி. (121)

1893. இந்தளத்தின் பெயர்

இந்தளம், மருளிந் தளமே ஆகும்.

இந்தளத்தின் பெயர் (1) மருளிந்தளம். (122)

பாடவேறுபாடு—விளக்கம்

1891, 1892, 1893 ஆம் நூற்பாக்களில் வரும் பண்ணின் பெயர்களையும், இவற்றின்பின் 1894 ஆம் நூற்பாவில் குறிக்கப் படும் பண்களின் பகுதியாக அடக்கியும் சில பிரதிகள் கொண் டுள்ளன.

1894. பண்ணின் பெயர்

இராமக்கிரி, தேசாக்கிரி: கொண்டைக்கிரி, மகுடராசமக்கிரி,
அந்தாளி பாடை, நட்ட பாடை,
அருமவதி, செந்துருதி, சீகாமரம், சிகண்டி,
காந்தாரம், புறநீர்மை, குறண்டி, கௌசிகம்,
தாட்டை, சாதாரி, சாயரி, குச்சரி.
தளுத்தை, பழம்பஞ்சுரம், பஞ்சுரம், கவ்வாணம்,
கொல்லி கவ்வாணம், காஞ்சி, கவுடிகம்,
பிலகரி, பயிரவி, காம்போதி என்னப்
பண்ணும் திறமும் பிறவும் பண்ணே.

பண்ணின் பெயர் (28)

1 இராமக்கிரி,2.தேசாக்கிரி,3.கொண்டைக்கிரி,4. மகுடராமக்கிரி,5.அந்தாளி பாடை, 6.நட்டபாடை, 7.அருமவதி,8. செந்துருதி, 9. சீகாமரம், 10. சிகண்டி, 11. காந்தாராம், 12. புறநீர்மை, 13. குறண்டி, 14.கௌசிகம், 15. நாட்டை, 16. சாதாரி, 17. சாயரி, 18. குச்சரி, 19. நளுத்தை, 20 பழம்பஞ்சுரம், 21. பஞ்சுரம், 22. கவ்வாணம், 23. கொல்லி கவ்வாணம், 24. காஞ்சி,25. கவுடிகம், 26. பிலகரி, 27. பயிரவி,28.காம்போதி.

பாடவேறுபாடு--விளக்கம்

அந்தாளி பாடை நட்டபாடை நைவளம்
அரும வதிசெந் துருதிசீ காமரம்
சிகண்டி மேக ராகக் குறிஞ்சி
காந்தா ரம்புற நீர்மை கவுசிகம்
குறண்டி நாட்டைசா தாரி சாயரி
குச்சரி நளுத்தை பஞ்சு ரம்பழம்
பஞ்சுரங் கவ்வாணங் கொல்லிகவ் வாணம்
காஞ்சி கவுடி மலகரி யென்னும்
இத்திறம் பாட்டிற்கிசைந்த பண்ணே. (123)

1895. ஒலித்தலின் பெயர்

கலித்தல், சும்மை. கம்பலை, அழுங்கல்,
சிலைத்தல், துவைத்தல், சிலம்பல், இரங்கல்,
இமிழ்த்தல், விம்மல், இரட்டல், ஏங்கல்
கனைத்தல், தழங்கல், கறங்கல், அரற்றல்,
இசைத்தல் என்று இவை ஒலித்தலை இசைக்கும்.

ஒலித்தலின் பெயர் (17)

1. கலித்தல், 2, சும்மை, 3. கம்பலை, 4. அழுங்கல், 5. சிலைத்தல், 6. துவைத்தல், 7. சிலம்பல், 8. இரங்கல், 9. இமிழ்த்தல், 10. விம்மல், 11, இரட்டல், 12. ஏங்கல், 13. கனைத்தல், 14 தழங்கல், 15. கறங்கல், 16. அரற்றல், 17. இசைத்தல்,

பாடவேறுபாடு-விளக்கம்

2: 3-4 இரங்கல் சிலம்பல்
4: 3-4 இரற்றல் கறங்கல்

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்று மொழித்தலின் பெயர்

279.★ சிரற்ற றொலித்த றெழித்தல் குமுற
லுரத்த லுளைத்த லுரைத்த லேங்க

விரைத்த லுலம்ப விடித்தன் முழக்கல்
குரைத்த றெவிட்டல் குளிற லியம்பல்
சிலம்ப லலம்பல் சிதைத்தல் புலம்ப
விலங்கிந் நாலைந் தொலித்தலுக் கேற்கும். (124)

1896. ஒலியின் பெயர்

ஓசை, நாதம், கம்பலை, ஓலே,
ஆகுலம், புலம்பல், கோடனை, அரவம்,
ஓதை, கர்ச்சனை, ஒலி என் கிளவி.

ஒலியின் பெயர் (10)

1. ஓசை, 2. நாதம், 3. கம்பலை, 4. ஓல், 5. ஆகுலம் 6. புலம்பல், 7. கோடணை, 8. அரவம், 9. ஓதை, 10. கர்ச்சனை

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

மற்றுமொழியின் பெயர்

280. ☆சுருதி துழனி தொனி யாரவாரங்
கரையுரை சும்மை யிசை களன் வகுணி
பாட்டிடி யாறிரண் டொலியினைப் பகரும்.

இதன் பின் **சிலையொலியின்பெயர்** என்னும் தலைப்பில்
'மரும ராஞ்சம் வழங்குஞ் சிலையொலி'
என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இஃது
ஏட்டுப்பிரதிகளில் இல்லை. (125)

1897. உள்ளோசையின் பெயர்

முரல்வும், நரல்வும், தெளிரும், ஞெளிரும்,
உழையும், நுணுக்கமும், உள்ளோசை ஆகும்.

உள்ளோசையின் பெயர்

1. முரல்வு, 2. நரல்வு, 3. தெளிர், 4. தெளிர், 5. உழை, 6. நுணுக்கம்.

பாடவேறுபாடு-விளக்கம்

2: உழைவும், விரைவும், விளைவும், விழைவும். (126)

1898. எழுத்திலாவோசையின் பெயர்

பிளிறலும், குளிறலும், பிரற்றலும், சிரற்றலும்,
மருளலும், பயிறலும், குரைத்தலும், கனைத்தலும்,
முளைத்தலும், அகவலும் எழுத்திலா ஓசை.

எழுத்திலாவோசையின் பெயர் [10]

1. பிளிறல், 2. குளிறல், 3. பிரற்றல், 4. சிரற்றல், 5. மருளல், 6. பயிறல், 7. குரைத்தல், 8.கனைத்தல், 9. முளைத்தல், 10. அகவல்.

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு: எழுத்தில்லா **ஓசையின்** பெயர்.
1: 1-4 பிளிறுங் குளிறும் பிணைத்தலுஞ் சிலிர்த்தலும்
2: 2 பயிற்றலும், 4. கரைதலும்

சிரற்றலுங் கரைதலு முழைத்தலுங் கரைத்தலும்
வண்டுறை பிளிறுங் குளிறும் பிரற்றலும்
மருளலும் பிரளலு மெழுத்திலா வோசை யென்ப. (127)

1899. ஆரவாரத்தின் பெயர்

அதிர்ச்சி, அழுங்கல், ஞெள்ளல், உரற்றல்,
குரைத்தல், தழங்கல், பிளிறல், துவைத்தல்,
கலித்தல், கரைத்தல், ஓதை, பராரை,
தெழித்தல், புலம்பல், பூசல், தமரம்,
கனைத்தல், சிள்ளெனல், ஒலி,கோ லாகலம்,
அனைத்தும் திமிலமொடு **ஆரவாரம்.**

ஆரவாரத்தின் பெயர் [21]

1. அதிர்ச்சி, 2. அழுங்கல், 3. ஞெள்ளல், 4, உரற்றல், 5. குரைத்தல், 6. தழங்கல், 7. பிளிறல், 8. துவைத்தல், 9. கலித்தல், 10. கரைத்தல், 11. ஓதை, 12. பராரை, 13. தெழித்தல், 14. புலம்பல், 15. பூசல், 16. தமரம், 17. கனைத்தல், 18. சிள்ளெனல், 19. ஒலி, 20. கோலாகலம், 21. திமிலம்.

பாடவேறுபாடு -விளக்கம்

1: 4 லுரறல், லூதல்,
3: 2 கரைத
4: 1 தெளிதல்
5: 1 கனைத்தல் சிள்ளே யொலியே கலக்கம்
ஆகுலங்கோலா கலமு மதற்கே
6: 2 திமிரமொடு

இதுவே சிற்சில மாறுதல்களுடன் பின்வருமாறு சில பிரதிகளில் உள்ளது.

அதிர்ச்சி யழுங்கல் ஞெள்ள லரற்றல்
சிலைத்தல் சிலம்பல் குரைத்த றழங்கல்
பிளிற றுவைத்தல் கலித்தல் கரைதல்
ஓதை பராரை தெழித்தலலம்பல்
பூசறமர மொலித்த லாகும்
ஒலிகோ லாகலம் அனைத்தும் திமரமொ
டார வார மாகு மென்ப.

இந்நூற்பாவினை அடுத்து **ஒன்றலாப் பேரொலியின் பெயர்** என அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பா ஏடுகளில் இல்லை.

தமரம் பூச லார்ப்புக் கர்ச்சனை
குமுற லுலம்பல் கோடணை கோவா
கலமே தெழித்தல் கலகமா குலமோ
டுறுதல் முந்நான் கொன்றாலப் பேரொலி. (128)

1900. அனுகரணவோசையின் பெயர்

இம்மெனல், கல்லெனல், இ மு மெ ன ல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெள்ளெனல், அன்ன அனுகரண ஓசை ஆகும்,

அனுகரணவோசையின் பெயர்(8)

1. இம்மெனல், 2. கல்லெனல், 3. இமுமெனல், 4. வல்லெனல,5. பொம்மெனல், 6. ஒல்லெனல், 7. பொள் ளெனல், 8. ஞெள்ளெனல்.

பாடவேறுபாடு--விளக்கம்

3:1-2 அன்னவை யனுகரண

இதன் பின் அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் ஏடுகளில் காணப்படவில்லை.

மற்று மனுகரணவோசையின் பெயர்

கொம்மெனல் விடேலெனல் தெரேலெனன் முகேரெனல்
அம்மெனல் சரேலென லனுகரண வோசை.

இதனையும் 1900 ஆம் நூற்பாவோடு ஒன்றா யிணையப் பிற்பதிப்புக்கள் ஒரே நூற்பாவாகக் கொண்டுள்ளன.

உபயவோசையின் பெயர்

படபடெனல் களகளெனல் பதபதெனல் கொளகொளெனல்
மொடுமொடெனல் திடுதிடெனல் மொக மொகெனல்
கலகலெனல்
நெடநெடனல் கடகடென்ல் நிறையுபய வோசை. (129)

1901. சேந்தன் கவித்திறம்

அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
பாடிய புராண பாடகன் உணர்வொடு
தா ருகற் கடிந்த வீரியத் தனிவேல்
பாடிய புலவன் பதி அம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப் பத்தாவது
ஒலிபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு-விளக்கம்

3 அடி சில பிரதிகளில் இல்லை.
4 தாருகற்றடிந்த வீரத் தயிலும்
தாருகற்றடிந்த வீரைப்த் திரைவேல்
5: 3-4 பதியம்பற் சேந்தன்
6: 1 பயிலுற்ற (130)

பதினோராவது

ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி

பதினோராவது

ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி

1902. ஏமம் என்னும் பெயர்

சேமம், காவல், இன்பம், இரவு, பொன்,
ஏமாப்பு, மயக்கம் ஏமம் ஆகும்.

ஏமம் என்னும் பெயர் : (7)

1. சேமம், 2. காவல், 3. இன்பம், 4. இரவு, 5. பொன், 6. ஏமாப்பு, 7. மயக்கம். (1)

1903. செழுமை என்னும் பெயர்

செழுமை, வளனும் கொழுப்பு மாகும்.

செழுமை என்னும் பெயர் : (2)

1. வளன், கொழுப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1. கொழுமை. (2)

1904. விழுமம் என்னும் பெயர்

சிறப்பு, சீர்மை, இடும்பைஇம் மூன்றும்
விரிக்கின், மேலோர் விழுமம் என்ப.

விழுமம் என்னும் பெயர் : (3)

1. சிறப்பு, 2. சீர்மை, 3. இடும்பை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 4 என்பர். (3)

1905. நந்தல் என்னும் பெயர்

நந்தல், கேடும் ஆக்கமும் ஆகும்.

நந்தல் என்னும் பெயர் : (2)

1. கேடு, 2. ஆக்கம். (4)

1906. உந்தி என்னும் பெயர்

உந்தி, கொப் பூழும், தேருருளும், யாறும்,
(வந்துழி) யாழ்க் கண்ணதோர் உறுப்பும் வரையார்.

உந்தி என்னும் பெயர் : (4)

1. கொப்பூழ், 2. தேருருள், 3. யாறு, 4. யாழ்க் கண் ணதோர் உறுப்பு. (5)

1907. உறை என்னும் பெயர்

நீர்முத லாகிய துளியும், மருந்துமுதல்
நோய் நீக்கி இன்பம் கொடுக்கும் பொருளும்,
கூறை மாசு கழுவுவர் நீரும்,
பாலுறு பிரையும், காரமும், ஒழுகலும்,
ஓர்இடைச் சொல்லும் உறை எனற்கு உரிய.

உறை என்னும் பெயர் : (7)

1. நீர் முதலாகிய துளி, 2. மருந்து முதல் நோய் நீக்கி இன்பம் கொடுக்கும் பொருள், 3. கூறை மாசு கழுவு நீர், 4. பாலுறு பிரை, 5. காரம், 6. ஒழுகல், 7. ஓர் இ டச் சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 : 4 ஒழுக்கமும் (6)

1908. பாழி என்னும் பெயர்

ஊரும், வலியும், உறையுளும், சயனமும்,
பாழி என்று பகரப் படுமே.

பாழி என்னும் பெயர் : (4)

1. ஊர், 2. வலி, 3. உறையுள், 4. சயனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 வலிமையும். (7)

1909. வெம்மை என்னும் பெயர்

வெம்மை, வேண்டல், விரைவு என விளம்புவர்.

வெம்மை என்னும் பெயர் : (2)

1. வேண்டல், 2. விரைவு.

பாடவேறுபாடு—விளக்கம்

3. விருப்பென 3-4 விரைவெனப் படுமே.

1910. பண்ணை என்னும் பெயர்

ஆயமும், மகளிர் விளையாடல் தொழிலும்,
(பாய் புனல்) படுகரும் **பண்ணை** என்று ஆகும்.

பண்ணை என்னும் பெயர் : (3)

1. ஆயம், 2 மகளிர் விளையாடல் தொழில், 3. படுகர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1-2 பாய்புனைப் படுகரும், 2. கரையும். (9)

1911. புரை என்னும் பெயர்

உயர்வும் குற்றமும் உவமைச் சொல்லும்
புரைஎன் கிளவிப் பொருள ஆகும்.

புரை என்னும் பெயர் : (3)

1. உயர்வு, 2. குற்றம், 3. உவமைச் சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 3-4 பொருளொடு புணரும். (10)

1912. வரைவு என்னும் பெயர்

வரைவு நீக்கலும், கொள்ளலும் ஆகும்.

வரைவு என்னும் பெயர் : (2)

1. நீக்கல், 2. கொள்ளல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 நீத்தலுங் கொளலும், நீட்டலுங் கொளலு
இந்நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (11)

1913. பரிவு என்னும் பெயர்

பரிவு துன்பமும் இன்பமும் ஆகும்.

பரிவு என்னும் பெயர் : (2)

1. துன்பம், 2. இன்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 அன்பும், 3-4 அன்பினையும் பகரும். (12)

1914. துஞ்சல் என்னும் பெயர்

சாதலும், நிலைத்தலும், உறங்கலும் துஞ்சல்.

துஞ்சல் என்னும் பெயர் : (3)

1. சாதல், 2. நிலைத்தல், 3. உறங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 வியத்தலும். (13)

1915. மஞ்சு என்னும் பெயர்

மஞ்சே மேகமும், இளமையும், வனப்பும்.

மஞ்சு என்னும் பெயர் : (3)

1. மேகம், 2. இளமை, 3. வனப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 மஞ்சுமேகம். (14)

1916. வாமம் என்னும் பெயர்

குறளே, அழகே, குறங்கே, இடப்பால்,
இவைஇந் நான்கும் வாமம் ஆகும்.

வாமம் என்னும் பெயர் : (4)

1. குறள், 2. அழகு, 3. குறங்கு, 4. இடப்பால்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 அழகு, அழகும், 3 குறங்கு
2 : 3-4 வாமமென் னும்பேர். (15)

1917. சாமம் என்னும் பெயர்

யாமமும் இரவும், பொழுதும், சாமமும்,
சாமம் என்னச் சாற்றினர் புலவர்.

சாமம் என்னும் பெயர் : (4)

1. யாமம், 2. இரவு, 3. பொழுது, 4. சாமம் (வேதம்).

பாடவேறுபாடு—விளக்கம்

1 யாமமு மிரவிற் பொழுதுஞ் சுமையும்
யாமமோர் வேத முபாயஞ் சாமம்—என்றும்

சில பிரதிகளில் பாடம். (16)

1918. தாமம் என்னும் பெயர்

தாமம் ஒளியும், தார், மா லையும் ஆம்.

தாமம் என்னும் பெயர் : (3)

1. ஒளி, 2. தார், 3. மாலை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 தார்மாலை யாகும், தார்மாலையு மாகும். (17)

1919. பாணி என்னும் பெயர்

நெடித்தற் பொழுதும், நீரொடு, கையும்,
பாடல், பல்லியமும், **பாணி** என்று ஆகும்.

பாணி என்னும் பெயர் : (5)

1. நெடித்தற்பொழுது, 2. நீர், 3. கை, 4. பாடல், 5. பல்லியம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1-2 நொடித்தற் பொழுதும். (18)

1920. கோடரம் என்னும் பெயர்

கோடரக் கிளவி குரங்கொடு, மரத்திற்
கோடும், பொதும்பும் கூறும் என்ப.

கோடரம் என்னும் பெயர் : (3)

1. குரங்கு, 2. மரத்திற் கோடு, 3. பொதும்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 2 பொதும்பரும்.

கோடரம் குரங்கொடு மரத்திற் கோடும்
பொதும்பு மாகப் புகன்றனர் புலவர்

என்றும் சில ஏடுகளில் பாடம். (19)

1921. கோதை என்னும் பெயர்

(பூப்புனை) மாலையும், (மாலைபுனை) மாதரும்,
(தோற்புனை வில்நாண் தொடர்) கைக் கட்டியும்
(கோச்) சேரன் பெயரும், **கோதை** என்று ஆகும்.

கோதை என்னும் பெயர் : (4)

1. மாலை, 2. மாதர், 3. கைக்கட்டி, 4. சேரன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 மகளிரும்

3 : 3-4 கூந்தலுங் கோதை, மயிருங் கோதை.

3 கோச்சே ரன்பெயர் மயிர்காற்றும் கோதை-அச்சுப்பிரதி.

(20)

1922. வஞ்சி என்னும் பெயர்

மேற்செல வும், பா விகற்பத்து ஒரு பாவும்,
ஆற்றுஎழும் ஓர்கொடிப் பிறப்பும், (அதன் உவமை) மாதரும்,
மாற்றுஅரும் பெயர்க்கொண்ட **வஞ்சி** என்று ஆகும்.

வஞ்சி என்னும் பெயர் : (4)

1. மேற்செலவு, 2. பாவிகற்பத்து ஒரு பா, 3. ஆற்று எழும் ஓர் கொடிப் பிறப்பு, 4. மாதர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 ஓர் கொடிப் பிறப்புமத னுவமை மாதரும்

3 : 1 மறவரும் 3-4 வஞ்சி யாகும். (21)

1923. தோல் என்னும் பெயர்

தோலே யானையும், வனப்பும், தோற்ப லகையும்.

தோல் என்னும் பெயர் : (3)

1. யானை, 2. வனப்பு, 3. தோற் பலகை. (22)

1924. மால் என்னும் பெயர்

மாலின் பெயரே, மயக்கம், வேட்கை,
மேகம், காற்று, பெருமை, கருநிறம்,
(எழு) புதன், கண்ணேனி மால் என இசைப்பர்.

மால் என்னும் பெயர் : (9)

1. மாலின் பெயர், 2. மயக்கம், 3. வேட்கை, 4. மேகம், 5. காற்று, 6. பெருமை, 7. கருநிறம், 8. புதன், 9. கண்ணேனி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 மாலோன் பெயரே, மாயோன் பெயரே
1,2 மாயோன் பெயரு மயக்கமும் வேட்கையு
2 மேகமுங் காற்றும் பெருமையுங் கருநிறமு
3. சோழன் புதனெனச் சொற்றிடு மாலே-அச்சுப் பிரதி.

(23)

1925. நொறில் என்னும் பெயர்

நொறிலே நுடக்கமும் விரைவும் ஆகும்.

நொறில் என்னும் பெயர் : (2)

1. நுடக்கம், 2. விரைவு.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 நுடக்கம் விரவும். (24)

1926. வெறி என்னும் பெயர்

வெறியே நாற்றம், விரையொடு, அணங்காட்டு.

வெறி என்னும் பெயர் : (3)

1. நாற்றம், 2. விரை, 3. அணங்காட்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

வெறியே நாற்றமும் வெறியொடணங் காட்டும்
3-4 விரையொடங் காட்டும். (25)

1927. சூர் என்னும் பெயர்

சூர், தெய்வம், வஞ்சம், நோய், அஞ்சாமையும் சொல்லும்.

சூர் என்னும் பெயர் : (4)

1. தெய்வம், 2. வஞ்சம், 3. நோய், 4. அஞ்சாமை.

பாடவேறுபாடு—விளக்கம்

சூரே தெய்வம் வஞ்சநோ யஞ்சாமை,
2-4 அச்சநோ யாகுமென்ப-அச்சுப் பிரதி.
வஞ்ச நோ யச்சமுஞ் சொல்லும். (26)

1928. வாரணம் என்னும் பெயர்

யானையும், கோழியும், சங்கும் வாரணம்,

வாரணம் என்னும் பெயர் : (3)

1. யானை, 2. கோழி, 3. சங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 ஆனையும் (27)

1929. மா என்னும் பெயர்

மாவே பெருமையும், கருமையும், நிறனும்,
(மேவிய) நாற்கா லுடையவும், வண்டும்,
(பூஉறை) திருஎன ஆறையும் பொருந்தும்.

மா என்னும் பெயர் : (6)

1. பெருமை, 2. கருமை, 3. நிறன், 4. நாற்காலுடைய, 5. வண்டு, 6. திரு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 கருமையும் பெருமையும்
1:4 நிறமும், சூதமும். (28)

1930. தார் என்னும் பெயர்

பூவும், மாலையும், (போர்முன்செல்) கொடிப்படையும்,
(மாவினுக்கு அணியும்) கிண்கிணி மாலையும்,
(தாஇல் பெயர்க்கொடை) தார் என்று ஆகும்.

தார் என்னும் பெயர் : (4)

1. பூ, 2. மாலை, 3. கொடிப்படை, 4. கிண்கிணி மாலை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-4 பூவும்பூ மாலையும் போர்க்கொடிப் படையும்
2:1-2 ஆவினுக் கணியுங். (29)

1931. கொண்டல் என்னும் பெயர்

கொண்டல், மேகமும், (கூதிர்க்) கீழ் காற்றும்.

கொண்டல் என்னும் பெயர் : (2)

1. மேகம், 2. கீழ்காற்று.

பாடவேறுபாடு—விளக்கம்

3 கூதிர்கீழ். (30)

1932. விண்டு என்னும் பெயர்

விண்டு, மாயோனும், வெற்பும், வேயும்.

விண்டு என்னும் பெயர் : (3)

1. மாயோன், 2. வெற்பு, 3. வேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. மாலோனும்
விண்டு மாயோன் வெற்பும் ஆகும். (31)

1933. மலைதல் என்னும் பெயர்

மலைதல், பொருதலும், மலர் சூடுதலும்.

மலைதல் என்னும் பெயர் : (2)

1. பொருதல், 2. மலர் சூடுதல். (32)

1934. சிலை என்னும் பெயர்

வில்லையும் மலையையும் **சிலை** என விளம்புவர்.

சிலை என்னும் பெயர் : (2)

1. வில், 2. மலை.

பாடவேறுபாடு—விளக்கம்

வில்லு மலையுஞ் சிலையா கும்மே. (33)

1935. ஆரல் என்னும் பெயர்

ஆரல், செவ் வாய்க்கோளும், கார்த்திகை நாளும்.

ஆரல் என்னும் பெயர் : (2)

1. செவ்வாய்க்கோள், 2. கார்த்திகைநாள். (34)

1936. ஆரம் என்னும் பெயர்

சந்தனம், மாலை, பூண், ஆத்தி, முத்துஎன
வந்தவை ஐந்தும் **ஆரம்** ஆகும்.

ஆரம் என்னும் பெயர் : (5)

1. சந்தனம், 2. மாலை, 3. பூண், 4. ஆத்தி, 5. முத்து.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 வந்த வைந்து
சந்தனமு மாலையும் பூணாத்தி முத்தொடு
வந்தகிளிக் கழுத்துள் வரையு மாரமாம். (35)

1937. நாஞ்சில் என்னும் பெயர்

எயிலுறுப்பு, உழுபடை **நாஞ்சில்** ஆகும்.

நாஞ்சில் என்னும் பெயர் : (2)

1. எயிலுறுப்பு, 2. உழுபடை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 நாஞ்சி லென்ப. (36)

1938. குயம் என்னும் பெயர்

அரிவையர் முலையும், கொடுவாளும், இளமையும்,
கருதில்இம் மூன்றும் குயம்எனக் கருதுவர்.

குயம் என்னும் பெயர் : (3)

1. அரிவையர் முலை, 2. கொடுவாள், 3. இளமை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கருதின மூன் றுங் குயமெனுங் கட்டுரை. (37)

1939. இவர்வு என்னும் பெயர்

சேறலும், எழுதலும், செலுத்தலும், விரும்பலும்.
ஏறலும், இவர்வுஎன் கிளவி கூறும்.

இவர்வு என்னும் பெயர் : (5)

1. சேறல், 2. எழுதல், 3. செலுத்தல், 4. விரும்பல், 5. ஏறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: இவர்தல் என்னும் பெயர்.
1:2-4 எழுச்சியுஞ் செறியும் விரும்பலும்.
2:4 யென்ப. (38)

1940. சாறு என்னும் பெயர்

விழவும், கள்ளும் சாறுஎன விளம்புவர்.

சாறு என்னும் பெயர் : (2)

1. விழவு, 2. கள் (39)

1941. காரிகை என்னும் பெயர்

அழகும், (அழகுடை) மாதரும், அதனொடு
கட்டளைக் கலித்துறையும், காரிகை எனப்படும்.

காரிகை என்னும் பெயர் : (3)

1. அழகு, 2. மாதர், 3. கட்டளைக் கலித்துறை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-4 அழகு மவ்வழ குடைய மா தருங்

2:3-4 காரிகை யென்ப. (40)

1942. வைகல் என்னும் பெயர்

கழியும் நாளும், புலரிக் காலையும்
தழுவும் **வைகல்**, தங்கலும் உரித்தே.

வைகல் என்னும் பெயர் : (3)

1. கழியும்நாள், 2. புலரிக்காலை, 3. தங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 காலமும். (41)

1943. குவலையம் என்னும் பெயர்

நெய்தலும், நிலனும் **குவலையம்** என்ப.

குவலையம் என்னும் பெயர் : (2)

1. நெய்தல், 2. நிலன்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 குவலய மெனப்படும். (42)

1944. கவலை என்னும் பெயர்

கவலை, துன்பமும் கவர்த்த நெறியும்.

கவலை என்னும் பெயர் : (2)

1. துன்பம், 2. கவர்த்த நெறி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கவர்தரு வழியும், கவர்வழியு மாகும். (43)

1945. அளி என்னும் பெயர்

வண்டின் பெயரும், மதுவும், கொடையும்
அன்பும் கூறும் **அளி** என் கிளவி.

அளி என்னும் பெயர் : (4)

1. வண்டு, 2. மது, 3. கொடை, 4. அன்பு. (44)

1946. நவம் என்னும் பெயர்

ஒன்பதும், கேண்மையும், புதுமையும், பழமையும்
தொண்டும் நவம் எனச் சொல்லுவர் புலவர்.

நவம் என்னும் பெயர் : (5)

1. ஒன்பது, 2. கேண்மை, 3. புதுமை, 4. பழமை, 5. தொண்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 பழமையும் புதுமையும்
2:3 சொல்லினர்

'ஒன்பதுங் கேண்மையும் புதுமையும் நவமே' என்றும் சில பிரதிகளில் பாடம். (45)

1947. தொண்டு என்னும் பெயர்

தொண்டு என் கிளவி தொழும்பும் ஆகும்.

தொண்டு என்னும் பெயர் ; (1)

1. தொழும்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தொண்டென் கிளவி தொழும்பென்றாகும்.
ஒன்பதுங் கேண்மையும் புதுமையும் பழமையும்
தொண்டென் கிளவி தொழும்பு மாகும்.

என்றும் சில பிரதிகளில் பாடம். (46)

1948. புண்டரிகம் என்னும் பெயர்

புண்டரிகம், தாமரை, புலியும் ஆகும்.

புண்டரிகம் என்னும் பெயர் : (2)

1. தாமரை, 2. புலி.

பாடவேறுபாடு—விளக்கம்

1 புண்டரிகம் (47)

1949. பிரசம் என்னும் பெயர்

பிரசம், தேன், கள், தேனீப் பெயரே.

பிரசம் என்னும் பெயர் : (3)

1. தேன், 2. கள், 3. தேனீ.

பாடவேறுபாடு—விளக்கம்

பிரசந் தேனொடு தேனீப் பெயரே - என்றும் சில பிரதிகளில் பாடம். (48)

1950. அரில் என்னும் பெயர்

அரிலே, பிணக்கமும், சிறுதூறும், குற்றமும்.

அரில் என்னும் பெயர் : (3)

1. பிணக்கம், 2. சிறுதூறு, 3. குற்றம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பிணக்கும். (49)

1951. கோடு என்னும் பெயர்

கோடே சங்கும், ஊது கொம்பும்,
மாவின் மருப்பும், மரத்தின் பணையும்,
(நீள்) புனற் கரையும் நிகழ்த்தும் கிளவி.

கோடு என்னும் பெயர் : (5)

1. சங்கு, 2. ஊதுகொம்பு, 3. மாவின் மருப்பு, 4. மரத்தின் பணை, 5. புனற்கரை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 ஊதுங் கொம்பும். (50)

1952. பாடு என்னும் பெயர்

பாடே, பெருமையும், ஒலித்தலும், படுதலும்.

பாடு என்னும் பெயர் : (3)

1. பெருமை, 2. ஒலித்தல், 3. படுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 ஒலித்தலும் படுதல், ஒலியும் படுத்தலும். (51)

1953. சேய் என்னும் பெயர்

செவ்வாய், முருகன், இளமை, புத்திரன்,
இவ்வாறு எல்லாம் சேய்என விளம்புவர்.

சேய் என்னும் பெயர் : (4)

1. செவ்வாய், 2. முருகன், 3. இளமை, 4. புத்திரன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 இளமையிற் புத்திரன்.
2:3-4 சேயென விசைப்பர், சேயென மொழிப. (52)

1954. வை என்னும் பெயர்

நெல்லின் தாளும், புல்லும், கூர்மையும்
சொல்லின் மூன்றும் வைஎன்று ஆகும்.

வை என்னும் பெயர் : (3)

1. நெல்லின்தாள், 2. புல், 3. கூர்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 சொல்லில், சொல்லிம், சொல்லின, சொல்லிய. (53)

1955. குழல் என்னும் பெயர்

குழலே, துளையும் மயிரும் கூறும்.

குழல் என்னும் பெயர் : (2)

1. துளை, 2. மயிர். (54)

1956. பொழில் என்னும் பெயர்

பொழிலே சோலையும் உலகமும் புகலும்.

பொழில் என்னும் பெயர் : (2)

1. சோலை, 2. உலகம். (55)

1957. இளமை என்னும் பெயர்

இளமை, தன்மையும் காமமும் இசைக்கும்.

இளமை என்னும் பெயர் : (2)

1. தன்மை, 2. காமம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 தன்மை காமமும். (56)

1958. அளகம் என்னும் பெயர்

மாதர் மயிரையும், மாவின் குருளையும்,
நீரையும் அளகம் எனநிகழ்த் துவரே.

அளகம் என்னும் பெயர் : (3)

1. மாதர் மயிர், 2. மாவின் குருளை, 3. நீர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. மாதர் மயிரையும் மற்றவர் குருளையும்
1:3-4 மாவின் முள்ளையும், மற்றவர் சுருளையும்
2:3-4 எனநிகழ்த் தினரே, என்று நிகழ்த்தும். (57)

1959. சிறை என்னும் பெயர்

சிறையே, காவலும் இறகும் செப்பும்.

சிறை என்னும் பெயர். (2)

1. காவல், 2. இறகு.

பாடவேறுபாடு-விளக்கம்

4. செப்புவர். (58)

1960. கறை என்னும் பெயர்

நிறமும், உதிரமும், உரலும், திறையும்
கறை என் கிளவி ஆகக் கருதுவர்.

கறை என்னும் பெயர்: (4)

1. நிறம், 2. உதிரம், 3. உரல், 4. திறை

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 முரலு மிறையுங், முரலு நிரையுங்
2:2-4 கிளவிப் பெயரெனக் கருதுவர்,
கிளவி கருதுங் காலை. (59)

1961. சூழி என்னும் பெயர்

சூழி, முகபடாம்; வாவியும் சொல்லும்.

சூழி என்னும் பெயர்: (2)

1. முகபடாம், 2. வாவி.

பாடவேறுபாடு—விளக்கம்

4 சொல்லுவர். (60)

1962. வேழம் என்னும் பெயர்

யானையும் கரும்பும் கொறுக்கைக் கோலும்
வேயும் கூறும் வேழக் கிளவி.

வேழம் என்னும் பெயர்: (4)

1. யானை, 2. கரும்பு, 3. கொறுக்கைக் கோல், 4. வேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 யானை யுங்கரும் புங்கொறுக் கச்சியும்
யானையுங் கரும்புங் கொறுக்கச்சியும் வேயுங்
கூறுப மாதோ வேழக் கிளவி—
என்றும் ஒரு சில பிரதிகளில் பாடம். (61)

1963. வயா என்னும் பெயர்

வயாவே, வேட்கைப் பெருக்கமும் வருத்தமும்.

வயா என்னும் பெயர்: (2)

1. வேட்கைப் பெருக்கம், 2. வருத்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

வயாஅ வேட்கைப் பெருக்கம் வருத்தம். (62)

1964. உயா என்னும் பெயர்

உயாவே, கருதலும் துணையும் ஆகும்.

உயா என்னும் பெயர்: (2)

1. கருதல், 2. துணை,
இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (63)

1965. பரி என்னும் பெயர்

வருத்தமும், செலவும், மாவின் நாமமும்,
பாதுகாத்தலும் பரி என்று ஆகும்.

பரி என்னும் பெயர்: (4)

1. வருத்தம், 2. செலவு, 3. மா,
4. பாதுகாத்தலும். (64)

1966. புரிவு என்னும் பெயர்

புரிவே விரும்பலும், செய்தலும் ஆகும்.

புரிவு என்னும் பெயர்: (2)

1. விரும்பல், 2. செய்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-3 புரிதல் விரும்பலும், செயலும். (65)

1967. அந்தம் என்னும் பெயர்

அந்தம் ஈறும் அழகும் ஆகும்.

அந்தம் என்னும் பெயர்: (2)

1. ஈறு, 2. அழகு. (66)

1968. கந்தம் என்னும் பெயர்

கந்தம், புலனே, கடியும், கிழங்கும்,

கந்தம் என்னும் பெயர்: (3)

1. புலன், 2. கடி, 3. கிழங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கிழங்குங் கடியும், கிழங்குங் கருணையும்
கந்தங் கிழங்குங் கடியும் புலனும்
என்றும் சில பிரதிகளில் பாடம். (67)

1969. கடு என்னும் பெயர்

கடுவே, கடுமரம், விடமும் ஆகும்.

கடு என்னும் பெயர்: (2)

1. கடுமரம், 2. விடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 கடுவே கடுமரமும்
2-4 கடுமரம் விடமா கும்மே. (68)

1970. தொடி என்னும் பெயர்

ஒரு பலம், வளையே, தொடி என்று ஆகும்.

தொடி என்னும் பெயர் (2)

1. ஒரு பலம், 2. வளை.

பாடவேறுபாடு—விளக்கம்

தொடியே யொருபலம் வளையுமாகும்
என்றும் சில பிரதிகளில் பாடம். (69)

1971. கண்டம் என்னும் பெயர்

கண்டம், மெய்புகு கருவி, கழுத்து,
துண்டம், திரை, வாள், தேயமும் ஆகும்.

கண்டம் என்னும் பெயர்: (6)

1. மெய் புகு கருவி, 2. கழுத்து, 3. துண்டம்,
4. திரை, 5. வாள், 6. தேயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 தேசமும் ஆகும்.
கண்டம் மெய்புகு கருவியும் கழுத்தும்
துண்டம் திரைவாள் தேசமும் மூக்கும்
என்றும் சில பிரதிகளில் பாடம். (70)

1972. கண்டகம் என்னும் பெயர்

சுரிகை, (ஒள்) வாள், முள் இவை மூன்றும்
கருதின் கண்டகம் என்றே கருதுவர்.

கண்டகம் என்னும் பெயர்: (3)

1. சுரிகை, 2. வாள், 3. முள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 யுடைவாள் முள்ளியிம்
2:4 கருதும்
2:3-4 என்னக் கருதுவர். (71)

1973. ஏற்றல் என்னும் பெயர்

ஏற்றல் கோடலும், எதிர்ந்து பொருதலும்.

ஏற்றல் என்னும் பெயர்: [2]

1. கோடல், 2. எதிர்ந்து பொருதல். (72)

1974. போற்றல் என்னும் பெயர்

போற்றல், பாதுகாத்தலும் புகழ்தலும்,

போற்றல் என்னும் பெயர்: [2]

1. பாதுகாத்தல், 2. புகழ்தல். (73)

1975. குயிறல் என்னும் பெயர்

குயிறல், கூவலும், செறிதலும், குடைதலும்,

குயிறல் என்னும் பெயர்: [3]

1. கூவல், 2. செறிதல், 3. குடைதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

குயிறல் கூறலுங் குடைதலுஞ் செறிதலும்
என்றும் சில பிரதிகளில் பாடம்.

குயிறல் கூறலும் குடைதலு மாகும்
என்று ஒரு பிரதியில் பாடம். (74)

1976. பூவை என்னும் பெயர்

காயா மரமும். நாகணவாய்ப் புள்ளும்
பூவை என்னும் பெயரோடு புணரும்.

பூவை என்னும் பெயர்: (2)

1. காயாமரம், 2. நாகணவாய்ப்புள்,

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 நாரண வாய்ப்புளும், நாங் கணவாய்ப்புள்ளும். (75)

1977. பகல் என்னும் பெயர்

நாளும், ஒளியும், நடுவும், செயலும்,
பாகு படுத்தலும் பகல்என் கிளவி.

பகல் என்னும் பெயர்: (5)

1. நாள், 2. ஒளி, 3. நடு, 4, செயல்,
5. பாகுபடுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 பாகுபட் டதுவும், பாகுபட்டது. (76)

1978. ஏண் என்னும் பெயர்

ஏணே, வலியும், நிலையுடைமையும்.

ஏண் என்னும் பெயர்: (2)

1. வலி, 2. நிலையுடைமை.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (77)

1979. கோள் என்னும் பெயர்

கோளே, குணமும், கோட்பாடும், குறளையும்.

கோள் என்னும் பெயர்: (3)

1. குணம், 2. கோட்பாடு, 3. குறளை.

பாடவேறுபாடு—விளக்கம்

கோளே குணனுங் கோட்பாடுங் கோளும்
4 கொளலும், கொளும் கொள்ளும்.

இந்நூற்பா பின்வரும் மாறுபாடுகளுடனும் சில பிரதிகளில் காணப்படுகிறது.

1. அலர்கதிர் முதலா வனைவரும் நாளும்
   கொலையும் இடையூறும் கொள்கையும் கோளே.

2. கோளே குணமுங் கோட்பாடுங் கோளும்
   அலர்கதிர் முதலா மமரரு நாளும்
   கொலையுமிடை யூறுங் கோளென் றாகும். (78)

1980. கம்பலை என்னும் பெயர்

இன்னாங்கு, ஓசை, நடுக்கம், அச்சம்,
கன்னித் தமிழோர் கம்பலை என்ப.

கம்பலை என்னும் பெயர்: (4)

1. இன்னாங்கு, 2. ஓசை, 3. நடுக்கம், 4, அச்சம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 இன்னாங் கோமை.
1 இன்னாங் கச்ச நடுக்க மோசை.
2:4 என்பர். (79)

1981. உம்பர் என்னும் பெயர்

உம்பர், மேலிடம், அமரர்க்கும் உரித்தே.

உம்பர் என்னும் பெயர்: (2)

1. மேலிடம், 2. அமரர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 உம்பர்மே லிடமு. (80)

1982. தோடு என்னும் பெயர்

தோடே, தொகுதியும், பனையிதழ் போல்பவும்,
பூவின் இதழும் புகலும் கிளவி.

தோடு என்னும் பெயர்: (3)

1. தொகுதி, 2. பனையிதழ் போல்ப, 3. பூவின் இதழ். (81)

1983. மடல் என்னும் பெயர்

பூவின் இதழும், பனையிதழ் போல்பவும்.
வாய்பாடு உரைக்கின் மடல்எனக் குரிய.

மடல் என்னும் பெயர்: (2)

1. பூவின் இதழ், 2. பனையிதழ் போல்ப.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 போலவும்
2:3-4 மடலெனக் கருதுப, மடலென் கிளவி
2 வாயி னதரமு மடலெ னற் குரிய.

இந்நூற்பா சில பிரதிகளில் அடுத்துவரும் முல்லை என்னும் பெயர்க்குப் (1984) பின்னர்க் காணப்படுகிறது. (82)

1984. முல்லை என்னும் பெயர்

காடுசார் நிலனும், கானமல் லிகையும்,
(மோடுபடு) வென்றியும், கற்பும் முல்லை.

முல்லை என்னும் பெயர்: (4)

1. காடுசார் நிலன், 2. கான மல்லிகை, 3. வென்றி, 4. கற்பு. (83)

1985. கார் என்னும் பெயர்

காரே, மேகமும், மாரிக் காலமும்,
நீரும், கருமையும் நிகழ்த்தும் கிளவி.

கார் என்னும் பெயர்: (4)

1. மேகம், 2. மாரிக்காலம், 3. நீர், 4. கருமை. (84)

1986. ஆர் என்னும் பெயர்

ஆரே, கூர்மையும். ஆத்தி மரமும்,
தேராழி. யகத்தில் செறிஉறுப்பும் ஆகும்.

ஆர் என்னும் பெயர்: (3)

1. கூர்மை, 2. ஆத்திமரம், 3. தேராழியகத்தில் செறி உறுப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 ஆத்தியு மரமும், ஆத்தி யதனொடு
2:3-4 செறிகதிரு மாகும். (85)

1987. குழை என்னும் பெயர்

குழையே, குண்டலம், தளிர், சேறும் ஆகும்.

குழை என்னும் பெயர்: (3)

1. குண்டலம், 2. தளிர், 3. சேறு.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 தளிர்சேறுங் கூறும். (86)

1988. கழுமல் என்னும் பெயர்

கழுமல், பற்றும் மயக்கமும் ஆகும்.

கழுமல் என்னும் பெயர்: (2)

1, பற்று, 2. மயக்கம். (87)

1989. இழும் என்னும் பெயர்

இழும்எனல் ஓசையும், இனிமையும் ஆகும்.

இழும் என்னும் பெயர்: (2)

1. ஓசை, 2. இனிமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 இழும லோசையும். (88)

1990. தபனன் என்னும் பெயர்

அனலும், அருக்கனும் **தபனன்** என்று ஆகும்.

தபனன் என்னும் பெயர் : (2)

1. அனல், 2. அருக்கன்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (89)

1991. கனலி என்னும் பெயர்

கனலி, தீயும் கதிரவனு மாகும்.

கனலி என்னும் பெயர் : (2)

1. தீ, 2. கதிரவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (90)

1992. மது என்னும் பெயர்

தேனும் தேறலும் **மது**எனச் செப்புவர்.

மது என்னும் பெயர் : (2)

1. தேன், 2. தேறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (91)

1993. கான் என்னும் பெயர்

கானே விரையும் காடும் ஆகும்.

கான் என்னும் பெயர் : (2)

1. விரை, 2. காடு. (92)

1994. கன்னல் என்னும் பெயர்

சருக்கரை, கரகம், நாழிகை வட்டில்,
(உரைக்கின்). குடம், இக்கு, நாழிகையும் **கன்னல்.**

கன்னல் என்னும் பெயர் : (6)

1. சருக்கரை, 2. கரகம், 3. நாழிகை வட்டில், 4. குடம், 5. இக்கு, 6. நாழிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 குடமு நாழிகையும். (93)

1995. துன்னல் என்னும் பெயர்

துன்னல், குறுகலும், செறிவும் சொல்லும்.

துன்னல் என்னும் பெயர் : (2)

1. குறுகல், 2. செறிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

துன்னல் குறுகல் செறிவு மாகும். (94)

1996. களம் என்னும் பெயர்

மிடறு, பொருநிலம், கருமை, களர்இவை
களம் என்று உரைப்பர் கருதும் காலை.

களம் என்னும் பெயர் : (4)

1. மிடறு, 2. பொருநிலம், 3. கருமை, 4. களர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 கருமையிம் மூன்றுங்
2:3-4 கருதுங் காலே
'களமே மிடறும் பொருநிலனுங் கருமையும்'

என்றும் சில பிரதிகளில் பாடம். (95)

1997. களரி என்னும் பெயர்

கருமம் செய் இடனும், கானமும், பொருநிலனும்,
களரி என்பர் கற்றறிந்தோரே.

களரி என்னும் பெயர் : (3)

1. கருமம் செய் இடன், 2. கானம், 3. பொருநிலன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 இடமும் 3-4 களமும் பொருநிலமும்
1 கருமையு மிடனுங் களர்முது நிலனுங்
2:3-4 கற்றுணர்ந்தோரே. (96)

1998. காழ் என்னும் பெயர்

கோல், பரல், சேகு, மணியின் கோவையும்,
மாலையும், ஒளியும் காழ் என்று ஆகும்.

காழ் என்னும் பெயர் : (6)

1. கோல், 2. பரல், 3. சேகு, 4. மணியின் கோவை, 5. மாலை, 6. ஒளி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கோவை
2:1-2 மாலை யொளியிவை
2 மாலையு மொளியுங் கொட்டையுங் காழே. (97)

1999. பால் என்னும் பெயர்

பகுத்தல், பக்கம், திசை, இயல்பு என்ன
வகுத்த நான்கும் பால்என அறைவர்.

பால் என்னும் பெயர் : (4)

1. பகுத்தல், 2. பக்கம், 3. திசை, 4. இயல்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

பகுத்தல் பக்கந் திசையியல்பு விடமென
வகுத்த வைந்தும் பாலென வைப்பர். (98)

2000. மாழை என்னும் பெயர்

ஆயம், மடமை, கட்டிப்பொன், ஓலை,
மாழை என்று வகுத்தனர் புலவர்.

மாழை என்னும் பெயர் : (4)

1. ஆயம், 2. மடமை, 3. கட்டிப்பொன், 4. ஓலை

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 கட்டிபொன் னோலை,
2 வார்புளி மாவும் மாழையென் றாகும்.

ஆய மடமை பொன்னுலோகக் கட்டி
ஓலை புளிமா மாழையென் றுரைக்கும்—அச்சுப்பிரதி. (99)

2001. கலை என்னும் பெயர்

கலையே நூல், கல்வி, காஞ்சி, ஆடை,
முசுவும், மானேறும் காலநுட்பமும்.

கலை என்னும் பெயர் : (7)

1. நூல், 2. கல்வி, 3. காஞ்சி, 4. ஆடை, 5. முசு, 6. மானேறு, 7. காலநுட்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 கலைநூல் கல்வி
2:1-4 முசுமா னேறு காலநுட்பம். (100)

2002. திணை என்னும் பெயர்

குலமும், ஒழுக்கமும், (ஒழுக்கம் நிகழ்ந்த)
நிலமும் **திணை**என நிகழ்த்தும் கிளவி.

திணை என்னும் பெயர் : (3)

1. குலம், 2. ஒழுக்கம், 3. நிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 மவ்வொழுக்கம்
2:1 நிலனும். (101)

2003. அணி என்னும் பெயர்

அணியே, பூணும் அழகும் ஆகும்.

அணி என்னும் பெயர் : (2)

1. பூண், 2. அழகு. (102)

2004. பணை என்னும் பெயர்

பணையே பெருத்தலும், பிழைத்தலும், பழனமும்,
முரசும், மரக் கோடும், புரவியின் பந்தியும்.

பணை என்னும் பெயர் : (6)

1. பெருத்தல், 2. பிழைத்தல், 3. பழனம், 4. முரசு, 5. மரக்கோடு, 6. புரவியின் பந்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 பிழைத்தலும் பெருத்தலும்
2ஆம் அடி சில பிரதிகளில் இல்லை. (103)

2005. அம்பரம் என்னும் பெயர்

அம்பரம் கூறையும், கடலும், ஆகாயமும்.

அம்பரம் என்னும் பெயர் : (3)

1. கூறை, 2. கடல், 3. ஆகாயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாச் சில பிரதிகளில் இல்லை. (104)

2006. வம்பு என்னும் பெயர்

கச்சு, நிலை யின்மை, புதுமை, கந்தம் என
ஒத்த நான்கும் **வம்பு** என உரைப்பர்,

வம்பு என்னும் பெயர் : (4)

1. கச்சு, 2. நிலையின்மை, 3. புதுமை, 4, கந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கந்தம்
2 மிடாவுங் கணைபெய் தூணியும் வம்பே.
2:3-4 வம்பென விசைப்பர்.
தடா வொப்புத் தரணியு மதுவே
என ஓரடி மிகையாக ஒரு பிரதியில் உள்ளது. (105)

2007. அணங்கு என்னும் பெயர்

தெய்வமும், (தெய்வத்து உவமை) மாதரும்,
மையல் நோயும், வருத்தமும், கொலையும்,
ஐயம் இன்று உரைக்கும் அணங்குஎன் கிளவி.

அணங்கு என்னும் பெயர் : (5)

1. தெய்வம், 2. மாதர், 3. மையல்நோய், 4. வருத்தம். 5. கொலை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 துவமை செய் மாதரும், துவமைசொல் மாதரும்
2:1-2 மையலு நோயும். (106)

2008. அளக்கர் என்னும் பெயர்

கடலும், சேறும், அளக்கர்.

அளக்கர் என்னும் பெயர் : (3)

1. கடல், 2. நிலன், 3. சேறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 நிலமும் (107)

2009. தொடல் என்னும் பெயர்

தொடலே, வளைத்தலும், பிணித்தலும், பற்றலும்.

தொடல் என்னும் பெயர் : (3)

1. வளைத்தல், 2. பிணித்தல், 3. பற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தொடுதல் என்னும் பெயர், தொடுத்தல் என்னும் பெயர்.

தொடுதலே வளைத்தலும் பிணித்தலும் பற்றலும்.
வளைத்தலும் பிணித்தலும் பற்றலும் என்றிவை
தொடுத்த லென்னும் பெயரிற் றோன்றும்.

1:4 மற்றிவை
2:3-4 கிளவியிற் றோன்றும் (108)

2010. துணங்கை என்னும் பெயர்

துணங்கை, ஆடலும், திருநாளும், விழவும்.

துணங்கை என்னும் பெயர் : (3)

1. ஆடல், 2. திருநாள், 3. விழவு.

பாடவேறுபாடு—விளக்கம்

4 விழாவும், விழாவே

துணங்கை யறவைநா ளாடலும் விழவும். (109)

2011. துத்தி என்னும் பெயர்

சுணங்கும், பொறியும், தூக்கமும் **துத்தி.**

துத்தி என்னும் பெயர்: (3)

1. சுணங்கு, 2. பொறி, 3. தூக்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 தூக்கமுந், துய்ப்பனவுந் (110)

2012. அந்தில் என்னும் பெயர்

அந்தில், ஆங்கும் அசைநிலைக் (கிளவி).

அந்தில் என்னும் பெயர்: (2)

1. ஆங்கு, 2. அசைநிலை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 ஆங்கு, ஆங்க. (111)

2013. கந்தரம் என்னும் பெயர்

கந்தரம், மலைமுழை, கழுத்தும் ஆகும்;
வந்துழி மேகப் பெயரும் வரையார்.

கந்தரம் என்னும் பெயர்: (3)

1. மலைமுழை, 2. கழுத்து, 3. மேகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 மலைமுழையும், மலைமுழைஞ்சும், மலைக்குகை (112)

2014. கொன்னை என்னும் பெயர்

அச்சம், பயமிலி, காலம், பெருமை என்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

கொன்னை என்னும் பெயர் : (4)

1. அச்சம், 2. பயமிலி, 3. காலம், 4. பெருமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 பயனிலி (113)

2015. மை என்னும் பெயர்

குற்றமும், யாடும், கருமையும், கொண்டலும்
மற்று இவை மை எனும் சொல்லொடு வருமே.

மை என்னும் பெயர் : (4)

1. குற்றம், 2. யாடு, 3. கருமை, 4. கொண்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 குற்றமு மாடுங்
1:3-4 கருமையிடி கொண்டலும்
2:3 சொல்லிடை (114)

2016. எல்லை என்னும் பெயர்

எல்லை, பகலும், அளவும் இசைக்கும்.

எல்லை என்னும் பெயர் : (2)

1. பகல், 2. அளவு,

பாடவேறுபாடு—விளக்கம்

2—3 பகலு மளவையு. பகலவனு மிளமையு,
பகலொ டின்மையு. (115)

2017. வல்லை என்னும் பெயர்

வல்லை, விரைவும், மதிலும் ஆகும்.

வல்லை என்னும் பெயர் : (2)

1. விரைவு, 2. மதில்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. மதிலும் மரனும், மாவலியும். (116)

2018. எள்ளல் என்னும் பெயர்

எள்ளல், நகையும், இகழ்ச்சியும் ஆகும்.

எள்ளல் என்னும் பெயர் : (2)

1. நகை, 2. இகழ்ச்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

3 இகட்சியும். (117)

2019. விறப்பு என்னும் பெயர்

விறப்பே, செறிவும், வெருவலும், பெருகலும்.

விறப்பு என்னும் பெயர் : (3)

1. செறிவு, 2. வெருவல், 3. பெருகல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 பெருகலும் வெருவலும்

4 பெருக்கலும் ஆகும் (118)

2020. பிறழ்தல் என்னும் பெயர்

பிறழ்தல், ஒளிவிடுதலும் பெயர்தலும் ஆகும்.

பிறழ்தல் என்னும் பெயர் : (2)

1. ஒளிவிடுதல், 2. பெயர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 ஒளிவிடலும் (119)

2021. தபுதல் என்னும் பெயர்

தபுதல், கெடுதலும், சாதலும் சொல்லும்.

தபுதல் என்னும் பெயர் : (2)

1. கெடுதல், 2. சாதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 சாற்றும் (120)

2022. பதி என்னும் பெயர்

பதியே, உறைவிடமும் தலைவனு மாகும்.

பதி என்னும் பெயர் : (2)

1. **உறைவிடம்,** 2. தலைவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 உறைவிடம், 4 பகரும் (121)

2023. கலுழி என்னும் பெயர்

கலுழி, கலங்கல் நீரும் (முல்லை நிலக்) கான்யாறு.

கலுழி என்னும் பெயர் : (2)

1. கலங்தல் நீர், 2. கான்யாறு.

பாடவேறுபாடு—விளக்கம்

2—4 கலங்கனீர் முல்லை நிலக் கான்யாறு,
3—4 கான் யாறு மாகும். (122)

2024. மறம் என்னும் பெயர்

கொலையும், சினமும், கொடுவினைச் செயலும்,
(மலையும்) சேவகமும் மறம் எனப் படுமே...

மறம் என்னும் பெயர் : (4)

1. கொலை, 2. சினம், 3. கொடு வினைச் செயல்,
4. சேவகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 சேவகமும்
2:1—2 மலையுஞ்சொற் கடுமையு, வலியுஞ் செறலு
—அச்சுப் பிரதி (123)

2025. மள்ளர் என்னும் பெயர்

(அருந்திறல்) வீரர்க்கும் (பெருந்தொழில்) உழவர்க்கும்
வரும் தகைத்து ஆகும் மள்ளர் எனும் பெயர்.

மள்ளர் என்னும் பெயர் : (2)

1. வீரர், 2. உழவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

அருந்திறல் வீரற்கும் பெருந்திற லுழவற்கும் (124)

2026. கருங்கை என்னும் பெயர்

கொன்று வாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும்
கன்றிய தொழின்மை கருங்கை எனப்படும்

கருங்கை என்னும் பெயர் : (2)

1. கொன்றுவாழ் தொழிலில் கன்றிய தொழின்மை,
2. வன்பணித் தொழிலின் கன்றிய தொழின்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3—4 கருங்கையெனப் படுமே, கருங்கையெனக்
கருதுவர் (125)

2027. பொருள் என்னும் பெயர்

நிதியும், சொற்பயனும், (நிகழ்பல) பண்டமும்,
பொருள்என் கிளவிப் பெயரொடு புணரும்.

பொருள் என்னும் பெயர் : (3)

1. நிதி, 2. சொற்பயன், 3. பண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 நிகழ்பல
2:1—2 பொதியென் கிளவி—அச்சுப் பிரதி. (126)

2028. பதம் என்னும் பெயர்

சோறும், வழியும், சொல்லும், காலமும்,
ஈரமும், சேமமும், புனலும், காலும்,
பாவலர் எட்டையும் பதம் எனப் பகர்வர்.

பதம் என்னும் பெயர் : (8)

1. சோறு, 2. வழி, 3. சொல், 4. காலம்,
5. ஈரம், 6. சேமம், 7. புனல், 8. கால்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பாவலர் பதமெனப் பகருங் கிளவி-அச்சுப்பிரதி. (127)

2029. கதலி என்னும் பெயர்

கதலி வாழையும், துகிற்கொடியும் ஆகும்.

கதலி என்னும் பெயர் : (2)

1. வாழை, 2. துகிற்கொடி.

பாடவேறுபாடு—விளக்கம்

1 கதலிகை 4 கருதுவர். (128)

2030. புதை என்னும் பெயர்

புதை, கணைக் கட்டே, புதுமையும் ஆகும்.

புதை என்னும் பெயர் : (2)

1. கணைக்கட்டு, 2. புதுமை,

பாடவேறுபாடு—விளக்கம்

புதையம்புக் கட்டே புதுமையும் புகலும்
3—4 புதும்மையு முடம்பும், அப்பும் ஆகும். (129)

2031. மாதர் என்னும் பெயர்

மாதர், காதலும், மகளிரும் ஆகும்.
ஓதில் இடைச்சொல் ஆகலும் உரித்தே.

மாதர் என்னும் பெயர் : (3)

1. காதல், 2. மகளிர். 3. இடைச்சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1—2 மாதர் காதல் மகளிரும் வரையார்,
2:1—2 ஓதிய விடைச்சொல் (130)

2032. காதை என்னும் பெயர்

காதை, மொழியும், கதையும் ஆகும்,

காதை என்னும் பெயர் : (2)

1. மொழி, 2. கதை. (131)

2033. விம்மல் என்னும் பெயர்

விம்மல், ஒலித்தலும், விம்முதலும் ஆகும்.

விம்மல் என்னும் பெயர் : (2)

1. ஒலித்தல், 2. விம்முதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 விம்முத லாகும், விம்முறலு மாகும். (132)

2034. செம்மல் என்னும் பெயர்

இறைவன், பழம்பூ, வீரர், புத்திரர்.
அறையின் பெருமையொடு ஐந்தும் **செம்மல்.**

செம்மல் என்னும் பெயர் : (5)

1. இறைவன், 2. பழம்பூ. 3. வீரர்,
4. புத்திரர், 5. பெருமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 இறைவர் புத்திரர் பழம்பூ வீரர்
2;2 செம்மையோடு—அச்சுப்பிரதி (133)

2035. மாலை என்னும் பெயர்

பொன்னின் மணியின் பூவின் சொல்லின்
இன்னவை தொடுத்தலும், இரவும், அந்தியும்,
மன்னும் இயல்பும் **மாலை** என்று ஆகும்.

மாலை என்னும் பெயர் : (4)

1. பொன், மணி, பூ, சொல் இவற்றாலாய தொடை,
2. இரவு, 3. அந்தி, 4. இயல்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 சொல்லில்
2:1 இன்னுறத்
3:1 மின்னு மியல்பும். (134)

2036. செத்து என்னும் பெயர்

செத்து என் கிளவி கருத்தொடு, ஒப்பே,

செத்து என்னும் பெயர் : (2)

1. கருத்து, 2. ஒப்பு,

பாடவேறுபாடு—விளக்கம்

சேத்தென் கிளவி கருத்தோ டொப்பே. (135)

2037. துப்பு என்னும் பெயர்

வண்ணம், பவளம், வலியொடு, அரக்கு என்று
எண்ணிய நான்கும் துப்பு என இசைப்பர்.

துப்பு என்னும் பெயர் : (4)

1. வண்ணம், 2. பவளம், 3. வலி, 4. அரக்கு,

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 உண்ணல்
1:3 வலியோடு, 4. அரக்கொடு.
2 பகையுணவு நெய்யென்றும் பகர லாகும். (136)

2038. உடு என்னும் பெயர்

உடுவே, நாண்மீன், பகழியும் ஆகும்.

உடு என்னும் பெயர் : (2)

1. நாண்மீன், 2. பகழி, (137)

2039. படு என்னும் பெயர்

பொய்கையும், தொடர்பும், மருத நிலனும்,
எய்திய கள்ளொடு நாலும் படுவே.

படு என்னும் பெயர் : (4)

1. பொய்கை, 2. தொடர்பு,
3. மருதநிலன், 4. கள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3—4 மருத நிலமும்
2:2 மதுவொடு

பொய்கையுந் தொடர்பு மருத நிலனு
மெய்திய களனொடு நான்குங் களனே,

என்றும் சில பிரதிகளில் பாடம். (138)

2040. பட்டிகை என்னும் பெயர்

பட்டிகை, கச்சு, பணை, இரதமும் ஆகும்.

பட்டிகை என்னும் பெயர் : (3)

1. கச்சு, 2. பணை, 3. இரதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. கச்சு 3. பணையிதழும் (139)

2041. செச்சை என்னும் பெயர்

வெட்சியும் வெள்ளாட்சி ஏறும் **செச்சை.**

செச்சை என்னும் பெயர் ; (2)

1. வெட்சி, 2. வெள்ளாட்டு ஏறு. (140)

2042. தானை என்னும் பெயர்

கைப்படை, காலாட் படையே, ஆடை,
தப்புஇல் மூன்றும் தானைஎன்று ஆகும்.

தானை என்னும் பெயர் : (3)

1. கைப்படை, 2. காலாட்படை, 3. ஆடை.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவோடு,

'எய்திய திருபடைப் பெயருக்கு மெய்தும்'என ஓரடி மிகையாகச் சில பிரதிகளில் காணப்படுகிறது. இதற்கு எய்திய மிருபடை என்றும், எதிருமிருபடை என்றும் பாட பேதமும் காணப்படுகின்றன. (141)

2043. எதிரி என்னும் பெயர்

எதிரி, இருபடைப் பெயர்க்கும் எய்தும்.

எதிரி என்னும் பெயர்: (1)

இருபடைக்கும் பொது.

பாடவேறுபாடு—விளக்கம்

4 ஆகும். (142)

2044. ஓதி என்னும் பெயர்

மாதர் மயிரும், மாலையும், அன்னமும்
ஓதி என்பர் உணர்ந்திசி னோரே.

ஓதி என்னும் பெயர்: (3)

1. மாதர் மயிர், 2. மாலை, 3. அன்னம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. மலையும் (143)

2045. சீர் என்னும் பெயர்

பல்வகை இயங்கள் ஓசை, பாரம்,
ஒல்லுதல், காத்தண்டு, புகழ், அழகு,
செல்வம், சீர்மை, சீர் என்று ஆகும்.

சீர் என்னும் பெயர்: (8)

1. பல்வகை இயங்கள் ஓசை, 2. பாரம், 3. ஒல்லுதல் 4. காத்தண்டு, 5. புகழ், 6. அழகு, 7. செல்வம், 8. சீர்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 யியங்களி னோசை, யியங்க லோசை.
2:1 ஒல்குதல்
2:2 காற்றண்டை - அச்சுப்பிரதி. (144)

2046. கரணம் என்னும் பெயர்

(சொல்லிய) முதற்பொருள் துணைக்கா ரணமும்,
பல்வகை ஆடலும், மனத்தின் பகுதியும்,
கல்வியும் எண்ணும் கரணம் என்று ஆகும்.

கரணம் என்னும் பெயர் : (5)

1. முதற்பொருள் துணைக்காரணம், 2. பல்வகை ஆடல், 3. மனத்தின் பகுதி, 4. கல்வி, 5. எண்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 பல்வகைப் பாடலும்
3:3 கணக்கென் (145)

2047. சிலம்பு என்னும் பெயர்

சிலம்பே மலையும், ஒலியும் செப்பும்;
பொலம்செய் காலணியும் புணர்தற்கும் உரித்தே.

சிலம்பு என்னும் பெயர் : (3)

1. மலை, 2. ஒலி, 3. காலணி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 ஓசையும் மலையும் 4 ஆகும்.
2:1 பொலன்செய் 3-4 புகறற்கு முரித்தே.
1 சிலம்பே மலையும் ஒலித்தலு மாகும்.
2 பொலன்செய் காலணி புணர்தற்கு மாகும். (146)

2048. புலம்பு என்னும் பெயர்

புலம்பே தனிமையும், நடுக்கமும் புலம்பலும்.

புலம்பு என்னும் பெயர். (3)

1. தனிமை, 2. நடுக்கம், 3. புலம்பல்.

பாடவேறுபாடு-விளக்கம்

3 நடுக்கலும் 4. புகலும் (147)

2049. கலுழி என்னும் பெயர்

கலுழி கலங் கல்நீர், கான்யாறும் ஆகும்.

கலுழி என்னும் பெயர்: (2)

1. கலங்கல்நீர், 2. கான்யாறு.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 முல்லைநிலக் கான்யாறு. (148)

2050. மறம் என்னும் பெயர்

கொலையும், சினமும், கொடுவினைச் செயலும்,
மலையும் சேவகமும் மறம்எனப் படுமே.

மறம் என்னும் பெயர்: (4)

1. கொலை, 2. சினம், 3. கொடுவினைச்செயல், 4. மலையும் சேவகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 சேவகமும்

2:1-2 வலியுஞ் செறலு - அச்சுப்பிரதி. (149)

2051. புலவர் என்னும் பெயர்

அமரரும், கவிஞரும், ஆடுநரும், பாடுநரும்,
பொருநரும், அறிஞரும் புலவர்எனப் படுமே.

புலவர் என்னும் பெயர்: (6)

1. அமரர், 2. கவிஞர், 3. ஆடுநர், 4. பாடுநர், 5. பொருநர், 6. அறிஞர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 கவிகளும்

2:4 படுவர், புகல்வர் (150)

2052. பொருநர் என்னும் பெயர்

பெரும்போர்த் தலைவரும், பெருங்கூத்தின் கோடியரும்,
பொரும்படைத் தலைவரும், பொருநர்எனப் படுவர்.

பொருநர் என்னும் பெயர்: (3)

1. பெரும் போர்த்தலைவர், 2. பெருங்கூத்தின் கோடியர், 3. பெரும்படைத் தலைவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 பொரும்போர்த் 4 கோடிகளும்
2:1 பொருபடைத் 4 படுமே, படும். (151)

2053. கோள் என்னும் பெயர்

அலர்கதிர் முதலாம் அமரரும், நாளும்,
கொலையும், இடையூறும் **கோள்**என்று ஆகும்.

கோள் என்னும் பெயர் : (4)

1. அலர்கதிர் முதலாம் அமரர், 2. நாள், 3. கொலை, 4. இடையூறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 முதலா வனைவரும்
1 அலர்கதிர் முதலொன் பானொடு அமரரும்
அலர்கதிர் முதலொன் பானொடு நாளுமமரரும்
2 கொலையு மிடையூறுங் கொள்கையுங் கோளே.

கோளே குணமுங் கோட்பாடுங் கோளும்
என்பதை முதலடியாகக் கொண்டு 'அலர்கதிர் முதலாம்' என வரும் அடியிரண்டும்இயைய மூன்றடி நூற்பாவாகவும் சில பிரதிகள் தந்துள்ளன. (152)

2054. உருத்தல் என்னும் பெயர்

உருத்தல், தோன்றலும், வெகுட்சியும் ஆகும்.

உருத்தல் என்னும் பெயர் : (2)

1. தோன்றல், 2. வெகுட்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

3. வெருட்சியு. (153)

2055. கலித்தல் என்னும் பெயர்

கலித்தல், எழுச்சியும் ஒலித்தலும் காட்டும்.

கலித்தல் என்னும் பெயர் : (2)

1. எழுச்சி, 2. ஒலித்தல் (154)

2056. நிழற்றல் என்னும் பெயர்

நிழற்றல் நுணுக்கமும் நிழற்செயலும் ஆகும்.

நிழற்றல் என்னும் பெயர் : (2)

1. நுணுக்கம், 2. நிழற் செயல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 நிழத்தல். (155)

2057. வாரி என்னும் பெயர்

கடலும், நீர்மிகுதியும், கதவும், பகுதியும்,
மடையும் என்றுஇவை வாரி என்ப.

வாரி என்னும் பெயர்: (5)

1. கடல், 2. நீர்மிகுதி, 3. கதவு, 4. பகுதி, 5. மடை

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 நீருங் கதவும், 3-4 கதவின் பகுதியும். கதவும் வாயிலும்.
2 மடையு மொருவழி வருவா யதுவும்
மடையும் நாலும் வாரியென்றாகும். (156)

2058. வதுவை என்னும் பெயர்

வதுவை மன்றலும், மணமும் என்றுஇவை
(பொதுவுறு) வாசமும், மணம்புணர்வும் ஆகும்.

வதுவை என்னும் பெயர்: (4)

1. மன்றல், 2. மணம், 3. வாசம், 4. மணம்புணர்வு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 வதுவையும் 4. மிக்க
2:2-3 வாசமும் புணர்வும்

'வதுவை மன்றலும் மணமு மாகும்' என்றும் சில பிரதிகளில் பாடம்.

இதன்பின், 'நீயே சுடரு நிதானமுஞ் செப்பும்'
எனவும் ஒருநூற்பா சில பிரதிகளில் உளது. (157)

2059. தா என்னும் பெயர்

தாவே வலியும் வருத்தமும் ஆகும்.
தாவென் கிளவி இடையீடும் ஆகும்.

தா என்னும் பெயர் (3)

1. வலி, 2. வருத்தம், 3. இடையீடு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 வருத்தமு மிடையூறும்
2ஆம் அடி சிலபிரதிகளில் தனிநூற்பாவாகத் தரப்பட்டுள்ளது (158)

2060. கா என்னும் பெயர்

காவே, காத்தலும் காவும் ஆகும்.

கா என்னும் பெயர்: (2)

1. காத்தல், 2. காவு. (159)

2061. பூ என்னும் பெயர்

பூவே, அழகும் கூர்மையும் பொலிவும்,

பூ என்னும் பெயர்: [3]

1. அழகு, 2. கூர்மை, 3. பொலிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

4 புகலும்

இதன்பின் காவின் பெயர் (2060) சில பிரதிகளில் இடம் மாறிக் காணப்படுகிறது. (160)

2062. கனவு என்னும் பெயர்

கனவே மயக்கமும் துயிலும் ஆகும்.

கனவு என்னும் பெயர்: [2]

1. மயக்கம், 2. துயில்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 துயில்வும்

கனவே துயிலு மயக்கமு மாகும் - என்றும் சில பிரதிகளில் பாடம். (161)

2063. நனவு என்னும் பெயர்

நனவே களனும், அகலமும், உணர்ச்சியும்;
தெளிவும் அதனோடு செப்பற்கும் உரித்தே.

நனவு என்னும் பெயர்: [4]

1. களன், 2. அகலம், 3. உணர்ச்சி, 4. தெளிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-4 உணர்ச்சியு மகலமு மாகும்.
2:3-4 செப்புதற் குறித்தே.
நனவே தேற்றமுந் துணிமுந் தெளிவும்
என்றும் சில பிரதிகளில் பாடம். (162)

2064. வாயில் என்னும் பெயர்

வாயில், புலனும், வாயிலும், திறனும்.

வாயில் என்னும் பெயர்: (3)

1. புலன், 2. வாயில், 3. திறன்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 தூதும் (163)

2065. வேய் என்னும் பெயர்

வேயே மூங்கிலும், ஒற்று வினையும்.

வேய் என்னும் பெயர்: (2)

1. மூங்கில், 2. ஒற்றுவினை.

பாடவேறுபாடு—விளக்கம்

'வேயே மூங்கி லொற்று மாகும் - என்றும் சில பிரதிகளில் பாடம். (164)

2066. வேளாண்மை என்னும் பெயர்

வேளாண்மை உபகாரம், உபசாரம் விளம்பும்.

வேளாண்மை என்னும் பெயர்: (2)

1. உபகாரம், 2. உபசாரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 யுபசார முபகாரம்
3 யுபசாரமும், ஈகையும். (165)

2067. கேள்வி என்னும் பெயர்

கேள்வி, கல்வியும் செவியும் கிளக்கும்.

கேள்வி என்னும் பெயர்: (2)

1. கல்வி, 2. செவி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கேள்வியுங் கிளக்கும். (166)

2068. வேலன் என்னும் பெயர்

வேலன், முருகனும் வெறியாட் டாளனும்.

வேலன் என்னும் பெயர் : (2)

1. முருகன், 2. வெறியாட்டாளன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 முருகன் வெறியாட் டாளன். (167)

2069. தாலம் என்னும் பெயர்

தாலம், தரை, பனை, நா, உண் கலமே.

தாலம் என்னும் பெயர்: (4)

1. தரை, 2. பனை, 3. நா, 4. உண்கலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 நாவுமுண் கலனும், நாவுண் கலனும். (168)

2070. தாரம் என்னும் பெயர்

தாரம் அரும்பண்டம், வெள்ளி (அதனோடு
சேரும்) ஏழ்நரம்பில் ஓர்நரம்பும் செப்பும்.

தாரம் என்னும் பெயர்: (3)

1. அரும்பாண்டம், 2. வெள்ளி, 3. ஏழ் நரம்பில் ஓர் நரம்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 அதனொடும்
2:3-4 நரம்பும் வெண்கலமும். (169)

2071. நாகம் என்னும் பெயர்

அரவும், காரியமும், அமரர்நாட்டு ஒருபெயரும்,
மலையும், யானையும், ஒருமரப் பெயரும்,
தெரியின் **நாகம்** எனப்பெயர் சிவணும்.

நாகம் என்னும் பெயர்: (6)

1. அரவு, 2. காரியம், 3. அமரர் நாட்டு ஒரு பெயர், 4. மலை, 5. யானை, 6. ஒருமரப் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-4 அமரர் நாட்டொரு நாடும், காரியமு மமரர்நாடும்.(170)

2072. விருத்தி என்னும் பெயர்

உரிய சொல்லும் உரிய பொருளும்
விரிய உரைப்பது **விருத்தி** ஆகும்.

விருத்தி என்னும் பெயர் :

உரிய சொல்லும் உரிய பொருளும் விரிய உரைப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

3:3-4 உரைப்பதும் விருத்தியென் றாகும். (171)

2073. முளரி என்னும் பெயர்

எரியே, தாமரை, நுட்பம், முள்மரம்,
(அரிய) காடுஎன்று ஐந்தும் **முளரி**.

முளரி என்னும் பெயர் : (5)

1. எரி, 2. தாமரை, 3. நுட்பம், 4. முள்மரம், 5. காடு.

பாடவேறுபாடு—விளக்கம்

எரியுந் தாமரையுந் துடர்முண் மரமும்
அரிய காடுமென் றறைந்தது முளரி

என்றும் சில பிரதிகளில் பாடம். (172)

2074. கயம் என்னும் பெயர்

கயமே, ஆழம், நீரும், யானைக் கன்றும்.

கயம் என்னும் பெயர் : (3)

1. ஆழம், 2. நீர், 3. யானைக் கன்று.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 கயமே யாழ் நீரும்

2 யாழமும்

கயமே யாழ்நீர் யானைக் கன்று. (173)

2075. அயில் என்னும் பெயர்

அயிலே வேலும், கூர்மையும் ஆகும்.

அயில் என்னும் பெயர் : (2)

1. வேல், 2. கூர்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கூர்மையு மழகும். (174)

2076. சுடர் என்னும் பெயர்

மதியும், ஞாயிறும், கனலியும், (மற்றைப்
பொதுவுறும்) ஒளியும் சுடர் எனப் புகல்வர்.

சுடர் என்னும் பெயர் : (4)

1. மதி, 2. ஞாயிறு, 3. கனலி, 4. ஒளி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 மதியமும் 3. கனலும். (175)

2077. ஒருசார் என்னும் பெயர்

அதிகப் புலமை அம்பர்ச் சேந்தனில்
உதவிப் பொறை சாற்றும் ஒருசார் எனவே.

ஒருசார் என்னும் பெயர் :

அதிகப் புலமை அம்பர்ச் சேந்தனில் உதவிப் பொறை சாற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 அதிகப் புதுமை, 3 அம்பற்
2 உதவி போல்சொலு மொருசா ரெனவே

இந்நூற்பா சில ஏடுகளில் இல்லை. (176)

2078. மதலை என்னும் பெயர்

மதலைக் கிளவி தூணே, மரக்கலம்,
புதல்வர் பெயர், கொடுங்கை, பாவை போல்வன
தகவிற்று ஆகும் சார்பின் எவையும்.

மதலை என்னும் பெயர் : (6)

1. தூண், 2. மரக்கலம், 3. புதல்வர் பெயர்,
4. கொடுங்கை, 5. பாவை போல்வன, 6. சார்பின் எவையும்.
(177)

2079. பதலை என்னும் பெயர்

பதலை, தாழியும், பரந்தவாய்ப் பறையும்.

பதலை என்னும் பெயர்: (2)

1. தாழி, 2. பரந்தவாய்ப் பறை. (178)

2080. இறும்பூது என்னும் பெயர்

வியப்பு, கெழுதகைமை, சிறுதூறு, மலைஎன
நயப்புடை நான்கும் இறும்பூது ஆகும்.

இறும்பூது என்னும் பெயர்: (4)

1. வியப்பு, 2. கெழுதகைமை, 3. சிறுதூறு, 4. மலை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 குழைதன்மை, 1:1-2 வியப்பிரா சீவஞ்
2 நயப்புடை யைந்து மிறும்பூ தாகும். (179)

2081. பிறங்கல் என்னும் பெயர்

பிறங்கல், உயர்வும், பெருமையும், மலையும்.

பிறங்கல் என்னும் பெயர் : (3)

1. உயர்வு, 2. பெருமை, 3. மலை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 மலையும் பெருமையும்

'பிறங்கல் மலையே பெருமையு மாகும்' என்றும் சில பிரதிகளில் பாடம். (180)

2082. குளிரி என்னும் பெயர்

கிளிகடி கருவியும் இலைமூக்கு அரிகருவியும்
குளிரிப் பெயர், குட முழவும், ஞெண்டும்.

குளிரி என்னும் பெயர் : (4)

1. கிளிகடி கருவி, 2. இலைமூக்கு அரி கருவி, 3. குடமுழவு, 4. ஞெண்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குளிர் என்னும் பெயர்
கிளிகடி கருவி இலைமூக்கரி கருவி
குளிரே ஞெண்டும் முழவும் ஆகும்.
2 குளிரே னொண்டு குடமுழவும் ஆகும். (181)

2083. கேவலம் என்னும் பெயர்

கேவலம், தனிமையும் முத்தியும் ஆகும்.

கேவலம் என்னும் பெயர் : (2)

1. தனிமை, 2. முத்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 தனிமை, முத்தியும். (182)

2084. நீவி என்னும் பெயர்

நீவி என்பது தடவலும், துடைத்தலும்.
ஆடையும் கொய்சகமும் ஆகலும் உரித்தே.

நீவி என்னும் பெயர் : (4)

1. தடவல், 2. துடைத்தல், 3. ஆடை, 4. கொய்சகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 அழித்தலுந் தொடைத்தலும்.

நீவல் என்பது தடவலும் துடைத்தலும்
என ஒரு தனி நூற்பாவாகவும், அடுத்து,
நீவி யழித்தலுந் துடைத்தலு மாகும்
எனத் தனி நூற்பாவாகவும் தந்து,
ஆடை கொய்சக மாகலு முரித்தே
என்பதனை மிகை எனப் பேராசிரியர் மு. இராகவையங்கார் காட்டியுள்ளார்.

நீவி யழித்தலுந் தொடைத்தலு மாகு
மாடை கொய்சக மாகலுமுரித்தே

எனவும் சில பிரதிகளில் காணப்படுகிறது. (183)

2085. மறை என்னும் பெயர்

மறையே வேதமும் மறைத்துமொழி கிளவியும்.

மறை என்னும் பெயர் : (2)

1. வேதம், 2. மறைத்து மொழி கிளவி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 மறைத்துரையு மாகும். (184)

2086. வறிது என்னும் பெயர்

வறிது, சிறிது ஆதலும், அருகலும் உரித்தே.

வறிது என்னும் பெயர்: (2)

1. சிறிது ஆதல், 2. அருகல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 வறிது சிறி தாகும், வறிதே சிறுகலும். (185)

2087. சிரகம் என்னும் பெயர்

சிரகம், துவலையும் கரகமும் ஆகும்.

சிரகம் என்னும் பெயர்: (2)

1. துவலை, 2. கரகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 திவலை (186)

2088. ஆகம் என்னும் பெயர்

ஆகம், மார்பும் உடலும் ஆகும்.

ஆகம் என்னும் பெயர்: (2)

1. மார்பு, 2. உடல். (187)

2089. படி என்னும் பெயர்

படியே பாரும், பகைத்தலும், உவமையும்.

படி என்னும் பெயர்: (3)

1. பார், 2. பகைத்தல், 3. உவமை.

பாடவேறுபாடு—விளக்கம்

'படியே பாரு முவமையும் பகையும்' என்றும்,
'படியே பாரும் பகையு மொப்பும்' என்றும்,
'படியே பாரும் பகையு மாகும்' என்றும்
பிரதி வேறுபாடுகள் உள. (188)

2090. முடலை என்னும் பெயர்

முடலை, திரட்சியும் முருடும் ஆகும்.

முடலை என்னும் பெயர்: (2)

1. திரட்சி, 2. முருடு.

பாடவேறுபாடு—விளக்கம்

2. திரட்டு, 3. முகடு, முகுடு. (189)

2091. விடங்கம் என்னும் பெயர்

விடங்கம், முகடு, அழகும் ஆகும்.

விடங்கம் என்னும் பெயர்: (2)

1. முகடு, 2. அழகு. (190)

2092. மடங்கல் என்னும் பெயர்

ஊழித்தீ, சிங்கம், உரும், இடி என்றுஇவை
வாழித் தமிழோர் மடங்கல் என்ப;
(கொடுங்) கூற்றின் (பெயரும்) நோயும் கூறும்.

மடங்கல் என்னும் பெயர் : (6)

1. ஊழித்தீ, 2. சிங்கம், 3. உரும், 4. இடி,
5. கூற்று, 6. நோய்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 சிங்கமு முருமிடி.
2:4 என்பர். (191)

2093. வள் என்னும் பெயர்

வள்ளே, கூர்மையும், வாரும் வலியும்.

வள் என்னும் பெயர் : (3)

1. கூர்மை, 2. வார், 3. வலி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 வாரு மாகும். (192)

2094. அள் என்னும் பெயர்

அள்ளே, கூர்மையும், செறிவும், வண்மையும்.

அள் என்னும் பெயர் : (3)

1. கூர்மை, 2. செறிவு, 3. வண்மை. (193)

2095. ஞெள்ளல் என்னும் பெயர்

ஞெள்ளல், தெருவும் மேன்மையும் நிகழ்த்தும்;
உள்ளுங் காலை விரைவும் ஆகும்.

ஞெள்ளல் என்னும் பெயர் : (3)

1. தெரு, 2. மேன்மை, 3. விரைவு.

பாடவேறுபாடு—விளக்கம்

சோர்வு மிகுத லுடன்படுதல் பூசன்
மென்மையொ டொலியுந் தெருவு ஞெள்ளல்

என்றும் சில பிரதிகளில் பாடம்.

சோர்வு மிகுத லுடன்படல் படுகர்
நாலினோ டொலியுந் தெருவு ஞெள்ளல்—அச்சுப்பிரதி. (194)

2096. பள்ளி என்னும் பெயர்

பள்ளி, இடனும் துயிலும் ஆகும்.

பள்ளி என்னும் பெயர் : (2)

1. இடன், 2. துயில்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 துயிலுமெனப் பகர்வர். (195)

2097. எகினம் என்னும் பெயர்

கவரி மாவும், அன்னமும், நாயும்
எகினம் என்பர் இயல்புணர்ந் தோரே.

எகினம் என்னும் பெயர் : (3)

1. கவரிமா, 2. அன்னம், 3. நாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 கவரியும் மாவும். (196)

2098. கவிகை என்னும் பெயர்

கவிகை, கொடையும் குடையும் ஆகும்.

கவிகை என்னும் பெயர் : (2)

1. கொடை, 2. குடை.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 குடையுங் கொடையு. (197)

2099. இருத்தல் என்னும் பெயர்

இருத்தல், செகுத்தலும் வீழ்த்தலும் ஆகும்.

இருத்தல் என்னும் பெயர் : (2)

1. செகுத்தல், 2. வீழ்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 வீழ்தலு மாகும், வீழ்த்தலு மிசைக்கும், வீழ்த்தலு மென்ப. (198)

2100. ஆணை என்னும் பெயர்

ஏவல், மெய்ப்பாடு, இலாஞ்சனை, சூளே,
ஆவயின் விறற்செயலும் **ஆணைக்** கிளவி.

ஆணை என்னும் பெயர் : (5)

1. ஏவல், 2. மெய்ப்பாடு, 3. இலாஞ்சனை, 4. சூள், 5. விறற்செயல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 யாவையும் விறல் செயலும். (199)

2101. இதழ் என்னும் பெயர்

பூவின் தோடும், பனையிதழ் போல்பவும்,
வாயின் அதரமும், இதழ்என வைப்பர்.

இதழ் என்னும் பெயர்: (3)

1. பூவின் தோடு, 2. பனையிதழ் போல்ப,
3. வாயின் அதரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 இதழெனும் வகைய 4. வறைவர். (200)

2102. காயம் என்னும் பெயர்

காயம், யாக்கையும் காழ்ப்பும் ஆகும்.

காயம் என்னும் பெயர்: (2)

1. யாக்கை, 2. காழ்ப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

3 கார்ப்பும். (201)

2103. ஆயம் என்னும் பெயர்

ஆயம், கூட்டமும் சூதும் ஆகும்.

ஆயம் என்னும் பெயர்: (2)

1. கூட்டம், 2. சூது.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 கூட்டஞ் சூதுக் கருவி—அச்சுப்பிரதி. (202)

2104. தாயம் என்னும் பெயர்

தாயம் உரிமையும் தம்குடித் தமரும்.

தாயம் என்னும் பெயர் : (2)

1, உரிமை, 2. தம்குடித்தமர். (203)

2105. மதவு என்னும் பெயர்

மதவு என் கிளவி வலியும், இடனும்,
மிகுதியும், வனப்பும் மேவுதற்கு உரித்தே.

மதவு என்னும் பெயர் : (4)

1. வலி, 2. இடன், 3. மிகுதி, 4. வனப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

மதர்வென் கிளவி மகிழ்வும் மிகுதியும் —அச்சுப்பிரதி. (204)

2106. கதழ்வு என்னும் பெயர்

கதழ்வே விரைவும் சிறத்தலும் காட்டும்.

கதழ்வு என்னும் பெயர் : (2)

1. விரைவு, 2. சிறத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 செறித்தலும் வலித்தலும். (205)

2107. கட்டளை என்னும் பெயர்

நிறைஅறி கருவியும், உரைஅறி கருவியும்,
பிறவின ஒப்பும் **கட்டளைப்** பெயரே.

கட்டளை என்னும் பெயர் : (3)

1. நிறைஅறி கருவி, 2. உரைஅறி கருவி,
3. பிறவின ஒப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து, 'அள்ளே கூர்மையும் செறிவும் வன்மையும்' என்னும் நூற்பா சில பிரதிகளில் காணப்படுகிறது. இது முன்னர் 'வள்' என்பதனை (2093) அடுத்து வந்துள்ளமை காண்க. அதுவே எதுகை முறை அமைப்பால் சிறக்கும். (206)

2108. கோல் என்னும் பெயர்

இறைமுறை நடாத்தலும், யாழ்நரம்பும், அம்பும்,
நிறை அறிதுலாமும், அஞ்சனம் எழுது கருவியும்
குதிரைமத் திகையும் **கோல்** என்று ஆகும்.

கோல் என்னும் பெயர் : (6)

1. இறைமுறை நடாத்தல், 2. யாழ் நரம்பு, 3. அம்பு,
4. நிறைஅறி துலாம், 5. அஞ்சனம் எழுது கருவி,
6. குதிரை மத்திகை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 இறைவன்முறை நடாத்தலும்
2,3 நிறையறி துலாமு மஞ்சன மெழுதுங்
கருவியுங் குதிரைமத் திகையுங் கோலே. (207)

2109. அழுங்கல் என்னும் பெயர்

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.

அழுங்கல் என்னும் பெயர் : (2)

1. இரக்கம், 2. கேடு. (208)

2110. வழங்கல் என்னும் பெயர்

வழங்கல், கொடை, சேறல், சொல்லலும் வரையார்.

வழங்கல் என்னும் பெயர் : (3)

1. கொடை, 2. சேறல், 3. சொல்லல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 சேறலும் சொல்லும்
1-3 வழங்கல் செல்லல் சொல்லலும்.
வழங்கல் கொடையுஞ் சேறலுஞ் சொல்லும்
எனவும் சில பிரதிகளில் பாடம். (209)

2111. கழங்கு என்னும் பெயர்

கழங்கு, அணங்காட்டொடு, கொடிக்கழலும் ஆகும்.

கழங்கு என்னும் பெயர் : (2)

1. அணங்காட்டு, 2. கொடிக்கழல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 கழங்கே யணங்காட்டொடு
கழங்கோ ராடலுங் கொடிக்கழலுங் கருதும். (210)

2112. உலவை என்னும் பெயர்

மரத்தின் கோடும், விலங்கின் மருப்பும்,
ஊதையும் உணர்த்தும் உலவைக் கிளவி.

உலவை என்னும் பெயர் : (3)

1. மரத்தின் கோடு, 2. விலங்கின் மருப்பு, 3. ஊதை.

பாடவேறுபாடு—விளக்கம்

1. மரத்தின் கோடு மருப்பு மூதையும்
மரக்கோடும் விலங்கின் மருப்பு மூதையும்
1:3-4 மருப்புங் காலும்.
2 உணர்த்து மென்ப உலவைக் கிளவி.
உரைக்கிற் காற்றும் உலவைக் கிளவி (211)

2113. தெவிட்டல் என்னும் பெயர்

ஒலித்தலும், நிறைத்தலும், உமிழ்தலும், மிடைதலும்
தெவிட்டல் என்னும் கிளவியின் சிறக்கும்.

தெவிட்டல் என்னும் பெயர் : (4)

1. ஒலித்தல், 2. நிறைத்தல், 3. உமிழ்தல்,
4. மிடைதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 ஒலித்தலு மிழற்றலும். ஒலித்தலு நிழத்தலும்
3-4 மிடைதலுந் தெட்டலு
2 நிறைத்த லென்னும் கிளவியின் சிறக்கும்.

இந்நூற்பாவை நிறைத்தல் என்னும் பெயர் என்னும் தலைப்பிலும் சில பிரதிகள் தந்துள்ளன. (212)

2114. பொறி என்னும் பெயர்

திரு, புலன், எந்திரம், இலாஞ்சனை, எழுதுவினை
புகழ்ச்சிப் புலவர் பொறிஎனப் புகல்வர்.

பொறி என்னும் பெயர் : (5)

1. திரு, 2. புலன், 3. எந்திரம், 4. இலாஞ்சனை, 5. எழுதுவினை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 எழுதும் வினை, எழுத்துவினை, எழுதுங்கருவி.
2:1-2 புகற்சீர்ப் புலவர், 4. விளம்புவர். (213)

2115. உறழ்வு என்னும் பெயர்

உறழ்வே, இடையீடும், உணர்வும், ஒத்தலும்,
செறிவும் என்றுஇவை செப்புதற்கு உரித்தே.

உறழ்வு என்னும் பெயர் : (4)

1. இடையீடு. 2. உணர்வு, 3. ஒத்தல், 4. செறிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: உறழ் என்னும் பெயர்.
1:1 உறழே
2:3-4 தெரிதற்கு, முரித்தே, தெரித்தற்கு முரித்தே. (214)

2116. பொறை என்னும் பெயர்

பொறையே சுமத்தலும் பொறுத்தலும் புவியும்.

பொறை என்னும் பெயர் : (3)

1. சுமத்தல், 2. பொறுத்தல், 3. புவி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 பொறுத்தலு மாகும், பரித்தலும் பொறுத்தலும்—அச்சுப் பிரதி.
மலைசுமை பார மம்பர்ச் சேந்தனொ
டுலவிய பொறுமைபா ரைந்தும் பொறையே
என்றும் சில பிரதிகளில் பாடம். (215)

2117. இறை என்னும் பெயர்

இறையே கடனும், இல்லின் இறப்பும்,
சிறிதும், தங்கலும், உயர்ந்தோரும் சிறக்கும்.

இறை என்னும் பெயர் : (5)

1. கடன், 2. இல்லின் இறப்பு, 3. சிறிது, 4. தங்கல், 5. உயர்ந்தோர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 சிறுமையும், சிறுதூறும்
2:3-3 உயர்ந்தோருஞ் செப்பும், உயர்ந்தோற்கு முரிய. (216)

2118. அறல் என்னும் பெயர்

அறலே விழவும், நீரும், நீர்த் திரையும்,
(திரை அலைத்து உறுநுண்) கருமணலும் ஆகும்.

அறல் என்னும் பெயர் : (4)

1. விழவு, 2. நீர், 3. நீர்த்திரை, 4. கருமணல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 அறவே அறுதலும்
2:3-4 கருமணலுஞ் செப்பும். (217)

2119. அற்றம் என்னும் பெயர்

அற்றம் மறைபொருளும் சோர்வும் ஆகும்.

அற்றம் என்னும் பெயர் : (2)

1. மறைபொருள், 2. சோர்வு,

பாடவேறுபாடு—விளக்கம்

2 மறைப் பொருளும்
3-4 சோர்வும் முடிவும். (218)

2120. முற்று என்னும் பெயர்

முற்றே முழுவதும், வளைத்தலும் முடிவும்.

முற்று என்னும் பெயர் : (3)

1. முழுவது, 2. வளைத்தல், 3. முடிவு.
4 ஆகும், மொழியும்.

பாடவேறுபாடு—விளக்கம்

'முற்றே முழுவதும் வளைத்தலும் முடிவும்
முதிர்ச்சியு முற்றென மொழிந்தனர் புலவர்'

என்றும் சில பிரதிகளில் பாடம். (219)

2121. ஓரை என்னும் பெயர்

கூட்டமும், மகளிர் விளையாட்டும், இராசிக்
கூற்றையும் ஓரைக் கிளவி கூறும்.

ஓரை என்னும் பெயர் : (3)

1. கூட்டம், 2. மகளிர் விளையாட்டு,
3. இராசிக்கூறு. (220)

2122. தூவி என்னும் பெயர்

பசையும் தசையும் பறவை இறகும்
தொகுபெயர் தானே தூவி என்று ஆகும்.

தூவி என்னும் பெயர் : (3)

1. பசை, 2. தசை, 3. பறவை இறகு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 பச்சையுந், பறவையுந்
1:3-4 பறவையி னிறகும். (221)

2123. கருவி என்னும் பெயர்

கவசம், பல்லியம், தொடர்பு, யாழ், படைக்கலம்,
(கனக முதற்) பூண், தொகுதி, மேகம்,
கலனை, கசை இவை கருவி ஆகும்.

கருவி என்னும் பெயர் : (10)

1. கவசம், 2. பல்லியம், 3. தொடர்பு, 4. யாழ், 5. படைக்கலம், 6. பூண், 7. தொகுதி, 8. மேகம், 9. கலனை, 10. கசை.

பாடவேறுபாடு—விளக்கம்

3 கல்லனை யுபகரணங் கழறுங் கருவி. (222)

2124. கழுது என்னும் பெயர்

வண்டும், பேயும், இதணமும் கழுது ஆம்.

கழுது என்னும் பெயர் : (3)

1. வண்டு, 2. பேய், 3. இதணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 இதணுங் கழுதே. (223)

2125. காஞ்சி என்னும் பெயர்

எதிருன் றுதலும், நிலையின் மையும்,
(அணி)மே கலையும், ஒருமரப் பெயரும்,
கருதும் காஞ்சி என்னும் கட்டுரை.

காஞ்சி என்னும் பெயர் : (4)

1. எதிருன்றுதல், 2. நிலையின்மை, 3. மேகலை, 4. ஒருமரப் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 நிலைய தின்மையும், நிலையின்மையும் பெருமையும்
2 மணிமே கலையு மோர்மரப் பெயரும்
ஏதிருன்ற னிலையின்மை மேகலை யோர்மரங்
கருதுங் காஞ்சி யென்னுங் கட்டுரை—என்றும் பாடம். (224)

2126. வேலை என்னும் பெயர்

வேலை தானே கடலும், கடற்கரையும்
காலமும் கூறும் கருவித்து ஆகும்.

வேலை என்னும் பெயர் : (3)

1. கடல், 2. கடற்கரை, 3. காலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

காலைநாட் கூறுங் காலமு மாகும் (225)

2127. காலை என்னும் பெயர்

காலை நாட்கூறும், காலமும் ஆகும்.

காலை என்னும் பெயர் : (2)

1. நாட்கூறு, 2. காலம். (226)

2128. பயிர் என்னும் பெயர்

விதந்து கட்டிய வழக்கும், விலங்கொடுபுள் குரலும்
பசும்புல்லும், பைங்கூழும் **பயிர்**என்று ஆகும்.

பயிர் என்னும் பெயர் : (4)

1. விதந்து கட்டிய வழக்கு, 2. விலங்குபுள் குரல், 3. பசும்புல், 4. பைங்கூழ்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பசும்புல்லும் பைங்கூழு மாகும் பயிரே. (227)

2129. பதங்கம் என்னும் பெயர்

பதங்கம் விட்டிலொடு பறவைப் பொதுப் பெயர்.

பதங்கம் என்னும் பெயர்: (2)

1. விட்டில், 2. பறவைப் பொதுப் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 பறவையின், (228)

2130. படர் என்னும் பெயர்

படரே உள்ளல், செலவொடு பரிவே.

படர் என்னும் பெயர்: (3)

1. உள்ளல், 2. செலவு, 3. பரிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 கருத்து நெறியொடு
3-4 பரிவொடு செலவே. (229)

2131. கடிகை என்னும் பெயர்

கடிகை, வேகம், சமயம், கள், நாழிகை.

கடிகை என்னும் பெயர்: (4)

1. வேகம், 2. சமயம், 3. கள், 4. நாழிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 வேதம், பேதம்,
3-4 சமயம் நாழிகை, துண்டம் நாழிகை. (230)

2132. சினை என்னும் பெயர்

சினையே கருவும், உறுப்பும், மரக் கோடும்.

சினை என்னும் பெயர்: (3)

1. கரு, 2. உறுப்பு, 3. மரக்கோடு. (231)

2133. நனை என்னும் பெயர்

நனை, பூ மொட்டிற்கும், கள்ளிற்கும் நாமம்.

நனை என்னும் பெயர் : (2)

1. பூ மொட்டு, 2. கள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. நனையே 4. மாகும்.
நனைபூ மொட்டுங் கள்ளு மாகும். (232)

2134. வயிரம் என்னும் பெயர்

செற்றமும், கூர்மையும், சேகும், மணியும்,
வச்சிரமும், வன்மையும் **வயிர**க் கிளவி.

வயிரம் என்னும் பெயர் : (6)

1. செற்றம் 2. கூர்மை, 3. சேகு, 4. மணி, 5. வச்சிரம், 6. வன்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 வண்மையும். (233)

2135. எற்றுதல் என்னும் பெயர்

எற்றுதல், புடைத்தலும் எறிதலும் ஆகும்.

எற்றுதல் என்னும் பெயர் : (2)

1. புடைத்தல், 2. எறிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4. இசைக்கும்

தலைப்பு: ஒற்றுதல் என்னும் பெயர்
எற்றுதல் வலித்தல் துணித்தலை யிசைக்கும்
எற்றுதல் வலித்தலுந் துளைத்தலு மிசைக்கும்.
1. ஒற்றுதல். (234)

2136. குற்றி என்னும் பெயர்

குற்றி, வையகம், தூணும், தூணுக்கு இணையே.

குற்றி என்னும் பெயர் : (3)

1. வையகம், 2. தூண், 3. தூணுக்கு இணை.

பாடவேறுபாடு—விளக்கம்

குற்றியையுந் தூ ணையுந் தாணு வென்ப.
குற்றியுந் தூ ணுந் தாணுவெனக் கூறும்.

என்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது. இதன்படி இந்நூற்பா தாணு என்பதன் பெயர் பற்றியதாக அமையும். முன்னும் பின்னும் வருகிற சொற்களில் எதுகை நோக்கின் இங்கே குற்றி என்பதன் பெயர் வருதலே பொருத்தமாகும். (235)

2137. மற்று என்னும் பெயர்

மற்று என் கிளவி வினைமாற்று, அசைநிலை.

மற்று என்னும் பெயர்: (2)

1. வினை மாற்று, 2. அசைநிலை.

பாடவேறுபாடு—விளக்கம்

மற்றென் வினைமாற் றசைநிலைக் கிளவி. (236)

2138. ஏற்றம் என்னும் பெயர்

ஏற்றம் வலித்தலும் துணிவும் ஆகும்;
மற்றது நினைவிற்கும் மாற்றம் ஆகும்.

ஏற்றம் என்னும் பெயர்: (3)

1. வலித்தல், 2. துணிவு, 3. நினைவு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-4 நினைவிற் குரித்து மாகும். (237)

2139. கொற்றம் என்னும் பெயர்

கொற்றம் அரசியலும் வெற்றியும் ஆகும்.

கொற்றம் என்னும் பெயர் : (2)

1. அரசியல், 2. வெற்றி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 அரசியல் 4. கூறும். (238)

2140. வீசுதல் என்னும் பெயர்

வீசுதல், கொடுத்தலும், எறிதலும் ஆகும்.

வீசுதல் என்னும் பெயர் : (2)

1. கொடுத்தல், 2. எறிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 விளம்பும். (239)

2141. தேசிகம் என்னும் பெயர்

தேசிகம், திசைச் சொலும் அழகும் ஆகும்.

தேசிகம் என்னும் பெயர்: (2)

1. திசைச்சொல், 2. அழகு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 திசைச்சொல்லும் 4. செப்புவர், செப்பும். (240)

2142. பாங்கு என்னும் பெயர்

பாங்கு, பால், பரிசு, பக்கம், தோழியும்.

பாங்கு என்னும் பெயர்: (4)

1. பால், 2. பரிசு, 3. பக்கம், 4. தோழி.

பாடவேறுபாடு-விளக்கம்

பாங்கு பக்கம் பரிசு தோழி
பாங்குபால் பக்கம் பரிசு பண்பு
பாங்கழ குரிமை பக்க மாகும்—அச்சுப்பிரதி. (241)

2143. தூங்கல் என்னும் பெயர்

தூங்கல், ஆடலும் தாழ்வும் வேழமும்.

தூங்கல் என்னும் பெயர்: (3)

1. ஆடல், 2. தாழ்வு, 3. வேழம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தூங்க லியானையுந் தாழ்வு மாடலும். (242)

2144. பாசம் என்னும் பெயர்

பாசம், ஊசித் துளையொடு கயிறே.
பேசின், மனப்பற்று ஆகலும் உரித்தே.

பாசம் என்னும் பெயர்: [3]

1. ஊசித் துளை, 2. கயிறு, 3. மனப்பற்று.

பாடவேறுபாடு—விளக்கம்

2 ஆம் அடி சில பிரதிகளில் இல்லை.
2 ஆசை மனபற் றாகலு முரித்தே.
ஆசை பிசாசமோ ராயுத மாகும்—அச்சுப்பிரதி. (243)

2145. காசை என்னும் பெயர்

காசை, நாணலும் காயா மரமும்.

காசை என்னும் பெயர்: (2)

1. நாணல், 2. காயாமரம். (244)

2146. தண்ணடை என்னும் பெயர்

தண்ணடை, நாடும் ஊரும் ஆகும்.

தண்ணடை என்னும் பெயர் : (2)

1. நாடு, 2. ஊர்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 ஊருஞ் சாற்றும், ஊரு முரசாம். (245)

2147. வண்ணம் என்னும் பெயர்

வண்ணம் ஓசையும் வடிவும் ஆகும்.

வண்ணம் என்னும் பெயர் ; (2)

1. ஓசை, 2. வடிவு. (246)

2148. கட்சி என்னும் பெயர்

காடும் கூடும் **கட்சி** ஆகும்.

கட்சி என்னும் பெயர் : (2)

1. காடு, 2. கூடு.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து ஒரு பிரதியில்
வண்டு மலையுஞ் சுரும்பென் றாகும்
என ஒரு நூற்பா காணப்பட்டது. (247)

2149. பாடலம் என்னும் பெயர்

பாடலம் சிவப்பும், பாதிரியும் ஆகும்.

பாடலம் என்னும் பெயர்: [2]

1. சிவப்பு, 2. பாதிரி. (248)

2150. பாடி என்னும் பெயர்

பாடி, நகரமும், நாடும் படைவகுப்பும்.

பாடி என்னும் பெயர்: (3)

1. நகரம், 2. நாடு, 3. படை வகுப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

4 படைவீடும், படைவிடுதியும். (249)

2151. ஓரி என்னும் பெயர்

ஆடவர் மயிரும், முசுவும் ஓரி.

ஓரி என்னும் பெயர்: (2)

1. ஆடவர் மயிர், 2. முசு.

பாடவேறுபாடு—விளக்கம்

4 ஓரியாம். (250)

2152. மூரி என்னும் பெயர்

மூரி, பெருமையும் ஆனேறும், உரனும்.

மூரி என்னும் பெயர்: (3)

1. பெருமை, 2. ஆனேறு, 3. உரன்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 ஆகும், முரணும், (251)

2153. ஊர்தி என்னும் பெயர்

தேரும், மாவும், சிவிகையும் என்றுஇவை
ஊர்தி என்னும் பெயரின் தோன்றும்.

ஊர்தி என்னும் பெயர் (3)

1. தேர், 2. மா, 3. சிவிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 பெயரினு முணர்த்தும். (252)

2154. தவ என்னும் பெயர்

தவஎன் கிளவி மிகுதலும் குறைதலும்.

தவ என்னும் பெயர்: (2)

1. மிகுதல், 2. குறைதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தவலென்னும் பெயர்
1-2 தவவுவென் கிளவி
தவலே மிகுதலுங் குறைதலு மாகும். (253)

2155. நவம் என்னும் பெயர்

நவமே புதுமையும், ஒன்பதும் ஆகும்.

நவம் என்னும் பெயர்: [2]

1. புதுமை, 2. ஒன்பது.

பாடவேறுபாடு—விளக்கம்

ஒன்பதுங் கேண்மையும் புதுமையும் பழமையும்
தொண்டு நவமெனச் சொல்லுவர் புலவர்
தொண்டென் கிளவி தொழும்பு மாகும்
என்றும் சில பிரதிகளில் பாடம் உண்டு.
1:3-4 பழமையும் புதுமையும்
2-3 சொல்லினர். (254)

2156. விரை என்னும் பெயர்

விரை என் கிளவி சாந்தும் வெறியும்.

விரை என்னும் பெயர்: (2)

1. சாந்து, 2. வெறி.

பாடவேறுபாடு—விளக்கம்

4 விரைவும்
விரையே சாந்தும் வெறியு மாகும். (255)

2157. முரண் என்னும் பெயர்

முரணே வலியும் பகையும் ஆகும்.

முரண் என்னும் பெயர்: (2)

1. வலி, 2. பகை.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து ஒருசில பிரதிகளில்,
இகல் என்னும் பெயர்
'இகலே பகைவலி பெலமாகு மென்ப'
என ஒரு நூற்பா காணப்படுகிறது. (256)

2158. தரணி என்னும் பெயர்

தரணி நிலனும், மலையும், இரவியும்.

தரணி என்னும் பெயர் : (3)

1. நிலன், 2. மலை, 3. இரவி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 நிலமும்
2-3 மலையும் நிலமும். (257)

2159. கய என்னும் பெயர்

கயவே பெருமையும் மென்மையும் காட்டும்.

கய என்னும் பெயர்: (2)

1. பெருமை, 2. மென்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 மேன்மையுங் காட்சியும். (258)

2160. கழிதல், இறத்தல் என்னும் பெயர்

கழிதலும் இறத்தலும் எனஇரு கிளவியும்
மிகுதலும் கடத்தலும் சாதலும் விளம்பும்.

கழிதல், இறத்தல் என்னும் பெயர்: (3)

1. மிகுதல், 2. கடத்தல், 3. சாதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 மிகுத்தலும். (259)

2161. தட என்னும் பெயர்

தடவே பெருமை கோட்டம் மலைஆம்.
தட என்னும் பெயர்: (3)

1. பெருமை, 2. கோட்டம், 3. மலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தடவே பெருமையுங் கோட்டக மலையும்.
3-4 கோட்டமலை யாகும்.

இதன்பின்னர் ஒருசில பிரதிகளில் மட்டும் காணப்படும் இரு நூற்பாக்கள் வருமாறு:

கடம் என்னும் பெயர்

கடமே குடமுங் கடனும் வழியுந்
தெய்வமு மென்றிவை தெரியுங் கிளவி.

சம்பு என்னும் பெயர்

சம்பு நாவலும் பிரமனு நரியு
நம்பனு மென்பர் நன்குணர்ந் தோரே. (260)

2162. வெடி என்னும் பெயர்

வெடியே வெள்ளிடை, வெருவும் ஆகும்.

வெடி என்னும் பெயர்: (2)

1. வெள்ளிடை, 2. வெருவு.

பாடவேறுபாடு—விளக்கம்

வெடியே வெருவலும் வெள்ளிடையு மாகும். (261)

2163. அரலை என்னும் பெயர்

அரலை கழலையொடு (அருங்) கனிக் காழே.

அரலை என்னும் பெயர்: (2)

1. கழலை, 2. கனிக்காழ்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கழலையோடு, 3-4 அருங்கனி காழே—அச்சுப்பிரதி. (262)

2164. இரலை என்னும் பெயர்

இரலைக் கிளவி தலைநாட் பெயரும்
ஊது கொம்பும் புல்வாயும், **கலையும்.**

இரலை என்னும் பெயர் : (4)

1. தலைநாட்பெயர், 2. ஊதுகொம்பு, 3. புல்வாய், 4. கலை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 இரலையென்ப
2 ஊதுங் கொம்பும் புல்வாய்க் கலையும். (263)

2165. ஞெள்ளல் என்னும் பெயர்

சோர்வு, மிகுதல், உடன்படல், பூசல்,
மேன்மையொடு, ஒலியும், தெருவும் **ஞெள்ளல்.**

ஞெள்ளல் என்னும் பெயர் : (7)

1. சோர்வு, 2. மிகுதல், 3. உடன்படல், 4. பூசல், 5. மேன்மை, 6. ஒலி, 7. தெரு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 உடன்படுதல், படுகர்
2:1-2 நாலினொ டொலியுந்

ஞெள்ளல் தெருவு மேன்மையு நிகழ்த்து
முள்ளுங் காலை விரைவு மாகும். (264)

2166. பல்லம் என்னும் பெயர்

கரடியின் பெயரும், கணக்கில் ஓர் குணிப்பும்,
பகழியின் பெயரும், பல்லம் என்று ஆகும்.

பல்லம் என்னும் பெயர் : (3)

1. கரடி, 2. கணக்கில் ஓர் குணிப்பு, 3. பகழி. (265)

2167. முருகு என்னும் பெயர்

விழவும், குமர வேளும், இளமையும்,
நறையும், நாற்றமும், அகிலும், எழுச்சியும்,
வெறியாட் டாளனும் முருகு என இசைப்பர்.

முருகு என்னும் பெயர்: (8)

1. விழவு, 2. குமரவேள், 3. இளமை, 4. நறை, 5. நாற்றம், 6. அகில், 7. எழுச்சி, 8. வெறியாட்டாளன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 இளைமையும்
2:3-4 கள்ளு மெழுச்சியும்
2:3 எகிலும்,
3:4 விளம்புவர். (266)

2168. ஏனை என்னும் பெயர்

ஏனையது ஒழிபும், இடைச்சொல்லும் ஆகும்.

ஏனை என்னும் பெயர் : (2)

1. ஒழிபு, 2. இடைச்சொல்,

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 ஏனை யொழிவும்
ஏனை மீன் விகற்பமு மொழிவு மாகும்—அச்சுப்பிரதி. (267)

2169. மானுதல் என்னும் பெயர்

மானுதல், ஒப்பும் மயக்கமும் ஆகும்.

மானுதல் என்னும் பெயர்: (2)

1. ஒப்பு, 2. மயக்கம். (268)

2170. கானல் என்னும் பெயர்

கானல், கதிரொளியும், கடற்சார்பில் மலைச்சார்பில்
தான்எழு நல்மரச் சோலையும் தழுவும்,

கானல் என்னும் பெயர்: (2)

1. கதிரொளி, 2. கடற்சார்பில்.
மலைச்சார்பில் தான்எழு நன்மரச் சோலை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 நன்மலர்ச் (269)

2171. படை என்னும் பெயர்

சயனம், பல்லணம், தானை, (உழு) நாஞ்சில்,
பயன் என்று உரைப்பர் **படை** என் கிளவி.

படை என்னும் பெயர்: (5)

1. சயனம், 2. பல்லணம், 3. தானை, 4. நாஞ்சில், 5. பயன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 பயனு முரைக்கும், 2:2 றுரைக்கும்.
2 படையென் கிளவிப் பெயர்ப்பால வாகும். (270)

2172. வயின் என்னும் பெயர்

வயிரே, இடம் மனை மூன்றும் **வயின்** ஆம்.

வயின் என்னும் பெயர்: (3)

1. வயிறு, 2. இடம், 3. மனை. (271)

2173. கூலம் என்னும் பெயர்

கூலப்பெயர் பல்பண்டமும், பல்பண்டத் தெருவும்,
(வார்) புனற் கரையும் வந்துழிக் கொள்லே.

கூலம் என்னும் பெயர் : (3)

1. பல்பண்டம், 2. பல்பண்டத்தெரு, 3. புனற்கரை.

பாடவேறுபாடு—விளக்கம்

கூலப் பெயர்பல் பண்டமுந் தெருவும்
கூலமங் காடியும் பலபண்டமுந் தெருவும்
கூலப்பெயர் பண்டமும் பல்பண்டத் தெருவும்—அச்சுப்பிரதி.

(272)

2174. மூலம் என்னும் பெயர்

மூலம் வேரும், முதலும், ஓர் நாளும்.

மூலம் என்னும் பெயர்: (3)

1. வேர், 2. முதல், 3. ஓர்நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

மூல நாளும், வேரு முதலும்
மூலமோர் நாளும் வேரு முதலும். (273)

2175. கழல் என்னும் பெயர்

காலின் அடியும், (கால்) தொடு தோலும்,
காலின் அணியும் **கழல்** எனப் படுமே,

கழல் என்னும் பெயர் : (3)

1. காலின் அடி, 2. தொடு தோல், 3. காலின் அணி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 காறொடு—அச்சுப்பிரதி. (274)

2176. வேலி என்னும் பெயர்

வேலி, மதிலும் காவலும் ஆகும்.

வேலி என்னும் பெயர் : (2)

1. மதில், 2. காவல். (275)

2177. அண்ணல் என்னும் பெயர்

அண்ணல், பெருமையும் தலைவனும் ஆகும்.

அண்ணல் என்னும் பெயர் : (2)

1. பெருமை, 2. தலைவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 அரசனு மாகும், தலைவனு மணுகலும்—**அச்சுப்பிரதி.**

(276)

2178. வியங்கோள் என்னும் பெயர்

எண்ணிக் கொளலும் ஏவலும் **வியங்கோள்.**

வியங்கோள் என்னும் பெயர் : (2)

1. எண்ணிக் கொளல், 2. ஏவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 எண்ணிற் கொளலும். (277)

2179. ஆசு என்னும் பெயர்

ஆசே சிறுமையும் குற்றமும் விரைவும்
பேசின் மெய்புகு கருவியும் பெறுமே.

ஆசு என்னும் பெயர் : (4)

1. சிறுமை, 2. குற்றம், 3. விரைவு, 4. மெய்புகு கருவி.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 பேசில் (278)

2180. காசு என்னும் பெயர்

காசு, மணியும் குற்றமும் காட்டும்.

காசு என்னும் பெயர் : (2)

1. மணி, 2. குற்றம்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 ஆகும். (279)

2181. குரை என்னும் பெயர்

குரையே ஒலியும் இடைச்சொலும் கூறும்.

குரை என்னும் பெயர்: (2)

1. ஒலி, 2. இடைச்சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 இடைச்சொல்லுங் கூறும், இடைச்சொல்லு மாகும்.

(280)

2182. அருணம் என்னும் பெயர்

அருணம், சிவப்பும் மானும் ஆகும்.

அருணம் என்னும் பெயர் : (2)

1. சிவப்பு, 2. மான்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 என்ப. (281)

2183. இரங்கல் என்னும் பெயர்

இரங்கல், அரவமும் அழுங்கலும் இசைக்கும்.

இரங்கல் என்னும் பெயர் : (2)

1. அரவம், 2. அழுங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-2 அழுங்க லரவமும். (282)

2184. வனம் என்னும் பெயர்

வனமே காடும் நீரும் ஆகும்.

வனம் என்னும் பெயர் : (2)

1. காடு, 2. நீர். (283)

2185. கனம் என்னும் பெயர்

கனமே செறிவும் மேகமும் ஆகும்.

கனம் என்னும் பெயர் : (2)

1. செறிவு, 2. மேகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

கனமே வட்டியுந் திரட்சியு மேகமும்
கனமே செறிவும் மேகமும் பொன்னும். (284)

2186. பனி என்னும் பெயர்

அச்சமும் துன்பமும் நடுக்கமும் துகினமும்
பற்றிய சீதமும் பனிஎனப் படுமே.

பனி என்னும் பெயர் : (5)

1. அச்சம், 2. துன்பம், 3. நடுக்கம், 4. துகினம், 5. சீதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 அச்சமுந் துன்பமு நடுக்கமு மன்றியும்
அச்சமு நடுக்கமுந் துன்பமு மன்றிப். (285)

2187. ஊறு என்னும் பெயர்

ஊறே இடையூறும் உற்றறி புலனும்.

ஊறு என்னும் பெயர் : (2)

1. இடையூறு, 2. உற்றறிபுலன்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 ஊறும் ஆகும், முற்றிடு கொலையும்—அச்சுப்பிரதி.
(286)

2188. நூறு என்னும் பெயர்

நூறே பொடியும் நூறும் ஆகும்.

நூறு என்னும் பெயர் : (2)

1. பொடி, 2. நூறு.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (287)

2189. ஏணி என்னும் பெயர்

ஏணி உலகும் எல்லையும் ஆகும்.

ஏணி என்னும் பெயர் : (2)

1. உலகு, 2. எல்லை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 உலகமும். (288)

2190. சேண் என்னும் பெயர்

சேணே உயர்வும் நீளமும் ஆகும்.

சேண் என்னும் பெயர் : (2)

1. உயர்வு, 2. நீளம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 உயரமும், உலகும், 4 செப்பும். (289)

2191. ஆலுதல் என்னும் பெயர்

ஆலுதல் ஆடலும் ஒலியும் ஆகும்.

ஆலுதல் என்னும் பெயர்: (2)

1. ஆடல், 2. ஒலி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 ஒளிர்தலு மொளியும். (290)

2192. நூல் என்னும் பெயர்

நூலே எண்ணும் பனுவலும் ஆகும்.

நூல் என்னும் பெயர்: (2)

1. எண், 2. பனுவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 எண்ணலும் 4 நுவலும்
எண்ணும் பனுவலு நூலு மாகும். (291)

2193. ஆர்தல் என்னும் பெயர்

ஆர்தல் நிறைதலும் உண்டலும் ஆகும்.

ஆர்தல் என்னும் பெயர்: (2)

1. நிறைதல், 2. உண்டல். (292)

2194. கூளி என்னும் பெயர்

நட்பு, தொகுதி, பேய் என மூன்றும்
வைத்தனர் **கூளி** ஆக வகுத்தே.

கூளி என்னும் பெயர் : (3)

1. நட்பு, 2. தொகுதி, 3. பேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 பேயிம் மூன்றும்
2-3 யாகவும். (293)

2195. நேர்தல் என்னும் பெயர்

நேர்தல், எதிர்தலும் ஒத்தலும் ஆகும்.

நேர்தல் என்னும் பெயர் : (2)

1. எதிர்தல், 2. ஒத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (294)

2196. வசி என்னும் பெயர்

வசியே திரட்சியும், வருட்டலும், கூர்மையும்.

வசி என்னும் பெயர் : (3)

1. திரட்சி, 2. வருட்டல், 3. கூர்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 திரட்சியும், வசியமும், 3 வருடலும்.
'வசியே கூர்மையும் வருட்டலுந் திரட்சியும்' என்றும் பாடம்.
வசியே வசியமும் வாளுங் கூர்மையும்—அச்சுப்பிரதி. (295)

2197. அசைதல் என்னும் பெயர்

அசைதல் நோதலும் தங்கலும் உரித்தே.

அசைதல் என்னும் பெயர் : (2)

1. நோதல், 2. தங்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. நேர்தலும், எய்தலும், ஆடலும்—அச்சுப்பிரதி.
4 ஆகும். (296)

2198. கவனம் என்னும் பெயர்

கவனம் கலக்கமும் காடும் ஆகும்.

கவனம் என்னும் பெயர் : (2)

1. கலக்கம், 2. காடு.

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 கடுப்புங் காடும்—அச்சுப்பிரதி. (297)

2199. நூழில் என்னும் பெயர்

குவவிப் படர்வதுஓர் கொடிப்புல்லும் **நூழில்;**
உவமையொடு அடுத்தன குவிதற்கு முரித்தே.

நூழில் என்னும் பெயர் : (2)

1. குவவிப் படர்வதோர் கொடிப்புல்,
2. உவமையொடு அடுத்தன குவிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

'குவவிப் படசோர் கொடிப்புல்லு நூழில்'—அச்சுப்பிரதி.

(298)

2200. நியமம் என்னும் பெயர்

நியமம் அங்காடியும் தெருவும் நியதியும்.

நியமம் என்னும் பெயர் : (3)

1. அங்காடி, 2. தெரு, 3. நியதி. (299)

2201. தளிமம் என்னும் பெயர்

தளிமம் அழகொடு மெத்தையும் ஆகும்.

தளிமம் என்னும் பெயர் : (2)

1. அழகு, 2. மெத்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

4 சாற்றும். (300)

2202. நவிரம் என்னும் பெயர்

மலையும் உச்சியும் மருதயாழ்த் திறனும்,
நவிரம் எனும்பெயர் நடைபெற்று இயலும்.

நவிரம் என்னும் பெயர் : (3)

1. மலை, 2. உச்சி, 3. மருதயாழ்த் திறன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 மலையினு முச்சி
2:1-2 நவிர மென்று. (301)

2203. குலம் என்னும் பெயர்

குலமே இல்லமும் குடிமையும் கூட்டமும் ஆகும்.

குலம் என்னும் பெயர் : (3)

1. இல்லம், 2. குடிமை, 3. கூட்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 குடியும். (302)

2204. வலம் என்னும் பெயர்

வலமே வென்றியும், வலமும், மிசையிடனும்.

வலம் என்னும் பெயர் : (3)

1. வென்றி, 2. வலம், 3. மிசையிடன்.

பாடவேறுபாடு—விளக்கம்

வலனே வென்றியு வலனுமிசை யிடனும்.

2 வெற்றியும், 4 மேலிடமும். (303)

2205. அமறல் என்னும் பெயர்

அமறல், மிகுதியும் பொலிவும் ஆகும்.

அமறல் என்னும் பெயர் : (2)

1. மிகுதி, 2. பொலிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 அமர்தல். (304)

2206. மறலி என்னும் பெயர்

மறலி, கூற்றும் மயக்கமும் ஆகும்.

மறலி என்னும் பெயர் : (2)

1. கூற்று, 2. மயக்கம், (305)

2207. நளி என்னும் பெயர்

நளியே செறிவும், சீதமும், பெருமையும்.

நளி என்னும் பெயர் : (3)

1. செறிவு, 2. சீதம், 3. பெருமை. (306)

2208. வளம் என்னும் பெயர்

வளமே பண்டமும் வளப்பாடும் ஆகும்.

வளமே என்னும் பெயர் : (2)

1. பண்டம், 2. வளப்பாடு.

பாடவேறுபாடு—விளக்கம்

பண்டமும் வளப்பாடும் வளமெனப் படுமே. (307)

2209. அண்டர் என்னும் பெயர்

அண்டர் தேவரும் ஆயரும் ஆகும்.

அண்டர் என்னும் பெயர் : (2)

1. தேவர், 2. ஆயர். (308)

2210. மூரல் என்னும் பெயர்

மூரல், நகை, எயிறு, சோறும் ஆகும்.

மூரல் என்னும் பெயர் : (3)

1. நகை, 2. எயிறு, 3. சோறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 மூர லெயிறுநகை
மூரல் நகையே சோறு மாகும். (309)

2211. பாலை என்னும் பெயர்

நீர் இன்றி வேனில் தெறுநிலனும், அந்நிலப்
பாடலும், பாடற்சுவையும் பாலை;
அதாஅன்று,
பொருள்வயிற் பிரிதலும், புணர்ந்துஉடன் போதலும்,
அதுபிரிவு உணர்த்தலும் பாலை ஆகும்.

பாலை என்னும் பெயர்: (6)

1. நீர் இன்றி வேனில் தெறு நிலன், 2. பாலைநிலப் பாடல்,
3. பாலைநிலப் பாடற்சுவை, 4. பொருள்வயிற் பிரிதல்,
5. புணர்ந்து உடன்போதல், 6. பிரிவு உணர்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3. தெறு நிலமும்.

5 அதுபிரி வுரைத்தலும் பாலைய தாகும். (310)

2212. குறிஞ்சி என்னும் பெயர்

மலைச்சார்பு நிலனும், செம்மலர் முள்ளியும்,
குறிஞ்சி; அந்நிலப் பாடலும் பெறுமே.

குறிஞ்சி என்னும் பெயர் : (3)

1. மலைச்சார்பு நிலன், 2. செம்மலர் முள்ளி,
3. குறிஞ்சி நிலப்பாடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 மலைச்சார் நிலனும்.
2:4 குறிஞ்சி
2 குறிஞ்சி நிலப் பாடலுங் குறிஞ்சியென்றாகும் — அச்சுப்பிரதி.
(311)

2213. மருதம் என்னும் பெயர்

பழன நிலனும், அந்நிலப் பாடலும்,
மருதம் என்னும் பெயரின் வழங்கும்.

மருதம் என்னும் பெயர்: (2)

1. பழன நிலன், 2. மருத நிலப் பாடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 நிலமும்.
2:3 பெயரென. (312)

2214. படிவம் என்னும் பெயர்

படிவம் விரதமும் வடிவும் ஆகும்.

படிவம் என்னும் பெயர்: (2)

1. விரதம், 2. வடிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

1. படிவமே. (313)

2215. வடிவு என்னும் பெயர்

வடிவே மேனியும், உருவும், மெய்யொடு,
நிறமும் பேசின் நிகழ்பெயர் ஆகும்.

வடிவு என்னும் பெயர் : (4)

1. மேனி, 2. உரு, 3. மெய், 4. நிறம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 மேனி யுருவம்
1 வடிவே மேனியு முருவு மல்குலும்
வடிவ மேனியழகு மெய்யொடு
2:3-4 நிகழ்த்தப் படுமே. (314)

2216. சூடிகை என்னும் பெயர்

சூடிகை, சுட்டியும் மயிர்முடியும் ஆகும்.

சூடிகை என்னும் பெயர் : (2)

1. சுட்டி, 2. மயிர்முடி.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 சூடிகை சுட்டி. (315)

2217. மனவு என்னும் பெயர்

மனவே அக்கும், மணியும், ஆடையும்.

மனவு என்னும் பெயர் : (3)

1. அக்கு, 2. மணி, 3. ஆடை.

பாடவேறுபாடு—விளக்கம்

மனமே யக்கு மாடையு மணியும்.
இதன்பின்,
மாதிரந் திசையு மலையும் யானையும்
என ஒரு நூற்பா ஒருசில பிரதிகளில் காணப்படுகிறது. (316)

2218. முனை என்னும் பெயர்

முனையே இறைமையும் பகையும் ஆகும்.

முனை என்னும் பெயர் : (2)

1. இறைமை, 2. பகை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 இறையும், துனியும். (317)

2219. கணம் என்னும் பெயர்

கணமே வட்டமும் திரட்சியும் ஆகும்.

கணம் என்னும் பெயர் : (2)

1. வட்டம், 2. திரட்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவை புணரி (2221) என்பதன் பின்னர் வைத்தும் சில பிரதிகள் அமைந்துள. 'கணம்' என்னும் பெயர் பற்றிய நூற்பா (2219) இதற்குப் பதிலாகச் சில பிரதிகளில் காணப்படுகிறது. (318)

2220. ஏவல் என்னும் பெயர்

ஏவல், வியங்கோளும் ஆணையும் ஆகும்,

ஏவல் என்னும் பெயர் : (2)

1. வியங்கோள், 2. ஆணை. (319)

2221. புணரி என்னும் பெயர்

புணரி கடலும், கடற்கரையும், திரையும்.

புணரி என்னும் பெயர் ; (3)

1. கடல், 2. கடற்கரை, 3. திரை.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 கடலுங் கரையுந் திரையும்.
புணரி கடலுங் கடற்கரையுந் தியாகமும்.

3-4 திரையு மாகும். (320)

2222. வரி என்னும் பெயர்

வரியே பாடலும், எழுதலும், வடிவும்.

வரி என்னும் பெயர் : (3)

1. பாடல், 2. எழுதல், 3. வடிவு.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 எழுதல் வடிவும், மெழுத்தும் வண்டும்—அச்சுப்பிரதி. (321)

2223. அருகல் என்னும் பெயர்

அருகல் சுருங்கலும் சார்தலும் சொல்லும்.

அருகல் என்னும் பெயர்: (2)

1. சுருங்கல், 2. சார்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. அருகலே, 3. சாதலும், காதலும்—அச்சுப்பிரதி.
3-4 சார்தலு மாகும். (322)

2224. கரில் என்னும் பெயர்

கரிலே கொடுமையும், கரித்தலும், காழ்த்தலும்.

கரில் என்னும் பெயர் : (3)

1. கொடுமை, 2. கரித்தல், 3. காழ்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கூர்தலு மாகும்.
2-4 கூர்மையுங் குற்றமுங் கார்ப்பும்
கரிலே கடுமையுங் கூர்மையுங் காட்டும். (323)

2225. பரவை என்னும் பெயர்

பரவை கடலும் பரப்பும் ஆகும்.

பரவை என்னும் பெயர் : (2)

1. கடல், 2. பரப்பு. (324)

2226. தாவரம் என்னும் பெயர்

மரமும், மலையும் போல நிற்பன
தருபெயர் தானே **தாவரம்** ஆகும்.

தாவரம் என்னும் பெயர் : (1)

1. மரமும் மலையும் போல நிற்பன.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தாபரம் என்னும் பெயர்.
3-4 தாபர மாகும். (325)

2227. சங்கமம் என்னும் பெயர்

ஊர்வன, பறப்பன, நடப்பன **சங்கமம்.**

சங்கமம் என்னும் பெயர்: [3]

1. ஊர்வன, 2. பறப்பன, 3. நடப்பன.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (326)

2228. பலி என்னும் பெயர்

பலியே ஐயமும் சோறும் ஆகும்.

பலி என்னும் பெயர்: (2)

1. ஐயம், 2. சோறு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 அய்யமும், 4. பகரும். (327)

2229. அலரி என்னும் பெயர்

அலரி, பூமலரும் அருக்கனும் ஆகும்.

அலரி என்னும் பெயர்: (2)

1. பூமலர், 2. அருக்கன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 அலரிபூ மரனும்,
2 பூவும், மலரும். (328)

2230. நெய்தல் என்னும் பெயர்

நெய்தல் சாபறையும் கடற்சார் நிலனும்.

நெய்தல் என்னும் பெயர்: (2)

1. சாபறை, 2. கடற்சார் நிலன்;

பாடவேறுபாடு—விளக்கம்

2 சாப்பறையும், ஆம்பலும். (329)

2231. சித்திரம் என்னும் பெயர்

மெய்யே போலப் பொய்யவை புணர்த்தலும்,
செய்கோல் வடிவும், அழகும் **சித்திரம்.**

சித்திரம் என்னும் பெயர்: (3)

1. மெய்யே போலப் பொய்யைப் புணர்த்தல்,
2. செய்கோல் வடிவு, 3. அழகு.

பாடவேறுபாடு—விளக்கம்

2. பொய்யை, 4. யுணர்த்தலும், யுரைத்தலும்.
2:1-2 செய்கோல் வடிவும். (330)

2232. மெய் என்னும் பெயர்

மெய்யே உடம்பும் சொற்பொருளும், மெய்யெழுத்தும்.

மெய் என்னும் பெயர் : (3)

1. உடம்பு, 2. சொற்பொருள், 3. மெய்யெழுத்து.

பாடவேறுபாடு—விளக்கம்

3 மெய்ப்பொருளும், உண்மையும். (331)

2233. மண் என்னும் பெயர்

மன்னலும், இடைச்சொலும் இறையும் **மன்னே.**

மண் என்னும் பெயர் : (3)

1. மன்னல், 2. இடைச்சொல், 3. இறை.

பாடவேறுபாடு—விளக்கம்

2. இடைச்சொல்லும், 3. குறையும். (332)

2234. தன்மை என்னும் பெயர்

தன்மை, இயல்பும், தன்மையிடப் பொருளும்.

தன்மை என்னும் பெயர்: (2)

1. இயல்பு, 2. தன்மையிடப் பொருள்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 தன்மையிடைச் சொல்லும், தன்மையிடச் சொலும். (333)

2235. இறுத்தல் என்னும் பெயர்

இறுத்தல், தங்கலும் சொல்லலும் இசைக்கும்.

இறுத்தல் என்னும் பெயர் : (2)

1. தங்கல், 2. சொல்லல்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 ஆகும். (334)

2236. செயிர் என்னும் பெயர்

செயிரே குற்றமும் சினவலும் ஆகும்.

செயிர் என்னும் பெயர் : (2)

1. குற்றம், 2. சினவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 சினவலுஞ் சிவணும். (335)

2237. விதி என்னும் பெயர்

இயல்பும், செயலும் **விதி**என்று ஆகும்.

விதி என்னும் பெயர் : (2)

1. இயல்பு, 2. செயல். (336)

2238. இயல் என்னும் பெயர்

இயலே சாயலும் நடையும் ஆகும்.

இயல் என்னும் பெயர் : (2)

1. சாயல், 2. நடை.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 சாயல் நடையென் றாகும்.
3-4 நடையு மென்பர். (337)

2239. கரைதல் என்னும் பெயர்

கரைதல் மொழிதலும் கூவுதலும் ஆகும்.

கரைதல் என்னும் பெயர்: (2)

1. மொழிதல், 2. கூவுதல்.

பாடவேறுபாடு-விளக்கம்

2. மொழிதல். (338)

2240. குரல் என்னும் பெயர்

குரலே கதிரும், யாழில் ஓர் நரம்பும்.

குரல் என்னும் பெயர்: (2)

1. கதிர், 2. யாழில் ஓர் நரம்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 குரலே பயிர்க்கதிரும்—அச்சுப்பிரதி.
3 யாழினோர். (339)

2241. அரணம் என்னும் பெயர்

அரணம் மதிலும் கவசமும் ஆகும்.

அரணம் என்னும் பெயர்: (2)

1. மதில், 2. கவசம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 காவலும் ஆகும், கவசமுங் காவலும். **(340)**

2242. மாடு என்னும் பெயர்

மணியும், பொன்னும், நிரையும், பக்கமும்,
தனமும் **மாடு**என் பெயரின் சாரும்.

மாடு என்னும் பெயர்: (5)

1. மணி, 2. பொன், 3. நிரை, 4. பக்கம், 5. தனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 செல்வமு நிறையும்—அச்சுப்பிரதி.
1:3 முன்னிரையும்

2 தனமு மாடென் றுரைக்கத் தகுமே—அச்சுப்பிரதி.
தனமும் வனப்பு மாடென் கிளவி
தனமு மாடெனப் பெயர்சா ரும்மே. **(341)**

2243. கணை என்னும் பெயர்

கணையே திரட்சியும் பகழியும் ஆகும்.

கணை என்னும் பெயர்: (2)

1. திரட்சி, 2. பகழி. **(342)**

2244. எற்றெனல் என்னும் பெயர்

எற்றெனல், எறியெனல் என்னலும் ஆகும்.

எற்றெனல் என்னும் பெயர்: (1)

1. எறியெனல். **(343)**

2245. கற்பம் என்னும் பெயர்

கற்பம் அமருலகும் கமலத்தோன் ஆயுளும்.

கற்பம் என்னும் பெயர்: (2)

1. அமருலகு, 2. கமலத்தோன் ஆயுள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 கற்ப மூழியுங். (344)

2246. சிக்கம் என்னும் பெயர்

உச்சியும், மயிர்வார் சீப்பும், உறியும்,
சிக்கம் என்னும் பெயரொடு சிவணும்.

சிக்கம் என்னும் பெயர்: (3)

1. உச்சி, 2. மயிர்வார் சீப்பு, 3. உறி.

பாடவேறுபாடு—விளக்கம்

உச்சி மயிர்வார் சீப்புமுறி சிக்கம்
உறியும் மயிர்வார் சீப்பும் சிக்கம்
சிக்கம் மயிர்வார் சீப்பு முறியும். (345)

2247. காரி என்னும் பெயர்

காரி வடுகனும், சாத்தனும், சனியும்,
ஊர்ப்புள்ளும், கடுவும், வள்ளலும் ஆகும்.

காரி என்னும் பெயர்: (6)

1. வடுகன், 2. சாத்தன், 3. சனி, 4. ஊர்ப்புள்,
5. கடு, 6. வள்ளல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 சனியுஞ் சாத்தனும்.
2:1 ஓர் புள்ளும்.

ஆல நஞ்சே சனிக்கோன் மாசாத்தன்
காரிரு ணிறத்தன காரி யெனப்படும்.
ஆலநஞ் சேசனிக் கோண்மா சாத்தனார்
இருணிறத் தனவுங் காரியெனப் படுமே. (346)

2248. நீலம் என்னும் பெயர்

நீல மணியும், (நீரில்எழு) நெய்தலும்,
நீலநிறத் தனவும் நீலம் எனப் படுமே.

நீலம் என்னும் பெயர் : (3)

1. நீலமணி, 2. நெய்தல், 3. நீலநிறத்தன.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 நீல மென்ப. (347)

2249. வெள்ளை என்னும் பெயர்

வெள்ளாடு, வெண்பா, வெள்ளை நிறத்தன,
வெள்ளை என்னும் பெயரொடு விரியும்.

வெள்ளை என்னும் பெயர் : (3)

1. வெள்ளாடு, 2. வெண்பா, 3. வெள்ளை நிறத்தன.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 பெயரின், 4. விளங்கும். (348)

2250. வாரம் என்னும் பெயர்

வாரக் கிளவி, ஏழ் கிழமையும், மலைச்சார்பும்,
ஈரமும், அன்பும், பகுதியும் இசைக்கும்.

வாரம் என்னும் பெயர்: (5)

1. ஏழ்கிழமை, 2. மலைச்சார்பு, 3. ஈரம், 4. அன்பு, 5. பகுதி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 மலைச்சார்வும்

2:2 வனப்பும்.

வாரம் என்பதன் பின் பூதரம், அமலம் என்பவை பற்றிய நூற்பாக்கள் ஒருசில பிரதிகளில் உள.

பூதரம் மலையொடு புவனியும் புகலும்.
அமலம் நளினமும் அழுக்கின்மை யாகும். (349)

2251. ஆய்தல் என்னும் பெயர்

ஆய்தல் நுணுக்கமும் தெரிதலும் ஆகும்.

ஆய்தல் என்னும் பெயர் : (2)

1. நுணுக்கம், 2. தெரிதல். (350)

2252. உழை என்னும் பெயர்

உழையே மானும், யாழில் ஓர் நரம்பும்,
அருகிட னதுவும் அறைதற்கு உரித்தே.

உழை என்னும் பெயர் : (3)

1. மான், 2. யாழில் ஓர் நரம்பு, 3. அருகிடன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 யாழினோர்
2:1-2 அருகி யிடனும், அருகினதுவும். (351)

2253. வழி என்னும் பெயர்

வழியே இடனொடு பின்னும் வரையார்.

வழி என்னும் பெயர்: (2)

1. இடன், 2. பின். (352)

2254. கைக்கிளை என்னும் பெயர்

ஒருதலைக் காமமும், யாழில் ஓர் நரம்பும்,
தெரியின் **கைக்கிளை** எனும்பெயர் சிவணும்.

கைக்கிளை என்னும் பெயர்: (2)

1. ஒருதலைக்காமம், 2. யாழில் ஓர் நரம்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 எனப்பெயர் (353)

2255. வையம் என்னும் பெயர்

சிவிகையும், மானேறும், சகடமும், தேரும்,
அவனியும் **வையம்** எனப்பெயர் ஆகும்.

வையம் என்னும் பெயர்: (5)

1. சிவிகை, 2. மானேறு, 3. சகடம், 4. தேர்,
5. அவனி.

பாடவேறுபாடு—விளக்கம்

2:4 சாரும்
சிவிகையும் ஆனேறும் என்றும் பிரிப்பர். (354)

2256. ஆற்றல் என்னும் பெயர்

வலியும், செயலும், வல்லா ராதலும்,
ஆள்வினையும் உரைக்கும் **ஆற்றல்** கிளவி.

ஆற்றல் என்னும் பெயர் : (4)

1. வலி, 2. செயல், 3. வல்லாராதல், 4. ஆள்வினை

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 வல்லா ராகலும், வல்லா ராற்றலும். (355)

2257. அடுதல் என்னும் பெயர்

அடுதல், மிறைசெயலும் கோறலும் ஆகும்.

அடுதல் என்னும் பெயர் (2)

1, மிறை செய்தல், 2. கோறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 மிசை செயலும், சமைத்தலும்—அச்சுப்பிரதி, (356)

2258. விளரி என்னும் பெயர்

யாழ்க்கண்ணது ஓர் நரம்பும், திறனில் யாழும்,
வேட்கை மிகுதியும், இளமையும் **விளரி**.

விளரி என்னும் பெயர்: (4)

1. யாழ்க்கண்ணது ஓர் நரம்பு, 2. திறனில் யாழ், 3. வேட்கை மிகுதி, 4. இளமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 யாழினோர் நரம்பும். (357)

2259. விளக்கு என்னும் பெயர்

விளக்கே ஒளியும், விளக்கு நிலையும்.

விளக்கு என்னும் பெயர்: [2]

1. ஒளி, 2. விளக்குநிலை. (358)

2260. எஃகு என்னும் பெயர்

எ:.கே வேலொடு கூர்மையும் இசைக்கும்.

எ:.கு என்னும் பெயர்: (2)

1. வேல், 2. கூர்மை. (359)

2261. வில் என்னும் பெயர்

வில்லே ஒளியும் வில்லுடைப் படையும்.

வில் என்னும் பெயர் : (2)

1. ஒளி, 2. வில்லுடைப்படை.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 விற்படையு மாகும்,
விற்படையு மூலமும்—அச்சுப்பிரதி. (360)

2262. எல் என்னும் பெயர்

எல்லே ஒளியும் இரவிற் பொழுதும்.

எல் என்னும் பெயர்: (2)

1. ஒளி, 2. இரவிற்பொழுது.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 இரவியிராப் பொழுதும், யிரவியும் பொழுதும்—அச்சுப் பிரதி. (361)

2263. வாள் என்னும் பெயர்

வாளே, ஒளியும் வாளுடைப் படையும்.

வாள் என்னும் பெயர் : (2)

1. ஒளி, 2. வாளுடைப்படை.

பாடவேறுபாடு—விளக்கம்

வாள் ஒளியும் வாட்படையும் ஆகும். (362)

2264. வாய் என்னும் பெயர்

வாயே மெய்ம்மையும் இடனும் வரையார்.

வாய் என்னும் பெயர் : (2)

1. மெய்ம்மை, 2. இடன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 மெய்ம்மை
வாயே யிடனு மெய்யும் வாக்கும்—அச்சுப்பிரதி. (363)

2265. அங்கதம் என்னும் பெயர்

அங்கதம், தோளணி, அரவும் ஆகும்.

அங்கதம் என்னும் பெயர்: (2)

1. தோளணி, 2. அரவு.

பாடவேறுபாடு—விளக்கம்

அங்கதந் தோளணி யரவு மழகுங்
கொடியு மதனொடு கூறப் படுமே—என்று ஒரு பிரதியில் பாடம். (364)

2266. அரி என்னும் பெயர்

கண்வரி, கடல், பொன், கிண்கிணிப் பெய்பரல்,
(நல்) நிறம், குதிரை, தவளை, குரங்கு,

பகை, வாள், சயனம், வலி, வண்டு, அம்பு,
புகைஎனப் பதினைந்தும் அரி எனப் புகல்வர்.
5 சிங்கம், திருமால், திகிரி, இரவி,
இந்திரன், காற்றே, யமனே. அங்கிஎன்று
அங்கண் வடமொழிச் சிதைவின் அரி ஆகும்.

அரி என்னும் பெயர் : (15)

1. கண்வாரி, 2. கடல், 3. பொன், 4. கிண்கிணிப் பெய்பரல், 5. நிறம், 6. குதிரை, 7. தவளை, 8. குரங்கு, 9. பகை, 10. வாள், 11. சயனம், 12. வலி, 13. வண்டு, 14. அம்பு, 15. புகை.

வடமொழிச் சிதைவின் அரி : (8)

1. சிங்கம், 2. திருமால், 3. திகிரி, 4. இரவி, 5. இந்திரன், 6. காற்று, 7. யமன், 8. அங்கி.

பாடவேறுபாடு—விளக்கம்

5ஆம் அடியாக, 'அதாஅன்று' என்னும் தனிச் சொல் சில பிரதிகளில் காணப்படுகிறது.

6:3-4 யிரமனங் கியென

8-9 பகரி லரிசி நெற்கதிர் பன்றி
கிளியே பாம்பொடு பச்சையு மரியே

என மேலும் இரண்டடி சில பிரதிகளில் மிகையாக உள்ளன. (365)

2267. நாண் என்னும் பெயர்

மாதர் மங்கல அணியும், மானமும்,
பாசமும், நாண் என்னும் சொல்லின் பயிலும்.

நாண் என்னும் பெயர் : (3)

1. மாதர் மங்கல அணி, 2. மானம், 3. பாசம். (366)

2268. மகரம் என்னும் பெயர்

மகரம் மீனேறும் காதணியும் ஆகும்.

மகரம் என்னும் பெயர் : (2)

1. மீனேறு, 2. காதணி.

பாடவேறுபாடு—விளக்கம்

3. காதலும், தாதும், 4. வரையார். (367)

2269. வாழி என்னும் பெயர்

வாழி, இடைச்சொல்லும், வாழ்க எனும் சொல்லும்.

வாழி என்னும் பெயர் : (2)

1. இடைச் சொல், 2. வாழ்க.

பாடவேறுபாடு—விளக்கம்

2 இடைச் சொலும், 4. சொலும். (368)

2270. வெறுக்கை என்னும் பெயர்

வெறுக்கை செல்வமும் விழுப்பொருளும் ஆகும்.

வெறுக்கை என்னும் பெயர் : (2)

1. செல்வம், 2. விழுப்பொருள். (369)

2271. நகை என்னும் பெயர்

மகிழ்ச்சியின் விளையாட்டின் வரும்நகை தானே,
இகழ்ச்சி யிடத்தும் எய்துதற்கு உரித்தே.

நகை என்னும் பெயர் : (3)

1. மகிழ்ச்சியின் வரும், 2. விளையாட்டின் வரும்,
3. இகழ்ச்சியிடத்தும் எய்தும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 மகிழ்ச்சியில் விளையாட்டில்
2:3-4 எய்துங் கிளவி. (370)

2272. இடி என்னும் பெயர்

தகரமும், சுண் ணமும், தருப்பணப் பிண்டியும்
இனையவை இடி எனும் பெயரின் இசைக்கும்.

இடி என்னும் பெயர் : (3)

1. தகரம், 2. சுண்ணம், 3. தருப்பணப் பிண்டி.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-4 இடியென விசைத்தல் வேண்டும். (371)

2273. தொய்யில் என்னும் பெயர்

உழவு நீரில் எழுவதுஓர் புதலும்,
குழைவும், மகிழ்ச்சியும், அழகும் என்றுஇவை
துயரும் கூறும் தொய்யில் கிளவி.

தொய்யில் என்னும் பெயர்: (5)

1. உழவுநீரில் எழுவது ஓர் புதல், 2. குழைவு,
3. மகிழ்ச்சி, 4. அழகு, 5. துயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 உழவு நிலத்தில்
2:2-4 நெகிழ்ச்சியு மழகு மிவையொடு
மகிட்சியு மழகுமென வைந்துந்
3. துயரு முலைமேற் றொய்யிலுந் தொய்யில். (372)

2274. அராகம் என்னும் பெயர்

கீதமும், நிறமும், செந்நிறக் கெழுவும்,
ஆசையும், முடுகியலும் அராகம் எனப்படும்.

அராகம் என்னும் பெயர்: (5)

1. கீதம், 2. நிறம், 3. செந்நிறக் கெழு, 4. ஆசை,
5. முடுகியல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 அராக மாகும், அராகமென வறைவர். (373)

2275. நாகு என்னும் பெயர்

ஆவும் எருமையும் மரையும் அல்லன
ஈனா இளமையும் கெழுமையும், இளமரமும்,

நீர்வாழ் சாதியுள் நந்தும் என்றுஇவை
நாகு எனும் பெயரின் நடைபெற்று இயலும்.

நாகு என்னும் பெயர் : (4)

1. ஆ எருமை மரை அல்லனவற்றின் இளமை,
2. கெழுமை, 3. இளமரம், 4. நந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 செழுமையும், கொழுமையும்.
கோடு மெருமையு மரையு நத்தும்
மீன்பெணு மிளமையுங் கெழுமையு மிளமரமும்
நாகெனும் பெயரின் நடைபெற் றியலும்—அச்சுப்பிரதி.
(374)

2276. கூழ் என்னும் பெயர்

பல்வகை உணவும், பயிரும், பொன்னும்,
கொள்ப மாதோ கூழ்என் கிளவி.

கூழ் என்னும் பெயர் : (3)

1. பல்வகை உணவு, 2. பயிர், 3. பொன். (375)

2277. மலர்தல் என்னும் பெயர்

மலர்தல், தோன்றலும் எதிர்தலும் ஆகும்.

மலர்தல் என்னும் பெயர் : (2)

1. தோன்றல், 2. எதிர்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 மலர்த்தலு மாகும், மெதிர்தலும் விரிதலும். (376)

2278. இதை என்னும் பெயர்

இதையே மரக்கலப் பாய், புதுப் புனமே.

இதை என்னும் பெயர் : (2)

1. மரக்கலப்பாய், 2. புதுப்புனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 பாயும் புதுப்புனமும். (377)

2279. கிழி என்னும் பெயர்

எழுது படமும், (இரு) நிதிப் பொதியும்,
கிழிபடு துகிலும், கிழிஎனற்கு உரிய.

கிழி என்னும் பெயர்: (3)

1. எழுதுபடம், 2. நிதிப்பொதி, 3. கிழிபடுதுகில்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 கிழியென் றாகும். (378)

2280. ஊக்கம் என்னும் பெயர்

வண்மையும், முயற்சியும் மனத்தின் மிகுதியும்
உண்மையும் உரைக்கும் ஊக்கக் கிளவி.

ஊக்கம் என்னும் பெயர் : (4)

1. வண்மை, 2. முயற்சி, 3. மனத்தின் மிகுதி,
4. உண்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 மனத்து மிகுதியும்
2:1 ஆண்மையும். (379)

2281. நேர் என்னும் பெயர்

உடன்படல், கொடை, ஒத்தல், மாறாதல், நுட்பம்,
சமன், பாதி, மிகுதி, தலைப்பாடு, தனிமைஎன
நிகழ்ந்த பத்தும் நேர்என் கிளவி.

நேர் என்னும் பெயர் ; (10)

1. உடன்படல், 2. கொடை, 3. ஒத்தல், 4. மாறாதல்,
5. நுட்பம், 6. சமன், 7. பாதி, 8. மிகுதி,
9. தலைப்பாடு, 10. தனிமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 உடன்பட லுவமை யொத்த னுட்பம்
2:1-2 நிகழ்ந்த வீரைந்தும், நிகழ்ந்த வொன் பானும். (380)

2282. கடி என்னும் பெயர்

கடிஎன் கிளவி வரைவே, கூர்மை,
காப்பே, புதுமை, விரைவே, விளக்கம்,
மிகுதி, சிறப்பே, அச்சம், முன்றேற்று,
ஆயி ரைந்தொடு, ஐயமும், கரிப்பும்,
மெய்ப்படத் தோன்றும் அப்பொருட்டு ஆகும்.
வாசகம், பேயும், மணம்புணர்வும் என்றுஇவை
காசுஇன்று உரைக்கும் கடி என் கிளவி.

கூடி என்னும் பெயர் : (15)

1. வரைவு, 2. கூர்மை, 3. காப்பு, 4. புதுமை,
5. விரைவு, 6. விளக்கம், 7. மிகுதி, 8. சிறப்பு.
9. அச்சம், 10. முன்னேற்று, 11. ஐயம்,
12. கரிப்பு, 13. வாசம், 14. பேய், 15. மணம்புணர்வு

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 காப்பொடு, 3. விரையே
3:3-4 அச்சங் கடிதல், அச்ச முன்னர், அச்சமு முன்னென், அச்சமுமன்றி

4 ஆயீ ரைந்து மையமுங் கரிப்பும்
3 மிகுதி சிறப்பே அச்சமு மன்றி
மெய்ப்படத் தோன்றும் பொருட்டு மாகும்.
ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே
வாசமும் பேயும் மணம்புணர்வு மாகும்.

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே.
வரைவே மிகுதி புதுமை தோற்றம்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே
ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே—அச்சுப்பிரதி. (381)

2283. வாகை என்னும் பெயர்

ஆள்வினை முதலாம் செய்கையும் நலனும்.
கைவலம் முதலாம் கல்வியும் ஆண்மையும்,

சால்பு முதலாம் பண்பும் ஈகையும்,
ஒழுக்கம் முதலாம் தவமும் அறத்துறையும்
ஒருவரின் ஒருவர் வென்றி மிகுதி
பெறுவன எல்லாம் **வாகை** என்ப.

வாகை என்னும் பெயர்:

ஒருவரின் ஒருவர் வென்றி மிகுதி பெறுவன.

பாடவேறுபாடு—விளக்கம்

1. ஆள்வினை முதலாம் செய்கையு நலனும்
ஊக்க முதலாம் உள்ளமும் ஆண்மையும்
கைவலம் முதலாம் கல்வியும் புலமையும்
சால்பு முதலாம் பண்பு மீகையும்

என்று ஒரு பிரதியில் ஓரடி அதிகமாகவும் பாடம் வேறுபடவும் உள்ளது.

5:3-4 வென்றி மிகுதியும்.

6:4 எனும் பெயர்

6 உடையன வெல்லாம் வாகையெனப் படுமே
உடன்பயின் றனவெல்லாம் வாகையெனும் பெயர், (382)

2284. திவாகர வரலாறு

புலவி நீக்கிய கல்விச் செல்விக்கு
அமழ்துசுவை ஈந்த அரும்பெறல் இன்பத்து
ஒருபெருஞ் செல்வன் அருவந்தைச் சேந்தன்
பகர்சொல் திவாகரத்துப் பதினோ ராவது
ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

4-5 சொற்ற திவாகரத் துப்பதி னொராவது
ஒருசொல் பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்.
5 ஒருசொல் பல்பெயர்த் தொகுதி முற்றும். (383)

பதினொன்றாவது

ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி

பதினொன்றாவது

ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி

ஆதிப் பொருள்

1. அங்கதந் தோளணி அரவு மாகும்.
2. அடுதல் மிறைசெயங் கோறலு மாகும்.
3. அண்ணல் பெருமையும் தலைவனு மணுகலும்.
4. அண்டர் தேவரும் ஆயரும் ஆகும்.
5. அணியே பூணும் அழகு மாகும்.
6. அசைதல் நோதலும் தங்கலு முரித்தே.
7. அந்தில் அடுக்களையும் அசைநிலைக் கிளவியும்.
8. அந்த மீறும் அழகு மாகும்.
9. அமறல் மிகுதியும் பொலிவு மாகும்.
10. அம்பரங் கூறை கடலும் ஆகாயமும்.
11. அயிலே வேலும் கூர்மையு மாகும்.

---

* கி. பி. 1702-ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற பழஞ்சுவடியில் கண்டபடி 'ஆதிப்பொருள், அந்தப்பொருள்' என்னும் பகுதிகள் தரப்பட்டுள்ளன. இந்தச் சுவடியிற் போல மேலும் பல சுவடிகள் (தேசிய நூலகம்—6 சுவடி) இவ்வகைப் பகுப்பில் காணப்படுகின்றன. இப்பகுதிகளைப் பின்னர் ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்றும் குறித்துள்ளனர். 1940-ஆம் ஆண்டு வெளியான முதற்பதிப்பு இவ்வகை அமைப்பிலேயே உள்ளது. பின்வந்த பதிப்புகளும் அவ்வாறே. சுவடிகளில் காணும் நூற்பாவடைவுடன் அச்சுப்பிரதி சிற்சில இடங்களில் வேறுபட்டுக் காணப்படுகிறது.

12. அரணம் மதிலும் கவசமு மாகும்.

13. அருகல் சுருங்கலும் சாதலும் ஆகும்.

14. அரிலே பிணக்கமுஞ் சிறுநூறுங் குற்றமும்.

15. அரலை கழலையோ டருங்கனிக் காழே.

16. அருணம் சிவப்பும் மானு மாகும்.

17. அலரி பூமரனும் அருக்கனு மாகும்.

18. அழுங்கல் இரக்கமுங் கேடு மாகும்.

19. அள்ளல் சேறும் செறிவும் வன்மையும்.

20. அறலே விழவும் நீரும் நீர்த்திரையும்.
திரையலைத் துறுநுண் கருமணலு மாகும்.

21. ஆகம் மார்பும் உடலு மாகும்.

22. ஆசு சிறுமையும் குற்றமு மாகும்.

23. ஆயங் கூட்டம் சூது மாகும்.

24. ஆரல் செவ்வாய்க் கோளும் கார்த்திகை நாளும்.

25. ஆரே கூர்மை ஆத்தி மரனும்
தேராழி யகத்திற் செறியறுப்பு மாகும்.

26. ஆர்தல் நிறைதலும் உண்டலு மாகும்.

27. ஆலுதல் ஆடல் ஒலியு மாகும்.

28. ஆய்தல் நுணுக்கமும் தெரிதலு மாகும்.

29. இருத்தல் செருத்தலும் வீழ்த்தலு மாகும்.

30. இதையே மரக்கலப் பாய்புதுப் புனமே.

31. இயலே சாயல் நடையென் றாகும்.

32. இளமை தண்மையும் காமமும் இசைக்கும்.

33. இரங்க லரவமும் அழுங்கலு மிசைக்கும்.

34. இழுமெனல் ஓசையும் இனிமையு மாகும்.

35. இறுத்தல் தங்கலும் சொல்லலு மிசைக்கும்.

36. இரலைக் கிளவி தலைநாட் பெயரும்
ஊது கொம்பும் புல்வாய்க் கலையும்.

37. இறையே கடனும் இல்லி னிறப்பும்
சிறிதுந் தங்கலும் உயர்ந்தோரும் சிறக்கும்.

38. உம்பர் மேலிடம் அமரர்க்கு முரித்தே.

39. உருத்தல் தோன்றலும் வெகுட்சியு மாகும்.

40. உசாவே கருதல் துணையு மாகும்.

41. உடுவே நாண்மீன் பகழியு மாகும்.

42. உறழே இடையீடும் உணர்வும் ஒலித்தலும்.

43. உந்தி கொப்பூழும் தேருருளும் யாறும்
வந்துழி யாழ்க்கண்ணதோ ருறுப்பும் வரையார்.

44. உழையே மானும் யாழிலோர் நரம்பும்
அருகி யிடனு மறிதற் குரித்தே.

45. ஊறே யிடையூறும் உற்றறி புலனும்.

46. எல்லை பகலாம் அளவையு மிசைக்கும்.

47. எள்ளல் நகையும் இகழ்ச்சியு மாகும்.

48. எற்றுதல் புடைத்தலும் எறிதலு மாகும்.

49. எற்றென லெறியென லென்ன லாகும்.

50. எல்லே ஒளியும் இரவிற் பொழுதும்.

51. எதிரி இருபெயர்ப் படைக்கு மெய்தும்.

52. எஃகே வேலொடு கூர்மையு மிசைக்கும்.

53. ஏணே வலியும் நிலையுடைமையு மாகும்.

54. ஏணி உலகமும் எல்லையு மாகும்.

55. ஏற்றல் கோடலும் எதிர்ந்து பொருதலும்.

56. ஏனைய தொழிவும் இடைச்சொல்லு மாகும்.

57. ஏவல் வியங்கோளும் ஆணையு மாகும்.

58. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
வரைவே புதுமை மிகுதி தேற்று
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

59. ஐயமும் கரிப்பும் ஆகலு முரித்தே.

60. கடிகை பேதஞ் சமையங்க ணாழிகை.

61. கடுவே கடுமரம் விடமு மாகும்.

62. கணையே திரட்சியும் பகழியு மாகும்.

63. கண்டம் மெய்புகு கருவி கழுத்துத்
துண்டந் திரைவாள் தேசமு மாகும்.

64. கதலி வாழையுந் துகிற்கொடியு மாகும்.

65. கதழ்வே வேகமுஞ் சிறத்தலுங் காட்டும்.

66. கந்தம் புலனே கிழங்குங் கடியும்.

67. கந்தரம் மலைமுழை கழுத்து மாகும்
வந்துழி மேகப் பெயரும் வரையார்.

68. கயமே யாழமும் யானைக் கன்றும்.

69. கரிலே கொடுமையுங் கரித்தலும் காழ்த்தலும்.

70. கரைதல் மொழிதலும் கூவலு மாகும்.

71. கலித்தல் எழுச்சியும் ஒலித்தலும் காட்டும்.

72. கலையே நூல்கல்வி காஞ்சி ஆடை
முசுவு மானேறும் கால நுட்பமும்.

73. கவலை துன்பமும் கவர்த்த வழியும்.

74. கவிகை குடையும் கொடையு மாகும்.

75. கவ்வனம் கலக்கமும் காடு மாகும்.

76. கழங்கு அணங்காட்டொடு கொடிக்கழலு மாகும்.

77. கழுமல் பற்றும் மயக்கமும் ஆகும்.

78. கற்பம் அமருலகும் கமலத்தோ னாயுளும்.

79. கனலி தீபமும் கதிரவனு மாகும்.

80. கனவே மயக்கமும் துயிலு மாகும்.

81. கனமே வட்டமும் திரட்சியு மாகும்.

82. கலுழி கலிங்கனீர் முல்லைநிலக் கான்யாறு.

83. காரே மேகமும் மாரிக் காலமும்
நீரும் கருமையும் நிகழ்த்துங் கிளவி.

84. காதை மொழியும் கதையு மாகும்.

85. காவே காத்தலும் காவு மாகும்.

86. காயம் யாக்கையும் காழ்ப்பு மாகும்.

87. கால நாட்கூறுங் காலமு மாகும்.

88. காசை நானலும் காயா மரமும்.

89. காசு மணியும் குற்றமு மாகும்.

90. கானே விரையும் காடு மாகும்.

91. கானல் கதிரொளியும் கடற்சார்பின் மலைச்சார்பிற்
றானெழு நன்மரச் சோலையுந் தழுவும்.

92. குழலே துளையும் மயிருங் கூறும்.

93. குரலே கதிரும் யாழிலோர் நரம்பும்.

94. குயிறல் கூவலும் செறிதலும் துடைதலும்.

95. குழையே குண்டலந் தளிர்சேறு மாகும்.

96. குரையே ஒலியும் இடைச்சொல்லு மாகும்.

97. குலமே இல்லமும் குடிமையும் கூட்டமும்.

98. கலப்பெயர் பண்டமும் பல்பண்டத் தெருவும்
வார்புனற் கரையும் வந்துழிக் கொளவே.

99. கேவலந் தனிமையும் முத்தியு மாகும்.

100. கேள்வி கல்வியும் செவியுங் கிளக்கும்.

101. கொண்டல் மேகமும் கூதிர்க்கீழ் காற்றும்.

102. கொற்றம் அரசியலும் வெற்றியு மாகும்.

103. கோடே சங்கும் ஊதுங் கொம்பும்
மாவின் மருப்பும் மரத்தின் பணையும்
நீரின் கரையு நிகழ்த்துங் கிளவி.

104. கோடரக் கிளவி குரங்கொடு மரத்தின்
கோடும் பொதும்பும் கூறு மென்ப.

105. சிரகம் துவலையும் கரகமு மாகும்.

106. சிறையே காவலும் இறகுஞ் செப்பும்.

107. சினையே கருவும் உறுப்பும் மரக்கோடும்.

108. சிலம்பே மலையும் ஒலியு மாகும்.

109. சுடிகை சுட்டி மயிர்முடியு மாகும்.

110. சூழி முகபடாம் வாவியுஞ் சொல்லும்.

111. சூர்தெய்வம் வஞ்சம்நோய் அஞ்சாமையும்
சொல்லும்.

112. செயிரே குற்றமும் சினவலு மாகும்.

113. செத்தென் கிளவி கருத்தோ டொப்பே.

114. சேணே யுயர்வும் நீளமு மாகும்.

115. ஞெள்ளல் தெருவும் மேன்மையும் நிகழ்த்தலும்.

116. தண்ணடை நாடும் ஊரு மாகும்.

117. தடமே பெருமை கோட்டமலை யாகும்.

118. தபுதல் கெடுதலுஞ் சாதலு மாகும்.

119. தரணி நிலனும் மலையும் இரவியும்.

120. தவவென் கிளவி மிகுதலும் குறைதலும்

121. தனிமம் அழகொடு மெத்தையு மாகும்.

122. தன்மை இயல்பும் தன்மையுடைப் பொருளும்.

123. தாவே வலியும் வருத்தமு மாகும்.
தாவென் கிளவி யிடையீடு மாகும்.

124. தாமம் ஒளியும் தார்மாலையு மாகும்.

125. தாலம் தரைபனை நாவும் உண்கலனும்.

126. தாரம் அரும்பண்டம் வெள்ளி யதனொடு
சேருமேழ் நரம்பிலோர் நரம்புஞ் செப்பும்.

127. துன்னல் குறுகலும் செறிவும் சொல்லும்.

128. துணங்கை யாடலுந் திருநாளும் விழாவும்.

129. தூங்கல் ஆடலும் தாழ்வும் சொல்லும்.

130. தேசிகம் திசைச்சொல்லும் அழகும் செப்பும்.

131. தோலே யானையும் வனப்புந் தோற்பலகையும்.

132. தோடே தொகுதியும் பனையிதழ் போல்பவும்
பூவி னிதழும் புகலுங் கிளவி.

133. நளியே பெருமையும் சீதமும் செறிவும்.

134. நந்தல் கேடும் ஆக்கமு மாகும்.

135. நனவே யுணர்ச்சியும் அகலமு மாகும்.

136. நனைபூ மொட்டிற்குங் கள்ளிற்கும் நாமம்.

137. நவமே புதுமையும் ஒன்பது மாகும்.

138. நியமம் அங்காடியுந் தெருவும் நியதியும்.

139. நிழத்தல் நுணுக்கமும் நிழற்செயலு மாகும்.

140. நீவி யென்ப தளித்தலுந் துடைத்தலும்.

141. நூலே யெண்ணும் பனுவலு மாகும்.

142. நெய்தல் சாபறையுங் கடற்சார் நிலனும்.

143. நொறிலே நுடக்கும் விரைவு மாகும்,

144. படரே யுள்ளல் செலவொடு பரிவே.

145. பதங்கம் விட்டிலொடு பறவையின் பொதுப்பெயர்.

146. பதியே யுறைவிடந் தலைவனு மாகும்.

147. பரவை கடலும் பரப்பு மாகும்.

148. படிமம் விரதமும் வடிவு மாகும்.

149. பலியே யையமுஞ் சோறு மாகும்.

150. பரிவு துன்பமும் இன்பமும் பகரும்.

151. பட்டிகை கச்சும் பணையிரதமு மாகும்.

152. பணையே பெருத்தலும் பிழைத்தலும் பழனமும்.

153. படியே பாரும் பகைத்தலு மாகும்.

154. படுவே படுதலும் கலைவல் லானும்.

155. பாங்கு பால்பரிசு பக்கந் தோழி.

156. பாச மூசித் துளையொடு கயிறே
பேசிற் றமர்பெய ராகலு முரித்தே.

157. பாடலஞ் சிவப்பும் பாதிரியு மாகும்.

158. பாடி நகரமும் நாடும் படைவீடும்.

159. பாடே பெருமையும் ஒலித்தலும் படுத்தலும்.

160. பிரசந் தேன்பட் டேனீப் பெயரே.

161. புணரி கடலுங் கரையுந் திரையும்.

162. பிறங்கல் உயர்வும் மலையும் பெருமையும்.

163. புதைகணைக் கட்டே புதுமையு மாகும்.

164. புலம்பே தனிமையும் நடுக்கமும் புலம்பலும்.

165. புண்ட ரீகந் தாமரை புலியே.

166. புரிதல் விரும்பலும் செயலு மாகும்.

167. பூவே யழகுங் கூர்மையு மாகும்.

168. பொறையே சுமத்தலும் பரித்தலும் பொறுத்தலும்

169. பொழிலே சோலையும் உலகமும் புகலும்.

170. போற்றல் பாது காத்தலும் புகழ்தலும்.

171. மலைதல் பொருதலும் மலர்சூ டுதலும்.

172. மஞ்சு மேகமு மிளமையும் வனப்பும்.

173. மறையே வேதமும் மறைத்துமொழி கிளவியும்.

174. மறலி கூற்றும் மயக்கமும் ஆகும்.

175. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை.

176. மனவே யக்கு மணியு மாடையும்.

177. மகரம் மீனேறுந் தாது மாகும்.

178. மலர்தல் தோன்றலும் எதிர்தலு மாகும்.

179. மதர்வென் கிளவி வலியும் மடனும்
மிகுதியும் வனப்பும் மேவுதற் குரித்தே.

180. மதலைக் கிளவி தூணே மரக்கலம்
புதல்வர் பெயரே கொடுங்கைப் பாவைபோல்வன
தகவிற் றாகுஞ் சார்பி னெவையும்.

181. மாறுத லொப்பும் மயக்கமு மாகும்.

182. மாதர் காதலும் மகளிரு மாகும்.

183. மாவே பெருமையுங் கருமையும் நிறனும்
மேவிய நாற்கா லுடையவும் வண்டும்
பூவுறை திருவென வாறையும் பொருந்தும்.

184. முரணே வலியும் பகையும் ஆகும்.

185. முடலை திரட்சியும் முருகு மாகும்.

186. முனையே யிறைமை பகைமையு மாகும்.

187. முற்றே முழுவதும் வளைத்தலும் மொழியும்.

188. மூரி பெருமையும் ஆனேறு மாகும்.

189. மூலம் நாளும் வேரும் முதலும்.

190. மூரல் நகையெயிறுஞ் சோறு மாகும்.

191. மெய்யே யுடம்புஞ் சொற்பொருளும்
மெய்யெழுத்தும்.

192. வறிது சிறிதாகும் அருகலு முரித்தே.

193. வல்லை விரைவும் மதிலு மாகும்.

194. வயாவே வேட்கைப் பெருக்கமும் வருத்தமும்.

195. வள்ளே கூர்மையும் வாரும் வலியும்.

196. வண்ணம் ஓசையும் வடிவு மாகும்.

197. வசியே திரட்சியும் வருடலுங் கூர்மையும்.

198. வழங்கல் கொடைசெறல் சொல்லும் வரையார்.

199. வனமே காடும் நீரு மாகும்.

200. வரியே பாடலும் எழுதலும் வடிவும்,

201. வடிவே மேனியும் உருவும் மெய்யும்,

202. வலனே வென்றியும் வலமும் மேலும்.

203. வதுவை மன்றலும் மணமும் மிக்க
பொதுவுறு வாசமும் மணம்புணர்வு மாகும்.

204. வாயில் புலனும் வாயிலுந் திறனும்.

205. வாளே யொளியும் வாளுடைப் படையும்.

206. வாழியிடைச் சொல்லும் வாழ்கவென் சொல்லும்.

207. வாரக் கிளவி யேழ்கிழமையும் மலைச்சார்பும்
ஈரமும் அன்பும் பகுதியு மிசைக்கும்.

208. விளக்கே யொளியும் விளக்கு நிலையும்.

209. வில்லே யொளியும் வில்லுடைப் படையும்.

210. விம்மல் ஒலித்தலும் விம்முறலு மாகும்.

211. விறப்பே செறிவும் வெருவலும் பெருகலும்.

212. விண்டு மாயோனும் வெற்பும் வேயும்.

213. விடங்க முகடும் அழகும் ஆகும்.

214. விரையென் கிளவி சாந்தும் வெறியும்.

215. வீசுதல் கொடுத்தலும் எறிதலு மாகும்.

216. வெறுக்கை செல்வமும் விழுப்பொருளு மாகும்.

217. வெடியே வெள்ளிடை வெருவு மாகும்.

218. வெம்மை வேண்டல் விரைவென விளம்புவர்.

219. வெறியே நாற்றமும் விரையோ டணங்காட்டும்.

220. வேலி மதிலுங் காவலு மாகும்.

221. வேயே மூங்கிலும் ஒற்றும் வினையும்.

222. வேலன் முருகனும் வெறியாட் டாளனும்.

223. வேளாண்மை யுபகாரம் உபசாரமும் விளம்பும்.

224. வேலை தானே கடலுங் கடற்கரையும்
காலமுங் கூறுங் கருவித் தாகும்.

ஆதிப்பொருள் முற்றும்.

அந்தப் பொருள்

1. சேமங் காவல் இன்பம் இரவுபொன்
ஏமாப்பு மயக்கமும் ஏம மாகும்.

2. சிறப்புச் சீர்மை யிடும்பையிம் மூன்றும்
விரிக்கின் நூலோர் விழுமமென்ப.

3. நீர்முதலாகிய துளியு மருந்துமுதல்
நோய்நீக்கி யின்பங் கொடுக்கும் பொருளும்
கூறை மாசு கழுவுவர் நீரும்
பாலுறு பிரையுங் காரமும் ஒழுகலும்
ஓரிடைச் சொல்லும் உறையெனற் குரிய.

4. ஊரும் வலியும் உறையுளுஞ் சயனமும்
பாழி யென்று பகரப் படுமே.

5. ஆயமும் மகளிர் விளையாடற் றொழிலும்
பாய்புனற் படுகரும் பண்ணையென் றாகும்.

6. உயர்வுங் குற்றமும் உவமைச் சொல்லும்
புரையென் கிளவிப் பொருளொடு புணரும்.

7. சாதலு நிலைத்தலும் உறங்கலுந் துஞ்சல்.

8. குறளே யழகு குறங்கே யிடப்பால்
இவையிந் நான்கும் வாம மாகும்.

9. யாமமும் இரவும் பொழுதுஞ் சாமம்.

10. நெடித்தற் பொழுதும் நீரோடு கையும்
பாடற்பல் லியமும் பாணியென் றாகும்.

11. பூப்புனை மாலையும் மாலைபுனை மாதமும்
தோற்புனை வின்னாண் டொடர்கைக் கட்டியும்
கோச்சேரன் பெயரும் மயிர்காற்றுக் கோதையும்.

12. மேற்செல வும்பா விகற்பத்தொரு விகற்பமும்
யாற்றெழு மோர்கொடிப் பிறப்பும் அதனுவமை மாதரும்
மாற்றரும் பெயர்க்கொடை வஞ்சியென் றாகும்.

13. மாயோன் பெயரே மயக்கம் வேட்கை
மேகங் காற்றுப் பெருமை கருநிறம்
எழுபுதன் கண்ணேணி, மாலென விசைப்பர்.

14. யானையுங் கோழியுஞ் சங்கும் வாரணம்.

15. பூவும் பூமாலையும் போர்முன்செல் கொடிப்படையும்
மாலினுக் கணியுங் கிண்கிணி மாலையும்
தாவில் பெயர்க்கொடை தாரென் றாகும்.

16. வில்லையும் மலையையும் சிலையென விளம்புவர்.

17. சந்தனம் மாலைபூண் ஆத்தி முத்தென
வந்தன வைந்தும் ஆர மாகும்.

18. எயிலுறுப் புழுபடை நாஞ்சி லாகும்.

19. அரிவையர் முலையுங் கொடுவாளும் இளமையும்
கருதிலிம் மூன்றுங் குயமெனக் கருதுவர்.

20. சேறலும் எழுதலுஞ் செலுத்தலும் விரும்பலும்
ஏறலும் இவர்வென் கிளவி கூறும்.

21. விழவுங் கள்ளுஞ் சாறென விளம்புவர்.

22. அழகும் அழகுடை மாதரும் அதனொடு
கட்டளைக் கலித்துறையுங் காரிகை என்ப.

23. கழியு நாளும் புலரிக் காலையும்
தழுவும் வைகலுந் தங்கலு முரித்தே.

24. நெய்தலும் நிலனுங் குவலைய மென்ப.

25. வண்டின் பெயரும் மதுவுங் கொடையும்
தொண்டும் நவமெனச் சொல்ல வேண்டும்
தொண்டென் கிளவி தொழும்பு மாகும்.

26. செவ்வாய் முருகன் இளமை புத்திரர்
இவ்வா றெல்லாஞ் சேயென விசைப்பர்.

27. நெல்லின் றாளும் புல்லுங் கூர்மையும்
சொல்லின் மூன்றும் வையென் றாகும்.

28. மாதர் மயிரையும் மற்றவர் குருளையும்
நீரையும் அளக மென்று நிகழ்த்துவர்.

29. நிறமும் உதிரமும் உரலுந் திறையும்
கறையென் கிளவி யாமெனக் கருதுவர்.

30. யானை யுங்கரும் பும்கொறுக் கச்சியும்
வையுங் கூறும் வேழக் கிளவி.

31. வருத்தமுஞ் செலவும் மாவி னாமமும்
பாது காத்தலும் பரியென் றாகும்.

32. சுரிகை யொள்வாள் முள்ளிலை மூன்றும்
கருதிற் கண்டக மாமெனக் கருதுவர்.

33. காயா மரமும் நாங்கணவாய்ப் புள்ளும்
பூவை என்னும் பொருளொடு புணரும்.

34. நாளும் ஒளியும் நடுவுஞ் செயலும்
பாகு படுத்தலும் பகலென் கிளவி.

35. அந்தரங் குலிசம் பார்நீ ரத்திரம்
வந்த நீர்த்திசை கொலைவேல் மன்னவன்
விழிபசு கோவென வேண்டினர் புலவர்.

36. இன்னாங் கோசை நடுக்க மச்சம்
கன்னித் தமிழோர் கம்பலை யென்ப.

37. பூவி னிதழும் பனையிதழ் போல்பவும்
வாய்பா டுரைக்கின் மடலெனற் குரிய.

38. காடுசார் நிலனும் கானமல் லிகையும்
மோடுபடு வென்றியுங் கற்பு முல்லை.

39. அனலும் அருக்கனுந் தபனனென் றாகும்.

40. தேனுந் தேறலு மதுவெனச் செப்புவர்.

41. சருக்கரை கரகம் நாழிகை வட்டில்
உரைக்கிற் குடமும் நாழிகையும் கன்னல்.

42. மிடறு பொருநிலங் கருமையிம் மூன்றுங்
களமென் றுரைப்பர் கருதுங் காலே.

43. கருமஞ்செ யிடமுங் களமும் பொருநிலமும்
களரி என்ப கற்றறிந் தோரே.

44. கொல்பரல் சேது மணியின் கோவை
மாலையு மொளியுங் காழென் றாகும்.

45. பகுத்தல் பக்கந் திசையியல் பென்ன
வகுத்த நான்கும் பாவென் றாகும்.

46. ஆயம் மடமை கட்டிப்பொன் னோலை
மாழை யென்று வகுத்தனர் புலவர்.

47. குலமும் ஒழுக்கமும் ஒழுக்கம் நிகழ்ந்த
நிலமுந் திணையென நிகழ்த்துங் கிளவி.

48. கச்சு நிலையின்மை புதுமை கந்தம்
ஒத்த நான்கும் வம்பென வுரைப்பர்.

49. தெய்வமுந் தெய்வத் துவமை மாதரும்
மைய னோயும் வருத்தமுங் கொலையும்
ஐயமின் றுரைக்கும் அணங்கென் கிளவி.

50. கடலு நிலனும் சேறும் அளக்கர்.

51. தொடலும் வளைத்தலும் பிணித்தலும் பற்றல்.

52. சுணங்கும் பொறியுந் தூக்கமுந் துத்தி.

53. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா னான்கே கொன்னைச் சொல்லே.

54. குற்றமும் யாடுங் கருமையுங் கொண்டலும்
மற்றிவை மையெனுஞ் சொல்லொடு வருமே.

55. கொலையுஞ் சேவகமுங் கொடுவினைச் செயலும்
மலையுஞ் செற்றமு மறமெனப் படுமே.

56. அமரருங் கவிஞரும் ஆடுநரும் பாடுநரும்
பொருநரும் அறிஞரும் புலவ ரெனப்படும்

57. பெரும்பெயர்த் தலைவரும் பெருங்கூத்தின் கோடியரும்
பொரும்படை வீரரும் பொருந ரெனப்படும்.

58. கொலையு மிடையூறுங் கோளென் றாகும்.

59. கடலு நீர்மிகுதியும் கதவும் பகுதியும்
மடையு மென்றிவை வாரி என்ப.

60. அரவுங் காரீயமும் அமரர்நாட் டொருபெயரும்
மலையும் யானையு மலரு மரப்பெயரும்
தெரியி னாக மெனப்பெயர் சிவனும்.

61. உரிய சொல்லும் உரிய பொருளும்
விரிய வுரைப்பது விருத்தியுரை யாகும்.

62. எரியுந் தாமரையும் நுட்பமும் முண்மரமும்
உரிய காடுமென் றைந்து முளரி.

63. மதியும் ஞாயிறும் கனலியு மற்றைப்
பொதுவுறு மொளியுஞ் சுடரெனப் புகல்வர்.

64. வியப்புக் கெழுதகைமை சிறுதூறு மலையென
நயப்புடை வைந்து மிரும்பூ தாகும்.

65. கிளிகடி கருவி யிலைமுக்கரி கருவி
குளிர்ப்பெயர் குடமுழவு ளெண்டு மாகும்.

66. ஊழித்தீ சிங்கம் உருமிடி யென்றிவை
வாழித் தமிழோர் மடங்க லென்ப
கொடுங்கூற்றின் பெயரும் நோயும் கூறும்.

67. கவரி மாவம் அன்னமும் நாயும்
எகின மென்ப ரியல்புணர்ந் தோரே.

68. ஏவல் மெய்ப்பா டிலாஞ்சனை சூளே
ஆவயின் விறற்செயலு மாணைக் கிளவி.

69. பூவின் றோடும் பனையிதழ் பேரல்பவும்
வாயி னதரமு மிதழென வைப்பர்.

70. நிறையறி கருவியு முறையறி கருவியும்
பிறவினை யொப்புங் கட்டளைப் பெயரே.

71. நிறையறி துலாமும் அஞ்சன மெழுதுகருவியும்
குதிரைமத் திகையும் கோலென் றாகும்.

72. மரத்திற் கோடும் மருப்புங் காற்றும்
உணர்த்து மென்ப வுலவைக் கிளவி.

73. ஒலித்தலும் உமிழ்தலும் அடைத்தலும் தெவிட்டலும்
நிறைத்த லென்னுங் கிளவி நிகழ்த்தும்.

74. திருப்புல னெந்திர மிலாஞ்சனை யெழுதுவினை
புகழ்ச்சிப் புலவர் பொறியெனப் புகல்வர்.

75. கூட்டமும் மகளிர் விளையாட்டு மிராசியும்
கூற்றையு மோரைக் கிளவி கூறும்.

76. பசையுந் தசையும் பறவை யிறகும்
தொகுபெயர் தானே தூவியென் றாகும்.

77. கவசம் பல்லியந் தொடர்பியாழ் படைக்கலம்
கனக முதற்பூண் டொகுதி மேகம்
கலனைக் கையிவை கருவி யாகும்.

78. வண்டும் பேயும் இதணமுங் கழுதாம்.

79. எதிருன் றுதலும் நிலையின் மையும்
மணிமே கலையு மொருமரப் பெயரும்
கருதுங் காஞ்சி யென்னுங் கட்டுரை.

80. விதந்துகட் டியவழக்கும் விலங்கொடுபுட் குரலும்
பசும்புல்லும் பைங்கூழும் பயிரென் றாகும்.

82. குற்றியையுந் தூணையும் தாணு வென்ப.

83. காடுங் கூடும் கட்சி யாகும்.

84. ஆடவர் மயிரு முசுவு மோரி.

85. தேரு மாவுஞ் சிவிகையு மென்றிவை
ஊர்தி யென்னும் பெயரிற் றோன்றும்.

86. கழித்தலு மிறத்தலு மெனவிரு கிளவியும்
மிகுத்தலு நடத்தலுஞ் சாதலும் விளம்பும்.

87. சோர்வு மிகுத லுடன்படல் பூசல்
நாவினொ டொலியுந் தெருவும் ஞெள்ளல்.

88. கரடியின் பெயருங் கணிப்பிலோர் குணிப்பும்
பகழியின் பெயரும் பல்லமென் றாகும்.

89. விழவுங் குமர வேளு மிளமையும்
நறையு நாற்றமு மகிலு மெழுச்சியும்
வெறியாட் டாளனு முரகென விசைப்பர்.

90. சயனம் பல்லணந் தானையுமு நாஞ்சில்
பயனென் றுரைக்கும் படையென் கிளவி.

91. வயிறே யிடமனை மூன்றும் வயினாம்,

92. காலி னடியுங் காற்றோடு தோலும்
காலி னணியுங் கழலெனக் கருதுவர்.

93. எண்ணிற் கொளலு மேவலும் வியங்கோள்.

94. அச்சமுந் துன்பமு நடுக்கமு மன்றியும்
பற்றிய சீதமும் பணியெனப் படுமே.

95. நட்புத் தொகுதி பேயென மூன்றும்
வைத்தனர் கூளி யாக வகுத்தே.

96. குவவிற் படர்வதோர் கொடிப்புல்லு நூழிலும்
மலையு முச்சியு மருதயாழ்த் திறமும்
நவிர மெனும்பெயர் நடைபெற் றியலும்.

97. பண்டமும் வளப்பாடும் வளமெனப் படுமே.

98. நீரின்றி வேனிற் றெறுநிலனு மந்நிலப்
பாடலும் பாடற் சுவையும் பாலை.

99. பொருள்வயிற் பிரிதலும் புணர்ந்துடன் போகலும்
அதுபிரி வுணர்த்தலும் பாலை யாகும்.

100. மலைச்சார் நிலனும் செம்மலர் முள்ளியும்
குறிஞ்சிநிலப் பாடலும் குறிஞ்சியென் றாகும்.

101. பழன நிலனும் அந்நிலப் பாடலும்
மருத மென்னும் பெயரின் வழங்கும்.

102. மரமும் மலையும் போல நிற்பன
தருபெயர் தானே தாபர மாகும்.

103. மெய்யே போலப் பொய்யை யுணர்த்தலும்
செய்கோல் வடிவும் அழகும் சித்திரம்.

104. மன்னனு மிடைச்சொல்லு மிறையு மன்னே.

105. இயல்புஞ் செயலும் விதியென் றாகும்.

106. மணியும் பொன்னு நிரையு மென்றிவை
தனமும் மாடென் றுரைக்கத் தகுமே.

107. உச்சியும் மயிர்வார் சீப்புமுறியுஞ் சிக்கம்.

108. ஆல நஞ்சே சனிக்கோள் மாசாத்தன்
ஆரிரு ணிறத்தனவுங் காரி யெனப்படுமே.

109. நீல மணியும் நீலநிறத் தனவும்
நீல மென்னும் பெயரொடு நிகழும்.

110. வெள்ளாடு வெண்பா வெள்ளை வடிவின
வெள்ளை யென்னும் பெயரின் விரியும்.

111. ஒருதலைக் காமமும் யாழிலோர் நரம்பும்
தெரியின் கைக்கிளை எனப்பெயர் சிவணும்.

112. சிவிகையு மானேறுஞ் சகடமுந் தெருவும்
அவனியு வைய மெனப்பெய ராகும்.

113. வலியுஞ் செயலும் வல்லாராதலும்
ஆள்வினையு முரைக்கும் ஆற்றற் கிளவி.

114. யாழ்க்கண் ணதோருறுப் புந்திறல் யாழும்
வேட்கை மிகுதியு மிளமையும் விளரி.

115. கண்வரி கடல்பொன் கிண்கிணிப் பெய்பரல்
மன்னிறங் குதிரை தவளை குரங்கு
பகைவாள் சயனம் வலிவண் டம்புகை
எனப்பதி னைந்தும் அரியெனப் புகல்வர்.

116. சிங்கந் திருமால் திகிரி யிரவி
இந்திரன் காற்றே யமனே யங்கி
அங்கண் வடமொழிச் சிதைவி யரியெனப்படுமே.

117. மாதர் மங்கல வணியு மானமும்
பாசமு நாணெனும் சொல்லிற் பயிலும்.

118. மகிழ்ச்சியின் விளையாட்டின் வருநகை தானே
இகழ்ச்சி யிடத்து மெய்துதற் குரித்தே.

119. தகரமுஞ் சுண்ணமுந் தருப்பணப் பிண்டியும்
இணையிவை யிடியென விசைத்தல் வேண்டும்.

120. உழவும் நீரி லெழுவதோர் புதலும்
குழையும் மகிழ்ச்சியும் அழகு மென்றிவை
துயருங் கூறுந் தொய்யிற் கிளவி.

121. கீதமும் நிறமுஞ் செந்நிறக் கெழுவும்
ஆதரவும் முடுகியலும் அராக மெனப்படும்.

122. ஆவு மெருமையு மரையு மல்லன
ஈனா விளமையுங் கெழுமையு மிளமரமும்
நாகெனும் பெயரி னடைபெற் றியலும்.

123. பல்வகை யுணவும் பயிரும் பொன்னும்
கொள்ப மாதோ கூழென் கிளவி.

124. அருந்திறல் வீரர்க்கும் பொருந்தொழி லுழவர்க்கும்
வருந்தகைத் தாகும் மள்ள ரெனும்பெயர்.

125. கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினுங்
கன்றிய தொழின்மை கருங்கை யெனப்படுமே.

126. நிதியுஞ் சொற்பயனும் நிகழ்பல பண்டமும்
பொதியென் கிளவிப் பெயரொடு புணரும்.

127. சோறும் வழியுஞ் சொல்லுங் காலும்
ஈரமுஞ் சேமமும் புணலும் காலையும்
பாவல ரெட்டையும் பதமெனக் கருதுவர்.

128. இறைவன் பழம்பூ விரர் புத்திரர்
அறையிற் செம்மையோ டைந்துஞ் செம்மல்.

129. பொன்னின் மணியிற் பூவிற் சொல்லில்
இன்னவை தொகுத்தலு மிரவும் அந்தியும்
மன்னு மியல்பு மாலையென் றாகும்.

130. வண்ணம் பவளம் வலியோ டரக்கென்
றெண்ணிய நான்குந் துப்பெண விசைப்பர்.

131. பொய்கையுந் தொடர்பும் மருத நிலனொடு
எய்திய கணனொடு நான்குங் களனே.

132. வெட்சியும் வெள்ளாட் டேறுஞ் செச்சை.

133. கைப்படை காலாட் படையே யாடை
தப்பில் மூன்றுந் தானையென் றாகும்.

134. மாதர் மயிரு மலையு மன்னமும்
ஓதி யென்ப ருணர்ந்திசி னோரே.

135. பல்வகை யியங்க லோசை பாரம்
ஒல்லுதல் காத்தண் டொண்புக ழழகு
செல்வஞ் சீர்மை சீரென் றாகும்.

136. சொல்லிய முதற்பொருட் டுணைக்கா ரணமும்
பல்வகை யாடலும் மனத்தின் பகுதியும்
கல்வியு மெண்ணுங் கரணமென் றாகும்.

137. எழுது படமு மிருநிதிப் பொதியும்
கிழிபடு துகிலு கிழியெனற் குரிய.

138. வன்மையு முயற்சியு மனத்தின் மிகுதியும்
உண்மையு முரைக்கு மூக்கக் கிளவி.

139. உடன்படல் கொடை யொத்தல் மாறா நுட்பம்
சமன்பாதி மிகுதி தலைப்பாடு தன்மையென
நிகழ்ந்தவீ ரைந்து நேரென் கிளவி.

140. வாசமும் பேயு மணம்புணர்வு மென்றிவை
காசின் றுரைக்குங் கடியென் கிளவி.

141. ஆள்வினை முதலாம் செய்கையு நலனும்
கைவல முதலாம் கல்வியு மாண்மையும்
சால்பு முதலாம் பண்பு மீகையும்
ஒழுக்க முதலாந் தவமு மறத்துறையும்
ஒருவரி னொருவர் வென்றியின் மிகுதியும்
பெறுவன வெல்லாம் வாகை யெனும்பெயர்.

142. புலவி நீக்கிய கல்விச் செல்விக்கு
அமிழ்த்துசுவை யீய்ந்த வரும்பெற லின்பத்து
ஒருபெருஞ் செல்வ னருவந்தைச் சேந்தன்
பகர்வுற்ற திவாகரத்துப் பதினொன் றாவது
ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி முற்றும்.

அந்தப்பொருள் முற்றும்.

ஆதிப்பொருள் நூற்பா	224
அந்தப்பொருள் நூற்பா	142
ஆக நூற்பா	366

ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி

1. அங்கதம் என்னும் பெயர்

அங்கதம் தோளணி அரவும் ஆகும். (1)

2. அசைதல் என்னும் பெயர்

அசைதல் நோதலும் தங்கலும் ஆகும்.

2. நேர்தலும், ஆடலும் (அச்சு)
4. உரித்தே (மு. ரா) (2)

---

* பதினோராவது பல்பொருட் பெயர்த் தொகுதி — அகராதி முறைச்சுவடி.

குறிப்பு : (1) நூற்பாக்களின் முதலில் உள்ள எண் தேசிய நூலக ஏடு 3263-ல் கண்டபடியான தொடர் எண்; மூலபாடம் அந்த ஏட்டில் கண்டவாறு.

(2) நூற்பாக்களின் ஈற்றில் தரப்படும் எண் பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் உள்ளபடி இணைக்கப் பட்டுள்ளது.

(3) பாடபேதங்கள் சீர் எண் குறிப்புடன் தரப்பட் டுள்ளன. இவ்வேறுபாடுகளும் பேராசிரியர் பிரதியில் கண்ட படி இணைக்கப்படுகிறது. மூலபாடம் ஏட்டிலிருந்து வேறுபடும் இடங்களில் பாடபேதக் குறிப்பில் (மு. ரா.) என்று சுட்டப்பட் டுள்ளது.

தலைப்பு பற்றிய ஒரு குறிப்பு : தேசிய நூலக ஏட்டில் அங்கதம் என்னும் பெயர், அசைதல் என்னும் பெயர் என சொற்களுடன் என்னும் பெயர் என்பது இணைந்து காணப்படு கின்றது.

பேராசிரியர் மு. இராகவையங்கார் முதல் தலைப்பில் மட்டும் அங்கதம் என்னும் பெயர் என்று தந்து ஏனையவற்றில் சொல்லை மட்டும் தருகிறார். எனவே, எல்லாச் சொற்களும் 'என்னும் பெயர்' என்பது இணைந்து வருதல் பேராசிரியர் பயன்படுத்திய ஏட்டிலும் உள்ளமை தெரியவரும்.

3. அடுதல் என்னும் பெயர்

அடுதல் மிறைசெயலும் கோறலு மாகும்.

2. மிசை செயலும், சமைத்தலும் (அச்சு) (3)

4. அணங்கு என்னும் பெயர்

தெய்வமும் தெய்வத்துவமை மாதரும்
மைய னோயும் வருத்தமும் கொலையும்
ஐயமின் றுரைக்கும் அணங்குஎன் கிளவி.

1;3-4 துவமை செய் மாதரும்
2:1-2 மையலு நோயும். (6)

5. அணி என்னும் பெயர்

அணியே பூணும் அழகும் ஆகும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

6. அண்டர் என்னும் பெயர்

அண்டர் தேவரும் ஆயரும் ஆகும். (4)

7. அண்ணல் என்னும் பெயர்

அண்ணல் பெருமையும் தலைவனும் ஆகும்.

3-4 அரசனு மாகும், தலைவனு மணுகலும் (அச்சு) (5)

8. அந்தம் என்னும் பெயர்

அந்தம் ஈறும் அழகும் ஆகும்.

இறும் என இ என்பதன் மேல் வளைவில் சுழியிட்ட
வடிவம் காண்கிறது. (7)

9. அந்தில் என்னும் பெயர்

அந்தில் ஆங்கும் அசைநிலைக் கிளவி.

2 ஆங்க (8)

10. அமறல் என்னும் பெயர்

அமறல் மிகுதியும் பொலிவு மாகும்.

1. அமர்தல் (மு. ரா) (9)

11. அம்பரம் என்னும் பெயர்

அம்பரம் கூறையும் கடலும் ஆகாயமும். (10)

12. அயில் என்னும் பெயர்

அயிலே வேலும் கூர்மையும் ஆகும். (11)

13. அரணம் என்னும் பெயர்

அரணம் மதிலும் காவலும் ஆகும்.

3 கவசமும் (மு.ரா) (12)

14. அரலை என்னும் பெயர்

அரலை கழலையொடு அருங்கனிக் காழே.

2 கழலையோடு, 3-4 அருங்கனி காழே (அச்சு) (13)

15. அராகம் என்னும் பெயர்

கீத நிறமும் செந்நிறக் கெழுவும்
ஆசையும் முடுகியலும் அராக மெனப்படும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

16. அரி என்னும் பெயர்

கண்வரி கடல் பொன் கிண்கிணிப் பெய்பரல்
நன்னிறங் குதிரை தவளை குரங்கு
பகைவாள் சயனம் வலிவண்டு அம்பு

புகை எனப் பதினைந்தும் அரியெனப் புகல்வர்.

சிங்கம் திருமால் திகிரி இரவி
இந்திரன் காற்றே யமனே அங்கியென்
றங்கண் வடமொழிச் சிதைவின் அரியாகும்.

மு.ரா. பிரதியில்,
பகரி லரிசி நெற்கதிர் பன்றி
கிளியே பாம்பொடு பச்சையு மரியே.
என மேலும் இரண்டடிகள் மிகையாக உள்ளன. (14)

17. அரில் என்னும் பெயர்

அரிலே பிணக்கமும் சிறு தூறும் குற்றமும். (15)

18. அருகல் என்னும் பெயர்

அருகல் சுருங்கலும் சார்தலும் சொல்லும்.

3. காதலும் (அச்சு), சாதலும்.
3—4 சார்தலு மாகும். (16)

19. அருணம் என்னும் பெயர்

அருணம் சிவப்பும் மானும் ஆகும்.

3. ஆடும் (அச்சு). (17)

20. அலரி என்னும் பெயர்

அலரி பூவும் அருக்கனும் ஆகும்.

1-2 அலரிபூ மரனும். (18)

21. அழுங்கல் என்னும் பெயர்

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும். (19)

22. அளகம் என்னும் பெயர்

மாதர் மயிரையும் மற்றவர் சுருளையும்
நீரையும் அளகம் என நிகழ்த் தினரே.

1:3-4 மார்வின் முள்ளையும் (மு.ரா.)
1:3-4 என நிகழ்த்துவரே (மு.ரா.) (21)

23. அளக்கர் என்னும் பெயர்

கடலும் நிலனும் சேறும் அளக்கர். (22)

24. அளி என்னும் பெயர்

வண்டின் பெயரும் மதுவும் கொடையும்
அன்பும் கூறும் அளியென் கிளவி. (23)

25. அள் என்னும் பெயர்

அள்ளே கூர்மையும் செறிவும் வன்மையும்.
4 வண்மையும் (மு.ரா) (20)

26. அறல் என்னும் பெயர்

அறலே விழவும் நீரும் நீர்த் திரையும்
திரையலைத் துறுநுண் கருமணலும் ஆகும்.
1:1-2 அறலே யறுதலும் (25)

27. அற்றம் என்னும் பெயர்

அற்றம் மறை பொருளும் சோர்வும் முடிவும்.
3-4 சோர்வு மாகும் (மு.ரா) (24)

28. ஆகம் என்னும் பெயர்

ஆகம் மார்பும் உடலும் ஆகும். (26)

29. ஆசு என்னும் பெயர்

ஆசே சிறுமையும் குற்றமும் ஆகும்.

ஆசே சிறுமையுங் குற்றமும் விரைவும்
பேசின் மெய்புகு கருவியும் பெறுமே, (மு.ரா) (27)

30. ஆணை என்னும் பெயர்

ஏவல் மெய்ப்பாடு இலாஞ்சனை சூளே
யாவையும் விறல் செயலும் ஆணைக் கிளவி.

2:1-2 ஆவயின் விறற்செயலும் (மு.ரா) (28)

31. ஆயம் என்னும் பெயர்

ஆயம் கூட்டமும் சூதும் ஆகும்.

2-4 கூட்டஞ் சூதுக் கருவி (அச்சு) (30)

32. ஆய்தல் என்னும் பெயர்

ஆய்தல் நுணுக்கமும் தெரிதலும் ஆகும். (29)

33. ஆரம் என்னும் பெயர்

சந்தனம் மாலைபூண் ஆத்தி முத்து என
வந்த வைந்தும் ஆர மாகும்.

2:1 வந்தவை யைந்து (33)

34. ஆரல் என்னும் பெயர்

ஆரல்செவ் வாய்க்கோளும் கார்த்திகை நாளும். (34)

35. ஆர் என்னும் பெயர்

ஆரே கூர்மையும் ஆத்தி மரமும்
தேராழி யகத்திற் செறியுறுப்பு மாகும்,

1:3-4 ஆத்தியு மரமும் (மு.ரா)
2:3-4 செறி கதிரு மாகும். (31)

36. ஆர்தல் என்னும் பெயர்

ஆர்தல் நிறைதலும் உண்டலும் ஆகும்.

37. ஆலுதல் என்னும் பெயர்

ஆலுதல் ஆடலும் ஒலியும் ஆகும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

38. ஆற்றல் என்னும் பெயர்

வலியும் செயலும் வல்லா ராதலும்
ஆள்வினையும் உரைக்கும் ஆற்றற் கிளவி.

1:3-4 வல்லா ராற்றலும்.

39. இகுத்தல் என்னும் பெயர்

இகுத்தல் செகுத்தலும் வீழ்த்தலும் இசைக்கும்.

4 ஆகும் (மு.ரா) (36)

40. இடி என்னும் பெயர்

தகரமும் சுண்ணமும் தருப்பணப் பிண்டியும்
இனையவை இடி எனும் பெயரி னிசைக்கும்.

2:2-4 இடி என இசைத்தல் வேண்டும் (மு.ரா) (37)

41. இதழ் என்னும் பெயர்

பூவின் தோடும் பனையிதழ் போல்பவும்
வாயின் அதரமும் இதழ் எனும் வகைய,

2:3-4 இதழென வைப்பர் (மு.ரா) 4. வறைவர் (38)

42. இதை என்னும் பெயர்

இதையே மரக்கலப் பாயும் புதுப்புனமும்

3-4 பாய்புதுப் புனமே (மு.ரா) (39)

இதனை அடுத்து, இயல்:

இயலே சாயலு நடையு மாகும்

என்னும் நூற்பா மு.ரா. பிரதியில் உள்ளது.

2-4 சாயல் நடையென் றாகும் (40)

43. இரங்கல் என்னும் பெயர்

இரங்கல் அழுங்கல் அரவமும் இசைக்கும்

இரங்க லரவமு மழுங்கலு மிசைக்கும் (மு.ரா) (41)

44. இரலை என்னும் பெயர்

இரலைக் கிளவி தலைநாட் பெயரும்
ஊது கொம்பும் புல்வாய்க் கலையும்.

2. ஊதுங் கொம்பும் புல்வாயுங் கலையும் (மு.ரா) (42)

இதனை அடுத்து இராகம்:

கீதமு நிறனுஞ் செந்நிறக் கெழுவும்
ஆதரவு முடுகியலு மிராக மெனப்படும்.

2:1 தரவு (43)

45. இவர்தல் என்னும் பெயர்

சேறலும் எழுதலும் செலுத்தலும் விரும்பலும்
ஏறலும் இவர்வென் கிளவி கூறும்.

1:2-4 எழுச்சியுஞ் செறிபும் விரும்பலும். (44)

46. இழும் என்னும் பெயர்

இழு மெனல் ஓசையும் இனிமையு மாகும். (45)

47. இளமை என்னும் பெயர்

இளமை தன்மையும் காமமும் இசைக்கும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

இறத்தல், என்னும் பெயர்க்குக் கழிதல் என்னும்
பெயரில் காண்க (தேசிய நூலகப் பிரதி).
மு.ரா. பிரதியில் இக்குறிப்பு இல்லை.

48. இறுத்தல் என்னும் பெயர்

இறுத்தல். தங்கலும் சொல்லலும் இசைக்கும். (46)

49. இறும்பூது என்னும் பெயர்

வியப்புக் குழை தகைமை சிறுதூறு மலை என
நயப்புடை யைந்தும் இறும்பூது ஆகும்.

1:1-2 வியப்பிரா சீவஞ்
வியப்புக் கெழுதகைமை சிறுதூறு மலையென
நயப்புடை நான்கு மிறும்பூ தாகும். (மு.ரா) (47)

50. இறை என்னும் பெயர்

இறையே கடனும் இல்லின் இறப்பும்
சிறுதூறும் தங்கலும் உயர்ந்தோரும் சிறக்கும்.

2 சிறிதுந் 1 தங்கலு முயர்ந்தோற்கு முரிய.
1. சிறுமையும் (48)

இதனை அடுத்து உசா:

உசாவே கருதலுந் துணையு மாகும்
என்னும் நூற்பா மு.ரா. பிரதியில் உள்ளது. (49)

இதற்குப் பின்வரும் பிரதிபேதமும் தந்துள்ளார்.
உயா: உயாவே வருத்தமுங் கருதலுந் துணையும்.

51. உடு என்னும் பெயர்

உடுவே நாண்மீன் பகழியு மாகும். (50)

இதனை அடுத்து உணர்தல்:

உணர்தல் கருதல் தெளிவு மாகும்
என்னும் நூற்பா மு.ரா. பிரதியில் உள்ளது. (51)

52. உந்தி என்னும் பெயர்

உந்தி கொப்பூழும் தேருருளும் யாறும்
வந்துழி யாழ்க்கண்ணதோ ருறுப்பும் வரையார் (52)

53. உம்பர் என்னும் பெயர்

உம்பர் மேலிடம் அமரர்க்கும் உரித்தே.
உம்பர்மே விடமு மமரர்க்கு முரித்தே (மு.ரா) (53)

54. உருத்தல் என்னும் பெயர்

உருத்தல் தோன்றலும் வெகுட்சியு மாகும். (54)

55. உலவை என்னும் பெயர்

மரத்திற் கோடும் விலங்கின் மருப்பும்
உரைக்கிற் காற்றும் உலவைக் கிளவி.
மரத்தின் கோடு மருப்பு முதையும்
உணர்த்து மென்ப புலவைக் கிளவி (மு.ரா)
1:3-4 மருப்புங் காலும்
மரத்தின் கோடும் விலங்கின் மருப்பும்
வளைதையு முணர்த்து முலவைக் கிளவி. (55)

56. உழை என்னும் பெயர்

உழையே மானும் யாழிலோர் நரம்பும்
அருகிட னதுவும் அறைதற் குரித்தே.
1:3 யாழினோர் (மு.ரா.)
2:1-2 அருகி யிடனும் (மு.ரா.). அருகினதுவும் (56)

57. உறழ்வு என்னும் பெயர்

உறழ்வே இடையீடும் உணர்வும் ஒத்தலும்
செறிவும் என்றிவை செப்புதற் குரித்தே.
2:3-4 தெரிதற்கு முரித்தே. (57)

58. உறை என்னும் பெயர்

நீர்முத லாகிய துளியும் மருந்தும்
முதனோய் நீக்கி யின்பங் கொடுக்கும்
பொருளும் கூறை மாசு கழுவுவர் நீரும்
பாலுறு பிரையும் காரமும் ஒழுகலும்
ஓரிடைச் சொல்லும் உறையெனற் குரிய.

நீர்முத லாகியதுளியு மருந்துமுதல்
நோய் நீக்கி யின்பங் கொடுக்கும் பொருளுங்
கறை மாசுவர் கழுவுவர் நீரும்- (மு.ரா.) (58)

59. ஊக்கம் என்னும் பெயர்

வண்மையும் முயற்சியும் மனத்து மிகுதியும்
ஆண்மையும் உரைக்கும் ஊக்கக் கிளவி.

1:3 மனத்தின் (மு. ரா.)
2:1 உண்மையும் (மு.ரா) (59)

60. ஊர்தி என்னும் பெயர்

தேரும் மாவும் சிவிகையும் என்றிவை
ஊர்தி என்னும் பெயரிற் றோன்றும். (60)

61. ஊறு என்னும் பெயர்

ஊறே இடையூறும் ஊறும் ஆகும்.

3-4 உற்றறி புலனும் (மு.ரா) முற்றிடு கொலையும்
(அச்சு) (61)

62. எகினம் என்னும் பெயர்

கவரியும் மாவும் அன்னமும் நாயும்
எகினம் என்பர் இயல்புணர்ந் தோரே.

1:1-2 கவரி மாவும் (மு.ரா.) (62)

இதன்பின் மு.ரா. பிரதியில் காணப்படும் இருநூற்பாக்கள் ஏட்டுப் பிரதியில் இல்லை.

எதிர்தல்

மலைதலுந் தோன்றலு மெதிர்த லாகும். (64)

எதிரி

* எதிரி யிருபெயர்ப் படைக்கு மெய்தும். (65)

63. எல் என்னும் பெயர்

எல்லே ஒளியும் இரவிற் பொழுதும்.

3-4 மிரவியிராப் பொழுதும்.
மிரவியும் பொழுதும்.
மிரவியும் பொழுதும் (அச்சு) (66)

64. எல்லை என்னும் பெயர்

எல்லை பகலும் அளவும் இசைக்கும்.

1-2 எல்லை பகலவனும்
2-3 பகலு மளவையும் (மு.ரா) (67)

65. எள்ளல் என்னும் பெயர்

எள்ளல் நகையும் இகழ்ச்சியும் ஆகும். (68)

66. எற்றல் என்னும் பெயர்

எற்றல் புடைத்தலும் எறிதலும் ஆகும்.

67. எற்றுதல் என்னும் பெயர்

எற்றுதல் வலித்தல் துணித்தலை இசைக்கும்
மற்றது நினைவிற் குரித்து மாகும்.

எற்றுதல் வலித்தலுந் துளைத்தலு மிசைக்கும் (மு.ரா.)
எற்றல் வலித்தலுந் துணிவு மாகும்.
எற்றுதல் புடைத்தலு மெறிதலு மிசைக்கும்(அச்சு) (69)

68. எற்றெனல் என்னும் பெயர்

எற்றெனல் எறியெனல் என்னலும் ஆகும். (70)

69. எஃகு என்னும் பெயர்

எஃகே வேலொடு கூர்மையும் இசைக்கும். (62)

இங்கே ஏண் மு.ரா. பிரதியில்,
ஏணே வலிமையு நிலையுடைமையு மாகும். (71)

இந்நூற்பா ஏட்டுப் பிரதியில் இல்லை.

70. ஏணி என்னும் பெயர்

ஏணி உலகும் எல்லையும் ஆகும்.
2 உலகமும், மான்கன்றும் (அச்சு) (72)

71. ஏமம் என்னும் பெயர்

சேமம் காவல் இன்பம் இரவு பொன்
ஏமாப்பு மயக்கம் ஏமம் ஆகும். (73)

72. ஏவல் என்னும் பெயர்

ஏவல் வியங்கோளும் ஆணையும் ஆகும். (74)

73. ஏற்றல் என்னும் பெயர்

ஏற்றல் கோடலும் எதிர்ந்து பொருதலும். (75)

74. ஏனை என்னும் பெயர்

ஏனை ஒழிவும் இடைச் சொல்லும் ஆகும்.
ஏனையது ஒழிவும் இடைச் சொல்லு மாகும்.

ஏனையென்னும் பெயர்:

ஏனை மீன் விகற்பமு ஒழிவுமாகும் (அச்சு) (76)

75. ஓதி என்னும் பெயர்

மாதர் மயிரும் மலையும் அன்னமும்
ஓதி யென்ப் ருணர்ந்திசி னோரே.

1:3 மாலையும் (மு.ரா) (77)

76. ஓரி என்னும் பெயர்

ஆடவர் மயிரும் முசுவும் ஓரி. (78)

77. ஓரை என்னும் பெயர்

கூட்டமும் மகளிர் விளையாட்டும் இராசிக்
கூற்றையும் ஓரைக் கிளவி கூறும். (79)

78. கடி என்னும் பெயர்

கடி என் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்கம்
மிகுதி சிறப்பே அச்சமும் அன்றி
மெய்ப்படத் தோன்றும் பொருட்டும் ஆகும்
அமையமும் கரிப்பும் ஆகலும் உரித்தே
வாசமும் பேயும் மணம் புணர்வும் ஆகும்.

3:3-4 அச்ச முன்னர் (மு.ரா.)
4:2-4 தொன்று மப்பொருட் டாகும் (மு.ரா)
5:1-ஐயமும் (மு.ரா.)
6: வாசமும் பேயு மணம்புணர்வு மென்றிவை
காசின் றுரைக்குங் கடியென் கிளவி.
3: முன்னென்
4: றாயீ ரைந்து மையமுங் கரிப்பும்.

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
வரைவே மிகுதி புதுமை தோற்றம்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா குமே
ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே (82)

79. கடிகை என்னும் பெயர்

கடிகை பேதம் சமயங்கள் நாழிகை.

கடிகை வேகஞ் சமய நாழிகை (மு.ரா.)

3-4 துண்டம் நாழிகை. (83)

80. கடு என்னும் பெயர்

கடுவே கடுமரம் விடமு மாகும். (84)

81. கட்சி என்னும் பெயர்

காடும் கூடும் கட்சி ஆகும். (80)

82. கட்டளை என்னும் பெயர்

நிறையறி கருவியும் உரையறி கருவியும்
பிறவி னொப்பது கட்டளைப் பெயரே.

2:1-2 பிறவின வொப்புங் (மு.ரா.) (81)

83. கணம் என்னும் பெயர்

கணமே வட்டமும் திரட்சியும் ஆகும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

84. கணை என்னும் பெயர்

கணையே திரட்சியும் பகழியும் ஆகும்.

85. கண்டகம் என்னும் பெயர்

சுரிகை ஒள்வாள் முள் இவை மூன்றுங்
கருதிற் கண்டகம் என்றே கருதுவர்.

1:2-3 யுடைவாள் முள்ளியிம்
2:3-4 என்னக் கருதுவர். (85)

86. கண்டம் என்னும் பெயர்

கண்டம் மெய்புகு கருவி கழுத்துத்
துண்டம் திரைவாள் தேசமும் ஆகும். (86)

87. கதலிகை என்னும் பெயர்

கதலிகை வாழையும் துகிற்கொடியும் ஆகும்.

கதலி—1-2 கதலி வாழையும் (மு.ரா.) (87)

88. கதழ்வு என்னும் பெயர்

கதழ்வே வேகமும் சிறத்தலும் காட்டும்.

3. வலித்தலும், சுறித்தலும். (88)

89. கந்தம் என்னும் பெயர்

கந்தம் புலனே கிழங்கும் கடியும்.

3-4 கடியுங் கிழங்கும் (மு.ரா.),
கிழங்குங் கருணையும். (89)

90. கந்தரம் என்னும் பெயர்

கந்தரம் மலைமுழை கழுத்தும் ஆகும்.
வந்துழி மேகப் பெயரும் வரையார். (90)

91. கம்பலை என்னும் பெயர்

இன்னாங்கு ஓசை நடுக்கம் அச்சம்
கன்னித் தமிழோர் கம்பலை யென்ப.

1 இன்னாங் கச்ச நடுக்க மோசை (மு.ரா) (91)

92. கயம் என்னும் பெயர்

கயமே ஆழம் நீர் யானைக் கன்றும்.

1-2 கயமே யாழ்நீரும் (மு.ரா.), 2 யாழமும் (92)

93. கயவு என்னும் பெயர்

கயவே பெருமையும் மென்மையும் காட்டும்.

3. மேன்மையும் (மு.ரா) (93)

94. கரணம் என்னும் பெயர்

சொல்லிய முதற்பொருட் டுணைக்கா ரணமும்
பல்வகை யாடலும் மனத்தின் பகுதியும்
கலவியும் எண்ணும் கரணம் என்றாகும். (94)

95. கரில் என்னும் பெயர்

கரிலே கொடுமையும் கூர்த்தலும் காழ்த்தலும்.
கரிலே கூர்தலுங் காழ்த்தலுங் கெழுமையும் (மு.ரா.)

2-4 கூர்மையுங் குற்றமுங் கார்ப்பும் (95)

96. கருங்கை என்னும் பெயர்

கொன்றுவாழ் மொழியினும் வன்பணித் தொழிலினும்
கன்றிய தொன்மை கருங்கை எனப்படுமே.

2:2 தொழின்மை (மு.ரா), 4. எனப்படும் (மு.ரா.) (96)

97. கருவி என்னும் பெயர்

கவசம் பல்லியம் தொடர்பு யாழ் படைக்கலம்
கனக முதற்பூண் தொகுதி மேகம்
கலனை கசை இவை கருவி யாகும்.

3. கல்லிணை யுபகரணங் கழறுங் கருவி. (97)

98. கரைதல் என்னும் பெயர்

கரைதல் மொழிதலும் கூவுதலும் ஆகும். (98)

99. கலித்தல் என்னும் பெயர்

கலித்தல் எழுச்சியும் ஒலித்தலும் காட்டும் (99)

100. கலுழி என்னும் பெயர்

கலுழி கலங்கனீர் முல்லைநிலக் கான்யாறு.

3-4 கான்யாறு மாகும் (மு.ரா)

101. கலை என்னும் பெயர்

கலையே நூல் கல்வி காஞ்சி ஆடை
முசுவும் மானேறும் கால நுட்பமும்.

2. முசுமா னேறு கால நுட்பம் (மு.ரா) (101)

102. கவலை என்னும் பெயர்

கவலை துன்பமும் கவர்த்த நெறியும்.

3-4 கவர்வழியு மாகும். (103)

103. கவனம் என்னும் பெயர்

கவனம் கலக்கமும் காடும் ஆகும்.

2-3 கடுப்புங் காடும் (அச்சு) (102)

104. கவிகை என்னும் பெயர்

கவிகை குடையும் கொடையு மாகும்.

2-3 கொடையுங் குடையும் (104)

105. கழங்கு என்னும் பெயர்

கழங்கு அணங்காட்டொடு கொடிக்கழலும் ஆகும்.

1-2 கழங்கோ ராடலுங் (105)

106. கழல் என்னும் பெயர்

காலி னடியும் காற்றொடு தோலும்
காலி னணியும் கழல்எனப் படுமே.

1:3 காறொடு (அச்சு) (106)

107. கழித்தல் என்னும் பெயர்

கழிதலும், இறத்தலும் எனவிரு கிளவியும்
மிகுதலும் கடத்தலும் சாதலும் விளம்பும்.

2:1 மிகுத்தலும் (107)

108. கழுது என்னும் பெயர்

வண்டும் பேயும் இதணமும் கழுதுஆம்.

3. இதணும். (108)

109. கழுமல் என்னும் பெயர்

கழுமல் பற்றும் மயக்கமும் ஆகும்.

110. களம் என்னும் பெயர்

மிடறு பொருநிலம் கருமைஇம் மூன்றும்
களமென் றுரைப்பர் கருதுங் காலை.

1:3-4 கருமை களரிவை (மு.ரா.)
2:4 காலே (110)

111. களரி என்னும் பெயர்

கருமஞ்செய் யிடனுங் கானமும் பொருநிலனும்
களரி என்பர் கற்றறிந் தோரே.

1:2 யிடமுங் (மு.ரா) 3. களமும் (அச்சு) (111)

களன்

பொய்கையுந் தொடர்பு மருத நிலனும்
எய்திய களனொடு நான்கும் களனே. (112)

112. கறை என்னும் பெயர்

நிறமும் உதிரமும் உரலும் திறை யும்
கறையென் கிளவிப் பெயரெனக் கருதுவர்.

1:3-4 முரலு மிறையும், முரலு நிறையும்
2:2-4 கிளவி கருதுங் காலை. (மு.ரா) (114)

113. கற்பம் என்னும் பெயர்

கற்பம் அமருலகும் கமலத்தோ னாயுளும்.
1:2 கற்ப மூழியிங் (113)

114. கனம் என்னும் பெயர்

கனமே செறிவும் மேகமும் ஆகும்.

கனமே வட்டியுந் திரட்சியு மேகமும் (மு.ரா.) (116)

115. கனலி என்னும் பெயர்

கனலி தீயும் கதிரவனும் ஆகும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

116. கனவு என்னும் பெயர்

கனவே மயக்கமும் துயிலும் ஆகும்.

8, துயில்வும் (மு.ரா.) (117)

117. கன்னல் என்னும் பெயர்

சருக்கரை கரகம் நாழிகை வட்டில்
உரைக்கிற் குடமும் நாழிகையும் கன்னல்.

2:3-4 குடமிக்கு நாழிகையும் (மு.ரா.) (115)

காவே காத்தலுங் காவு மாகும். (118)

118. காசு என்னும் பெயர்

காசு மணியும் குற்றமும் ஆகும்.

3-4 குற்றமுங் காட்டும் (மு.ரா.) (119)

119. காசை என்னும் பெயர்

காசை நாணலும் காயா மரமும். (120)

120. காஞ்சி என்னும் பெயர்

எதிரூன் றுதலும் நிலையின்மையும் பெருமையும்
அணியும் மேக லையும் ஒருமரப் பெயரும்
கருதுங் காஞ்சி யென்னுங் கட்டுரை.

1:3-4 நிலைய தின்மையும் (மு.ரா.)
2 மணிமே கலையு மோர்மரப் பெயருங் (மு.ரா.)
எதிரூன்ற விலையின்மை மேகலை யோர்மரங்
கருதுங் காஞ்சி யென்னுங் கட்டுரை-என்றும்
பாடம். (121)

121. காதை என்னும் பெயர்

காதை மொழியும் கதையும் ஆகும். (122)

122. காயம் என்னும் பெயர்

காயம் யாக்கையும் காழ்ப்பும் ஆகும். (123)

3. கார்ப்பும்

123. காரி என்னும் பெயர்

ஆல நஞ்சே சனிக்கோள் மாசாத்தன்
கார் இருணிறத்தன காரி எனப்படும்.

காரி வடுகனுஞ் சாத்தனுஞ் சனியும்
ஊர்ப்புள்ளுங் கடுவும் வள்ளலு மாகும். (மு.ரா.)

2:1 ஓர் புள்ளுங்
ஆலநஞ் சேசனிக் கோண்மா சாத்தனார்
இருணிறத் தனவுங் காரியெனப் படுமே. (அச்சு) (125)

124. காரிகை என்னும் பெயர்

அழகும் அழகுடை மாதரு மதனொடு
கட்டளைக் கலித்துறையும் காரிகை எனப்படும்.

1 அழகு மவ்வழ குடைய மாதருங் (மு.ரா.)
2:3-4 காரிகை யென்ப (மு.ரா.) (126)

125. கார் என்னும் பெயர்

காரே மேகமும் மாரிக் காலமும்
நீரும் கருமையும் நிகழ்த்துங் கிளவி. (124)

காலை

காலைநாட் கூறுங் காலமு மாகும்.
1-2 காலம்நாட் கூறுங்

126. காழ் என்னும் பெயர்

கோல்பரல் சேகு மணியின் கோவையும்
மாலையும் ஒளியும் காழென் றாகும். (128)

127. கானல் என்னும் பெயர்

கானல்கதி ரொளியும் கடற்சார்பில் மலைச்சாற்பிற்
றானெழு நன்மரச் சோலையும் தழுவும். (130)

128. கான் என்னும் பெயர்

கானே விரையும் காடும் ஆகும். (129)

129. கிழி என்னும் பெயர்

எழுது படமும் இருநிதிப் பொதியும்
கிழிபடு துகிலும் கிழிஎன்ற் குரிய. (131)

130. குயம் என்னும் பெயர்

அரிவையர் முலையும் கொடுவாளும் இளமையும்
கருதிலிம் மூன்றும் குயம்எனக் கருதுவர். (132)

131. குயிறல் என்னும் பெயர்

குயிறல் கூவலும் செறிதலும் குடைதலும்.

2. கூறலுங் (அச்சு)
3-4 குடைதலுஞ் செறிதலும் (மு.ரா.) (133)

132. குரல் என்னும் பெயர்

குரலே கதிரும் யாழிலோர் நரம்பும்.

3. யாழினோர் [மு.ரா.]
1-2 குரலே பயிர்க்கதிரும் (அச்சு) (134)

133. குரை என்னும் பெயர்

குரை யே ஒலியும் இடைச் சொல்லும் ஆகும்.

3-4 இடைச்சொலுங் கூறும். [மு.ரா] (135)

134. குலம் என்னும் பெயர்

குலமே இல்லமும் குடிமையும் கூட்டமும், (136)

135. குவலையம் என்னும் பெயர்

நெய்தலும் நிலனும் குவலையம் என்ப.

3-4 குவலய மென்ப (மு.ரா) (137)

136. குழல் என்னும் பெயர்

குழலே துளையும் மயிரும் கூறும். (138)

137. குழை என்னும் பெயர்

குழையே குண்டலம் தளிர்சேறும் கூறும்.

4 ஆகும் [மு.ரா] (139)

138. குளிர் என்னும் பெயர்

கிளிகடி கருவி இலைஃழக் கரிகருவி
குளிரே ஞெண்டும் முழவும் ஆகும்.

2:2-3 ஞெண்டு குடமுழவும் (மு.ரா)
குளிரிப் பெயர்குட முழவு ஞெண்டும். (140)

139. குறிஞ்சி என்னும் பெயர்

மலைச்சார்பு நிலனும் செம்மலர் முள்ளியும்
குறிஞ்சி அந்நிலப் பாடலும் பெறுமே.

1:1-2 மலைச்சார் நிலனும் (மு.ரா)
2 குறிஞ்சி நிலப் பாடலுங் குறிஞ்சி
யென்றாகும் (அச்சு) (141)

140. கூலம் என்னும் பெயர்

கலப் பெயர்பல் பண்டமும் தெருவும்
வார்புனற் கரையும் வந்துழிக் கொளலே.

1. கூலமங் காடியும் பலபண்டமுந் தெருவும்[மு.ரா]
கூலிப்பெயர் பண்டமும் பல்பண்டத் தெருவும்
[அச்சு] (142)

141. கூழ் என்னும் பெயர்

பல்வகை யுணவும் பயிரும் பொன்னும்
கொள்ப மாதோ கூழ் என் கிளவி. (143)

142. கூளி என்னும் பெயர்

நட்புத் தொகுதி பேய் என மூன்றும்
வைத்தனர் கூளி ஆக வகுத்தே. (144)

143. கேவலம் என்னும் பெயர்

கேவலம் தனிமை முத்தியும் ஆகும்.
1-2 கேவலந் தனிமையு (மு.ரா.) (145)

144. கேள்வி என்னும் பெயர்

கேள்வி கல்வியும் கேள்வியும் கிளக்கும்.
3 செவியும் (மு.ரா.] (146)

145. கைக்கிளை என்னும் பெயர்

ஒருதலைக் காமமும் யாழிலோர் நரம்பும்
தெரியிற் கைக்கிளை எனும் பெயர் சிவணும் (மு.ரா)
2:3 எனப்பெயர் [மு.ரா] (147)

146. கொண்டல் என்னும் பெயர்

கொண்டல் மேகமும் கூதிர்க்கீழ் காற்றும்.
3. கூதிர்கீழ் [மு.ரா] (148)

147. கொற்றம் என்னும் பெயர்

கொற்றம் அரசியலும் வெற்றியும் ஆகும். (149)

148. கொன் என்னும் பெயர்

அச்சம் பயமிலி காலம் பெருமைஎன்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

1:2 பயனிலி [மு.ரா]. (150)

கோ

அந்தரங் குலிசம் பாரினோ டத்திரம்
வந்த நீர்திசை மலைவேன் மன்னவன்
விழிபசு கோவென வேண்டினர் புலவர். (அச்சு)

மு.ரா. பிரதி இது ஏடுகளில் காணப்பெறாதது என்பதனைத் தெரிவிக்கிறது. (151)

149. கோடரம் என்னும் பெயர்

கோடரக் கிளவி குரங்கொடு மரத்திற்
கோடும் பொதும்பும் கூறும் என்ப.

2:2 பொதும்பரும் (மு.ரா.) (152)

150. கோடு என்னும் பெயர்

கோடே சங்கும் ஊது கொம்பும்
மாவின் மருப்பும் மரத்திற் பணையும்
நீள் புனற் கரையும் நிகழ்த்துங் கிளவி. (153)

151. கோதை என்னும் பெயர்

பூப்புனை மாலையும் மாலை புனை மாதரும்
தோற்புனை வின்னாண் டொடர்கைக் கட்டியும்
கோச்சேரன் பெயரும் கோதையென் றாகும்.

3:1 கோச்சே ரன்பெயர் மயிர்காற்றும் கோதை (அச்சு)
3:3-4 கூந்தலுங் கோதை (154)

152. கோல் என்னும் பெயர்

இறைவன்முறை நடாத்தலும் யாழ் நரம்பும் அம்பும்
நிறை துலாமும் அஞ்சன மெழுதுங் கருவியும்
குதிரைமத் திகையும் கோல்என் றாகும்.

1:1-2 இறைமுறை நடாத்தலும் (மு.ரா.)
2:3 நிறையறி துலாமு மஞ்சன மெழுதுங்
கருவியுங் குதிரைமத் திகையுங் கோலே. (மு.ரா) (155)

153. கோள் என்னும் பெயர்

அலர்கதிர் முதலா வனைவரும் நாளும்
கொலையும் இடையூறும் கொள்கையும் கோளே.

கோளே குணமுங் கோட்பாடுங் கோளும்
அலர்கதிர் முதலா மமரரு நாளும்
கொலையு மிடையூறுங் கோளென் றாகும். (156)

சாமம்

யாமமோர் வேத முபாயஞ் சாமம். (157)

154. சாறு என்னும் பெயர்

விழவும் கள்ளும் சாறு என விளம்புவர். (158)

155. சிக்கம் என்னும் பெயர்

உறியும் மயிர்வார் சீப்பும் சிக்கம்.

உச்சியு மயிர்வார் சீப்பு முறியுஞ்
சிக்க மென்னும் பெயரொடு சிவணும் (மு.ரா.)

1:2-3 மயிரணர் சீப்பு
2 சிக்க மென்பர் தெரிந்திசி னோரே. (159)

156. சித்திரம் என்னும் பெயர்

மெய்யே போலப் பொய்யைப் புணர்த்தலும்
செய்கோல் வடிவும் அழகும் சித்திரம்.

1:3-4 பொய்யவை யுரைத்தலும் (மு.ரா)
பொய்யவை யுணர்த்தலும். (160)

157. சிகரம் என்னும் பெயர்

சிகரம் துவலையும் கரகமும் ஆகும். (161)

158. சிலம்பு என்னும் பெயர்

சிலம்பே ஓசையும் மலையும் செப்பும்
பொலஞ்செய் காலணியும் புகறற்கு முரித்தே.
சிலம்பே மலையு மொலியு மாகும் (மு.ரா)
2:3 புணர்தற்கு (மு.ரா) (162)

159. சிலை என்னும் பெயர்

வில்லையும் மலையையும் சிலை என விளம்புவர். (163)

160. சிறை என்னும் பெயர்

சிறையே காவலும் இறகும் செப்பும்.
4 செப்புவர் (மு.ரா) (164)

161. சினை என்னும் பெயர்

சினையே கருவும் உறுப்பும்மரக் கோடும். (165)

162. சீர் என்னும் பெயர்

பல்வகை யியங்க லோசை பாரம்
ஒல்லுதல் காத்தண்டு ஒண் புகழ் அழகு
செல்வம் சீர்மை சீர்என் றாகும்.
1:2-3 யிங்களி னோசை (மு.ரா)
2:2 காற்றண்டை: (அச்சு)

163. சுடர் என்னும் பெயர்

மதியமும் ஞாயிறும் கனலியும் மற்றைப்
பொதுவுறு மொளியும் சுடர்எனப் புகல்வர்.
1:1 மதியு (மு.ரா.) (167)

164. சுடிகை என்னும் பெயர்

சுடிகை சுட்டி மயிர்முடியும் ஆகும்.
2 சுட்டியு (மு.ரா.) (168)

165. சூர் என்னும் பெயர்

சூர்தெய்வம் வஞ்சம் நோய் அஞ்சாமையும் சொல்லும்.
சூர்தெய்வம் வஞ்ச நோயஞ் சாமை (மு.ரா)
2-4 அச்சநோ யாகு மென்ப (அச்சு) (169)

166. சூழி என்னும் பெயர்

சூழி முகபடாம் வாவியும் சொல்லுவர்.
4. சொல்லும் (மு.ரா) (170)

167. செச்சை என்னும் பெயர்

வெட்சியும் வெள்ளாட் டேறும் செச்சை. (171)

168. செத்து என்னும் பெயர்

செத்தென் கிளவி கருதொடு ஒப்பே.
செத்து
செத்தென் கிளவி கருத்தோ டொப்பே. (மு.ரா) (176)

169. செம்மல் என்னும் பெயர்

இறைவன் பழம்பூ வீரர் புத்திரர்
அறையிற் பெருமையோடு ஐந்துஞ் செம்மல்,
2:2 செம்மையோடு (அச்சு) (172)

170. செயிர் என்னும் பெயர்

செயிரே குற்றமும் சினவலும் ஆகும். (173)

171. செழுமை என்னும் பெயர்

செழுமை வளனும் கொழுப்பும் ஆகும். (174)

172. சேண் என்னும் பெயர்

சேணே உயரமும் நீளமும் ஆகும்.

2. உயர்வும் (மு.ரா.), உலகும். (175)

173. சேய் என்னும் பெயர்

செவ்வாய் முருகன் இளமை புத்திரன்
இவ்வா றெல்லாம் சேய்என விளம்புவர்.

1:3-4 இளமையிற் புத்திரன் (மு.ரா.) (177)

174. ஞெள்ளல் என்னும் பெயர்

சோர்வு மிகுதல் உடன்படுதல் பூசல்
மென்மையொடு ஒலியும் தெருவும் ஞெள்ளல்.

1:3 உடன்படல், படுகர் (அச்சு)
2 நாலினெ டொலியுந் தெருவு ஞெள்ளல்.
ஞெள்ளல் தெருவு மேன்மையுநிகழ்த்தும்
உள்ளுங் காலை விரைவு மாகும். (மு.ரா.) (178)

175. தடம் என்னும் பெயர்

தடமே பெருமை கோட்டம் மலையாம்.

3-4 கோட்டக மலையாம் (மு.ரா.)
கோட்ட மலை யாகும். (179)

தண்டு

தண்டு மூன்று தடியுந் தண்டாம். (180)

176. தண்ணடை என்னும் பெயர்

தண்ணடை நாடும் ஊரும் ஆகும். (181)

177. தபனன் என்னும் பெயர்

அனலும் அருக்கனும் சாதலும் சொல்லும் (182)

178. தபுதல் என்னும் பெயர்

தபுதல் கெடுதலும் சாதலும் சொல்லும். (183)

179. தரணி என்னும் பெயர்

தரணி மலையும் நிலனும் இரவியும்.

2-3 நிலனும் மலையும் (மு.ரா.) (184)

180. தவவு என்னும் பெயர்

தவவுஎன் கிளவி மிகுதலும் குறைதலும்.

தவ

1-2 தவவென் கிளவி (மு.ரா.) (185)

181. தளிமம் என்னும் பெயர்

தளிமம் அழகொடு மெத்தையும் ஆகும். (186)

182. தன்மை என்னும் பெயர்

தன்மை இயல்பும் அழகும் ஆகும்.

3-4 தன்மையிடப் பொருளும் (மு.ரா)

தன்மையிடச் சொலும் (187)

183. தா என்னும் பெயர்

தாவே வலியும் வருத்தமும் ஆகும்.
தாஎன் கிளவி இடையீடும் ஆகும்.
தாவு (மு.ரா) (195)

184. தாணு என்னும் பெயர்

குற்றியையும் தூணையும் தாணு என்ப. (188)

185. தாபரம் என்னும் பெயர்

மரமும் மலையும் போல நிற்பன
தகுபெயர் தானே தாபரம் ஆகும்.
3:1 தருபெயர் (மு.ரா.) (194)

2:3 தாவரம் (மு.இரா)

186. தாமம் என்னும் பெயர்

தாமன் ஒளியும் தார்மாலையும் ஆகும்.
3-4 தார்மாலையுமாம் (மு.ரா) (189)

187. தாயம் என்னும் பெயர்

தாயம் உரிமையும் தங்குடித் தமரும். (190)

188. தாரம் என்னும் பெயர்

தாரம் அரும்பண்டம் வெள்ளி அதனொடும்
சேருமேழ் நரம்பிலோர் நரம்பும் வெண்கலமும்.

1-4 அதனொடு (மு.ரா)
2:2-4 நம்பிலோர் நரம்புஞ் செப்பும் (மு.ரா.) (192)

189. தார் என்னும் பெயர்

பூவும் பூமாலையும் போர்க்கொடிப் படையும்
ஆவினுக் கணியும் கிண்கிணி மாலையும்
தாவில் பெயர்க்கொடை தார்என் றாகும்.

1:3-4 போர்முன்செல் கொடிப்படையும் (மு.ரா)
2:1-2 மாவினுக் கணியுங் (மு.ரா) (191)

190. தாலம் என்னும் பெயர்

தாலம் தரைபனை நாவும் உண்கலனும்.

3-4 நாவுண் கலமே (மு.ரா) (193)

191. தானை என்னும் பெயர்

கைப்படை காலாட் படையே ஆடை
தப்பின் மூன்றுந் தானை ஆகும்.
எய்திய மிகுபடைப் பெயர்க்கும் ஆகும்.

3. எதிரு மிருபடைப் பெயர்க்கு மெய்தும் (அதிகம்)
(மு.ரா.) (196)

192. திணை என்னும் பெயர்

குலமும் ஒழுக்கமும் ஒழுக்க நிகழ்ந்த
நிலனும் திணை என நிகழ்த்துங் கிளவி. (197)

193. துஞ்சல் என்னும் பெயர்

சாதலும் நிலைத்தலும் உறங்கலும் துஞ்சல், (198)

194. துணங்கை என்னும் பெயர்

துணங்கை ஆடலும் திருநாளும் விழவும். (199)

195. துத்தி என்னும் பெயர்

சுணங்கும் பொறியும் தூக்கமும் துத்தி.

3. துய்ப்பனவுந் (200)

196. துப்பு என்னும் பெயர்

வண்ணம் பவளம் வலியொடு அரக்கு என்
றெண்ணிய நான்குந் துப்புஎன விசைப்பர்.

1:3 வலியோடு (மு.ரா.) (201)

197. துன்னல் என்னும் பெயர்

துன்னல் குறுகலும் செறிவும் சொல்லும். (202)

198. தூ என்னும் பெயர்

பகையும் தசையும் பறவை யிறகும்
தொகுபெயர் தானே தூஎன் றாகும். (204)

இந்நூற்பா மு.ரா. பிரதியில் தூவி என்னும் தலைப்பில் தரப்பட்டுள்ளது.

199. தூங்கல் என்னும் பெயர்

தூங்கல் ஆடலும் தாழ்வும் வேழமும்.

3-4 தாழ்வும் சொல்லும் (203)

தூவி

பசையுந் தசையும் பறவை யிறகும்
தொகுபெயர் தானே தூவியென் றாகும். (204)

200. தெவிட்டல் என்னும் பெயர்

ஒலித்தலும் நிறைத்தலும் உமிழ்த்தலும் மிடைதலும்
தெவிட்டல் எனனும் கிளவியிற் சிறக்கும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இந்த இடத்தில் இல்லை. 225 ஆம் நூற்பாவாக அமைத்துத் தரப்பட்டுள்ளது. (225)

201. தேசிகம் என்னும் பெயர்

தேசிகம் திசைச் சொல்லும் அழகும் ஆகும்.

2-4 திசைச்சொலு மழகுஞ் செப்பும் (மு.ரா.) (205)

202. தொடி என்னும் பெயர்

ஒருபலம் வளையே தொடிஎன் றாகும்.

தொடியே யொருபலம் வளையு மாகும் (மு.ரா) (206)

203. தொடுத்தல் என்னும் பெயர்

வளைத்தலும் பிணித்தலும் பற்றலும் என்றிவை
தொடுத்தல் என்னும் பெயரிற் றோன்றும்.

தொடுதல்

தொடுதலே வளைத்தலும் பிணித்தலும் பற்றலும்.
(மு.ரா) (207)

204. தொண்டு என்னும் பெயர்

ஒன்பதும் கேண்மையும் புதுமையும் பழமையும்
தொண்டு என் கிளவி தொழும்பும் ஆகும்.

தொண்டென் கிளவி தொழும்பென் றாகும் (மு.ரா.)
(208)

205. தொய்யில் என்னும் பெயர்

உழவு நிலத்தி லெழுவதோர் புதலும்
குழைவும் மகிழ்ச்சியும் அழகும் இவையொடு
துயரும் முலைமேற் றொய்யிலும் தொய்யில்.

1:1-2 உழவு நீரி (மு.ரா,)

2:1 குழையு

3. துயருங் கறுந் தொய்யிற் கிளவி (மு.ரா.) (209)

206. தோடு என்னும் பெயர்

தோடே தொகுதியும் பனையிதழ் போல்பவும்
பூவி னிதழும் புகலுங் கிளவி. (210)

207. தோல் என்னும் பெயர்

தோலே யானையும் வனப்பும் தோற்பலகையும். (211)

208. நகை என்னும் பெயர்

மகிழ்ச்சியில் விளையாட்டில் வருநகை தானே
இகழ்ச்சி யிடத்து மெய்துநற் குரித்தே.

1:1-2 மகிழ்ச்சியின் விளையாட்டின் (மு.ரா.) (212)

209. நந்தல் என்னும் பெயர்

நந்தல் கேடும் ஆக்கமும் ஆகும். (213)

210. நவம் என்னும் பெயர்

ஒன்பதும் கேண்மையும் புதுமையும் பழமையும்
தொண்டும் நவம் எனச் சொல்லினர் புலவர்.

3ஆம் அடியாக, தொண்டென் கிளவி தொழும்பு மாகும். (மு.ரா.)

தொண்டு என்பதில் விட்ட பொருள் இதனுட் கூறப் பட்டதென்று தெரிகிறது. (மு.ரா. குறிப்பு) (214)

211. நவிரம் என்னும் பெயர்

மலையும் உச்சியும் மருதயாழ்த் திறனும்
நவிரம் என்று நடைபெற் றியலும்.

2:1-2 நவிர மெனும் பெயர் (மு.ரா.) (215)

212. நளி என்னும் பெயர்

நளியே செறிவும் சீதமும் பெருமையும். (216)

213. நனவு என்னும் பெயர்

நனவே தேற்றமும் துணிவும் தெளிவும்.

நனவே களனு மகலமு முணர்ச்சியும்
தெளிவு மதனொடு செப்பற்கு முரித்தே. (மு.ரா.)
1:2-4 யுணர்ச்சியு மகலமு மாகும். (217)

214. நனை என்னும் பெயர்

நனைபூ மொட்டிற்கும் கள்ளிற்கும் நாமம். (218)

215. நாகம் என்னும் பெயர்

அரவும் அமரர் நாட்டொடு நாடும்
மலையும் யானையும் ஒருமரப் பெயரும்
தெரியின் நாகம் எனப்பெயர் சிவணும்.

1 அரவுங் காரீயமு மமரர்நாட் டொருபெயரும் (மு.ரா.)
1:3-4 மும்பர் நாடும் (219)

216. நாகு என்னும் பெயர்

ஆவும் எருமையும் மரையும் அல்லன
ஈனா விளமையும் செழுமையிள மரமும்
நீர்வாழ் சாதியுள் நந்தும் என்றிவை
நாகு என்னும் பெயரின் நடைபெற் றியலும்.

2:3-4 கெழுமையு மிளமரமும். (மு.ரா)

கோடும் எருமையும்மரையு நத்தும்
மீன்பெணும் இளைமையும் கெழுமையும் இளைமரமும்
நாகெனும் பெயரின் நடைபெற் றியலும். (அச்சு)

அச்சுப்பிரதிப் பாடம் தவறாகவுள்ளது என்பது
மு.ரா. குறிப்பு. (220)

217. நாஞ்சில் என்னும் பெயர்

எயிலுறுப்பு உழுபடை நாஞ்சில் ஆகும். (221)

218. நாண் என்னும் பெயர்

மாதர் மங்கல வணியும் மானமும்
பாசமும் நாண்எனும் சொல்லிற் பயிலும். (222)

219. நியமம் என்னும் பெயர்

நியமம் அங்காடியும் தெருவும் நியதியும். (223)

220. நிழற்றல் என்னும் பெயர்

நிழற்றல் நுணுக்கமும் நிழற்செயலும் ஆகும்.
1. நிழத்தல்

நிறைத்தல்

ஒலித்தலு மிழற்றலு முமிழ்தலு மிடைதலுந்
தெவிட்ட லென்னுங் கிளவியிற் சிறக்கும்.
ஒலித்தலு நிறைத்தலு முமிழ்தலு மிடைதலுந்
தெவிட்ட லென்னுங் கிளவியிற் சிறக்கும். (225)

221. நீலம் என்னும் பெயர்

நீல மணியும் நீரிலெழு நெய்தலும்
நீல நிறத்தனவும் நீலம் எனப்படுமே. (226)

நீவல்

நீவ லென்பது தடவலுந் துடைத்தலும். (227)

222. நீவி என்னும் பெயர்

நீவி என்பது அழித்தலும் துடைத்தலும்
ஆடை கொய்சகம் ஆகலு முரித்தே (மிகை) (மு.ரா.)
1:1 நீவல் (228)

223. நூல் என்னும் பெயர்

நூலே எண்ணும் பனுவலும் ஆகும்.
2 எண்ணூலும் (மு.ரா) (229)

நூழில்

குவவிற் படர்வதோர் கொடிப்புல்லு நூழில்
உவமையொ டடுத்தன குவித்தற்கு முரித்தே. (230)

நூறு

நூறே பொடியு நூறு மாகும். (231)

224. நெய்தல் என்னும் பெயர்

நெய்தல் சாபறையும் கடற்சார் நிலனும்.

2. ஆம்பலும். (232)

225. நேர் என்னும் பெயர்

உடன்படல் கொடை ஒத்தல் மாறாதல் நுட்பம்
சமன்பாதி மிகுதல் தலைப்பாடு தனிமைஎன
நிகழ்ந்த பத்தும் நேர்என் கிளவி.

நிகழ்ந்த வீரைந்து நேரென் கிளவி. (மு.ரா.)
1. உடன்பட லுவமை யொத்த னுட்பம்
2:1-2 நிகழ்ந்தவொன் பானும். (233)

நேர்தல்

நேர்த லெதிர்தலு மொத்தலு மாகும். (234)

226. நொறில் என்னும் பெயர்

நொறிலே நுடக்கமும் விரைவும் ஆகும். (235)

227. பகல் என்னும் பெயர்

நாளும் ஒளியும் நடுவும் செயலும்
பாகுபட் டதுவும் பகல்என் கிளவி.

2:1-2 பாகு படுத்தலும் (மு.ரா.) (236)

228. படர் என்னும் பெயர்

படரே உள்ளல் செலவொடு பரிவே.

2-3 கருத்து நெறியொடு. (238)

229. படி என்னும் பெயர்

படியே பாரும் பகையும் ஆகும்.

'படியே பாரும் பகைத்தலு முவமையும்,
3-4 பகையு மாகும். உவமையு மாகும். (மு.ரா.) (239)

230. படிவம் என்னும் பெயர்

படிவம் விரதமும் வடிவும் ஆகும்.

1 படிவமே (மு.ரா.) (240)

படு

படுவே படுதலும் படுகலை வல்லோனும்
3-4 நன்மையுங் கள்ளும் (அச்சு) மு.ரா, (241)

231. படை என்னும் பெயர்

சயனம் பல்லணம் தானைஉழு நாஞ்சில்
படைஎன் கிளவிப் பெயர்ப்பால வாகும்.

2 பயனென் றுரைப்பர் படையென் கிளவி (மு.ரா.)
2:1-2 பயனென் றுரைக்கும். (242)

232. பட்டிகை என்னும் பெயர்

பட்டிகை கச்சும் பணையும் ஆகும்.

3-4 பணையிரதமு மாகும் (மு.ரா.)
தெப்பமு மாகும். (அச்சு) (237)

233. பணை என்னும் பெயர்

பணையே பெருத்தலும் பிறைழத்தலும் பழனமும்
முரசும் மரக்கோடும் புரவியின் பந்தியும். (244)

234. பண்ணை என்னும் பெயர்

ஆயமும் மகளிர் விளையாடற் றொழிலும்
பாய்புனற் படுகரும் பண்ணைஎன் றாகும். (243)

235. பதங்கம் என்னும் பெயர்

பதங்கம் விட்டிலொடு பறவைப் பொதுப்பெயர், (245)

236. பதம் என்னும் பெயர்

சோறும் வழியும் சொல்லும் காலமும்
ஈரமும் சேமமும் புனலும் காலும்
பாவலர் எட்டையும் பதம்எனப் பகர்வர்.
3. பாவலர் பதமெனப் பகருங் கிளவி, (அச்சு) (246)

237. பதலை என்னும் பெயர்

பதலை தாழியும் பரந்தவாய்ப் பறையும். (247)

238. பதி என்னும் பெயர்

பதியே உறைவிடம் தலைவனும் ஆகும். (248)

239. பயிர் என்னும் பெயர்

விதந்து கட்டிய வழக்கும் விலங்கொடுபுட் குரலும்
பசும்புல்லும் பைங்கூழும் பயிர்என் றாகும். (249)

240. பரவை என்னும் பெயர்

பரவை கடலும் பரப்பும் ஆகும். (250)

241. பரி என்னும் பெயர்

வருத்தமும் செலவும் மாவி னாமமும்
பாது காத்தலும் பரியென் றாகும். (251)

242. பரிவு என்னும் பெயர்

பரிவு துன்பமும் இன்பமும் பதரும். (252)

243. பலி என்னும் பெயர்

பலியே ஐயமும் சோறும் ஆகும். (254)

244. பல்லம் என்னும் பெயர்

கரடியின் பெயரும் கணக்கிலோர் குணிப்பும்
பகழியின் பெயரும் பல்லம் என்றாகும். (253)

245. பள்ளி என்னும் பெயர்

பள்ளி இடனும் துயிலும் ஆகும். (255)

பற்றல்

தொடலும் வளைத்தலும் பிணித்தலும் பற்றல். (256)

246. பனி என்னும் பெயர்

அச்சமும் நடுக்கமும் துன்பமும் அன்றிப்
பற்றிய சீதமும் பனிஎனப் படுமே.

1. அச்சமுந் துன்பமு நடுக்கமுந் துகினமும் (மு.ரா.)
(257)

247. பாங்கு என்னும் பெயர்

பாங்கு பக்கம் பரிசு தோழி.

பாங்கழ குரிமை பக்க மாகும் (மு.ரா) (258)

248. பாசம் என்னும் பெயர்

பாசம் ஊசித் துளையொடு கயிறே.

பாச மூசித் துளையொடு கயிறே

ஆசை மனப்பற் றாகலு முரித்தே. (மு.ரா.)
ஆசை பிசாசமோ ராயுத மாகும். (அச்சு) (259)

249. பாடலம் என்னும் பெயர்

பாடலம் சிவப்பும் பாதிரியு மாகும். (260)

250. பாடி என்னும் பெயர்

பாடி நகரமும் நாடும் படை வகுப்பும்.

4. படைவீடும், படை விடுதியும். (261)

251. பாடு என்னும் பெயர்

பாடே பெருமையும் ஒத்தலும் படுதல்.

3-4 ஒலித்தலும் படுதலும் (மு.ரா.)
ஒலியும் படுத்தலும் (262)

252. பாணி என்னும் பெயர்

நெடித்தற் பொழுதும் நீரொடு கையும்
பாடற் பல்லியமும் பாணிஎன் றாகும். (263)

253. பாலை என்னும் பெயர்

நீரின்றி வேனிற் றெறுநிலனும் அந்நிலப்
பாடலும் பாடற் சுவையும் பாலை.
பொருள்வயிற் பிரிதலும் புணர்ந்துடன் போதலும்
அதுபிரி வுணர்த்தலும் பாலை ஆகும்.

4 அதுபிரி வுரைத்தலும் பாலைய தாகும். (265)

254. பால் என்னும் பெயர்

பகுத்தப் பக்கம் திசைஇயல்பு என்ன
வகுத்த நான்கும் பாலென வறைவர். (264)

255. பாழி என்னும் பெயர்

ஊரும் வலியும் உறையுளும் சயனமும்
பாழி என்று பகரப் படுமே. (266)

256. பிரசம் என்னும் பெயர்

பிரசம் தேன்—கள் தேனீப் பெயரே. (267)

257. பிறங்கல் என்னும் பெயர்

பிறங்கல் மலையே பெருமையும் ஆகும்.
பிறங்க லுயர்வும் பெருமையு மலையும். (மு.ரா.) (268)

258. பிறழ்தல் என்னும் பெயர்

பிறழ்தல் ஒளிவிடுதலும் பிறழ்தலும் ஆகும்.
2-3 ஒளிவிடலும் பெயர்தலும் (மு.ரா.) (269)

259. புணரி என்னும் பெயர்

புணரி கடலும் திரையும் கரையும்.
3-4 திரையு மாகும். (மு.ரா.)
புணரி கடலுங் கடற்கரையும் தியாகமும். (270)

260. புண்டரிகம் என்னும் பெயர்

புண்டரிகம் தாமரை புலியும் ஆகும். (271)

261. புதை என்னும் பெயர்

புதைகணைக் கட்டே அப்பும் ஆகும்.

3-4 புதுமை யாகும். (மு.ரா.) (272)

262. புரிவு என்னும் பெயர்

புரிவே விரும்பலும் செயலும் ஆகும்.

புரிதலும் விரும்பலுஞ் செய்தலு மாகும். (மு.ரா.)
1 புரியே. (273)

263. புரை என்னும் பெயர்

உயர்வும் குற்றமும் உவமைச் சொல்லும்
புரைஎன் கிளவிப் பொருள வாகும்.

2:3-4 பொருளொடு புணரும். (மு.ரா.) (274)

264. புலம்பு என்னும் பெயர்

புலம்பே தனிமையும் நடுக்கமும் புகலும்.

4. புலம்பலும் (மு.ரா.) (275)

265. புலவர் என்னும் பெயர்

அமரரும் கவிகளும் ஆடுநரும் பாடுநரும்
பொருநரும் அறிஞரும் புலவர் எனப்படுமே.

1:2 கவிஞரும் (மு.ரா.) (276)

266. பூ என்னும் பெயர்

பூவே அழகும் கூர்மையும் மலரும்.

4. பொலிவும் (மு.ரா.) (277)

267. பூவை என்னும் பெயர்

காயா மரமும் நாகணவாய்ப் புள்ளும்
பூவை என்னும் பெயரொடு புணரும்.

1:3-4 நாகண வாய்ப்புளும் (மு.ரா.) (278)

268. பொருநர் என்னும் பெயர்

பெரும்போர்த் தலைவரும் பெருங்கூத்தின் கோடியரும்
பொருபடை வீரரும் பொருந ரென்ப.

1. பொரும்போர்த்
2:3-4 பொருந ரெனப்படுமே (மு.ரா.) (280)

269. பொருள் என்னும் பெயர்

நிதியும் சொற்பயனும் நிகழ்பல் பண்டமும்
பொருள்என் கிளவிப் பெயரொடு புணரும்.

1:3-4 நிகழ்பல பண்டமும் (மு.ரா.)
2:1 பொதிஎன் கிளவி (அச்சு) (279)

270. பொழில் என்னும் பெயர்

பொழிலே சோலையும் உலகமும் புகலும். (281)

271. பொறி என்னும் பெயர்

திருப்புலன் எந்திரம் இலாஞ்சனை எழுதுவினை
புகற்சீர்ப் புலவர் பொறிஎனப் புகல்வர்.

1:4 எழுத்துவினை (மு.ரா.)
2:1-2 புகழ்ச்சிப் புலவர் (மு.ரா.) (282)

272. பொறை என்னும் பெயர்

பொறையே சுமத்தலும் பொறுத்தலும் ஆகும்.

1-2 பொறை சுமத்தலும் (மு.ரா.)
3-4 பரித்தலும் பொறுத்தலும் (அச்சு)

மலைசுமை பார மம்பரிச் சேந்தனொ
டுலவிய பொறுமைபா ரைந்தும் பொறையே. (283)

273. போற்றல் என்னும் பெயர்

போற்றல் பாது காத்தலும் புகழ்தலும். (284)

274. மகரம் என்னும் பெயர்

மகரம் மீனேறும் காதலும் ஆகும்.

3-4 காதணியு மாகும் (மு.ரா,) தாது மாகும். (285)

275. மஞ்சு என்னும் பெயர்

மஞ்சு மேகம் இளமையும் வனப்பும்.

1-2 மஞ்சே மேகமும் (மு.ரா.) (286)

276. மடங்கல் என்னும் பெயர்

ஊழித்தீச் சிங்கம் உருமுஇடி என்றிவை
வாழித் தமிழோர் மடங்கல் என்ப.

1:3-4 உகமுடி விடியென (அச்சு)
ஊழித்தீச் சிங்க முருமுடி யென்றிவை
வாழித் தமிழோர் மடங்க லென்ப
கொடுங் கூற்றின் பெயரு நோயுங் கூறும்.(மு.ரா) (287)

277. மடல் என்னும் பெயர்

பூவி னிதழும் பனையிதழ் போல்பவும்
வாய்பா டுரைக்கின் மடல்எனற் குரிய.

2;3-4 மடலென் கிளவி (மு.ரா.) (288)

மணம் என்னும் பெயர்க்கு வதுவை என்னும் பெயர்
காண்க 315.

என்பது தேசிய நூலகப் பிரதிக் குறிப்பு.
மு.ரா. பிரதியில் இச்சொல் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

278. மதலை என்னும் பெயர்

மதலைக் கிளவி தூணே மரக்கலம்
புதல்வர்பெயர் கொடுங்கை பாவை போல்வன
தகவி னவையுஞ் சார்பிற் றாகும்.

2:1-2 புதல்வன் கொடுங்கை (மு.ரா.)
3 தகவிற் றாதுஞ் சார்பி னெவையும் (மு.ரா.) (290)

279. மதவு என்னும் பெயர்

மதவுஎன் கிளவி வலியும் இடனும்
மிகுதியும் வனப்பும் மேவுதற் குரித்தே.

மதர்வென் கிளவி மகிழ்வு மிகுதியும் (அச்சு) (289)

280. மது என்னும் பெயர்

தேனும் தேறலும் மதுஎனச் செப்புவர். (291)

281. மருதம் என்னும் பெயர்

பழன நிலனும் அந்நிலப் பாடலும்
மருதம் என்னும் பெயரின் வழங்கும். (292)

282. மலர்தல் என்னும் பெயர்

மலர்தல் தோன்றலும் மலர்த்தலும் ஆகும்.

மலர்த றோன்றலு மெதிர்தலும் விரிதலும் (மு.ரா.)
(293)

283. மலைதல் என்னும் பெயர்

மலைதல் பொருதலும் மலர்சூ டுதலும். (294)

284. மள்ளர் என்னும் பெயர்

அருந்திறல் வீரர்க்கும் பெருந்தொழி லுழவர்க்கும்
வருந்தகைத் தாகும் மள்ளர் எனும்பெயர். (295)

285. மறம் என்னும் பெயர்

கொலையும் சினமும் கொடுவினைச் செயலும்
மலையும் சேவகமும் மறம்எனப் படுமே.

1:2 சேவகமும்
2:1-2 வலியுஞ் செறலு (அச்சு) (297)

286. மறலி என்னும் பெயர்

மறலி கூற்றும் மயக்கமும் ஆகும். (298)

287. மறை என்னும் பெயர்

மறையே வேதமும் மறைத்துமொழி கிளவியும். (299)

288. மற்று என்னும் பெயர்

மற்று-என் கிளவி வினைமாற்று அசைநிலை. (296)

289. மனவு என்னும் பெயர்

மனவே அக்கு மணியும் மாலையும்.

மனவே யக்குமணி சங்குமணிப் பொது (அச்சு)
(மு.ரா.)
2-4 யக்கு மணியு மாடையும். (301)

290. மன் என்னும் பெயர்

மன்னலும் இடைச்சொலும் இறையும் மன்னே.

2-3 மிடைச்சொலுங் குறையு. (300)

மன்றல் என்னும் பெயர்

மன்றல் என்னும் பெயர்க்கு வதுவை என்னும் பெயரிற் காண்க 815.

இக்குறிப்பு மு.ரா. பிரதியில் இல்லை.

291. மா என்னும் பெயர்

மாவே பெருமையும் கருமையும் நிறனும்.

மாவே பெருமையுங் கருமையுஞ் சூதமும்
மேவிய நாற்கா லுடையவும் வண்டும்
பூவுறை திருவென வாறையும் பொருந்தும். (மு.ரா.)
(302)

292. மாடு என்னும் பெயர்

மணியும் பொன்னும் நிறையும் பக்கமும்
தனமும் மாடுஎன் பெயரிற் சாரும்.

1:2-3 செல்வமு நிறையும்.
தனமு மாடென் றுரைக்கத் தகுமே (அச்சு)
தனமும் வனப்பு மாடென் கிளவி (அச்சு) (303)

293. மாதர் என்னும் பெயர்

மாதர் காதலும் மகளிரும் ஆகும்.
ஓதில் இடைச்சொல் லாகலும் உரித்தே.

மாதர் காதலு மகளிரு மாகும் (மு.ரா.)
மாதர் மயிரையு மாவின் குருளையும்
நிரையு மளகமு மெனநிகழ்த் தினரே (மிகை)—
மு.ரா. குறிப்பு. (304)

294. மாலை என்னும் பெயர்

பொன்னின் மணியிற் பூவிற் சொல்லில்
இன்னவை தொடுத்தலும் இரவும் அந்தியும்
மன்னு மியல்பும் மாலைஎன் றாகும்.

1:4 சொல்லின் (மு.ரா.)
2:1 இன்னுறத் (அச்சு) (305)

295. மால் என்னும் பெயர்

மாலின் பெயரே மயக்கம் வேட்கை
மேகம் காற்று பெருமை கருநிறம்
எழுபுதன் கண்ணேணி மால்என விசைப்பர்.

3. சோழன் புதனெனச் சொற்றிடு மாலே (அச்சு)

(306)

296. மாழை என்னும் பெயர்

ஆயம் மடமை கட்டி பொன் ஓலை
மாழை யென்று வகுத்தனர் புலவர்.

1:3-4 கட்டிப்பொன் னோலை (மு.ரா.)

ஆய மடமை பொன்னுலோகக் கட்டி
ஓலைபுளிமா மாழையென் றுரைக்கும் (அச்சு) (307)

297. மானுதல் என்னும் பெயர்

மானுதல் ஒப்பும் மயக்கமும் ஆகும். (308)

298. முடலை என்னும் பெயர்

முடலை திரட்சியும் முருடும் ஆகும்.

3. முகடு, முகுடு. (309)

299. முரண் என்னும் பெயர்

முரணே வலியும் பகையும் ஆகும். (310)

300. முருகு என்னும் பெயர்

விழவும் குமர வேளும் இளமையும்
நறையும் நாற்றமும் அகிலும் எழுச்சியும்
வெறியாட் டாளனும் முருகுஎன விசைப்பர்.

1:4 இளைமையும் (மு.ரா.)
2:3-4 கள்ளு மெழுச்சியும் (மு.ரா.)
2:3 அகிலும், எகிலும்,
3:4 விளம்புவர். (311)

301. முல்லை என்னும் பெயர்

காடுசார் நிலனும் கானமல் லிகையும்
மோடுபடு வென்றியும் கற்பும் முல்லை. (312)

302. முளரி என்னும் பெயர்

எரியே தாமரை நுட்பம் முண்மரம்
அரிய காடுஎன் றைந்தும் முளரி. (313)

303. முற்று என்னும் பெயர்

முற்றே முழுவதும் வளைத்தலும் ஆகும்.

4 முடிவும் (மு.ரா.) மொழியும், (314)

304. முனை என்னும் பெயர்

முனையே இறைமையும் பகையும் ஆகும்.

2 நுனியும் (மு.ரா.) (315)

305. முரல் என்னும் பெயர்

மூரல் நகைஎயிறு சோறும் ஆகும்.

2-3 நகையே சோறும் (மு.ரா.) (316)

306. மூரி என்னும் பெயர்

மூரி பெருமையும் ஆனேறும் ஆகும். (317)

307. மூலம் என்னும் பெயர்

மூலம் நாளும் வேரும் முதலும்.

மூலம் வேரு முதலுமோர் நாளும் (மு.ரா.)
மூலமோர் நாளும் வேரு முதலும். (318)

308. மெய் என்னும் பெயர்

மெய்யே உடம்பும் மெய்ப்பொருளும் மெய்யெழுத்தும்.

3 உண்மையும் (மு.ரா.)
2-4 உடம்புஞ்சொற் பொருளுமெய் யெழுத்தும். (319)

309. மை என்னும் பெயர்

குற்றமும் யாடும் கருமையிடி கொண்டலும்
மற்றிவை மைஎனுஞ் சொல்லிடை வருமே.

1. குற்றமு மாடுங் கருமையுங் கொண்டலும் (மு.ரா.)
2:3 சொல்லொடு (மு.ரா.) (320)

310. யாமம் என்னும் பெயர்

யாமம் இரவும் பொழுதும் சாமமும். (321)

311. வசி என்னும் பெயர்

வசியே திரட்சியும் வருடலும் கூர்மையும்.

2-3 காட்சியும் வருட்டலும் (மு.ரா.)
வசியே வசியமும் வாளுங் கூர்மையும் (அச்சு) (322)

312. வஞ்சி என்னும் பெயர்

மேற்செல வும்பா விகற்பத்தொரு பாவும்
ஆற்றெழு மோர்கொடிப் பிறப்பும்அத னுவமை மாதரும்
மாற்றரும் பெயர்க்கொடை வஞ்சிஎன் றாகும்.

2 ஓர்கொடிப் பிறப்புமத னுவமை மாதரு (மு.ரா.)
3:1 மற்றரும் (மு.ரா.) (323)

313. வடிவு என்னும் பெயர்

வடிவே மேனி யுருவும் மெய்யொடு
நிறனு பேசி னிகழ்த்தப் படுமே.

1:2-ச் மேனியு முருவு (மு.ரா.)
1 வடிவே மேனியு மருவு மல்குலும்
2 திறமும் பேசி னிகழ்பெய ராகும் (மு.ரா.) (324)

314. வண்ணம் என்னும் பெயர்

வண்ணம் ஓசையும் வடிவும் ஆகும். (325)

315. வதுவை என்னும் பெயர்

வதுவையும் மன்றலும் மணமும் என்றிவை
பொதுவுறு வாசமும் மணம்புணர்வும் ஆகும்.

1:4 மிக்க
2:3-4 புணர்வு மாகும்.
வதுவை மன்றலு மணமு மாகும் (மு.ரா.) (326)

316. வம்பு என்னும் பெயர்

கச்சுநிலை யின்மை புதுமை கந்தம்என
ஒத்த நான்கும் வம்புஎன விசைப்பர்.

2:4 வுரைப்பர் (மு.ரா.) (327)

317. வயா என்னும் பெயர்

வயாவே வேட்கைப் பெருக்கமும் வருத்தமும்.

1-2 வயாஅ வேட்கை (மு.ரா.) (328)

318. வயிரம் என்னும் பெயர்

செற்றமும் கூர்மையும் சேகும் மணியும்
வச்சிரமும் வண்மையும் வயிரக் கிளவி.

2:2 வன்மையும் (மு.ரா.) (329)

319. வயின் என்னும் பெயர்

வயிறே இடம்மனை மூன்றும் வயின்ஆம். (330)

320. வரி என்னும் பெயர்

வரியே பாடலும் எழுதல் வடிவும்.

3-4 எழுதலும் வடிவும் (மு.ரா.)
மெழுத்தும் வண்டும் (அச்சு) (331)

321. வரைவு என்னும் பெயர்

வரைவு நீக்கலும் கொள்ளலும் ஆகும்.

வரைதல்

வரைவு நீத்தலுங் கொளலு மாகும் (மு.ரா.) (332)

322. வலம் என்னும் பெயர்

வலமே வென்றியும் வலமும் மிசையிடனும்.

வலன்

வலனே வென்றியும் வலனு மிசையிடனும் (மு.ரா.)

4. மேலிடமும் (அச்சு) (334)

323. வல்லை என்னும் பெயர்

வல்லை விரைவும் மாவலியும் ஆகும்.

3. மதிலும் (மு.ரா.) மரனும். (333)

324. வழங்கல் என்னும் பெயர்

வழங்கல் கொடையும் சேறலும் சொல்லும்.

வழங்கல் கொடை சேறலுஞ் சொல்லும் வரையார் (மு.ரா.)

2-3 செல்லல் சொல்லலும். (335)

325. வழி என்னும் பெயர்

வழியே இடனொடு பின்னும் வரையார். (336)

326. வளம் என்னும் பெயர்

பண்டமும் வளப்பாடும் வளமெனப் படுமே. (338)

327. வள் என்னும் பெயர்

வள்ளே கூர்மையும் வாரும் வலியும். (337)

328. வறிது என்னும் பெயர்

வறிது சிறிதுஆகும் அருகலும் உரித்தே.

1-2 வறிதுசிறி தாதலும் (மு.ரா.) (339)

329. வனம் என்னும் பெயர்

வனமே காடும் நீரும் ஆகும்.

இந்நூற்பா மு.ரா. பிரதியில் இல்லை.

330. வாகை என்னும் பெயர்

ஆள்வினை முதலாஞ் செய்கையும் நலனும்
கைவலம் முதலாங் கல்வியும் ஆண்மையும்
சால்பு முதலாம் பண்பும் ஈகையும்
ஒழுக்க முதலாந் தவமும் அறத்துறையும்
ஒருவரி னொருவர் வென்றி மிகுதியும்
பெறுவன வெல்லாம் வாகை எனும்பெயர்.

5:3-4 வென்றி மிகுதி (மு.ரா.)
6:3-4 வாகை யென்ப (மு.ரா.)
6:1 உடையன, 4 யெனப்படுமே. (340)

331. வாமம் என்னும் பெயர்

குறளே அழகு குறங்கே இடப்பால்
இவையிந் நான்கும் வாமம் ஆகும். (341)

332. வாயில் என்னும் பெயர்

வாயில் புலனும் வாயிலும் திறனும்.

4 தூதும். (343)

333. வாய் என்னும் பெயர்

வாயே மெய்ம்மை இடனும் வரையார்.

2-3 மெய்ம்மையு மிடனும் (மு.ரா.)
வாயே யிடனும் மெய்யும் வாக்கும் (அச்சு) (342)

334. வாரணம் என்னும் பெயர்

யானையும் கோழியும் சங்கும் வாரணம். (344)

335. வாரம் என்னும் பெயர்

வாரக் கிளவிஏழ் கிழமையும் மலைச்சார்வும்
ஈரமும் அன்பும் பகுதியும் இசைக்கும்.

1:4 மலைச்சார்பும் (மு.ரா.)
2:2 வனப்பும். (345)

336. வாரி என்னும் பெயர்

கடலும் நீர்மிகுதியும் கதவின் பகுதியும்
மடையும் நாலும் வாரிஎன் றாகும்.

1:3-4 கதவும் பகுதியும் (மு.ரா.) கதவும் வாயிலும்
2 மடையு மென் றிவை வாரி யென்ப (மு.ரா.) (346)

337. வாழி என்னும் பெயர்

வாழி இடைச்சொல்லும் வாழ்கவெனும் சொல்லும்.

2. இடைச்சொலும், 4. சொலும். (347)

338. வாள் என்னும் பெயர்

வாள் ஒளியும் வாட்படையும் ஆகும்.

வாளே யொளியும் வாளுடைப் படையும் (மு.ரா.)
3-4 வாட்படையு மாகும் (அச்சு) (348)

339. விடங்கம் என்னும் பெயர்

விடங்கம் முகடும் அழகும் ஆகும். (349)

340. விண்டு என்னும் பெயர்

விண்டு மாயோன் வெற்பும் ஆகும்.

விண்டு மாயோனும் வெற்பும் வேயும் (மு.ரா.) (350)

341. விதி என்னும் பெயர்

இயல்பும் செயலும் விதிஎன் றாகும். (351)

342. விம்மல் என்னும் பெயர்

விம்மல் ஒலித்தலும் விம்முதலும் ஆகும்.

3. விம்முறலும் (மு.ரா.) (352)

வியங்கோள்

எண்ணிற் கொளலு மேவலும் வியங்கோள். (353)

343. விருத்தி என்னும் பெயர்

உரிய சொல்லும் உரிய பொருளும்
விரிய வுரைப்பது விருத்தி யாகும். (354)

344. விரை என்னும் பெயர்

விரை என் கிளவி சாந்தும் வெறியும்.

4 விரைவும் (மு.ரா.) (355)

345. வில் என்னும் பெயர்

வில்லே ஒளியும் விற்படையும் ஆகும்.

3-4 வில்லுடைப் படையும் (மு.ரா.)
விற்படையு மூலமும் (அச்சு) (356)

346. விழுமம் என்னும் பெயர்

சிறப்புச் சீர்மை இடும்பை இம்மூன்றும்
விரிக்கின் மேலோர் விழுமம் என்ப. (357)

347. விளக்கு என்னும் பெயர்

விளக்கே ஒளியும் விளக்கு நிலையும். (358)

348. விளரி என்னும் பெயர்

யாழ்க்கண்ணதோர் நரம்பும் திறனில் யாழும்
வேட்கை மிகுதியும் இளமையும் விளரி.

1:1-2 யாழினோர் நரம்பும் (மு.ரா.) (359)

349. விறப்பு என்னும் பெயர்

விறப்பே செறிவும் வெருவலும் ஆகும்.

3-4 வெறுவலும் பெருகலும் (360)

350. வீசுதல் என்னும் பெயர்

வீசுதல் கொடுத்தலும் எறிதலும் ஆகும். (361)

351. வெடி என்னும் பெயர்

வெடியே வெள்ளிடை வெருவும் ஆகும். (362)

352. வெம்மை என்னும் பெயர்

வெம்மை வேண்டல் விரைவு என விளம்புவர்.

3-4 விரைவெனப் படுமே (மு.ரா.) (363)

353. வெள்ளை என்னும் பெயர்

வெள்ளாடு வெண்பா வெள்ளை வடிவின
வெள்ளை என்னும் பெயரின் விரியும்.

2-3 பெயரொடு (மு.ரா.) (364)

354. வெறி என்னும் பெயர்

வெறியே நாற்றம் விரையொடு அணங்காட்டு.

4- அணங்காட்டும் (மு.ரா.) (365)

355. வெறுக்கை என்னும் பெயர்

வெறுக்கை செல்வமும் விழுப்பொருளும் ஆகும். (366)

356. வேய் என்னும் பெயர்

வேயே மூங்கில் ஒற்றும் ஆகும்.

வேயே மூங்கிலு மொற்று வினையும் (மு.ரா.) (367)

357. வேலன் என்னும் பெயர்

வேலன் முருகன் வெறியாட் டாளன்.

வேலன் முருகனும் வெறியாட் டாளனும், (மு.ரா.) (368)

358. வேலி என்னும் பெயர்

வேலி மதிலும் காவலும் ஆகும். (369)

359. வேலை என்னும் பெயர்

வேலை தானே கடலும் கடற்கரையும்
காலை நாட்கூறும் காலமும் ஆகும்.

2. காலமுங் கூறுங் கருவித் தாகும் (மு.ரா.) (370)

360. வேழம் என்னும் பெயர்

யானையும் கரும்பும் கொறுக்கச் சியும்
வேயுங் கூறும் வேழக் கிளவி.

1. யானையுங் கரும்புங் கொறுக்கைக் கோலும்
(மு.ரா.) (371)

361. வேளாண்மை என்னும் பெயர்

வேளாண்மை உபகாரம் உபசாரமும் விளம்பும்.

3. உபசாரம் (மு.ரா.) ஈகையும். (372)

362. வை என்னும் பெயர்

நெல்லின் றாளும் புல்லும் கூர்மையும்
சொல் இம் மூன்றும் வை என் றாகும்.

2:1-2 சொல்லிய மூன்றும் (மு.ரா.) (373)

363. வைகல் என்னும் பெயர்

கழியும் நாளும் புலரிக் காலையும்
தழுவும் வைகல் தங்கலும் உரித்தே. (374)

364. வையம் என்னும் பெயர்

சிவிகையும் ஆனேறும் சகடமும் தேரும்
அவனியும் வையம் எனப்பெய ராகும். (375)

365. திவாகர வரலாறு

புலவி நீக்கிய கல்விச் செவ்விக்
கமிழ்துசுவை யீந்த வரும்பெற லின்பத்
தொருபெருஞ் செல்வ னருவந்தைச் சேந்தன்
பகர்சொற் றிவாகரத்துப் பதினோ ராவது
ஒருசொல் பல்பெயர்த் தொகுதி முற்றும்,

சொற்ற திவாகரத் துப்பதி னொரவது
ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்.
(மு,ரா.) (376)

பன்னிரண்டாவது

பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி

பன்னிரண்டாவது

பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி

2285. சிறப்புவகை பொதுவகை

கூறியது கூறினும் குற்றம் இல்லை,
வேறொரு பொருளை விளைக்கு மாயின்,
முன்னர் எய்திய பன்னொரு தொகுதியுளும்
வந்தன வால்ஒரு சொற்பல் பொருட்பெயர்த்
தொகுதியின் வந்த சொற்கள் என்னில்,
ஆண்டுச் சிறப்புவகைக்கு எய்தியவை
ஈண்டுப் பொதுவகைக்கு எய்தவும் படுமே.

சிறப்பு வகை—பொது வகை :

முன்னர் கூறப்பட்டுள்ள பதினொரு தொகுதியிலும் சிறப்பு வகை பற்றிச் சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இத் தொகுதியுள் அச்சொற்கள் பொதுவகையால் இணைந்து வருமாறு தொகுத்துக் காட்டப்படுகிறது.

பாடவேறுபாடு—விளக்கம்

சில பிரதிகளில் முதல் இரண்டடிகள் மட்டுமே காணப்படுகின்றன.
2:8 விளக்கு
3:3 பதினொரு
5:3-4 சொற்களின் பெயர். (1)

2286. ஒன்று என்னும் பெயர்

ஒன்று என்பதுவே வீடு பேறு ஆகும்.

ஒன்று :

வீடு பேறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 ஒன்றெனப்படுவது

ஒருமை யென்பு திறையுணர் வாகும்.

என்றும் சில பிரதிகளில் பாடம். 'இறையுணர்வென்ப' என்றும் பாட வேறுபாடு உண்டு. (2)

2287. இருமை

இருமை என்பது இம்மையும் மறுமையும்.

பாடவேறுபாடு—விளக்கம்

இருமை : (2)

1. இம்மை, 2. மறுமை. (3)

2288. இருவினை

இருவினை நல்வினை, தீவினை ஆகும்.

இருவினை: (2)

1. நல்வினை, 2. தீவினை.

பாடவேறுபாடு—விளக்கம்

4. என்ப. (4)

2289. இருவகைத் தோற்றம்

இருவகைத் தோற்றம் சராசரம் என்ப.

இருவகைத் தோற்றம்: (2)

1. சரம், 2. அசரம். (5)

2290 இருவகைக் கந்தம்

இருவகைக் கந்தம் நற்கந்தம், துர்க்கந்தம்.

இருவகைக் கந்தம்: (2)

1. நற்கந்தம், 2. துர்க்கந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கெந்தம். (6)

2291. இருசுடர்

இருசுடர் சந்திரர், சூரியர் ஆகும்.

இருசுடர்: (2)

1. சந்திரர், 2. சூரியர்.

பாடவேறுபாடு—விளக்கம்

4. என்ப. (7)

2292. இருவகை அறம்

இருவகை அறமே இல்லறம், துறவறம்.

இருவகை அறம்: (2)

1. இல்லறம், 2. துறவறம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 அறமாவது. (8)

2293. இருவகை மரபு

இருவகை மரபு தந்தைவழி, தாய்வழி.

இருவகை மரபு: (2)

1. தந்தைவழி, 2. தாய்வழி.

பாடவேறுபாடு—விளக்கம்

இருமரபு தாய்வழி தந்தை வழியே. (9)

2294. இருவகைப் பொருள்

இருவகைப் பொருள் கல்விப் பொருள், செல்வப் பொருளே.

இருவகைப் பொருள்: (2)

1. கல்விப் பொருள், 2. செல்வப்பொருள். (10)

2295. இருவகை இன்பம்

இருவகை இன்பம் சிற்றின்பம், பேரின்பம்.

இருவகை இன்பம்: (2)

1. சிற்றின்பம், 2. பேரின்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 இல்லது முள்ளதும். (11)

2296. இருவகை வீடு

இருவகை வீடு பற்று வீடு, பொருள் வீடு.

இருவகை வீடு: (2)

1. பற்று வீடு, 2. பொருள் வீடு. (12)

2297. மும்மை

மும்மை இம்மையும், உம்மையும், மறுமையும்.

மும்மை: (3)

1. இம்மை, 2. உம்மை, 3. மறுமை.

பாடவேறுபாடு—விளக்கம்

மும்மை யிம்மை யும்மை மறுமை,
உம்மையு மிம்மையு மறுமையும். (13)

2298. மூவிடன்

முன்னிலை, தன்மை, படர்க்கை **மூவிடனே.**

மூவிடன்: (3)

1. முன்னிலை, 2. தன்மை, 3. படர்க்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

முன்னிலை படர்க்கை தன்மைமூவிடமே.
4 மூன்றிடம். (14)

2299. முச்செய்கை

படைத்தல், காத்தல், அழித்தல், முச்செய்கை.

முச்செய்கை: (3)

1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல். (15)

2300. மூன்று காலம்

இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என
மொழிந்த மூன்றும் காலம் ஆகும்.

மூன்று காலம்: (3)

1. இறந்தகாலம், 2. எதிர்காலம், 3. நிகழ்காலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: முக்காலம்.
1:2-4 எதிர்கால நிகழ்ந்த காலமென
இறந்த கால நிகழ்கால மெதிர்காலமென
2:3-4 மூன்று காலம். (16)

2301. மூன்று நிலம்

பூமி, ஆகாயம், சுவர்க்கம் என்பன
தாம்ஒரு மூன்று நிலம் எனும் தகைய.

மூன்று நிலம்: (3)

1. பூமி, 2. ஆகாயம், 3. சுவர்க்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மூவுலகம்

1:4 மென்னும், மென்ப.

2:3-4 நிலமெனத் தகைய, நிலமெனச் சாற்றுவர்.

'பூமியா காயஞ் சுவர்க்க முந்நிலம்' என்றும் பாடம். (17)

2302. முப்பொறி

மனமும், வாக்கும், காயமும் முப்பொறி.

முப்பொறி: (3)

1. மனம், 2. வாக்கு, 3. காயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

முப்பொறி மனமும் வாக்குங் காயமும். (18)

2303. முக்குற்றம்

முக்குற்றம்: காமம், வெகுளி, மயக்கம்.

முக்குற்றம்: (3)

1. காமம், 2. வெகுளி, 3. மயக்கம். (19)

2304. மூவகை மொழி

பட்டாங்கு பேசல், பழித்தல், புகழ்தல் என
முட்டின்று ஆகும் மூவகை மொழியே.

மூவகை மொழி: (3)

1. பட்டாங்கு பேசல், 2 பழித்தல், 3. புகழ்தல். (20)

2305. முச்சுடர்

முச்சுடர் ஆதித்தன், சந்திரன், அங்கி.

முச்சுடர்: (3)

1. ஆதித்தன், 2. சந்திரன், 3. வங்கி. (21)

2306. முத்தீ

அந்தணர் முத்தீ, காருக பத்தியம்,
தென்திசை அங்கி, ஆகவ னீயம்.

முத்தீ: (3)

1. காருகபத்தியம், 2. தென்திசை அங்கி,
3. ஆகவனீயம்.

பாடவேறுபாடு— விளக்கம்

காருக பத்தியந் தென்றிசை யங்கி
யாகவ னீய மந்தணர் முத்தீ. (22)

2307. மூன்று சீவ அனல்

உதரம், விந்து, பூத அனல்என
ஒரு மூன்று ஆகு சீவ அனலே.

மூன்று சீவ அனல்: (3)

1. உதர அனல், 2. விந்து அனல், 3. சீவ அனல்.
(23)

2308. முக்குணம்

முக்குணம் சாத்துவிதம், இராசதம், தாமதம்.

முக்குணம்: (3)

1. சாத்துவிதம், 2. இராசதம், 3. தாமதம். (24)

2309. சாத்துவித குணம்

சாத்துவித ஞானம், தவம், மெய்ம்மை, நல்லருள்,
(ஆர்த்த) மோனமோடு ஐம்புல னடக்கம்.

சாத்துவித குணம்: (5)

1. தவம், 2. மெய்ம்மை, 3. நல்லருள், 4. மோனம்,
5. ஐம்புலனடக்கம்,

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 தவமுண்மை

2:2-3 மோனம் ஐம்புல

இந்நூற்பாவை முந்திய நூற்பாவுடன் ஒருங்கிணைய இவற்றுள் சாத்துவித குண மென்பது,

'சாத்துவித ஞானந் தவமெய்ம்மை நல்லருள்
ஆர்த்த மோனமோ டைம்புல னடக்கல்'

என்றும் சில பிரதிகளில் அமைந்துள்ளன. (25)

2310. இராசத குணம்

தானம், தவமே, தருமம் பேணல்,
ஞானம், கல்வி, நலன் இவை தெரிதல்
ஈனம் இல்லா இராசத குணமே.

இராசத குணம்: (6)

1. தானம் பேணல், 2. தவம் பேணல், 3. தருமம் பேணல், 4. ஞானம் தெரிதல், 5. கல்வி தெரிதல், 6. நலன் தெரிதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 நலமிவை. (26)

2311. தாமத குணம்

தாமதம், நிறைபே ருண்டி, மடி, வஞ்சம்,
காமம், நீதிகேடு, உறக்கம், கலமே.

தாமத குணம்: (7)

1. நிறை பேருண்டி, 2. மடி, 3. வஞ்சம், 4. காமம், 5. நீதிகேடு, 6. உறக்கம், 7. சலம். (27)

2312. மூவகைத் தானம்

முதல், இடை, கடைஎன மூவகைத் தானம்,
வலிவும், மெலிவும் சமனும் ஆகும்.

மூவகைத் தானம்: (3)

1. முதற்படுதானம், 2. இடைப்படுதானம்,
3. கடைப்படுதானம்.

பாடவேறுபாடு—**விளக்கம்**

1. வலிவு, 2. மெலிவு, 3. சமன்.

1 மூவகைத் தானந் தலையிடை கடையே
மூவகைத் தியாகத்தின் பெயர்
தியாகத் தினமே மூவகை யதனொடு
உத்தம மத்திம மதம மென்ன
முற்றிய தாகு மூவகைத் தானம்
வலிவு மெலிவுஞ் சமனு மாகும். (28)

2313. தலைப்படுதானம்

அறத்தின் ஆற்றிய அரும்பொருள் புறத்துறை
குற்றம் மூன்றும் அறுத்த நல் தவர்க்குக்
கொள்கெனப் பணிந்து, குறையிரந்து, அவர்வயின்
உள்ளம் உவந்து ஈவது உத்தம தானம்.

தலைப்படுதானம்:

அறத்தின் ஈட்டிய அரும்பொருள்களை முக்குற்றம் போக்கிய தவத்தினர்க்குக் கொள்க என வேண்டிப் பணிந்து குறையிரந்து உள்ளம் உவந்து ஈவது.

பாடவேறுபாடு—**விளக்கம்**

தலைப்பு: உத்தமதான வகை. (29)

2314. இடைப்படு தானம்

ஆதுலர், அந்தகர், உறுப்பிலிகள் ஆனவர்க்கு,
ஈவது மத்திம தானம்அது ஆகும்.

இடைப்படு தானம்:

ஆதுலர், அந்தகர், உறுப்பிலிகள் ஆகியோருக்கு ஈவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மத்திம தான வகையின் பெயர்.

ஆதுல ரந்தக ருமருறுப் பிலிகள்
செவிடர்க் கீவது மத்திம தானம்—மு. இராகவையங்கார் பாடம்.

ஆதுல ரந்தக ருறுப்பிலீக ளாதர்க்
கீவது மத்திம தான மாகும்.
ஆதுலர் குருடர் மாதர் முதற்பிறர்
சிறுமையைப் பற்றி மனமிரங்கி யீவது
இடைப்படுதான மென்னப் படுமே—அச்சுப்பிரதி. (30)

2315. கடைப்படுதானம்

ஆர்வம், புகழே, அச்சம், கைம்மாறு,
காரணம், கண்ணோட்டம், கடப்பாடு என்றுஇவை
ஏழும் கடைப்படு தான உதவி.

கடைப்படுதானம்:

ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம். கண்ணோட்டம், கடப்பாடு என்று இவை ஏழும் ஏதுவாக ஈவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: அதம தானத்தின் வகை. (31)

2316. திரிகடுகம்

திரிகடுகம், சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிகடுகம்: (3)

1. சுக்கு, 2. மிளகு, திப்பிலி.

பாடவேறுபாடு—விளக்கம்

1 திரிகடுகு. (32)

2317. திரிபலை

திரிபலை ஆவது, கடு, நெல்லி, தான்றி.

திரிபலை: (3)

1. கடு, 2. நெல்லி, 3. தான்றி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கருநெல்லித் தான்றி. (33)

2318 மும்மதில்.

மும்மதில் பொன்னும் வெள்ளியும் இரும்பும்.

மும்மதில்: (3)

1. பொன், 2. வெள்ளி, 3. இரும்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: திரிபுரம், முப்புரம்.
மும்மதில் பொன்னும் வெள்ளியு மிரும்பு
மன்ன சிவன்முன் னழித்தமுப் புரமே. (34)

2319. அருக்கன் மூவகை வீதி

அருக்கன் மூவகை வீதி ஆவன
திருத்தகு மேடம், இடபம், மிதுனம்.

அருக்கன் மூவகை வீதி: (3)

1. மேட வீதி, 2. இடப வீதி, 3. மிதுன வீதி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சூரியன் மூவகை வீதி.
1:1 அருக்கற்கு. (35)

2320. நானிலம்

நானிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்.

நானிலம்: (4)

1. முல்லை, 2. குறிஞ்சி, 3. மருதம், 4. நெய்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 முல்லை குறிஞ்சி நெய்தல் மருதம்

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல். (36)

2321. நாற்பொன்

நாற்பொன், ஆடகம், கிளிச்சிறை, சாம்புதனம், ஏமம்.

நாற்பொன்: (4)

1. ஆடகம், 2. கிளிச்சிறை, 3. சாம்புதனம், 4. ஏமம். (37)

2322. சதுரங்கம்

சதுரங்கம், தேர், யானை, குதிரை, காலாள்.

சதுரங்கம்: (4)

1. தேர், 2. யானை, 3. குதிரை, 4. காலாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 தேரானை, யானைதேர்.

2323. நாற்கரணம்

மனம், புத்தி, ஆங்காரம், சித்தம், **நாற்கரணம்.**

நாற்கரணம்; (4)

1. மனம், 2. புத்தி, 3. அகங்காரம், 4. சித்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (39)

2324. நாற்கதி

நாற்கதி, உம்பர், மக்கள், விலங்கு, நரகர்.

நாற்கதி: (4)

1. உம்பர், 2. மக்கள், 3. விலங்கு, 4. நரகர். (40)

2325. நால்வகை இழிசொல்

பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல்என
இவ்வகை நான்கும் இழித்தகு சொல்லே.

நால்வகை இழிசொல்: (4)

1. பொய், 2. குறளை, 3. கடுஞ்சொல்,
4. பயனில் சொல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: நான்கிழிவு சொல்லின் பெயர், நாவிழித்த சொல்லின் பெயர்.

2:2-3 நாலு மிழித்த. (41)

2326. நால்வகை வேதம்

நால்வகை வேதம் இருக்கு, தயித்திரியம்,
சாமம், அதர்வணம் எனச்சாற் றினரே.

நால்வகை வேதம்: (4)

1. இருக்கு, 2. தயித்திரியம், 3. சாமம்,
4. அதர்வணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 இருக்கே. 4. தைத்திரியம்
2 சாம வேத மதர்வணந்தானே. (42)

2327. நால்வகை அரண்

மலையரண், காட்டரண், மதிலரண், நீரரண்
நவைஅறு சிறப்பின் **நால்வகை அரணே.**

நால்வகை அரண்: (4)

1. மலையரண், 2. காட்டரண், 3. மதிலரண்,
4. நீரரண். (43)

2328. நால்வகைக் கேள்வி

அறம், பொருள், இன்பம், வீடு என நான்கின்
திறம் தெரிந்து கேட்டல் **நால்வகைக் கேள்வி.**
சொன்ன நான்கினும் ஒத்தே ஒழுகுதல்
ஐவகைக் கேள்வி ஆம்என அறைவர்.

நால்வகைக் கேள்வி: (4)

1. அறத்திறம் தெரிந்து கேட்டல், 2. பொருள்திறம் தெரிந்து கேட்டல், 3. இன்பத்திறம் தெரிந்து கேட்டல், 4. வீட்டின் திறம் தெரிந்து கேட்டல்.

ஐவகைக் கேள்வி:

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் திறம்தெரி நாற்கேள்வியுடன் அந்நான்கினும் ஒத்த ஒழுகலாறுகளைத் தெரிந்து கேட்பது ஐவகைக் கேள்வியாம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: நாற்பெருங் கேள்வி.
2:3-4 நாற்பெருங் கேள்வி. (44)

2329. நால்வகைப் புலமை

கவியே, கமகன், வாதி, வாக்கி என
இவை ஒரு நான்கும் **புலமைக்கு** இயல்பே.

நால்வகைப் புலமை: (4)

1. கவி, 2. கமகன், 3. வாதி, 4. வாக்கி. (45)

2330. கவி

ஆசு, மதுரம், சித்திரம், வித் தாரம் எனும்
பாவகை பாடுவோன் **கவி** எனப் படுமே.

கவி:

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் பாவகைகளைப் பாடுவோன். (46)

2331. கமகன்

ஞாபகம் செம்பொருள் நடையின் எப்பொருளும்
காசு இன்று உரைப்போன் **கமகன்** ஆகும்.

கமகன்:

ஞாபகம் செம்பொருள் நடையின் எப்பொருளையும் காசு இன்று உரைப்போம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 நடையுமெப் பொருளும். (47)

2332. வாதி

ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டி,
ஏதில் அளவுசெய்து, தன்கோள் நிறீஇ,
வாதில் பிறர்கோள் மறுப்பான் **வாதி.**

வாதி:

ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டி, ஏதுக்களை ஏற்றவளவு சொல்லித் தன் கொள்கையை நிறுவி, பிறர் கோட்பாட்டினை மறுத்து ரைப்பவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 போதினளவுஞ் செய்து தன்சொன் னிறீஇ
2:1-2 பெதிரளவு செய் து. (48)

2333. வாக்கி

அறம், பொருள், இன்பம், வீடு எனும் திறங்கள்
கேட்க வேட்க **இ**னியன கூறும்
ஆற்ற லுடையோன் **வாக்கி** ஆகும்.

வாக்கி:

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் திறங்களைப் பிறர் கேட்க விரும்பும் வகையில் இனியன எடுத்துக் கூறும் திறமுடையவன். (49)

2334. ஆசுகவி

கொடுத்த பொருளில் தொடுத்தஇன் பத்தில்
அடுத்த பொழுதில் பாடுவது **ஆசுகவி.**

ஆசுகவி:

ஒருவர் கொடுத்த பொருளில் இன்பம்
தொடரச் சொன்ன அப்பொழுதே விரைந்து பாடுவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: ஆசுகவி வகை. (50)

2335. மதுரகவி

பொருளின் பொலிவும், சொல்லின் செல்வமும்,
தொடையும், தொடைக்கண் விகற்ப மும்துதைந்து,
உருவகம் முதலாம் அலங்காரம் உட்கொண்டு
ஓசைபொலி வுடைத்தாய், உய்த்துணர்வோர் உளங்கட்கு
மாகடல் அமிழ்தம்போல் பாடுதல் **மதுரகவி.**

மதுரகவி:

பொருட்பொலிவு சொற்செல்வம் தொடை விகற்பம் பொருந்தி, உருவகம் முதலாகிய அலங்காரங்களையும் கொண்டு, ஓசை பொலிவுடைத்தாய், உணர்வோர் உளங்களுக்கு அமிழ்தம்போல் இனிமை பயக்கப் பாடுவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மதுரகவி வகை.
1:3-4 சொல்லின் தெளிவும்
3:3-4 அலங்காரங்களு முட்கொண்டு
4:2-4 பொலிவுற் றுணர்வோ ருளங்கட். (51)

2336. சித்திரகவி

மாலை மாற்றே, சக்கரம், சுழிகுளம்,
ஏக பாதம், எழுகூற் றிருக்கை,
காதை கரப்பே, கரந்துறை பாட்டே,
பாத மயக்கே, பாவின் புணர்ப்பே,

கூட சதுக்கம், கோமூத் திரியே,
ஓரினத்து எழுத்தால் உயர்ந்த பாட்டே,
ஒற்றுப் பெயர்த்தல், ஒருபொருட் பாட்டே,
சித்திரப் பாவே, விசித்திரப் பாவே,
விகற்ப நடையே, வினாவுத் தரமே,
சருப்பதோ பத்திரம், சார்ந்த எழுத்தே,
வருக்கமும் மற்றும் வடநூல் கடலுள்
ஒருக்குடன் வைத்த உதாரணம் நோக்கி
விரித்து மறைத்து மிறைக்கவிப் பாட்டுத்
தெரித்துப் பாடுவது **சித்திர கவியே.**

சித்திர கவி: (22)

1. மாலை மாற்று, 2. சக்கரம், 3. சுழிகுளம், 4. ஏக பாதம், 5. எழுகூற்றிருக்கை, 6. காதை கரப்பு, 7. கரந்துறை பாட்டு, 8. பாத மயக்கு, 9. பாவின் புணர்ப்பு, 10. கூட சதுக்கம், 11. கோமூத்திரி, 12. ஓரினத்து எழுத்தால் உயர்ந்த பாட்டு, 13. ஒற்றுப் பெயர்த்தல், 14. ஒருபொருட் பாட்டு, 15. சித்திரப்பா, 16. விசித்திரப்பா, 17. விகற்பநடை, 18. வினாவுத்தரம், 19. சருப்பதோ பத்திரம், 20. சார்ந்த எழுத்து, 21. வருக்கம், 22. மற்றும் வடநூல் கடலுள் ஒருக்குடன் வைத்த உதாரணம் நோக்கி விரித்து மறைத்துத் தெரித்துப் பாடுவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சித்திரகவி வகை.
3:3-4 கரந்துறை பாட்டே
4ஆம் அடியாக,
'தூசங் கொளலே வவ்வா னாற்றி' என ஓரடி ஒருசில
பிரதிகளில் உளது.
6:1-2 ஓரெழுத் தினத்தால்
7:3-4 ஒருபொருட் பாவே
13:1-2 விரித்து நிறைத்து (52)

2337. வித்தாரகவி

மும்மணிக் கோவையும், பன்மணி மாலையும்,
மறமும், கலிவெண் பாவும், மட லூர்ச்சியும்,

கிரீடையும், கூத்தும், பாடாண்டத் துறையும்,
விருத்தக் கவிதையும், இயல்இசை நாடகத்தொடு
விரித்துப் பாடுவது வித்தார கவியே.

வித்தார கவி: (10)

1. மும்மணிக் கோவை, 2. பன்மணி மாலை, 3. மறம், 4. கலிவெண்பா, 5. மடலூர்ச்சி, 6. கிரீடை, 7. கூத்து, 8. பாடாண்டத் துறை, 9. விருத்தக் கவிதை, 10. இயல் இசை நாடகத்தொடு விரித்துப் பாடுவது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: வித்தாரகவி வகை
2:3 பாட்டுமட
3:3 பாசாண்டத்
4:4 நாடகமும்
5:1 விரியப் (53)

2338. நால்வகைப் புண்ணியத் தோற்றம்

நால்வகைப் புண்ணியத் தோற்றம் தவத்துடன்,
(மேலாம்) ஒழுக்கம், தானம், கல்வி.

நால்வகைப் புண்ணியத் தோற்றம்: (4)

1. தவம், 2. ஒழுக்கம், 3. தானம், 4. கல்வி. (54)

2339. சிலையோர் நால்வகை நிலை

சிலையோர் நால்வகை நிலை, பை சாசம்.
ஆலீடம், மண்டிலம், பிரத்தியா லீடம்.

சிலையோர் நால்வகை நிலை: (4)

1. பைசாசம், 2. ஆலீடம், 3. மண்டிலம், 4. பிரத்தியாலீடம். (55)

2340. பைசாசநிலை வகை

ஒருகால் நிலைநின்று, ஒருகால் முடக்கும்
பரியாயம் என்பது **பைசாச நிலையே.**

பைசாசநிலை:

ஒரு காலை நிலையாக நிற்க மற்றொரு காலை முடக்குவது.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 மடக்கும்
2:1-2 பரியாய மென்ப, பரியாயமென்பர். (56)

2341. ஆலீட நிலை வகை

வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறும்
அதன்பெயர் **ஆலீட நிலையது** ஆகும்.

ஆலீடநிலை:

வலக்காலை வட்டமாய் வளைத்து இடக்காலை முன் வைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 அதன் பெயர், 2. மண்டிலித்து

இடக்கான் முந்துற வலக்கான் மண்டிலம்
ஆலீட மென்றே யறைந்தனர் புலவர். (57)

2342. மண்டிலநிலை வகை

இருகால் மண்டலித் திடுதல் **மண்டில நிலை.**

மண்டிலநிலை:

இருகாலையும் வளைத்து நிற்றல். (58)

2343. பிரத்தியாலீடம்

வலக்கால் முந்துற்று, இடைக்கால் மண்டலிப்பின்,
பிரத்தியா லீடம் எனப்பெயர் பெறுமே.

பிரத்தியாலீடம்:

வலக்காலை முன்வைத்து இடக்காலை மண்டலித்தல். (59)

2344. நான்கு உயிர்த் தோற்றம்

(பைபோல்) குடரின், முட்டையின், நிலத்தின்,
மெய்யக வேர்வையின் **நான்கு உயிர்த் தோற்றம்.**

நான்கு உயிர்த்தோற்றம்: (4)

1. குடரில் தோன்றல், 2. முட்டையில் தோன்றல்,
3. நிலத்தில் தோன்றல், 4. வேர்வையில் தோன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 பைபோர், நிலவுறு பையில்
2:1-2 மெய்யது வியர்ப்பின், 2. வியர்வையில். (60)

2345. ஐந்திணை

ஐந்திணை, குறிஞ்சி, முல்லை, பாலை,
(வந்த) நெய்தல், மருதம் ஆகும்.

ஐந்திணை: (5)

1. குறிஞ்சி, 2. முல்லை, 3. பாலை, 4. நெய்தல்,
5. மருதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 பாலை முல்லை (61)

2346. பஞ்ச வாசம்

தக்கோலம், ஏலம், இலவங்கம், சாதிக்காய்,
கர்ப்பூரம், என்றுஇவை கமழ் **பஞ்ச வாசம்.**

பஞ்ச வாசம்: (5)

1. தக்கோலம், 2. ஏலம், 3. இலவங்கம்,
4. சாதிக்காய், 5. கர்ப்பூரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 பஞ்ச வாசங்கள். (62)

2347. பஞ்சாங்கம்

திதியே, வாரம், நாள், யோகம், கரணம்
பகரும் சோதிடம் பஞ்சாங்கம் ஆகும்.

பஞ்சாங்கம்: (5)

1. திதி, 2. வாரம், 3. நாள், 4. யோகம், 5. கரணம் —இவ்வைந்தும் பகரும் சோதிடமே பஞ்சாங்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கரணமெனப்
2:3-4 பஞ்சாங் கம்மே. (63)

2348. பஞ்சமா சத்தம்

பஞ்சமா சத்தம் தோல், துளை, நரம்பு,
கஞ்சனை, பாடல் எனக் கழறினரே.

பஞ்சமாசத்தம்: (5)

1. தோல், 2. துளை, 3. நரம்பு, 4. கஞ்சனை, 5. பாடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 எனக்கரு தினரே. (64)

2349. மதனன் பஞ்சபாணம்

மதனன் பஞ்ச பாணம் ஆவன.
முல்லை, அசோகு, (முழு) நீலம், சூதப்பூ,
(அல்லி) முளரியொடு ஐந்துஎன மொழிப.

மதனன் பஞ்ச பாணம்: (5)

1. முல்லை, 2. அசோகு, 3. நீலம், 4. சூதப்பூ, 5. முளரி.

பாடவேறுபாடு-விளக்கம்

தலைப்பு: காமன் பஞ்சபாணம்
2:4 சூதமென
3:3-4 டைந்தவ னம்பே. (65)

2350. மதனன் பஞ்சபாணத் தொழில்

உன்மத்தம், மதனம், சந்தாபம், வசீகரணம்,
மோகனம் பஞ்ச பாணச் செயலே.

மதனன் பஞ்ச பாணத் தொழில்: (5)

1. உன்மத்தம், 2. மதனம், 3. சந்தாபம்,
4. வசீகரணம், 5. மோகனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

மதன்பஞ்ச பாணச் செயலுன் மத்தம்
தீரஞ் சந்தாபம் வசீகரம் மோகனம். (66)

2351. பஞ்ச சயனம்

மயிர்ச் சேணம், பஞ்சமெத்தை, (வண்) படாம், தூவி,
(பயிற்றும் தன்) வீப் பாய்பஞ்ச சயனம்.

பஞ்ச சயனம்: (5)

1. மயிர்ச் சேணம், 2. பஞ்சு மெத்தை, 3. படாம்,
4. தூவி, 5. வீ. (67)

2352, சயன வகை

மலர்ச்சயனம், சலசயனம், தோற்சயனம், மற்றும்
பழிப்புஇல் பதினைந்து சயனப் பெயரே.

சயன வகை: (4)

1. மலர்ச் சயனம், 2. சலசயனம், 3. தோற்சயனம்,
4. மற்றும் பதினைந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 தோற்சயன மாதி
2:2-4 பதினை தாகுஞ் சயனம். (68)

2353. பஞ்ச பாதகம்

பஞ்சபா தகம்கொலை, களவு, கள் ளுண் டல்,
(எஞ்சல்இல்) குருநிந்தை, உடன்படல் என்ப.

பஞ்ச பாதகம்: (5)

1. கொலை, 2. களவு, 3. கள்ளுண்டல்,
4. குருநிந்தை, 5. உடன்படல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 எஞ்சிய காமம்.
2:3-4 யுடல்பட லென்ப, பொய்யு மென்ப. (69)

2354. ஐம்பால்

ஐம்பால், முடியும், கொண்டையும், குழலும்,
(வம்பு ஆர்) பனிச்சையும், (வார் மயிர்ச்) சுருளும்.

ஐம்பால்: (5)

1. முடி, 2. கொண்டை, 3. குழல், 4. பனிச்சை,
5. சுருள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-4 முடியே கொண்டைகுழல் சுரியல்,
1 முடியே கொண்டை சுருள்குழல்
2:3-4 வார்மயிர்ச் சுருளே, வார்மயிர் முடியே. (70)

2355. ஐவகை உண்டி

கடித்து, பருகி, விழுங்கி, நக்கி,
எடுத்துச் சுவைத்தல் இவைஐந்து **உண்டி.**

ஐவகை உண்டி: (5)

1. கடித்தல், 2. பருகல், 3. விழுங்கல், 4. நக்கல்,
5. எடுத்துச் சுவைத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-3 சுவைத்தலொ டிவையைந் (71)

2356. குதிரை ஐந்தொழில் நடை

மல்லகதி, மயூரகதி, வானர கதியொடு,
(சொல்லிய) சச கதி, சரகதி என்ப
(பல்இயல்) **பரிமாவிற்கு ஐந்தொழில் நடையே.**

குதிரை ஐந்தொழில் நடை: (5)

1. மல்லகதி, 2. மயூரகதி, 3. வானரகதி,
4. சசகதி, 5. சரகதி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பஞ்சகதி, குதிரை நடைவகை.
2:4 என்னப்
2:1 பல்லியப் (72)

2357. ஐவகை வினா வகை

அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல்,
ஐயம் அறுத்தல், அவன்அறிவு தான் காண்டல்,
மெய்யவற்குக் காட்டலோடு **ஐவகை வினாவே.**

ஐவகை வினா வகை: (5)

1. அறியான் வினாதல், 2. அறிவொப்புக் காண்டல்,
3. ஐயம் அறுத்தல், 4. அவன் அறிவு தான் காண்டல்,
5. மெய்யவற்குக் காட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 அவனறிவு தான்கோடல்
3:1-2 மெய்யவர்க்குக் காட்டலென. (73)

2358. சிவன் ஐம்முகம்

சத்தியோ சாதம், வாமம், அகோரம்,
தற்புருடம், ஈசானம் ஈசர்க்கு ஐம்முகம்.

சிவன் ஐம்முகம்: (5)

1. சத்தியோசாதம், 2. வாமம், 3. அகோரம்,
4. தற்புருடம், 5. ஈசானம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-4 மீசானமென வீசற் கைம்முகம். (74)

2359. ஐம்பால் வகை

ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பலஎன
அறியக் கூறிய பால் ஐந்து ஆகும்.

ஐம்பால் வகை: (5)

1. ஒருவன், 2. ஒருத்தி, 3. பலர், 4. ஒன்று,
5. பல.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா 2353-க்குப்பின் ஐம்பால் (2354) என்பதற்கு முன் அச்சுப்பிரதிகளில் காணப்படுகிறது. (75)

2360. அரசர்க்கு ஐம்பேர் உறுதிச் சுற்றம்

(அடுத்த) நட் பாளரும், அந்த ணாளரும்,
மடைத்தொழில் வீரரும், மருத்துவம் செயுநரும்
நிமித்த காரரும் நீள்நில வேந்தற்கு
உரைத்த ஐம்பேர் உறுதிச் சுற்றம்.

அரசர்க்கு ஐம்பேர் உறுதிச் சுற்றம்: (5)

1. நட்பாளர், 2. அந்தணாளர், 3. மடைத்தொழில்
வீரர், 4. மருத்துவம் செயுநர், 5. நிமித்தகாரர். (76)

2361. ஐம்பெருங் குழு

ஆமாத்தியர், புரோகிதர், சேனா பதியர்,
(தவத்தொழில்) தூதர், சாரணர் என்றுஇவை
அரசர்க்கு ஆகும் ஐம்பெருங் குழுவே.

ஐம்பெருங் குழு: (5)

1. ஆமாத்தியர், 2. புரோகிதர், 3. சேனாபதியர், 4. தூதர், 5. சாரணர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2360, 2361-ஆம் நூற்பாக்கள் அச்சுப்பிரதியில் இல்லை. (77)

2362. பஞ்ச பூதம்

பஞ்ச பூதம், மண், நீரொடு, நெருப்பும்,
எஞ்சிய காலும், விண்ணும் என்ப.

பஞ்ச பூதம்: (5)

1. மண், 2. நீர், 3. நெருப்பு, 4. கால், 5. விண்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 விஞ்சிய
மண்ணு நீருங் கனலுங் காற்றும்
விண்ணும் பஞ்ச பூத மென்ப—அச்சுப்பிரதி.

2360, 2361, 2362 எண் நூற்பாக்கள் மூன்றும் ஒருசில பிரதிகளில் இல்லை. (78)

2363. ஐம்பொறி

மெய், வாய், கண், மூக்கு, செவி ஐம் பொறியே.

ஐம்பொறி: (5)

1. மெய், 2. வாய், 3. கண், 4. மூக்கு, 5. செவி. (79)

2364. ஐவகைத் தாயர்

பாராட் டும்தாய், ஊட்டும்தாய், முலைத்தாய்,
கைத்தாய், செவிலித்தாய் **ஐந்து** எனக் **கழறுவர்**.

ஐவகைத் தாயர்: (5)

1. பாராட்டும் தாய், 2. ஊட்டும் தாய், 3. முலைத்தாய், 4. கைத்தாய், 5. செவிலித்தாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

2363, 2364ஆம் நூற்பாக்கள் சில பிரதிகளில் இல்லை. (80)

2365. அந்தணர் அறுதொழில்

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்,
ஈதல், ஏற்றல் என்றுஇவை ஆறும்
ஆதிக் காலத்து அந்தணர் அறுதொழில்.

அந்தணர் அறுதொழில்: (6)

1. ஓதல், 2. ஓதுவித்தல், 3. வேட்டல், 4. வேட்பித்தல், 5. ஈதல், 6. ஏற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 லென்றிரு மூவகை, லென்றிவை யென்ப,

லென்றிவை யெல்லாம். (81)

2366. அரசர் அறுதொழில்

அரசர் அறுவகைச் செய்தொழில் ஓதல்,
விசையம், வேட்டல், ஈதல், பார் புரத்தல்,
(கரை இல்) படைக்கலம் கற்றல் ஆகும்.

அரசர் அறுதொழில்: (6)

1. ஓதல், 2. விசையம், 3. வேட்டல், 4. ஈதல், 5. பார்புரத்தல், 6. படைக்கலம் கற்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

அரச ரறுதொழி லோதல் வேட்டல்
புரைதீர் பெரும்பார் புரத்த லீதல்
கரையறு படைக்கலங் கற்றல் விசயம்—அச்சுப்பிரதி. (82)

2367. வணிகர் அறுதொழில்

வணிகர் அறுதொழில் ஓதல், வேட்டல்,
ஈதல், உழவு, பசுக்காவல், வாணிகம்.

வணிகர் அறுதொழில்: (6)

1. ஓதல், 2. வேட்டல், 3. ஈதல், 4. உழவு,
5. பசுக்காவல், 6. வாணிகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:4 வாணிபம். (83)

2368. வேளாளர் அறுதொழில்

வேளாளர் அறுதொழில் உழவு, பசுக் காவல்,
(தெள்ளிதின்) வாணிகம், குயிலுவம், காருகவினை,
(ஒள்ளிய) இருபிறப் பாளர்க்கு ஏவல் செயல்.

வேளாளர் அறுதொழில்: (6)

1. உழவு, 2. பசுக்காவல். 3. வாணிகம், 4. குயிலுவம்,
5. காருகவினை, 6. இருபிறப்பாளர்க்கு ஏவல் செயல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 வாணிபம் (84)

2369. காருகவினை வகை

பருத்திநூல், பட்டுநூல், அமைத்து ஆடை ஆக்கலும்,
சுமத்தலும், அகழ்தலும் காருக **வினைத் தொழில்.**

காருகவினை வகை: (3)

1. பருத்திநூல், பட்டுநூல் அமைத்து ஆடை ஆக்கல்,
2. சுமத்தல், 3. அகழ்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 பிறவுங் (85)

2370. குயிலுவத் தொழில்

குயிலுவம், வாத்தியம் கொட்டுதல் ஆகும்.

குயிலுவத் தொழில்:

வாத்தியம் கொட்டுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (86)

2371. ஆறு அங்கம்

ஆறு அங்கம் மந்திரம், வியாகரணம், நிகண்டு,
சந்தோ பிசிதி, நிருத்தம், சோதிடம்.

ஆறு அங்கம்: (6)

1. மந்திரம், 2. வியாகரணம், 3. நிகண்டு.
4. சந்தோபிசிதி, 5. நிருத்தம், 6. சோதிடம். (87)

2372. அறுசமயம்

அறுசமயம் வை சேடிகம், நையாயிகம்,
(மறுஇல்) மீமாங்கிசம், ஆருகதம், பவுத்தம்,
(பிறிதி) லோகாயுதம் என்னும் பெற்றிய,

அறுசமயம்: (6)

1. வைசேடிகம், 2. நையாயிகம், 3. மீமாங்கிசம்,
4. ஆருகதம், 5. பவுத்தம், 6. லோகாயுதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 மறுவின்மீ மாங்கிய மாருகதம் பவுத்தம்
மறுவின்மீ மாஞ்சை யாருகதம் பௌத்தம்

3:1-2 பிறிது லோகாயிதம், பிரதி லேகாயுதம்,
பிரதி லோகாயதம். (88)

2373. பாசண்ட வகை

பாசண்ட விகற்பமும் அவற்றுள் பல ஆம்;
பேசின் தொண்ணூற்றாறு அறுவகை பெறுமே.

பாசண்ட வகை:

பாசண்ட வகை அச்சமய வகையுள் பல ஆகும்; ஆராயின் அது தொண்ணூற்றாறு வகையாம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பாடாண்டத்துறை வகைப்பெயர்.
1 பாடாண்டத் துறையு மிவற்றுட் பலவகை
1:1 பாசாண்டத்
2:3-4 அறுவகைப் படுமே. (89)

2374. ஆறு உட்பகை

ஆறு உட்பகை காமம், வெகுளி, உலோபம்,
(மாறுகொள்) மோகம், மதம், மாற் சரியம்.

ஆறு உட்பகை: (6)

1. காமம், 2. வெகுளி, 3. உலோபம், 4. மோகம், 5. மதம், 6. மாற்சரியம். (90)

2375. அறுவகைத் தானை

வேல்-தானை, வாள்-தானை, வில்-தானை, (மேலாம்)
தேர்த்தானை, பரித்தானை, களிற்றுத்தானை என்று
ஆற்றல் சான்ற **அறுவகைத் தானை,**

அறுவகைத் தானை: (6)

1. வேல்-தானை, 2. வாள்-தானை, 3. வில்-தானை,
4. தேர்த்தானை, 5. பரித்தானை, 6. களிற்றுத்தானை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 மேலோர்
2:4 தானையென. (91)

2376. அறுவகை நன்னாட்டு அமைதி

செல்வம், விளையுள், பல்வளம், செங்கோன்மை,
கொல்குறும் பின்மை, கொடும்பிணி யின்மையொடு
இவ்வயின் **ஆறும் நன்னாட்டு அமைதி,**

அறுவகை நன்னாட்டு அமைதி: (6)

1. செல்வம், 2. விளையுள், 3. பல்வளம்,
4. செங்கோன்மை, 5. கொல்குறும்பின்மை,
6. கொடும்பிணியின்மை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: நாட்டு வளப்பத்தின் பெயர்.
1:2 விளைவு-அச்சுப்பிரதி 4. செங் கோல்
2:3-4 கொடும்பிணி யின்மை
3:1-2 இவையோ ராறும். (92)

2377. அறுசுவை

அறுசுவை தித்தித்தல், கூர்த்தல், புளித்தல்,
(மறுஅறு) கைத்தல், துவர்த்தல், காழ்த்தல்.

அறுசுவை: (6)

1. தித்தித்தல், 2. கூர்த்தல், 3. புளித்தல்,
4. கைத்தல், 5. துவர்த்தல், 6. காழ்த்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 புளித்தல் கைத்தல்
2:2-3 துவர்த்தல் கூர்த்தல். (93)

2378. அரசியல் அறுவகை

படையும், குடியும், கூழும், அமைச்சும்,
அரணும், நட்பும் என **அரசியல் ஆறே.**

அரசியல் அறுவகை: (6)

1. படை, 2. குடி, 3. கூழ், 4. அமைச்சு.
5. அரண், 6. நட்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 நட்பு மரணுமென, அரணு நட்பும்-அச்சுப்பிரதி. (94)

2379. அறுவகை உலக நடை

அறநிலை அறமும், மறநிலை அறமும்,
அறநிலைப் பொருளும், மறநிலைப் பொருளும்,
அறநிலை இன்பமும், மறநிலை இன்பமும்
எனஅறு வகைத்தே உலக நடையே.

அறுவகை உலக நடை: (6)

1. அறநிலை அறம், 2. மறநிலை அறம், 3. அறநிலைப் பொருள், 4. மறநிலைப் பொருள், 5. அறநிலை இன்பம், 6. மறநிலை இன்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: உலகினடை யறுவகை, உலகநடை.
4 அறுவகைப் படுமே யுலகி னடையே. (95)

2380. அறநிலை அறம்

பேணும் காப்பின் பிறழா நெறியின்
பெறுதற் பொருளால் பேணும் பெற்றி
அறநிலை அறம்என்று அறைந்தனர் புலவர்.

அறநிலை அறம்:

பேண வேண்டிய ஒழுக்கத்தினின்றும் பிறழாமல் ஈட்டிய பொருளால் செய்யப்படுவது,

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 வருணக் 4 நெறிநிலை.

2:1 பெறுவற்

3 அறனிலை யறமென்ப ரறிந்திசி னோரே. (96)

2381. மறநிலை அறம்

ஆனிரை மீட்டலும், அரும்படை தெறுதலும்,
(ஊனம்இல்) செஞ்சோற் றுதவி யோர்பகை
ஈனஞ் செய்தலும் **மறநிலை அறமே.**

மறநிலை அறம்: (3)

1. ஆனிரை மீட்டல், 2. அரும்படை தெறுதல்,
3. செஞ்சோற்றுதவியோர் பகை ஈனஞ்செய்தல்,

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 அரும்பகை
2:3-4 றுதவிப் போர்வயின். (97)

2382. அறநிலைப் பொருள்

நெறிவழி நின்று, நெறியால் உழந்து
பெறுபொருள் என்ப **அறநிலைப் பொருளே.**

அறநிலைப் பொருள்:

நெறிவழி நின்று நெறியால் உழந்து பெறு பொருள். (98)

2383. மறநிலைப் பொருள்

அமர்உழந்து கொண்டவும், (அருந்) திறை கொண்டவும்,
தவறுசெய் தீயோர் தண்டப் பொருளும்,
(கவர்) சூதில் வென்றவும் **மறநிலைப் பொருளே.**

மறநிலைப் பொருள்: (4)

1. அமர் உழந்து கொண்டவை, 2. திறையாகக் கொண்டவை, 3. தண்டமாக வந்த பொருள், 4. சூதில் வென்ற பொருள்.

பாடவேறுபாடு—விளக்கம்

3:1-2 கவர்சூது வென்றவும். (99)

2384. அறநிலை இன்பம்

ஒத்த குலமும், ஒத்த செல்வமும்,
ஒத்த அன்பும், ஒத்த ஆயுளும்,
அத்தக வுடையது அறநிலை இன்பம்.

அறநிலை இன்பம்:

ஒத்த குலம் செல்வம் அன்பு ஆயுள் உடையார் பெறுவது.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 ஒழுக்கமும்
2:4 நலனும். (100)

2385. மறநிலை இன்பம்

ஏறு தழுவல், இலக்கம் எய்தல்,
கூறுபொருள் கொடுத்தல், வலிதிற்கோடல்,
மாறுடை நெறியின் மறநிலை யின்பம்.

மறநிலை இன்பம்: (4)

1. ஏறு தழுவிப் பெறுதல், 2. இலக்கம் எய்து பெறுதல், 3. பொருள் கொடுத்துப் பெறுதல், 4. வலிதின் கோடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 இலக்கது வெய்தல்
3:1-2 மாறுபடு நிலையும். (101)

2386. கருமபூமி அறுநடை வகை

உழவு, தொழிலே, வரைவு, வாணிகம்,
விச்சை, சிற்பம் என்று இத்திறத்து அறுதொழில்
கற்பனை உடையது கரும பூமி.

கருமபூமி அறுநடை வகை: (6)

1. உழவு, 2. தொழில், 3. வரைவு (எழுதுகை),
4. வாணிகம், 5. விச்சை, 6. சிற்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கருமபூமியின் பெயர், அறுவகைக் கருமபூமிக்குரிமை வகை-அச்சுப்பிரதி.

2:1 வித்தை. (102)

2387. போகபூமி

பதினா றாட்டைக் குமரனும் மதன்வழிப்
பன்னீ ராட்டைக் குமரியும் ஆகி,
ஒத்த அன்பினும், ஒத்த நலத்தினும்,
கற்பக நல்மரம் நற்பயன் உதவ,
ஆகிய செய்தவத்து அளவும் அவ்வழிப்
போகம் நுகர்வது போகபூமி.

போக பூமி:

ஒத்த அன்பு ஒத்த நலம் வாய்ந்த பதினாறாட்டைக் குமரனும் பன்னீராட்டைக் குமரியும் மதனன் கற்பகம் முதலியன நற்பயன்தர மதனன் நூலின் வழியே செய்தவத்தளவும் போகம் நுகர்வது.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 அதன்வழிப், விதிவழிப்
2:3 கன்னியும். (103)

2388. அறுவகைப் போக பூமி

ஆதியரி வஞ்சம், நல்லரி வஞ்சம்,
ஏமத வஞ்சம், ஏரண வஞ்சம்,
தேவகுரு வஞ்சம், உத்தரகுரு வஞ்சம்எனப்
போக பூமி அறுவகைப் படுமே.

அறுவகைப் போக பூமி: (6)

1. ஆதியரி வஞ்சம், 2. நல்லரி வஞ்சம், 3. ஏமத வஞ்சம், 4. ஏரண வஞ்சம், 6. தேவகுரு வஞ்சம், 7. உத்தரகுரு வஞ்சம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 மேதை வஞ்ச மிரண வஞ்சம்
3 தேவ குருவ முத்தர குருவமென. (104)

2389. அறுவகைச் சக்கர வர்த்திகள்

அரிச்சந் திரன், நளன், முசுகுந்தன், புரூரவன்,
சகரன், கார்த்த வீரியன் என்றுஇவர்
அறுவகைச் சக்கர வர்த்திகள் ஆகும்.

அறுவகைச் சக்கர வர்த்திகள்: (6)

1. அரிச்சந்திரன், 2. நளன், 3. முசுகுந்தன், 4. புரூரவன், 5. சகரன், 6. கார்த்தவீரியன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 புரூரவா, புரூரவரசன்
2:2 காத்த. (105)

2390. ஏழ் பெருந்தீவு

முதலது நாவலந் தீவே, புடையது
இறலியந் தீவும், குசைப்புல் தீவும்,
சான்மலித் தீவும், கிரவுஞ்சத் தீவும்

தெக்கணத் தீவும், புட்கரத் தீவும் என்று
ஏத்திய பெருந்தீவு ஏழுக்கும் பெயரே
ஏழ்பெருந் தீவும் ஏழ்பொழில் எனப்படும்.

ஏழ்பெருந் தீவு: (7)

1. நாவலந் தீவு, 2. இறலியந் தீவு, 3. குசைப்புல் தீவு, 4. சான்மலித் தீவு, 5. கிரவுஞ்சத் தீவு, 6. தெக்கணத் தீவு, 7. புட்கரத் தீவு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: ஏழு தீவு.
1:3 தீவும், தீவு
3 கிரவுஞ்சத் தீவுஞ் சான்மாலித் தீவும்
5:3 ஏழிற்கும்
6:3 ஏழ்புவி.
முதலது நாவலந் தீவிறலித் தீவே
குசையின் றீவே கிரவுஞ்சத் தீவே
சன்மலித் தீவே தெக்கின் றீவே
புட்கரத் தீவே யெனத்தீ வேழும்
ஏற்றிய பெருந்தீ வேழிற்கும் பெயரே—மு. இராகவையங்கார் பாடம். (106)

2391. ஏழ் பெருங் கடல்

உவரொடு, கரும்பு, மது, நெய், தயிர், பால்,
புனல், மா கடல்ஏழ் எனப்புகன் றனரே.

ஏழ்பெருங் கடல்: (7)

1. உவர்க்கடல், 2. கரும்புக்கடல், 3. மதுக்கடல் (தேன்), 4. நெய்க்கடல், 5. தயிர்க்கடல், 6. பாற்கடல், 7. புனல்கடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

உவரொடு கரும்புமது நெய்தயிர்பால்புனல்
மாகட லேழென வகுத்தனர் புலவர்—அச்சுப்பிரதி. (107)

2392. மேலேழுலக வகை

உலகுஏழ் பூலோகம், புவலோகம், சுவலோகம்,
மகலோகம், சனலோகம், தவலோகம், சத்திய லோகம்.

மேலேழுலக வகை: (7)

1. பூலோகம், 2. புவலோகம், 3. சுவலோகம்,
4. மகலோகம், 5. சனலோகம். 6. தவலோகம்,
7. சத்திய லோகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எழுவகை உலகத்தின் பெயர்.
1:4 சுவர்க்கலோகம்.
2:2-3 தவலோகம் சனலோகம். (108)

2393. கீழேழுலக வகை

அதலம், விதலம், சுதலம், நிதலம்,
மகாதலம், ரசாதலம், தராதலம் என்னப்
பகரும் பாதாளம் ஓர்ஏழ் உலகே,
இருவகை ஏழ்பதி னால்உலகு என்ப.

கீழேழுலக வகை: (7)

1. அதலம், 2. விதலம், 3. சுதலம், 4. நிதலம்,
5. மகாதலம், 6. ரசாதலம், 7. தராதலம்.

பதினால் உலகு:

மேல் ஏழு கீழ் ஏழும் சேர்ந்து பதினால் உலகு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எழுவகைப் பாதாளத்தின் பெயர்.

1:3-4 நிதல சுதலம்
2:1-3 தராதல ரசாதல மகாதலம்
3 பாதால மோரே ழுலகெனப் பகர்வர்
4:3-4 னான்கென விசைப்பர்.

இதன்பின் அச்சுப்பிரதியில் 'சத்தகுல பருவதம்' என்னும் தலைப்பில் 'இமயம் மந்தரம்' எனத் தொடங்கும் நூற்பா உள்ளது. 'இமய மந்தரங் கைலை வடவிந்த நிடதமேம கூட நீல கிரியெனக் குலவரை யேழுங் கூறுமென்ப.

இதனைக் 'குலமலை எட்டு' (2401) என ஏட்டுப் பிரதிகள் எண்தொகையுள் ஒன்றாகக் கொண்டுள்ளன.

2394. ஏழு மேகவகை

புட்கலம், ஆவணி, புட்கல தரணி,
சதாகதி, சலநிதி, சகல வருணி,
நீலி என்ப ஏழுமுகிலின் பெயரே.

ஏழு மேகவகை: (7)

1. புட்கலம், 2. ஆவணி, 3. புட்கல தரணி,
4. சதாகதி, 5. சலநிதி, 6. சகலவருணி, 7. நீலி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 புட்கல வயிராவணி, 2. இராவணி, ராவணி.
2:1 சலாநிதி.

புட்கலா வர்த்தம் சங்கா ரித்தம்
ஆவர்த்தம் சம்வர்த்தம் துரோணம்
காள முகியொடு நீல வருணமென
ஏழு முகிலின் பெயரா கும்மே—அச்சுப்பிரதி. (110)

2395. எழுவகை மேகத்தின் பெயர்

பொன்னும், பூவும், புனலும், செந்நெலும்.
மண்ணொடு, கல், தீ சொரியும் அதன் பெயல்.

எழுவகை மேகத்தின் பெயர்: (7)

1. பொன் மழை, 2. பூ மழை, 3. புனல் மழை,
4. நெல் மழை, 5. மண் மழை, 6. கல் மழை,
7. தீ மழை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 பொன்னு மணியும், பொன்னு மழுவும்.
3-4 புனலுஞ் செந்நெல்லும். (111)

2396. ஏழு நரகம்

பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம்,
எரிபரல் வட்டம், அரிபடை வட்டம்,
புகையின் வட்டம், எரியின் வட்டம்,
இருளின் வட்டம் என்று ஏழ்வகை நரகம்,

ஏழுவகை நரகம்: (7)

1. பெருங்களிற்று வட்டம், 2. பெருமணல் வட்டம், 3. எரிபரல் வட்டம், 4. அரிபடை வட்டம், 5. புகையின் வட்டம், 6. எரியின் வட்டம், 7. இருளின் வட்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 எரியின் வட்டம் புகையின் வட்டம்
இருளின் வட்டம் பெருங்கீழ் வட்டம்
அரிபடை வட்டமென் றெழுவகை நரகம்.

எரிவாய் வட்டம் பெரும்படை வட்டம்
புகையின் வட்ட மிருளின் வட்டம்
பெருங்கீழ் வட்டமென் றெழுவகை நரகம். (112)

2397. எழுவகை இருடிகள்

அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கவுதமன்,
வசிட்டன், காசிபன், மார்க்கண் டயன்என
இசைத்த எழுவகை இருடிகள் ஆகும்.

எழுவகை இருடிகள்: (7)

1. அகத்தியன், 2 புலத்தியன், 3. அங்கிரா, 4. கவுதமன், 5. வசிட்டன், 6. காசிபன், 7. மார்க்கண்டயன்.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (113)

2398. சத்த மாதர்

அபிராமி, இந்திராணி, வயிணவி, வராகி,
கவுமாரி, மயேசுவரி, மாகாளி எழுவர்.

சத்த மாதர் (7)

1. அபிராமி, 2. இந்திராணி, 3. வயிணவி, 4. வராகி,
5. கவுமாரி, 6. மயேசுவரி, 7. மாகாளி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 வைணவி
2:1 கௌமாரி. (114)

2399. எழுவகைத் தாது

இரதம், உதிரம், என்பு, தோல், தசை,
மூளை, சுக்கிலம், எழுவகைத் தாதே.

எழுவகைத் தாது: (7)

1. இரதம், 2. உதிரம், 3. என்பு, 4. தோல்,
5. தசை, 6. மூளை, 7. சுக்கிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 சுக்கிலமுடன். (115)

2400. செங்கோல் வேந்தன் பெறுநெறி ஏழு

அறம், பொருள், இன்பம், அன்பு, மறுமை,
(திறம்பாப்) புகழ், மதிப்பு என்று இவை ஏழும்
ஏறுசெங் கோலின் நெறிச்செல் வேந்தன்.

செங்கோல் வேந்தன் பெறுநெறி ஏழு: (7)

1. அறம், 2. பொருள், 3. இன்பம், 4. அன்பு,
5. மறுமை, 6. புகழ், 7, மதிப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எழுவகைப் பேற்றின் பெயர்.
1:4 பொறுமை—அச்சுப்பிரதி.

3:1-2 பெறுஞ்செங் கோலி, பெருங்கெங் கோலி
3-4 னெழுவகைப் பேறே.

இதன்பின் ஓர் ஏட்டில் பின்வரும் நூற்பா காணப்படுகிறது.

கருதுகோள்கள் ஏழு

அராக்கோ ளிரண்டும் பிரதிசூ ரியமும்
பரிவே டமும்தூம கேதுவு மிந்திர
தனுவும் பெருகு வான மீனுங்
கருது கோள்க ளேழெனக் கருதுவர். (116)

2401. குலமலை எட்டு

இமயம், மந்தரம், கயிலை, (வட) விந்தம்,
நிடதம், ஏம கூடம், நீலகிரி, கந்தம்,
குலமலை எட்டும் கூறும் பெயரே.

குலமலை எட்டு: (8)

1. இமயம், 2. மந்தரம், 3. கயிலை, 4. விந்தம், 5. நிடதம், 6. ஏமகூடம், 7. நீலகிரி, 8. கந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 இமையம்
3:2 யெட்டெனக். (117)

2402. அட்டமா நாகம்

அட்டமா நாகம் வாசுகி, ஆனந்தன்,
விட்ட பற்பன், மகா பற்பன், கார்க்கோடன்,
தட்டமா குளிகன், சங்கபா லன், தக்கன்.

அட்டமா நாகம்: (8)

1. வாசுகி, 2. அனந்தன், 3. விட்ட பற்பன், 4. மகா பற்பன், 5. கார்க்கோடன், 6. தட்டமா குளிகன், 7. சங்க பாலன், 8. தக்கன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 விட்ட பற்பன் கார்க்கோடன் தனஞ்செயன்.

அட்டமா நாகம் வாசுகி யனந்தன்
விட்ட பற்பன் மகாபற்பன் சங்க
பாலன் தக்கன் கார்க்கோ டகனே
ஏலுமா குளிகனென் றெண்வகை நாகம்—அச்சுப்பிரதி.

இதற்கு.
2 விட்ட பற்பன் மகாஅ பற்பன்.
காஅர்க் கோடகன் தட்டமா குளிகன்
சங்க பாலன் றக்கன் றனஞ்சயன்
என்று பாடவேறுபாடும் உண்டு. (118)

2403. அட்டதிக்குப் பாலகர்

இந்திரன், அங்கி, யமன், நிருதி, வருணன்,
(வந்த) வாயு, குபேரன், ஈசானன்
என்ன எண்திசை உலக பாலர்.

அட்டதிக்குப் பாலகர்: (8)

1. இந்திரன், 2. அங்கி, 3. யமன், 4. நிருதி,
5. வருணன், 6. வாயு, 7. குபேரன், 8. ஈசானன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 அக்கினி
இந்திர னங்கி யியம னிருதி
வருணன் வாயு குபேர னீசான
னென்ப வெண்டிசை யுலோக பாலர். (119)

2404. அட்டதிக்குப் பாலகர் சார்திசை வகை

கீழ்த்திசை முதலாச் சார்ச்சி உடைமையின்
அவ்வவர் பெயரொடும் அத்திசை மொழிப.

அட்டதிக்குப் பாலகர் சார்திசை வகை: (8)

அவ்வத் திக்கு பாலகர் பெயரால் அவ்வத் திசை வழங்கும். 1. கீழ்த்திசை-இந்திர திசை, 2. தென் கீழ்த்திசை-அங்க திசை, 3. தெற்கு-யமன் திசை, 4. தென்மேற்கு-நிருதி திசை, 5. மேற்கு-வருண திசை, 6. வடமேற்கு-வாயு திசை, 7. வடக்கு-குபேர திசை, 8. வடகிழக்கு-ஈசான திசை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 சார்கதி
2:1-2 அவ்வப் பெயரொடு. (120)

2405. சூரிய சந்திரர் சார் திசை

கீழ்த்திசை அருக்கற்கு, வடதிசை **சோமற்குச்**
சார்ச்சி யாகச் சாற்றினர் புலவர்.

சூரிய சந்திரர் சார் திசை: (2)

1. கீழ்த்திசை அருக்கன் (சூரியன்),
2. வடதிசை சோமன் (சந்திரன்).

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 அருக்கற்கும் 4. சோமற்கும்
2:3-4 சாற்றப்படுமே. (121)

2406. எண்திசைக் குறிப்பு

கொடியும், புகையும், சீயமும், ஞாளியும்,
இடபமும், கழுதையும், யானையும், காகமும்
எனவே **எண்திசைக் குறிப்பின** ஆகும்.

எண்திசைக் குறிப்பு: (8)

1. இந்திரன்-கொடி, 2. அங்கி-புகை, 3. யமன்-சீயம், 4. நிருதி-ஞாளி, 5. வருணன்-இடபம், 6. வாயுகழுதை, 7. குபேரன்-யானை, 8. ஈசானன்-காகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 பூசையும், பூனையும், 4. நாயும்
3:1 எனவும், என்ப. (122)

2407. அட்டமங்கலம்

கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி,
முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல்,
அளவுஇல் சிறப்பின் **அட்டமங் கலமே.**

அட்டமங்கலம்: (8)

1. கவரி, 2. நிறைகுடம், 3. கண்ணாடி, 4. தோட்டி,
5. முரசு, 6. விளக்கு, 7. பதாகை, 8. இணைக்கயல்.

பாடவேறுபாடு—விளக்கம்

3:3-4 அட்ட மங்கலம், அட்டமங் கலவகை—அச்சுப்பிரதி. (123)

2408. அட்டமூர்த்தம்

பார், நீர், தேயு, வாயு, ஆகாயம்,
சூரியன், மதி, இய மானன் **அட்ட மூர்த்தம்.**

அட்டமூர்த்தம்: (8)

1. பார், 2. நீர், 3. தேயு, 4. வாயு, 5. ஆகாயம்,
6. சூரியன், 7. மதி, 8. இயமானன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 சூரிய னிந்து வியமான னட்டமூர்த்தம்
2:4 அட்ட மூர்த்தி. (124)

2409. அட்டமாசித்தி

அணிமா, மகிமா, கரிமா, லகிமா,
பிராத்தி, பிரா காமியம், ஈசத்துவம், வசித்துவம் என்று
ஆய்தற்கு உரிய **அட்டமா சித்தி.**

அட்டமா சித்தி: (8)

1. அணிமா, 2. மகிமா, 3. கரிமா, 4. லகிமா,
5. பிராத்தி, 6. பிராகாமியம், 7. ஈசத்துவம்,
8. வசித்துவம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 லகிமா கரிமா
2:4 காயரூபித்துவ மென
3 ஆம் பெறற் கரிய அட்டமா சித்தி—அச்சுப்பிரதி. (125)

2410. அட்டாங்க யோகம்

இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம்,
பிரத்தியா காரம், தாரணை தியானம்,
சமாதி என்ப **எண்வகை யோகம்.**

எண்வகை யோகம்: (8)

1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம்,
5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம்,
8. சமாதி.

பாடவேறுபாடு—விளக்கம்

3:2 என்ன. (126)

2411. இயமத்தின் வகை

கொல்லா விரதம், மெய்ம்மை கூறுதல்,
கள்ளாமை, பிறர்பொருள் கவர்தல் இன்மை,
ஐவகை இந்திரியம் அடக்கலும் **இயமம்.**

இயமத்தின் வகை: (5)

1. கொல்லாவிரதம், 2. மெய்ம்மை கூறுதல்,
3. கள்ளாமை, 4. பிறர்பொருள் கவர்தல் இன்மை,
5. ஐவகை இந்திரியம் அடக்கல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கூறல்
2:2-4 பிறர் பொருட்காத லின்மை
3:1-2 இவ்வயி னிந்திய

ஐவகை யிந்திய மடக்கலு முரித்தே. (127)

2412. நியமத்தின் வகை

தவம், செபம், தூய்மை, தத்துவநூல், ஓதல்,
மனம் உவந் திருத்தல், தெய்வம் வழிபடல்
நினையுங் காலை நியமம் ஆகும்.

நியமத்தின் வகை: (6)

1, தவம், 2. செபம், 3. தூய்மை, 4. தத்துவ நூல் ஓதல், 5. மனம் உவந்திருத்தல், 6. தெய்வம் வழிபடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1,4 ஓர்தல்.

அட்டாங்க யோகத்துள் (2410) இயமம், நியமம் என்னும் முதலிரண்டின் விளக்கம் மட்டுமே காணப்படுகிறது. ஏனையவை பற்றிய விளக்கம் இங்குத் தரப்படாமை கவனிக்கத்தக்கது. ஒருகால் இவ்விரண்டு நூற்பாக்களும் பின்னையோர் புகுத்திய இடைச் செருகல்களாகவும் எண்ண இடமாகிறது. (128)

2413. எண்பெயரெச்சம்

(சிறப்பு இல்) சிதடும், (உறுப்பு இல்) பிண்டமும்,
கூனும், குறளும், ஊமையும், செவிடும்,
மாவும், மருளும் உட்பட மக்கட்கு
ஏயும் சிறப்பு இலா எண்பெய ரெச்சம்.

எண்பெயரெச்சம்: (8)

1. சிதடு, 2. பிண்டம், 3. கூன், 4. குறள், 5. ஊமை, 6. செவிடு, 7. மா, 8. மருள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சிறப்பில்லா எண் பெயரெச்சம்,
எண் வகைப் பெயரெச்சம்.

3: முடமு மறுப்பு மருளு மக்கட்கு—அச்சுப்பிரதி.
4:1-2 திண்சிறப் பில்லா, ஏய்சிறப் பில்லா.
3-4 எண்பே ரெச்சம், எண்வகை யெச்சம். (129)

2414. எண்வகைக் காட்சி

அறம், ஐயப் படாமை, அவா ஒன்று இன்மை,
அறிவு உவர்ப்புஇன்மை, மூடம் அறுத்தல்,
அறப்பழி மறுத்தல், அழிந்தோரை நிறுத்தல்,
அறத்தை விளக்கல், அறுசமயத்தவர்க்கு அன்புறல்,
ஆகும் என்ப எண்வகைக் காட்சி.

எண்வகைக் காட்சி: (8)

1. அறம் ஐயப் படாமை, 2. அவா ஒன்று இன்மை,
3. அறிவு உவர்ப்பு இன்மை, 4. மூடம் அறுத்தல்.
5. அறப்பழி மறுத்தல், 6. அழிந்தோரை நிறுத்தல்,
7. அறத்தை விளக்கல், 8. அறு சமயத்தவர்க்கு அன்புறல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 அறிவு வரம் பின்மை
5 எனவிவை யென்ப வெண்வகைக் காட்சி. (130)

2415. எண்வகைக் குணம்

அனந்த ஞானம், அனந்த தரிசனம்,
அனந்த வீரியம், அனந்த சுகமே,
நாமம் இன்மை, கோத்திரம் இன்மை,
ஆயு இன்மை, அழியா இன்பம் என்று
ஏயும் தகைய எண்வகைக் குணமே.

எண்வகைக் குணம்: (8)

1. அனந்த ஞானம், 2. அனந்த தரிசனம், 3. அனந்த வீரியம், 4. அனந்த சுகம், 5. நாமம் இன்மை, 6. கோத்திரம் இன்மை, 7. ஆயு இன்மை, 8. அழியா இன்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 தெரிசனம்
4:4 இயல்பென்று
5:1-2 ஏயுங் காலை
சயமிகை ஞானஞ் சயமிகை தரிசனம்
பாசபந்தம் வீடு பற்று
பாச மனாதி பாச தேகம்
பதியுண்மை யறிதல் பரமேசுர மிருதி
உண்மை யறிதல் எண்வகை ஞானம். (131)

2416. எண்வகைக் குற்றம்

ஞானா வரணீயம், தரிசனா வரணீயம்,
வேத நீயம், மோக நீயம்,
ஆயு நாமம், கோத்திர நாமம்,
காய வந்தராயம், ஆயுவந்த ராயம் என்று
ஆய எண்வகைக் குற்றம் ஆகும்.

எண்வகைக் குற்றம்: (8)

1. ஞானாவரணீயம், 2. தரிசனாவரணீயம், 3. வேத நீயம், 4. மோக நீயம், 5. ஆயுநாமம், 6. கோத்திர நாமம், 7. காய வந்தராயம், 8. ஆயு வந்தராயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 ஆயு நாமங் கோத்திர மந்த
ராய மென்ப வெண்வகைக் குற்றம்—அச்சுப்பிரதி.
5:4 என்ப
5 றேயுங் காலை யெண்வகைக் குற்றம்.
இந்நூற்பாவின் தொடர்ச்சியாக,
'இக்குற்றம் நீக்கியோர் வச்சிர காயர்'
என ஓரடி சில பிரதிகளில் காணப்படுகிறது. (132)

2417. வணிகர் எண்குணம்

தனிய னாதல், முனிவில னாதல்,
இடன்அறிந்து ஒழுகல், பொழுதொடு புணர்தல்,
உறுவது தெரிதல், இறுவது அஞ்சாமை,
ஈட்டல், பகுத்தல் எனஇவை எட்டும்
வாட்டம் இல்லா வணிகரது இயல்பே.

வணிகர் எண்குணம்: (8)

1. தனியனாதல், 2. முனிவிலனாதல், 3. இடன் அறிந் ஒழுகல், 4. பொழுதொடு புணர்தல், 5. உறுவது தெரிதல் 6. இறுவது அஞ்சாமை, 7. ஈட்டல், 8. பகுத்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: வணிகர் எட்டியல்பு.
1:1 தனிமை யாதல், தனிமை யாற்றல்
2:1-2 இடரிற் றெளிதல், இடரிற் றெரிதல்
3:1-2 உறுவகை தேர்தல்
4:2-3 வகுத்த லென்றிவை
5:3-4 வணிகர் இயல்பே, வணிகர் குணமே,
வணிகர்தங் குணமே. (133)

2418. எண்வகை முன்சீர்க் கணம்

நீரின் கணமும், நிலத்தின் கணமும்,
தீயின் கணமும், (எரி) கதிர்க் கணமும்,
மதியின் கணமும், மாருத கணமும்
அந்தர கணமும், இயமானன் கணமும்என
எட்டும்முன் பாவியற் சீர்க்கு வரும் கணமே,

எண்வகை முன்சீர்க் கணம்: (8)

1. நீரின் கணம், 2. நிலத்தின் கணம், 3. தீயின் கணம், 4. கதிர்க் கணம், 5. மதியின் கணம், 6. மாருத கணம், 7. அந்தர கணம், 8. இயமானன் கணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு; எண்வகைக் கணம்
5 எட்டு மெழுவாய்ச் சீர்க்குவருங் கணமே.

தீரின் கணமும் தீயின் கணமும்
அந்தர கணமும் இயமானன் கணமும்
மதியின் கணமும் எரிகதிர்க் கணமும்
மாருத கணமும் மாநிலக் கணமும்
எட்டு முன்னர்ச் சீர்க்கு வருங் கணம்—அச்சுப்பிரதி. (134)

2419. முதற்சீர் இலக்கணம்

அசைமூன் றதுவே **முதற்சீர் இலக்கணம்.**

முதற்சீர் இலக்கணம்:

அசை மூன்று கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (135)

2420. நிலத்தின் கண வகை

நிரைமூன் றதுசீர் **நிலத்தின் கணமே.**

நிலத்தின் கணவகை:

நிரை மூன்றாகி வருவது.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 நிலக்கண மாகும். (136)

2421. நீரின் கண வகை

நேர்முதல் ஆகி நிரையிணை பின்வரின்,
நீரின் கணம்எனச் சீர்பெயர் பெறுமே.

நீரின் கணவகை:

நேர் முதலாய் நிரையிணை பின்வருவது. (137)

2422. தீயின் கண வகை

நேர்நடு ஆகி, நிரை இருபாலும்
சேரும் சீரது **செந்தீக் கணமே.**

தீக்கண வகை:

நேர்நடுவாய் நிரை இருபாலும் வருவது. (138)

2423. மாருத கண வகை

இறுதி நிரையாய் இணைநேர் முன்னர்
வருசீர் **மாருத கணம்**என வைப்பர்.

மாருத கணவகை

இறுதி நிரையாய் இணைநேர் முன்னர் வருவது. (139)

2424. அந்தர கண வகை

முந்து நிரையிணை வந்து, நேர் பின்வரின்,
அந்தர கணம் என்று அறிய வேண்டும்.

அந்தர கண வகை:

நிரையிணை முன் வந்து நேர்பின் வருதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. முந்து நிரையா யிணைந்து நேருறின்
2:3 அறையல்
இறுதி நேரா யிணைநிரை முன்னர்
வருசீ ரந்தர கணமென வழங்கும். (140)

2425. எரிகதிர்க் கண வகை

நிரைநடு ஆகி, நேர்இரு பால்வரின்,
எரிகதிர்க் கணம்என இயம்புதற்கு உரித்தே.

எரிக்கதிர்க் கண வகை:

நிரை நடு ஆகி நேர் இருபாலும் வருதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சூரிய கணம் என்னும் பெயர்.
2:2-4 கணமென் றியம்பப் படுமே,
கணமென் றியம்பற் குரித்தே. (141)

2426. மதியின் கண வகை

முதல்நிரை ஆகி, இணைநேர் பின்வரின்,
மதியின் கணம்என வகுத்துஉரைத் தனரே.

மதியின் கணம்:

முதல் நிரை ஆகி இணைநேர் பின்வருவது.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 வைக்கப் படுமே.

முந்து நிரையா யிணைநேர் பின்வரின்
இந்துவின் கணமென் றியம்பல் வேண்டும். (142)

2427. இயமானன் கண வகை

நேர்மூன்று ஆகின் சீர்இய **மானன்.**

இயமானன் கண வகை:

நேர் மூன்றாகி வருவது. (143)

பாடவேறுபாடு—விளக்கம்

எண்வகை முவற்சீர்க் கண விளக்க நூற்பாக்கள் இம்முறை மாறியும் சில பிரதிகளில் காணப்படுகின்றன. நீர், தீ, அந்தரம், இயமானன், மதி, எரிகதிர், மாருதம், நிலம் என்னும் முறைவைப்பில் வைக்கப்பட்டுள்ளன. அச்சுப் பிரதியில் காணும் அடைவும் இவ்வாறே உள்ளது.

2428. எண்வகைக் கணங்களுள் நற்குணம் தீக்குணம்

நிலனும், நீரும், மதியும், இய மானனும்
நலமிகும், முதல்வரின் பிறநான்கும் ஊனம்.

நற்கண வகை:

நிலம், நீர், மதி, இயமானன்.

தீக்கண வகை:

தீ, மாருதம், அந்தரம், எரிகதிர்.

பாடவேறுபாடு—விளக்கம்

எண்கண வரிசையுள் முதலிரண்டும் இறுதியிரண்டும் நற்கணமாகவும் இடைவரு நான்கும் தீக் கணமாகவும் அமைந்துள்ளன. (144)

2429. எண் வகைப் பரிசம்

ஒட்டுதல், பிடித்தல், தீண்டல், தடவுதல்,
கட்டுதல், வெட்டல், குத்தல், கையூன்றல்
எட்டும் தக்க **மெய்ப் பரிசம்** என்ப.

எண்வகைப் பரிசம் (8)

1. ஒட்டுதல், 2. பிடித்தல், 3. தீண்டல், 4. தடவுதல், 5. கட்டுதல், 6. வெட்டல், 7. குத்தல், 8. கையூன்றல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எண் வகை மெய்ப்பரிசம்
1:1 தட்டுதல், 4. தடவல்.
2:3-4 குத்த லூன்றலென், குற்றல் கை யூன்றல். (145)

2430. எண் வகைக் கணிதம்*

குணகாரம், பாற்கரம், பாற்கவ மூலம்,
கணமே, மாருதம், சலநிதி, நிருத்தம்,
கரணம் என்ப **எண்வகைக் கணிதம்.**

எண்வகைக் கணிதம்:

1. குணகாரம், 2. பாற்கரம், 3. பாற்கவமூலம், 4. கணம், 5. மாருதம், 6. சலநிதி, 7. நிருத்தம், 8. கரணம்.

பாடவேறுபாடு—விளக்கம் .

1:1 குணகரம்
3:2-4 எண்வகைக் கணிதப் பெயரே.

குணகாரம் பாற்கவம் பரிச்ச மூலம்
கணமே.... மைஞ் சலகலி மிருதம்
எனவே யெண்வகைக் கணிதப் பெயரே.

குணகாரம் பாகாரம் வற்க மூலம்
கணமே மூலஞ் சலதிலய மிரதம்
எனவே யெண்வகைக் கணிதப் பெயரே. (146)

2431. எண் வகை மணம்

பிரமம், பிரசா பத்தியம், ஆரிடம்,
தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம்,
பைசாசம் என்ப எண்வகை மணமே.

எண் வகை மணம் (8)

1. பிரமம், 2. பிரசாபத்தியம், 3. ஆரிடம்,
4. தெய்வம், 5. காந்தரும், 6. ஆசுரம்,
7. இராக்கதம், 8. பைசாசம். (147)

2432. எண் வகைத் தொழிற்பூ*

வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்,
வட்கார்மேல் செல்வது வஞ்சியாம், உட்கார்
எதிரூன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி,
அது வளைத்த லாகும் உழிஞை, அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கார்
செரு வென்றது வாகை யாம்.
அத்திணைத் தொழிலும் அத்திணைப் பூவும்
அப்பெயர் பெறுதலும் அந்நிலத்து உரித்தே.

* வெண்பா

எண்வகைத் தொழிற்பூ; (8)

1. வெட்சிப்பூ-நிரை கவர்தல், 2. கரந்தைப்பூ-நிரை மீட்டல், 3. வஞ்சிப்பூ-வட்கார்மேல் செல்வது, 4. காஞ்சிப்பூ-உட்கார் எதிரூன்றல், 5. நொச்சிப்பூ-எயில் காத்தல், 6. உழிஞைப்பூ-எயில் வளைத்தல், 7. தும்பைப்பூ-அதிரப் பொருவது, 8. வாகைப்பூ-மிக்கார் செரு வென்றது.

பாடவேறுபாடு—விளக்கம்

6. செருவென் றதுவாகை யாமெனச் செப்புவர்
7. அத்தினைப் பூவும் அத்தினைத் தொழிலும்
8. பெறுவ தந்நிலத். (148)

2433. எண்திசை யானை

அயிரா வதமே, புண்ட ரீகம்,
வாமனம், குமுதம், (மதம்பாய்) அஞ்சனம்,
புட்பதந் தத்தோடு, சார்வ பூமம்,
சுப்பிர தீபம் **எண்திசை யானை.**

எண்திசை யானை (8)

1. அயிராவதம், 2. புண்டரீகம், 3. வாமனம், 4. குமுதம், 5. அஞ்சனம், 6. புட்பதந்தம், 7. சார்வபூமம், 8. சுப்பிரதீபம்.

பாடவேறுபாடு—விளக்கம்

ஐராவதம் புண்டரீகம் வாமனங் குமுதம்
அஞ்சனம் புட்பதந்தஞ் சார்வ பூமம்
சுப்பிர தீப மென்னச் சொல்லுப
எண்டிசை யானைக் கியலும் பெயரே.

1:1 அயிராபதம்
3:3-4 சாருவ பூமம், சாருவ பூமன். (149)

2434. நவகண்டம்

வடபால் விதையம், தென்பால் விதையம்,
கீழ்பால் விதையம், மேல்பால் விதையம்,
வடபால் இரேவிதம், தென்பால் இரேவிதம்,
வடபால் பாரதம், தென்பால் பாரதம்,
மத்திம கண்டம் அதனொடு நற்பெரு
நாவலந் தீவின் நவகண்டம் ஆகும்.

நவகண்டம்: (9)

1. வடபால் விதையம், 2. தென்பால் விதையம், 3. கீழ்பால் விதையம், 4. மேல்பால் விதையம், 5. வடபால் இரேவதம், 6. தென்பால் இரேவதம், 7. வடபால் பாரதம், 8. தென்பால் பாரதம், 9. மத்திம கண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 விதேகம், விந்தம், 4. விதேகம், விந்தம்.
2:2 விதேகம், 4. விதேகம்
3:2 இரேயம், 4. இரேயம்
4:2 பரதம், 4. பரதம்
5:4 நாற்பெரு
6:3-4 நவகண்டப் பெயரே.
5-6 மத்திம கண்டமென் றித்திற மென்ப
நாவலந் தீவி னவகண்டப் பெயரே,
மத்திம கண்ட மெனவகுத் தனரே
நாற்பெரு நாவலந் தீவி னவகண்டம். (150)

2435. நவபுண்ணியம்

எதிர்கொளல், பணிதல், இருக்கை, தாள்நீர்,
விரையே, நறுமலர், தூபம், விளக்கே,
அறுசுவை உண்டி அமைந்தோர்க்கு ஆற்றுதல்
நவபுண்ணியத்தின் நாமம் ஆகும்.

நவபுண்ணியம்: (9)

1. எதிர்கொளல், 2. பணிதல், 3. இருக்கையீதல், 4. தாள் நீர் வழங்குதல், 5, விரை அணிவித்தல், 6. நறுமலர் சூட்டல், 7. தூபம் காட்டல், 8. விளக்கு ஏற்றுதல், 9. அறுசுவை உண்டி அமைந்தோர்க்கு ஆற்றுதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கானீர்
2 புதுமலர் தூபம் விளக்கே புகழ்தல்—அச்சுப்பிரதி.
3:3 யறிந்தோர்க், யமர்ந்தோர்க், யருந்தவர்க்—
அச்சுப்பிரதி. (151)

2436. நவதாரணை

நாம தாரணை, மாயா தாரணை,
சித்திர தாரணை, சத்த தாரணை,
சதுரங்க தாரணை, செய்யுட் டாரணை,
நிறைகுறை வாகிய எண்பொருள் தாரணை,
வத்துத் தாரணை, கெந்தத் தாரணை,
நவதா ரணையின் நாமம் ஆகும்.

நவதாரணை: (9)

1. நாம தாரணை, 2. மாயா தாரணை, 3. சித்திர தாரணை, 4. சத்த தாரணை, 5. சதுரங்க தாரணை, 6. செய்யுட் டாரணை, 7. நிறைகுறைவாகிய எண்பொருள் தாரணை, 8. வத்துத் தாரணை, 9. கெந்தத் தாரணை.

பாடவேறுபாடு—விளக்கம்

நாம தாரணை கெந்த தாரணை
வன்ன தாரணை வத்து தாரணை
சத்த தாரணை சித்திர தாரணை
சதுரங்க தாரணை செய்யுட் டாரணை
நிறைகுறை வாகிய வெண்பொருட் டாரணை
நவதா ரணையி னாம மாகும்
—பேராசிரியர் மு. இராகவையங்கார் பாடம்.

2436—யா. வி. 96

நாம தாரணை வச்சிர தாரணை
மாயா தாரணை சித்திர தாரணை
செய்யுட் டாரணை நிறைகுறை வாகிய
எண்பொருட் டாரணை சத்த தாரணை
வத்து தாரணை சதுரங்க தாரணை
நவதா ரணையின் நாம மாகும்—அச்சுப்பிரதி. (152)

2437. நவதாளம்

சேமதாளம், மருட்டாளம், மத்திம தாளம்,
சசிதாளம், சத்த தாளம், இடைத் தாளம்,
படிமதாளம், விடமதாளம், துருவதாளம் என
நவதா ளத்தின் நாமம் ஆகும்.

நவதாளம்: (9)

1. சேமதாளம், 2. மருட்டாளம், 3. மத்திம தாளம்,
4. சசிதாளம், 5. சத்த தாளம், 6. இடைத்தாளம்,
7. படிமதாளம், 8. விடமதாளம், 9. துருவதாளம்.

பாடவேறுபாடு—விளக்கம்

செயதாள மருட்டாளம் பீலி தாளம்
மிடைதாளம் விடம தாளம் பிடிதாளம்
அசைதாளந் துருவ தாளம் நிருத்த தாளமென
நவதா ளத்தி னாம மாகும்.

1:2 மரும தாளம்

1-2 செயதாள மருட்டாளம் மத்திம தாளம்
அடைதாளம் படிதாளம் விட்ட தாளம்

1-4 செயதாளம் மருமதாளம் பீலிதாளம்
இடதாளம் விடதாளம் பிடிதாள மசைதாளம்
துருவ தாள நிருவித தாளமென
நவதா ளத்தி னாம மாகும்.
அரிதாளம் மரும தாளஞ் சமதாளம்
சயதாளஞ் சித்திர தாளந் துருவதாளம்
நிவிர்த்தி தாளம் படிம தாளம்
விடதாள மிவையே நவதாளமென்ப — அச்சுப்பிரதி.
(153

2438. நவமணி

வயிரம், வயிடூரியம், முத்து, மாணிக்கம்,
பவளம், கோமேதகம், (பாய்ஒளி) நீலம்,
மரகதம், புட்ப ராகம் என்ன
நவமா மணியின் நாமம் ஆகும்.

நவமணி: (9)

1. வயிரம், 2. வயிடூரியம், 3. முத்து, 4. மாணிக்கம், 5. பவளம், 6. கோமேதகம், 7. நீலம், 8. மரகதம், 9. புட்பராகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 வைரம் வைடூரியம்
1:3-4 மாணிக்கம் முத்து
2:3-4 பாலொளி நீலம், இந்திர நீலம்
3:2-3 புருட ராகம்
3. மரகதம் புட்பராக நவமணிப் பெயரே. (154)

2439. நாடக நவரசம்

சிங்காரம், பெருநகை, கருணை, வீரியம்,
உருத்திரம், பயமே, இழிப்பு, வியப்பு,
சாந்தம் என்னச் சாற்றின இவைகள்
நலம்கிளர் நாடக நவரசம் ஆகும்.

நாடக நவரசம்: (9)

1. சிங்காரம், 2. பெருநகை, 3. கருணை, 4. வீரியம், 5. உருத்திரம், 6. பயம், 7. இழிப்பு, 8. வியப்பு, 9. சாந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 வீரம்
சிங்காரம் பெருமை நகைகருணை வீரியம்
அற்புதம் பயமே ரௌத்திரம் சாந்தமென
நாடகத் தியலு நவரச மாகும்.
2-3 அற்புதம் பயம்ரௌத் திரம்குற்சை சாந்தம்
என்ன நாடகத் தியறு நவரசம்—அச்சுப்பிரதி. (155)

2440. பத்துத் திசை

வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்
நடக்கும் பெயரது நாற்பெருந் திசையே;
அந்த ராளம் திசை நாற் கோணம்
கீழ் மேல் திசையொடு பத்து எனக் கிளப்பர்.

பத்துத் திசை (10) நாற்பெருந்திசை:

1. வடக்கு, 2. கிழக்கு, 3. தெற்கு, 4. மேற்கு, **அந்தராளமாகிய** (இடைப்பட்டவிடமாகிய) **திசை நாற்கோணம்** 5. வட கிழக்கு, 6. தென்கிழக்கு, 7. தென்மேற்கு, 8. வடமேற்கு, 9. கீழ்ப்பரப்பு (பூமி), 10. மேல் பரப்பு (ஆகாயம்).

பாடவேறுபாடு—விளக்கம்

1 கிழக்குந் தெற்கு மேற்கும் வடக்குமென
2 : 4 திசையும் (156)

2441. தசாங்கம்

ஆறும், மலையும், யானையும், குதிரையும்,
ஊரும், நாடும், கொடியும், முரசும்,
தாரும், ஆணையும், **தசாங்கம்** என்ப,
தேரின் அதற்குச் சின்னமும் என்ப.

தசாங்கம்: (10)

1. ஆறு, 2. மலை, 3. யானை, 4. குதிரை, 5. ஊர், 6. நாடு, 7. கொடி, 8. முரசு, 9. தார், 10. ஆணை.

பாடவேறுபாடு—விளக்கம்

தசாங்கத்திற்குரிய சின்னமும் இவையே.
1:3 ஆனையும்
ச:1-2 தாருந் தேருந் 4 எனப்படும்.
4:1 தேறி. (157)

2442. அருச்சுனன் தச நாமம்

பற்குனன், சுவேத வாகனன், பார்த்தன்,
சவ்விய சாசி, கிரீடி, தனஞ்சயன்,
விசயன், வீவற்சு, கிருட்டிணன், **அருச்சுனன்**
தசநா மங்கள் சாற்றுங் காலே.

அருச்சுனன் தசநாமங்கள் (10)

1. பற்குனன், 2. சுவேதவாகனன், 3. பார்த்தன், 4. சவ்விய சாசி, 5. கிரீடி, 6. தனஞ்சயன், 7. விசயன், 8. வீவற்சு, 9. கிருட்டிணன், 10. அருச்சுனன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 சைவ சாசி
2:3 கிருட்டி
3:2-3 கரியோன் விறற்சேய், 3-2 வீபற்சு
3-4 விசயன் வீபற்சு காண்டிவன் கிருட்டினன்

அருச்சு னன் தச நாமங்க ளாகும்—அச்சுப்பிரதி. (158)

2443. வேளாளர் பத்துவகைத் தொழில்

ஆணைவழி நிற்றல், ஆள்வினை தொடங்கல்,
கைக்கடன் ஆற்றல், கரிலற வகுத்தல்,
ஒக்கல் போற்றல், ஓவா முயற்சி,
மன்னற்கு இறைதரல், ஒற்றுமை கோடல்,
திருந்திய ஒழுக்கம், விருந்து புறந்தருதல்
வேளாண் மாந்தர்க்கு ஓரீ ரைந்தே.

வேளாளர் பத்துவகைத் தொழில் (10)

1. ஆணைவழி நிற்றல், 2. ஆள்வினை தொடங்கல், 3. கைக்கடன் ஆற்றல், 4. கரிவிற வகுத்தல், 5. ஒக்கல் போற்றல், 6. ஓவா முயற்சி, 7. மன்னற்கு இறைதரல், 8. ஒற்றுமை கோடல், 9. திருந்திய ஒழுக்கம், 10. விருந்து புறந்தருதல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 ஆண்வினை, 3.4 அழிந்தோரை நிறுத்தல்
2:3-4 கசிவ கத் துண்மை
4:1-2 மன்னிறை தருதல். (159)

2444. அரி தசாவதாரம்

மீனே, யாமை, வராகம், நர சிங்கம்,
வாமனன், பரசுராமன், வாசு தேவன்,
பல தேவன், இராமன், (வரு) கற்கி ஆகும்
என்று இவை ஈரைந்து **அரியவ தாரம்.**

அரியவதாரம் பத்து (10)

1. மீன், 2. யாமை, 3. வராகம், 4. நரசிங்கம், 5. வாமனன், 6. பரசுராமன், 7. வாசுதேவன், 8. பலதேவன், 9. இராமன், 10. கற்கி,

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 நாரசிங்கம்
2:2-4 பரசி ராம னிராமன்
3 பலதேவன்வசு தேவன் கற்கியென்
4:1-2 ஆகு மீரைந், ஆகுமீரைந்தும். (160)

2445. சிற்பத்தொழிலின் பத்து உறுப்பு

கல்லும், உலோகமும், செங்கலும், மரமும்,
மண்ணும், சுதையும், தந்தமும், வண்ணமும்,
கண்டுசர்க் கரையும், மெழுகும் என்ற இத்
தசமே **சிற்பத் தொழிற்கு உறுப்பு** ஆகும்.

சிற்பத்தொழிலின் பத்து உறுப்பு (10)

1. கல், 2. உலோகம், 3. செங்கல், 4. மரம், 5. மண், 6. சுதை, 7. தந்தம், 8. வண்ணம், 9. கண்டுசர்க்கரை, 10. மெழுகு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:4 வண்ணமும்

3:1-2 கண்டசர்க் கரையும் 4. என்றிவை

4 பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன.

இந்நூற்பாவை அடுத்துத் தசவாயுக்கள் பற்றிய விளக்கம் தஞ்சைச் சரசுவதி மகால் சுவடியில் மட்டும் காணப்பட்டது. அது வருமாறு:

பிராண னபானன் வியானன் உதானன்
சமானன் நாகன் கூர்மன் கிருகரன்
தேவ தத்தன் தனஞ்செய னென்ன
வாயு வீரைந் தாகு மென்ப,
இருதய மண்டலத் தியங்கும் பிராணன்
குச்சத் தலத்திடை நிற்ப தபானன்
நாபியி னின்றங் கோவா னுதானன்
வியான னெங்கும் வியாபியா நிற்கும்
கந்தர குழியிற் சந்திடைச் சமானன்
முடக்கலு நீட்டலுங் கிளர்ப்பது நாகன்
ரோமப் புளகமு மிமைத்தலுங் கூர்மன்
கிருகர னென்பது முகத்திடைக் கெழுமித்
தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைக்கும்
ஓட்டமும் வியர்ப்புந் தேவதத் தன்றொழில்
ஒல்கா வன்பி னல்லவர் கேண்மையின்
உயிருடல் விடினுந் தானுடல் விடாமல்
ஒக்க நின்றங் குடலினை யியக்கித்
தலைகிழித் தகல்வது தனஞ்சயன் றொழிலே. (161)

2446. ஏகாதச உருத்திரர்

மாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன்,
நீலலோகிதன், ஈசானன், விசயன்,
வீமதேவன், பவோற்பவன், காபாலி,
சவுமியன் ஏகாதச உருத்திரர் ஆவர்.

ஏகாதச உருத்திரர் (11)

1. மாதேவன், 2. சிவன், 3. உருத்திரன், 4. சங்கரன், 5. நீலலோகிதன், 6. ஈசானன், 7. விசயன், 8. வீம தேவன், 9. பவோற்பவன், 10. காபாலி, 11. சவுமியன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 நீல கண்டன்
3:1-2 தேவ தேவன்
4:1 சௌமியன் 3-4 உருத்திர ராகும். (162)

2447. துவாதசாதித்தர்

வைகத்தன், விவச்சுதன், மார்த்தாண்டன், பாற்கரன்,
இரவி, உலோகப் பிரகாசன், உலோக சாட்சி,
திரிவிக்கிரமன், ஆதித்தன், சமித்திரன், துவட்டா,
அங்கிச மன்என்ப பன்னிரண்டு ஆதித்தர்.

துவாதசாதித்தர் (12)

1. வைகத்தன், 2. விவச்சுதன், 3. மார்த்தாண்டன், 4. பாற்கரன், 5. இரவி, 6. உலோகப் பிரகாசன், 7. உலோக சாட்சி, 8. திரிவிக்கிரமன், 9. ஆதித்தன், 10. சமித்திரன், 11. துவட்டா, 12. அங்கசமன்.

பாடவேறுபாடு—விளக்கம்

வைகர்த்தன் பார்க்கவன் வீபரசு மார்த்தாண்டன்
பாற்கர னுலகச் சான்றோன் பண்பார்
திருவிக் கிரமன் அரியம னாதித்தன்
சூரிய ணங்குசு மாலி திவாகரன்
துவாதசா தித்த ரென்னச் சொல்லுவர்

என்று சில பிரதிகளில் பாடம்.

தாத்துரு சக்கர னரியமன் மித்திரன்
வருண னஞ்சுமா னிரணியன் பகவான்
திவச்சுவான் பூடன் சவித்துரு துவட்டன்
எனச் சூரி யற்குப் பன்னிரு பெயரே—அச்சுப்பிரதி. (163)

2448. பன்னிரண்டு உயிர்வேதனை

அனலும், சீதமும், வாதமும், அசனியும்,
புனலும், ஆயுதமும், விடமும், விட மருந்தும்,
பசியும், தாகமும், பிணியும், உணவறாமையும்
உயிரின் வேதனை ஓர் ஈராறே.

பன்னிரண்டு உயிர் வேதனை (12)

1. அனல், 2. சீதம், 3. வாதம், 4. அசனி, 5. புனல், 6. ஆயுதம், 7. விடம், 8. விடமருந்து, 9. பசி, 10. தாகம், 11. பிணி, 12. உணவறாமை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 வாதமும் பனியும், 4. சனியும், சளியும்
3:1-2 பசியுநீர் வேட்கையும் 3-4 பிணியுமுன் வறுமையும்.
இதனை அடுத்து,
அகர முதல வச்செழுத் தினையே
சோடச கலையெனச் சொல்லினர் புலவர்

என்றும்,

அகர முதலெள கார மீறாய்ப்
பகருஞ் சோடச கலையென லாகும்
என்றும் பாடவேறுபாடுகளுடன் ஒரு நூற்பா சில பிரதிகளில் உள்ளது. இதன் பொருளடக்கம் விளங்கவில்லை. (164)

2449. பதினெண் பாடை

அங்கம், வங்கம், கலிங்கம், கவுசலம்,
சிந்து, சோனகம், திராவிடம், சிங்களம்,
மகதம், கவுடம், மராட்டம், கொங்கணம்,
துளுவம், சாவகம், சீனம், காம்போதி,
அருமணம், பப்பரம் என்னச் சொன்னவை
பதினெண் பாடை ஆம்எனப் பகர்வர்.

பதினெண் பாடை (18)

1. அங்கம், 2. வங்கம், 3. கலிங்கம், 4. கவுசலம், 5. சிந்து, 6. சோனகம், 7. திராவிடம், 8. சிங்களம்,

9. மகதம், 10. கவுடம், 11. மராட்டம், 12. கொங்கணம், 13. துளுவம், 14. சாவகம், 15. சீனம், 16. காம்போதி, 17. அருமணம், 18. பப்பரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 கவுசிகம், கௌசிகம், கோசிகம்
2:3 திரவிடஞ்
3:2 கவுண்டம், கொல்லம், கன்னடம்
3 மாராட்டம், மராடம்
4:2 சாவதஞ், சாளுவஞ்
3 சீனி, 4. காம்போசம்
4 துளுவஞ் சீன காம் போதி கவுடம்
5:1 பருணம், வருணம், கவுடம். (155)

2450. தேவர் பதினெண்கணம்

அமரர், சித்தர், அசுரர், சாரணர்,
கருடர், கின்னரர், கிம்புருடர், காந்தருவர்,
இயக்கர், விஞ்சையர், இராக்கதர், பூதர்,
பசாசு, தாரகை, முனிவர், உரகர்,
நாகர், போக பூமியர் என்னப்
பாகுபட்டது பதினெண் கணமே.

தேவர் பதினெண் கணம் (18)

1. அமரர், 2. சித்தர், 3. அசுரர், 4. சாரணர், 5. கருடர், 6. கின்னரர், 7. கிம்புருடர், 8. காந்தருவர், 9. இயக்கர், 10. விஞ்சையர், 11. இராக்கதர், 12. பூதர், 13. பசாசு, 14. தாரகை, 15. முனிவர், 16. உரகர், 17. நாகர், 18. போகபூமியர்,

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 தயித்தியர்
2:4 கந்தருவர்
3:4 பூதம்

4:1-2 பசாச ரந்தரர்

5-6 ஆகாச வாசியர் போகபூமியரெனப்

பதினெண் கணத்தின் பகுதி யாகும். (166)

2451. அரசர்க்கு மூவகையில் பதினெண் திணைவகை

அமைச்சர், புரோகிதர், சேனா பதியர்,
(தவத்தொழில்), தூதர், சாரணர் என்ன
ஆண்டுக் கூறிய ஐம்பெருங் குழுவும்—
கணக்கரும், மணிய காரரும், (மற்றைக்)
கனகச் சுற்றமும், கடைகாப் பாளரும்,
நகர மாக்களும், (நனி) படைத் தலைவரும்,
இவுளி மறவரும், யானை வீரரும் என
எண்ணிக் கூறிய எண்பேர் ஆயமும்—
அடுத்த நட் பாளரும், அந்த ணாளரும்,
மடைத்தொழில் வாணரும், மருத்துவம் செயுநரும்,
நிமித்த காரரும் என்ன நிகழ்த்திய
ஓவா ஐம்பேர் உறுதிச் சுற்றமும்—
ஆயமும் பாடலும் அடல் கெழு வேந்தற்கு
பகுத்த பதினெண் திணைப்பா வோரே.

அரசர்க்கு மூவகையின் பதினெண் திணைவகை (18)

[1] ஐம்பெருங் குழு: 1. அமைச்சர், 2. புரோகிதர், 3. சேனாபதியர், 4. தூதர், 5. சாரணர், [2] எண்பேர் ஆயம்: 6. கணக்கர், 7. மணியகாரர், 8. கனகச் சுற்றம், 9. கடைகாப்பாளர், 10. நகரமாக்கள், 11. படைத் தலைவர், 12. இவுளி மறவர், 13. யானைவீரர், [3] ஐம்பேர் உறுதிச் சுற்றம்: 14. நட்பாளர், 15. அந்தணாளர், 16. படைத் தொழில்வாணர், 17. மருத்துவம் செயுநர், 18. நிமித்தகாரர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 அமாத்தியர்

2:1 தவாத்தொழில், 4 என்றிவர், என்றிவை

தவத்தொழிலாளர் சாரணர் என்றிவை

3 அரசர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே .
பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே
4:2 கரணக் கிளைஞரும், கரணத் திரளுங்
3-4 கருமவிதி காரரும்
7:4 வீரரும்
8 அரசர்க் கெண்பெய ராய மென்ப
8:2-4 கென்பே ராய மெனப்படும்
10:1-2 மடைத்தொழி லாளரும்
3-4 மருத்துவஞ் செய்ந்நரும், மருத்துவக் கலைஞரும்
11:3-4 நீணில வேந்தர்க்
12 குரைத்த வைம்பெய ருறுதிச் சுற்றம்
12:1-2 குரைத்த வைம்பே
13 உரைத்தமுப் பாலு முயர்குடை வேந்தர்க்குப்
13:3-4 முயர்குல வேந்தர்க்குப்
14 பகுத்த பதினெண் கடைப்பா லோரே
14:3-4 குடைப்பா வோரே, குணனுடைப் பாலோர். (167)

2452. யாக்கையின் பதினெண் குற்றம்

பசியும், நீர் வேட்கையும், பயமும், வெகுளியும்,
உவகையும், வேண்டலும், நினைப்பும், உறக்கமும்,
நரையும், நோய்ப் படுதலும், பிறப்பும், இறப்பும்,
மதமும், இன்பமும், அதிசயமும், வெயர்த்தலும்,
கதமும், கையறவும் ஆகும் என்ப
மாய யாக்கைப் பதினெண் குற்றம்
இக்குற்றம் நீங்கியோர் வச்சிர யாக்கையர்.

யாக்கையின் பதினெண் குற்றம் (18)

1. பசி, 2. நீர் வேட்கை, 3. பயம், 4. வெகுளி, 5. உவகை, 6. வேண்டல், 7. நினைப்பு, 8. உறக்கம், 9. நரை, 10. நோய்ப்படுதல், 11. பிறப்பு, 12. இறப்பு, 13. மதம், 14. இன்பம், 15. அதிசயம், 16. வெயர்த்தல், 17. கதம், 18. கையறவு.

பாடவேறுபாடு—விளக்கம்

பதினெண் குற்றம் நீங்கியோர் வச்சிரகாயர் அவர்.
1:1-2 பசிநீர் வேட்டலும்
3:1-2 நரையு நோய்ப் படுத்தலும் நரையு நோயும்
3:3-4 மரணமும் பிறப்பும்
4:4 வேர்த்தலும் வியர்த்தலும்
5:1 கேதமுங் கைதவமுங்
7:2 நிலக்கியோர், 4. யாக்கையோர், காயர். (168)

2453. பதினெண் புராணம்

மச்சம், கூர்மம், வராகம், வயிணவம்,
பற்பம், பிரமம், பாகவதம், சைவம்,
மார்க்கண் டேயம், காந்தம், வாமனம், கருடம்,
பிரமாண்டம், இலிங்கம், பிரமகை வர்த்தம்,
(தீதுஇல்) பவுடிகம், நாரதம், ஆக்கி னேயம்,
பாற்பரு **பதினெண் புராணம்** என்ப.

பதினெண் புராணம்: (18)

1. மச்சம், 2. கூர்மம், 3. வராகம், 4. வயிணவம், 5. பற்மம், 6. பிரமம், 7. பாகவதம், 8. சைவம், 9. மார்க்கண்டேயம், 10. காந்தம், 11. வாமனம், 12. கருடம், 13. பிரமாண்டம், 14. இலிங்கம், 15. பிரம கைவர்த்தம், 16. பவுடிகம், 17. நாரதம், 18. ஆக்கினேயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

மச்சங் கூர்மம் வராகம் வாமனம்
பற்பம் வயிணவம் பாகவதஞ் சைலம்
இலிங்கம் பவழிக நாரதங் காருடம்
பிரம்மகை வந்தம் மார்க்கண்டேயங் காந்தம்
பிரமாண்ட மாக்கினேய மென்னும் பெற்றிய
பாற்படு பதினெண் புராண மாகும்
—பேராசிரியர்மு. இராகவையங்கார் பாடம்.

மச்சியங் கூர்மம் வராகம் வாமனம்
பிரமம் வைணவம் பாகவதஞ் சைவ
மிலைங்கம் பௌடிக நாரதீயங் காருடம்
பிரம கைவர்த்த மார்க்கண் டேயங் காந்தம்
பிரமாண்ட மாக்கினேயம் பதும மென்றிவை
பாற்பாடு பதினெண் புராண மாகும்—அச்சுப்பிரதி.

இந்நூற்பாவில் பெயர்கள் மாறி மாறி அமையப் பாட வேறுபாடு மிகுதியாக உள்ளது. எனவே பழைய ஏட்டிலும் அச்சிலும் கண்ட முறை தழுவி மேலே காட்டப்பட்டுள்ளன.

2454. பதினெட்டு உபபுராணம்

நாரசிங்கம், சனற்குமாரம், அனந்தம், கவுமாரம்,
நாரதீயம், சிவதன்மம், துருவாசம், நந்தீசம்,
காமியம், ஔசனசம், காளி, கராவையம்,
வாருணம், மாரீசம், மயேசுரம், பராசரம்,
பாற்கவம், பிரமாண்டம் எனப்பதி னெட்டும்
ஆதி உபபுராணம் ஆகும் என்ப.

பதினெட்டு உபபுராணம்: (18)

1. நாரசிங்கம், 2. சனற்குமாரம், 3. அனந்தம், 4. கவுமாரம், 5. நாரதீயம், 6. சிவதன்மம், 7. துருவாசம், 8. நந்தீசம், 9. காமியம், 10. ஔசனசம், 11. காளி, 12. கராவையம், 13. வாருணம், 14. மாரீசம், 15. மயேசரம், 16. பராசரம், 17. பாற்கவம், 18. பிரமாண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

உசநங் கபிலங் காளிசனற் குமாரஞ்
சாருவஞ் சிவதனஞ் சௌரந் துருவாச
நந்தி நாரசிங்கந் நார தீயம்
பராசரம் பார்க்கவ மாங்கிர மாரீச
மானவம் வாசிட்ட லைங்கம் வாருண
மாமுப புராண மவமூன் றென்ப—அச்சுப்பிரதி.

3:2-4 மௌசங் காளியங் கராவையம்
5-6 வாசிட்ட லைங்கம் வாருண மென்ன
உபபுரா ணப்பெய ரறுமூன் றாகும்.

உபபுராணம் பற்றிய நூற்பா சில பிரதிகளில் இல்லை. (170)

2455. பதினெண் தரும நூல்

மனுவே, அத்திரி, விண்டு, வியாசம்,
ஆபத் தம்பம், அங்கிரா, உசனசு,
யாக்கிய வற்கியம், ஆரீதம், வித்தம்,
காத்யாயனம், பராசரம், கவுதம், தெட்சம்,
சங்கம், பிரகற்பதி, யமம், சம் வர்த்தம்எனப்
பாகு பட்டது பதினெண் தருமநூல்.

பதினெண் தருமநூல்: (18)

1. மனு, 2. அத்திரி, 3 விண்டு, 4. வியாசம், 5. ஆபத்தம்பம், 6. அங்கிரா, 7. உசனசு, 8. யாக்கிய வற்கியம், 9. ஆரீதம், 10. வித்தம், 11. காத்யாயனம், 12. பராசரம், 13. கவுதம், 14. தெட்சம், 15. சங்கம், 16. பிரகற்பதி, 17. யமம், 18. சம்வர்த்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

மனுவே யத்திரி விண்டு வாசிட்ட
மியம மாபத்தம்ப மிரேவதஞ் சுரலைவம்
கோச மங்கிராமம் பராசரம் வியாசந்
துவத்தராங் கவுத்துவங் காத்திகேயந் திசாகரம்
பிரகற் பதியே மங்குலீய மென்னத்
தரும நூல் பதினெட் டாகுமென்ப—அச்சுப்பிரதி.

மனுவே யத்திரி ஔரிதம் விண்டு
யாஞ்ஞ வற்கியம் உசனம் ஆங்கீரசம்
இயமம் ஆபத் தம்பம் சம்வர்த்தம்
காத்தி யாயனம் பிரகற்பதி பராசரம்
வியாசம் சங்கலிதம் தர்க்கம் கௌதமம்
சாதான்ம மோடு வசிட்டம் இவையே
தருமநூல் பதினெட் டாகுமென்ப—
பிற்பதிப்பு. (171)

2456. பதினெண் யாகம்

சோதிட் டோமம், அங்கிட் டோமம்,
அத்தியங்கிட் டோமம், வாச பேயம்,
அதிராத் திரகம், சோமயாகம், காடகம்,
சாதுர் மாசியம், சவித்திர மணியே,
புண்ட ரீகம், சிங்காமம், மயேந்திரம்,
அங்கி சமனே, இராச சூயம்,
அச்சுவ மேதம், விச்சுவ் சித்து,
நரமே தம்பிரம மேதம் என்னப்
பதினெட்டு யாகப் பல்பெயர் ஆகும்.

பதினெண் யாகம்: (18)

1, சோதிட்டோமம், 2. அங்கிட்டோமம், 3. அத்தியங்கிட்டோமம், 4. வாசபேயம், 5. அதிராத்திரகம், 6. சோமயாகம், 7. காடகம், 8. சாதுர்மாசியம், 9. சவித்திரமணி, 10. புண்டரீகம், 11. சிவகாமம், 12. மயேந்திரம், 13. அங்கிசமனே, 14. இராசசூயம், 15. அச்சுவமேதம், 16. விச்சுவசித்து, 17. நரமேதம், 18. பிரமமேதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3:4 காண்டகம்
4:1-2 சாதுர்மாதிரம்

9 ஆகுமற்றின்னும் யாக நாமம்.
சோதிட் டோம மக்கினிட் டோம
மத்தியக்கினிட் டோமம் வாச பேய
மத்தி ராத்திரஞ் சோமயாகங் காடகஞ்
சாவர் மாசியஞ் சவித்திரா மணியே
புண்ட ரீகஞ் சிவகாம மயேந்திர
மங்கிச் சமனே யிராச சூய
மச்சுவ மேதம் விச்சுவ தித்து
நரமேதம் பிரம மேத மென்னப்
பதினெட் டியாகப் பலபெய ராகும்—அச்சுப்பிரதி

அக்கினிட் டோம மத்தியக்கினிட் டோமம்
உத்தியஞ் சோடசீ வாச பேயம்
அத்திராத் திரமம் தோரி யாமம்
அக்கினி யாதேய மக்கினி கோத்திரம்
தரிச பூர்ண மாசஞ் சாதுர் மாசியம்
நிரூட பசுபந்த மாக்கி ராயணம்
சௌத்தி ராமணி யட்டகை பார்வணம்
சிராத்தஞ் சிராவணி ஆக்கிர காயணி
சைத்திரி யோடாசுவ யுசியெனப்
பதினெட் டியாகப் பல்பெய ராகும்—பிற்பதிப்பு. (172)

2457. இருபத்தைந்து தத்துவம்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என
அளவின் நின்ற ஐம்பெரும் பூதமும்,
ஐந்து வாயிலும், அவற்றின் புலனும்,
கை, கால், குதம், வாய், மானுடக் குறிஎன
கன்மேந் திரியங்கள் ஐந்தும், அவற்றொடு,
மனம், புத்தி, ஆங்காரம், சித்தம்நான்கும்,
இயமா னனும்என இருபத்தைந்து தத்துவம்.

இருபத்தைந்து தத்துவம்: (25)

ஐம்பெரும் பூதம்: 1. நிலம், 2. நீர், 3. நெருப்பு, 4. காற்று, 5. ஆகாயம்; **ஐந்து வாயில்:** 6. மெய், 7. வாய், 8. கண், 9. மூக்கு, 10. செவி, **ஐந்து புலன்:** 11. சுவை, 12. ஒளி, 13. ஊறு, 14. ஓசை, 15. நாற்றம்; **கன்மேந்திரியங்கள் ஐந்து:** 16. கை, 17. கால், 18. குதம், 19. வாய், 20. மானுடக்குறி, 21. மனம், 22. புத்தி, 23. அகங்காரம், 24. சித்தம் 25. இயமானன்.

பாடவேறுபாடு—விளக்கம்

நிலநீர் தேயு வாயுவா காசமென்
றளவி னின்ற ஐம்பெரும் பூதமும்
ஐந்து வாயிலும் அவற்றறி புலனைந்தும்
வாக்குப் பாதம் பாணிபா யிருபத்தமென்
றாக்கிய கருமேந் திரியங்க ளைந்தும்

மனம்புத்தி யாங்காரம் சித்த நான்கும்
இயமா னனுமிருபத் தைந்து தத்துவம்
என்றும் பிரதிகளில் பாடம் உண்டு.

1:1-2 ஆய கருமேந்
3-5 ஐந்து வாயிலு மவற்றின் புல
னைந்துங் கைகால் வாய்பாயு ருபத்தமென்
றைவகைக் கன்மேந் திரியங்க டாமும். (173)

2458. இருபத்தெட்டு அலங்காரம்

உருவகம், உவமை, வழிமடக்கு, நிலைமடக்கு,
(விரிசுடர்) விளக்குஎன விரவி வருவனவும்,
வேற்றுமை நிலையே, வெளிப்படு நிலையே,
வார்த்தை, தன்மை, பிறபொருள் வைப்புஎனப்
பாற்படக் கிளந்த பகுதியின் வருநவும்,
சிறப்புமொழி, சிலேடை, மறுத்துமொழி நிலையே,
நோக்கே, உட்டொடர் தொகைமொழி, மிகை மொழி,
உடனிலை, கூட்டம், உவமான முருவகம்,
துவலா நுவற்சி, தலைக்கட் டியமொழி,
நிதரிசனம், பாராட்டு, ஒருங்கிய நிலையே,
ஐயம், உயர்வே, விரவியல், வாழ்த்து என
எய்தக் கூறிய இருபத்தெட்டு அலங்காரம்.

இருபத்தெட்டு அலங்காரம்: (28)

1. உருவகம், 2. உவமை, 3. வழிமடக்கு, 4. நிலை மடக்கு, 5. விளக்கு, 6. வேற்றுமைநிலை, 7. வெளிப் படுநிலை, 8. வார்த்தை, 9. தன்மை, 10. பிறபொருள் வைப்பு, 11. சிறப்புமொழி, 12. சிலேடை, 13. மறுத்து மொழி நிலை, 14. நோக்கு, 15. தொகை மொழி, 16. மிகை மொழி, 17. உடனிலை, 18. கூட்டம், 19. உவமான முருவகம், 20. துவலா நுவற்சி, 21. தலைக்கட்டிய மொழி, 22. நிதரிசனம், 23. பாராட்டு, 24, ஒருங்கிய நிலை, 25. ஐயம், 26. உயர்வு, 27. விரவியல், 28. வாழ்த்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 வழிநிலை மடக்கே
2:3 மரீஇ, மருவி
7(முதல்) நோக்கே யுட்கோள் தொகைமொழி மிகுதிமொழி
வார்த்தை தன்மை பிறபொருள் வைப்பெனப்
பாகுபடக் கிளந்த பகுதியின் வருதவும்
சிறப்பு மொழிநிலை சிலேடை மறுத்து
மொழியு நிலையே யுடனிலைக் கூட்டம்
உவமான முருவக நுவலா நுவற்சி
தலைக்கீட் டுயர்மொழி தரிசனம் பாராட்
டொருங்கிய னிலையே வைய முயர்வே
விரவியல் வாழ்த்தே யென்ன வருபவை
எய்தக் கூறிய இருபத்தெட் டலங்காரம். (174)

2459. முப்பத்திரண்டு அறம்

ஆதுலர் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறு
சமயத்தோர்க் குணவு, பசுவுக்கு வாயுறை,
சிறைச்சோறு, ஐயம், நடைத் தின்பண்டம், மகச்சோறு,
மகப்பெறு வித்தல், மகவளர்த்தல், மகப்பால்,
அறவைப்பிணம் சுடுதல், அழிந்தோரை நிறுத்தல்,
வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய்மருந்து,
கண்ணாடி, நாளோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய்,
பெண்போகம், அட்டூண், பிறரறங் காத்தல்,
தண்ணீர்ப் பந்தர், மடம், தடாகம், கா,
ஆவுரிஞ்சு நடுதறி, ஏறு விடுத்தல்,
விலைஉயிர் கொடுத்துக் கொலைஉயிர் மீட்டல்
இச்செயல் முப்பத் திரண்டுஅறம் என்ப.

முப்பத்திரண்டு அறம்: (32)

1. ஆதுலர் சாலை, 2. ஓதுவார்க்கு உணவு, 3. அறுசமயத்தோர்க்கு உணவு, 4. பசுவுக்கு வாயுறை, 5. சிறைச்சோறு, 6. ஐயம், 7. நடைத் தின்பண்டம், 8. மகச்சோறு, 9. மகப்பெறுவித்தல், 10. மகவளர்த்தல், 11. மகப்பால், 12. அறவைப் பிணம் சுடுதல், 13. அழிந்தோரை நிறுத்தல்,

14. வண்ணார், 15. நாவிதர், 16. வதுவை, 17. பூணூல், 18. நோய் மருந்து, 19. கண்ணாடி, 20. நாளோலை, 21. கண்மருந்து, 22. தலைக்கெண்ணெய், 23. பெண் போகம், 24. அட்டூண், 25. பிறரங்காத்தல், 26. தண்ணீர்ப் பந்தர், 27. மடம், 28. தடாகம், 29. கா, 30. ஆவுரிஞ்சுதறி, 31. ஏறுவிடுத்தல், 32. ஓலை உயிர் கொடுத்துக் கொலை உயிர் மீட்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

8:2-3 ஐயந்தின் பண்ட
5 அறப்பிணஞ் சுடுத லறவைத் தூரியம்
10 விலங்கிற் குணவே யேறு விடுத்தல்
11 விலையது கொடுத்துக் கொலையது தவிர்த்தல்
12:1 என்றிவை. (175)

2460. முப்பத்து முத்தேவர்

ஆதித்தர் பன்னிருவர், அசுவினிகள் இருவர்,
ஈசர் பதினொருவர், எண்மர் வசுக்கள்
ஆகமுப் பத்து முத்தேவர் என்ப.

முப்பத்து முத்தேவர்: (33)

1. ஆதித்தர் பன்னிருவர் (2447 ஆம் நூற்பா பார்க்க), 2. அசுவினிகள் இருவர், 3. ஈசர் பதினொருவர் (2446 ஆம் நூற்பா பார்க்க), 4. எண்மர் வசுக்கள்—ஆக முப்பத்து மூன்று தேவர் ஆவர். (176)

2461. ஓரறிவு உயிர்

உற்றுஅறி புலனாம் ஒன்றே உடைமையின்,
மற்றைப் புல்மரம் ஓர்அறி வினவே.

ஓரறிவு உயிர்:

உற்று அறி புலன் ஒன்றே உடையது:
புல், மரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 புலன தொன்றே
2 மற்றப் புல்லு மரமுமோ ரறிவே. (177)

2462. ஈரறிவு உயிர்

உற்றறி புலன், நா இரண்டும் உடைமையின்,
அட்டையும் நந்தும் போல்ப ஈரறிவே.

ஈரறிவு உயிர்: (2)

1. உற்றறிபுலன், 2. நா அறிவு;
அட்டை, நந்து போல்வன.

பாடவேறுபாடு—விளக்கம்

1 உற்றறி புலனு நாவு முடைமையின் (178)

2463. மூவறிவு உயிர்

உற்றறி புலன், நா, மூக்கும் உடைமையின்
முற்பெறு சிதல், எறும்பு இனைய மூவறிவே.

மூவறிவு உயிர்: (3)

1. உற்றறிபுலன், 2. நா, 3. மூக்கு;
சிதல், எறும்பு. (179)

2464. நாலறிவு உயிர்

உற்றறி புலன், நா, மூக்கொடு, கண்ணும்
பெற்ற வண்டினம் போல்ப நால்அறிவே.

நாலறிவு உயிர்: (4)

1. உற்றறிபுலன், 2. நா, 3. மூக்கு, 4. கண்;
வண்டு போல்வன.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பெற்ற வண்டு ஞெண்டுநா லறிவே. (180)

2465. ஐயறிவு உயிர்

உற்றறி புலன், நா, மூக்கொடு, கண், செவி,
மக்களும் மாவும் ஐயறி வினவே.

ஐயறிவு உயிர்: (5)

1. உற்றறிபுலன், 2. நா, 3. மூக்கு, 4. கண்,
5. செவி. மக்கள், மா.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 மைந்தறி வினவே. (181)

2466. ஆறறி உயிர்

மனத்தோடு ஆறுஅறி வினரே மக்கள்
ஒருசார் விலங்கும் அது பெறற்கு உரித்தே.

ஆறறி உயிர்: (6)

1. உற்றறிபுலன், 2. நா, 3. மூக்கு, 4. கண்,
5. செவி, 6. மனன்; மக்கள், ஒருசார் விலங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-4 விலங்கிற்கு மதுபெறற் குரிய. (182)

2467. விளம்பனத்து இயற்கை

விளம்பனத்து இயற்கை விரிக்குங் காலை.
ஆரியம் தமிழொடு நேரிதின் அடக்கி,
உலகின் தோற்றமும், ஊழியின் இறுதியும்,
வகைசால் தொண்ணூற் றாறுவா தியரும்,
வேத நாவினர், வேதியர் ஒழுக்கமும்,
ஆதிக் காலத்து அரசர் செய்தியும்
அவரவர் நாட்டில் அறியும் வகையால்
ஆடியும் பாடியும் அறிவுவரக் கிளத்தல்.

விளம்பனத்து இயற்கை:

ஆரியக்கூத்து தமிழ்க்கூத்து என்னும் வகையில் உலகின் தோற்றம், ஊழியின் இறுதி, தொண்ணூற்றாறுவாதியர், வேதியர் ஒழுக்கங்கள், ஆதிக்காலத்து அரசர் செய்தி முதலியவற்றை ஆடியும் பாடியும் கேட்பார்க்கு அறிவு வரும் வகையில் எடுத்துச் சொல்லுதலாகும்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: காவிய இயற்கை

1:1-2 காவிய வியற்கை—அச்சுப்பிரதி.

2:2 தமிழால்

4:3-4 றறுவர தியற்கையும்

7:2-4 அவரவர் நாட்டா லறியு மாற்றால்

4 மாற்றலும். (183)

2468. ஆண்பாற் பிள்ளைப் பாட்டு வகை

திங்கள் இரண்டில் தெய்வக் காப்பும்,
ஐந்தாம் திங்களில் செங்கீ ரையும்,
ஏழாம் திங்களில் தாலப் பாட்டும்,
எட்டாம் திங்களில் இன்னமுது ஊட்டலும்,
ஒன்பதாம் திங்களில் சப்பா ணியும்,
பத்தாம் திங்களில் முத்தம் கூறலும்,
ஆண்டுவரை அகவையின் ஈண்டுவரு கென்றலும்,
ஈரெண் திங்களில் அம்புலி காட்டலும்,
இரண்டாம் ஆண்டில் சிறுபறை கொட்டலும்,
மூன்றாம் ஆண்டில் சிற்றில் சிதைத்தலும்,
நாலாம் ஆண்டில் சிறுதேர் உருட்டலும்,
வைத்தமுந் நான்கு ஆண்டு எல்லை வரையில்
கச்சில் சுரிகை காமுறப் புனைதலும்
பெற்றி ஆண்பாற் பிள்ளைப் பாட்டே.

2467, யாப்பருங் கல விருத்தி—பக்கம் 526.

ஆண்பாற் பிள்ளைப்பாட்டு வகை: (12)

1. தெய்வக்காப்பு - இரண்டாம் திங்கள், 2. செங்கீரை-ஐந்தாம் திங்கள், 3. தாலப் பாட்டு-ஏழாம் திங்கள், 4. அமுது ஊட்டல் - எட்டாம் திங்கள், 5. சப்பாணி - ஒன்பதாம் திங்கள், 6. முத்தம் கூறல் - பத்தாம் திங்கள், 7. வருக என்றல் - ஓராண்டு எல்லை, பன்னிரண்டாம் திங்கள், 8. அம்புலி காட்டல் - பதினாறாம் திங்கள், 9. சிறுபறை கொட்டல் - இரண்டாம் ஆண்டு, 10. சிற்றில் சிதைத்தல்-மூன்றாம் ஆண்டு, 11. சிறு தேருருட்டல்-நாலாம் ஆண்டு, 12. கச்சில் சுரிகை காமுறப் புனைதல் - பன்னிரண்டாம் ஆண்டு வரை.

பாடவேறுபாடு—விளக்கம்

2.3-4 செங்கீரை யாடலும்
3:3-4 இன்னமு தூட்டலும், தாலின் பாட்டும்
4:3-4 தாலப் பாட்டும், இன்னமிர் தூட்டலும்
5 ஒன்பதாந் திங்கட் குயர்சப் பாணியும்
8. ஈரெண் திங்களில் போதணிந் தேத்தலும்—தேற்றலும்
10. 3-4 சௌளக நீவியும், சௌளக் கலையும். (184)

2469. பெண்பாற் பிள்ளைப் பாட்டு வகை

ஆண்டுவரை அகவயின் முன்உரைத் தனவும்,
மூன்றாம் ஆண்டில் குணமணம் மொழிதலும்,
ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்,
பனிநீர் தோய்தலும், பாவை யாடலும்,
சிறுசோறு அடுதலும், சிற்றில் இழைத்தலும்,
ஊசல் ஆடலும் என்றுஇவை உள்ளிட்டுப்
பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே.

பெண்பாற் பிள்ளைப் பாட்டு வகை: (14)

1. தெய்வக் காப்பு - இரண்டாம் திங்கள், 2. செங்கீரை-ஐந்தாம் திங்கள், 3. தாலப் பாட்டு - ஏழாம் திங்கள்,

4. அமுதூட்டல்-எட்டாம் திங்கள், 5. சப்பாணி-ஒன்பதாம் திங்கள், 6. முத்தம் கூறல்-பத்தாம் திங்கள், 7. வருக என்றல் - ஓராண்டு எல்லை - பன்னிரண்டாம் திங்கள், 8. குழுமணம் மொழிதல் - மூன்றாம் ஆண்டு, 9. ஐந்து முதல் ஒன்பது ஆண்டு வரை - ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றல், 10. பனிநீர் தோய்தல், 11. பாவை யாடல், 12. சிறுசோறடுதல், 13. சிற்றிலிழைத்தல், 14. ஊசலாடல். (185)

2470. பேடி இலக்கணம்

பேடி இலக்கணம் பேசுங் காலை,
நச்சுப் பேசலும், நல்லுரை ஓர்தலும்
அச்சு மாறியும், ஆண்பெண் ஆகியும்,
கைத்தலம் ஒன்றைக் கடுக வீசியும்,
மத்தகத்து ஒருகை மாண்புஅற வைத்தலும்,
விலங்கி மிதித்தும் விழிவேறு ஆகியும்,
துளங்கித் தூங்கிச் சுழன்று துணிந்தும்,
நக்கு நாணியும், நடம்பல பயின்றும்,
பக்கம் பார்த்தும், பங்கி திருத்தியும்,
காரணம் இன்றிக் கதம்பல கொண்டும்,
வார்அணி கொங்கையை வலிய நலிந்தும்,
இரங்கியும், அழுதும், அயர்ந்து அருவருத்தும்,
குரங்கியும், கோடியும், கோதுகள் செய்தும்,
மருங்கில் பாணியை வைத்தும் வாங்கியும்
இரங்கிப் பேசியும், எல்லேல் என்றும்
இன்னவை பிறவும் இயற்றுதல் இயல்பே.

பேடி இலக்கணம்:

பேடியின் பேச்சு, நடை, பல்வேறு மெய்ப்பாடு தோன்றச் செய்யும் செய்கைகள் முதலியவற்றை இந்நூற்பா தொகுத்துத் தந்துள்ளது.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 பேடிய திலக்கணம்
2;4 யோதலும்-அச்சுப்பிரதி

3:2-3 மாறி யாண் பெண்
5:3 மாண்புற
6:3-4 வழிவே றாகியும்-அச்சுப்பிரதி.
7:2 தாங்கிச் 4 நோக்கியும், திரிந்தும்
9:3-4 பாங்கு திருத்தியும்
10:3 கடிபல
13:2 கோட்டியும்
15:1 இரங்கப் 3-4 எல்லெண விரந்தும் (186)

2471. கரந்துறை கோளின் வகை

அராக்கோள் இரண்டும், பருதியும், சூரியனும்,
பரிவேடமும், தூமமும், இந்திர வில்லும்,
(பெருகு) வான் மீனும், **கரந்துறை கோளே.**

கரந்துறை கோளின் வகை: (7)

1. அராக்கோள் இரண்டு: இராகு - கேது, 2. பருதி, 3. சூரியன், 4. பரிவேடம், 5. தூமம், 6. இந்திரவில், 7. வான்மீன்.

பாடவேறுபாடு—விளக்கம்

3 வானமீனும் பிறவும் கரந்துறை கோளே. (187)

2472. திருப்பொறி வகை

சங்கு, சக்கரம், மதியம், அரிமா, விடபம்,
வேழம், ஆசனம், நிறைகுடம், தோட்டி,
விளக்கு, முடி, கடல், சூலம், கொடியே,
தாமரை (செயிர் *தீர்*) இரேகை, திருப்பொறி
ஆகும் என்பர் அறிந்திசி னோரே.

திருப்பொறி வகை: (16)

1. சங்கு, 2. சக்கரம், 3. மதியம், 4. அரிமா, 5. விடபம், 6. வேழம், 7. ஆசனம், 8. நிறைகுடம், 9. தோட்டி, 10. விளக்கு, 11. முடி, 12. கடல், 13. சூலம், 14. கொடி, 15. தாமரை, 16. இரேகை.

பாடவேறுபாடு—விளக்கம்

சங்கு சக்கர மதிய மரிமா
விடபம் வேழம் பதாகை நிறைகுடம்
தோட்டி விளக்கு முடிகடல் சூலம்
மயிலே கார்முகம் துடியே தாமரை
செயிர்தீ ரிலேகை திருப்பொறி யாகும்.

என்பதும் சில பிரதிகளில் காணும் பாடம்.

முடிகுடை கவரி தோட்டி முரசு
சக்கரம் யானை கொடிமதில் தோரணம்
நீர்க்குடம் பூமாலை சங்குகடல் மகரம்
ஆமை யிணைக்கயல் சிங்கந் தீபம்
இடப மாசன மிவையே திருப்பொறி
ஆகு மென்பர் அறிந்திசி னோரே—அச்சுப்பிரதி.

இதன்பின் அட்டமங்கலம் என்பது பற்றிய நூற்பா ஒன்று ஒருசில பிரதிகளில் உள்ளது.

கவரி கொடிகுடை கயலிணை மகரம்
முரசு தோரணமாலை யட்டமங் கலமே. (188)

2473. ஓரொரு புலன்வழி இறக்கும் உயிரின் வகை

யானை ஊற்றின், மீனது சுவையில்,
அசுணம் இசையில், அளி நாற்றத்தில்,
ஏனைப் பதங்கம் உருவம் கண்டு உயிர்
இழப்பன வாகும் என்மனார் புலவர்.

ஓரொரு புலன்வழி இறக்கும் உயிரின்வகை:

1. யானை-ஊற்றின் உயிர் இழக்கும், 2. மீன்-சுவையில் உயிர் இழக்கும், 3. அசுணம் - இசையில் உயிர் இழக்கும், 4. அளி-நாற்றத்தில் உயிர் இழக்கும், 5. பதங்கம்- உருவம் கண்டு உயிர் இழக்கும்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: ஐம்புலத்துயிரிழக்கும் வகை—அச்சுப்பிரதி.
1:3-4 நீரின்மீன் சுவையில். மீன்சுவை யதனில்
2-3 அசுண மிசையி லளியே நாற்றத்

தேனைப் பதங்க மொளியி லுயிரிழப்பு
2-3 அளியே நாற்ற மசுண மீசையே
ஒளியே பதங்கம் வேட்டுயி ரிழப்பனவே
இதன்பின்,

'அவ்வவர் பொறியுங் கொடியும் படையு
மவ்வவர் பெயர்களு முணர்த்தலு மாகும்'
என ஒரு நூற்பா ஒருசில பிரதிகளில் உள்ளது. (189)

2474. அரனூர்தி ஆயுதவகை

அரனுடை ஊர்தி இடபம் ஆகும்;
பரசு, சூலம், பினாகம் அவன் படையே.

அரனூர்தி ஆயுதவகை: அரனுடை ஊர்தி:

இடபம்;

அரண்படை:

பரசு, சூலம், பினாகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 பரசுசூலம் பினாகவில் படையே.
பரசு சூலம் விற்படை மழுவாள்
அங்குசம் வச்சிர மனல்வரதம் பாம்பு
அபய மிவையே யரனது தசாயுதம். (190)

2475. அரியூர்தி ஆயுதவகை

அரியுடை ஊர்தி கருடன் ஆகும்.
சார்ங்கம், வாள், தண்டு, ஆழி, சங்கம் அவன் படை.

அரியூர்தி ஆயுதவகை: அரியூர்தி:

கருடன்;

அரியின் படை:

சார்ங்கம், வாள், தண்டு, ஆழி, சங்கம்.

பாடவேறுபாடு— விளக்கம்

அரியுடை யூர்தி கருட னாகும்
சக்கரம் சங்கு தண்டுவாள் சார்ங்கம்
மிக்க மாயோன் பஞ்சா யுதமே
பலமிக்க மாயோன் பஞ்சாயுதமே-அச்சுப்பிரதி. (191)

2476. பலதேவன் படை கொடி வகை

பலதே வன்படை கலப்பை ஆகும்;
கொடிபனை ஆம்எனக் கூறினர் புலவர்.

பலதேவன் படைகொடி வகை: பலதேவன் படை:

கலப்பை;

பலதேவன் கொடி:

பனை. (192)

2477. அயனூர்தி கொடி படை வகை

அயனுடை ஊர்தி அன்னம் ஆகும்;
படையே பாசம்; வேதம் அவன் கொடி.

அயனூர்தி கொடி படை வகை:

அயனுடை ஊர்தி:

அன்னம்; அயன்படை; பாசம்; அயன்கொடி வேதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 அன்னப் புள்ளு, அன்னப் புள்ளே
2 படை பாச மாகுங் கொடி வேத மென்ப
படைபாச மங்தசங் கொடி வேத மென்ப— அச்சுப்பிரதி.
(193)

2478. குமரனூர்தி கொடி படை வகை

குமரன் ஊர்தி மயிலும் யானையும்;
படை வேல் ஆகும்; கொடி கோழி ஆகும்.

குமரனூர்தி கொடி படை வகை:

குமரன் ஊர்தி:

மயில், யானை; **படை:** வேல்; **கொடி:** கோழி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கொடியே கோழி படை வே லாகும்

2:1-2 கொடியே சேவல். (194)

2479. சாத்தாவினூர்தி கொடி படை வகை

காரி ஊர்தி கரியே, குதிரை.

கொடியே கோழி; படைஎறி யீட்டி.

சாத்தாவி னூர்தி கொடி படை வகை: சாத்தாவின் ஊர்தி:

கரி: குதிரை; **கொடி:** கோழி; படை: எறியீட்டி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 யானை யாகும், குதிரை யாகும்

2 கோழிக் கொடியு மவன்கொடி யாகும்.

சாத்தாவி னூர்தி கொடி தாரவகை

காரி யூர்தி யானை யாகும்

கோழி யவர்க்குக் கொடியா கும்மே

பூரணையும் புட்கலையு மவர்தார மாகும்—அச்சுப்பிரதி.

(195)

2480. இயமனூர்தி படை வகை

இயமனுடை ஊர்தி எருமை யேறு;

படை பாசம், தண்டு, சூலம் ஆகும்.

இயமனூர்தி படைவகை: இயமனுடை ஊர்தி:

எருமை யேறு: **படை:** பாசம், தண்டு, சூலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 யமனுடை

2 படையே பாசந் தண்டு மாகும்

படையது பாசமுந் தண்டும் ஆகும். (196)

2481. கூற்றின் படை

கூற்றின் படையே (கொடுங்) கணிச்சி ஆகும்.

கூற்றின் படை: (1)

கணிச்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: காலனாயுதவகை
2-4 படைகொடுங் கணிச்சி யாகும். (197)

2482. குபேரனூர்தி வகை

தனபதி **ஊர்தி** புட்பக விமானம்;
நரவா கனமும் அவர்க்குஉரை பெறுமே.

குபேரனூர்தி வகை: (2)

1. புட்பக விமானம், 2. நரவாகனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 குபேர னூர்தி 4: விமானமும்
2:3-4 ஆமென நவில்வர், மஎ்ற்கு நடைபெறும். (198)

2483. சூரியனூர்தி

தனிக்கால்-பொற்றேர் **அருக்கன் ஊர்தி.**

சூரியனூர்தி:

தனிக்கால்-பொற்றேர் (ஒற்றைச் சக்கரமுடைய தேர்) (199)

2484. சந்திரனூர்தி

வெண்மதி ஊர்தி விமானம் ஆகும்.

சந்திரனூர்தி:

விமானம். (200)

2485. காமன் கொடிபடை

காமன் கொடி, சுறவு, கரும்பு **வில்லு;**
பூவின் வாளி பொருபடை ஆகும்.

காமன்கொடி படை வகை:

காமன் **கொடி:** சுறவு; **வில்:** கரும்பு; **படை:** பூவின் வாளி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 கொடி மீன்
2:1-2 பூவவன் வாளி.

இதனை அடுத்து ஐங்கணை, ஐஞ்சவத்தை, ஐஞ்சலத்தையின் விளைவு ஆகியவை பற்றிய மூன்று நூற்பாக்கள் தஞ்சாவூர்ச் சரசுவதி மகால் சுவடியில் காணப்படுகின்றன. அவை வருமாறு:

வனசஞ் சூத மசோகு முல்லை
குவளை காமன் கொல்லு மைங்கணை.
சுப்பிர யோகமும் விப்பிர யோகமுஞ்
சோகமு மோகமு மரணமு மென்றிவை
ஆகு மவற்றி னஞ்ச வத்தை.
சுப்பிர யோகஞ் சொல்லு நினைவு
விப்பிர யோகம் வெய்துயிர்த் திரங்கல்
சோகம் வெதுப்பு துய்ப்பன தெவிட்டல்
மோக மழுதன் மொழிபல பிதற்றல்
மரணம் மயக்கமு மாய்தலு மாமே. (201)

2486. இந்திரனூர்தி படை கொடி வகை

இந்திரன் ஊர்தி வெள்ளை வாரணம்;
படையே வச்சிரம், இடி, **கொடி** ஆகும்.

இந்திரனூர்தி படை கொடி வகை:

இந்திரனூர்தி: வெள்ளைவாரணம், படை. வச்சிரம்; **கொடி;** இடி.

பாடவேறுபாடு—விளக்கம

2 அவன்படை வச்சிர மிடிகொடி யாகும்.

தஞ்சாவூர்ச் சரசுவதிமகால் சுவடி ஒன்றில் கண்ட நூற்பாக்கள்:

இந்திரன் படையே வச்சிர மென்ப.

இடிகொடி யூர்தி வெள்ளை வாரணம்.

இவன்மகன் செயந்த னென்றா கும்மே.

ஓங்கும் பரிமா யுச்சமிச் சிரவா.

மண்டபம் சுதனம் மாளிகை வசந்தம்.

பண்டா ரப்பெயர் பகரிற் சுதன்மை.

அந்தண் கற்பகச் சோலை நந்த வானம், (202)

2487. காளியூர்தி கொடி வகை

காளி ஊர்தி யாளி ஆகும்.
பேயது ஆகும் அவள் பெருங் கொடியே.

காளியூர்தி கொடி வகை:

காளி ஊர்தி: யாளி; கொடி; பேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 ஏறரி
2:3 அவள்பெறுங் (203)

2488. மூதேவி யூர்தி கொடி வகை

கழுதை ஊர்தியும், காக்கைக் கொடியும்
மொழியுங் காலை மூதேவிக்கு ஆகும்.

மூதேவியூர்தி கொடி வகை:

மூதேவி ஊர்தி: கழுதை; கொடி; காக்கை

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 மூதே விக்கே (204)

2489. சேர பாண்டிய சோழர் கொடி வகை

சேரற்கு விற்கொடி, **தென்னற்குக்** கயற்கொடி,
சோழற்குப் புலிகொடி ஆகும் என்ப.

சேர பாண்டிய சோழர் கொடி வகை:

சேரன் கொடி: விற்கொடி, **பாண்டியன் கொடி;** கயற்கொடி,
சோழன் கொடி. புலிக்கொடி

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 யாகச் சொல்லும்.

இந்நூற்பாவை இருவேறு நூற்பாக்களாக அச்சுப் பிரதி கொண்டுள்ளது. (205)

2490. வேள்புலவரசர் கொடி

கேழல், **வேள்புல** வரசர்**தம் கொடியே.**

வேள்புலவரசர் கொடி:

கேழல்.

பாடவேறுபாடு—விளக்கம்

வேள்புல வரசர் கொடிகேழ லாகும்.
கேழல் வேள்புல வரசர் கொடியே;
அவரவர் பெயருங் கொடியும் படையும்
அவரவர் தம்மோ டறிந்துணர்ந்து கொளுமே.
என்றும் பாடம்.

2:1 அவ்வவர்
3:1 அவ்வவர்
2-4 நம்மோ டறிந்துணர்ந் தோரே
பெயர்க ளுரைத்தலு மாகும். (206)

2491. அரசுவாவின் குறிவகை

காலூர் நான்கும் தனிக்கையும் கோசமும்
வாலுறுப்பொடு ஏழும் மாநிலம் தோய்வது,
பாலும் சங்கும் போலும் கால் உகிரது,
காலினும் ஞான்ற ஒருதனிக் கையினும்,
வாயினும், வாலினும், மருப்பினும் கோறல்
வல்லது, பதின்மூன்று முழச்சுற்று உடைத்தாய்
ஏழு முழம் உயர்ந்து ஒன்பது முழம் நீண்டது.
தீஉமிழ் சிறு கணும் செம்புகரும் உடைத்தாய்
முன்பு உயர்ந்து, பின் பணிந்த தாயின்,
அவ்வியல் யானையை அரசுவா என்ப.

அரசுவாவின் குறி வகை:

கால் முதலிய ஏழ் உறுப்பு நிலம் தோய்வதாய், வெண்ணிற உகிருடையதாய், கால் கை வாய் வால் மருப்புகளால் கொல்லுதல் வல்லதாய், பதின்மூன்று முழச் சுற்றும், ஏழு முழ உயரமும், ஒன்பது முழ நீளமும் உடையதாய், சிறு கண்ணும் செம்புகரும் உடையதாய் முன்பு உயர்ந்து பின்பு தாழ்ந்த அமைப்புடையதாய் இருப்பது அரசுவா ஆகும்.

அரக்கெறி புகருந் திருக்கிளர் கும்பமும்
மத்தக விரிவும் வடிவும் பெற்றது
தீயுமிழ் சிறுகணோடு செவியீ னிறுவி
காற்றிலும் விரைந்து கூற்றினுங் குமுறிக்
காலினுந் தன்றனின் கையினும் பாத்துட
வாலினு மருப்பினுங் கோறல் வல்லது
ஏழுமுழ முயர்ந்து ஒன்பதுமுழ நீண்டு
பத்தொடு மூன்றுமுழச் சுற்ற தாகி
வலக்கோடு முன்புயர்ந்து பின்பணிந்து
வெலற்கரும் யானை யரசுவா என்ப.

வல்ல தேழுயர்ந் தொன்பது முழ நீண்டு
பதின்மூன்று முழஞ்சுற் றுடையது
தீயுமிழ் கண்ணது செம்புக ருடைத்தாய்
முன்புயர்ந்து பிற்பணிந் தாகிய
அவ்வியல் யானை யரசுவா வாகும். (207)

2492. அனுலோமர் வகை

பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் என
நாற்குலத்து வரூஉம் தம்குல நடையின்
உயர்ந்த ஆணினும் இழிந்த பெண்ணினும்
பிறந்த கூட்டத் தவர் அனு லோமர்.

அனுலோமர் வகை:

நாற்குலத்து உயர்ந்த ஆணுக்கும் இழிந்த பெண்ணுக்கும்
பிறந்த கூட்டத்தவர். (208)

2493. பிரதிலோமர் வகை

இழிந்த ஆணினும் உயர்ந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவர்பிரதி லோமர்,

பிரதிலோமர் வகை:

நாற்குலத்து இழிந்த ஆணுக்கும் உயர்ந்த பெண்ணுக்கும்
பிறந்த கூட்டத்தவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 பெயர்ந்த, பிறந்த (209)

2494. அந்தராளர் வகை

அனுலோ மகுலத்து ஆணினும் அவ்வழிப்
பிரதி லோமகுலப் பெண்ணினும் ஆகி
வியந்த கூட்டத்துப் பிறந்தவர் அந்தராளர்.

அந்தராளர் வகை:

அனுலோம குலத்து ஆணுக்கும் பிரதிலோம குலத்துப்
பெண்ணுக்கும் பிறந்த கூட்டத்தவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 அடுத்த, அடைந்த (210)

2495. விராத்தியர் வகை

பிரதி லோமகுலத்து ஆணினும் அவ்வழி
அனுலோம குலத்துப் பெண்ணினும் ஆகி
வியந்த கூட்டத்தவர் விராத்தியர் ஆகும்.

விராத்தியர் வகை:

பிரதிலோம குலத்து ஆணுக்கும் அனுலோம குலத்துப் பெண்ணுக்கும் பிறந்த கூட்டத்தவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 தாணினும் பின்னிலை
2 வியந்தோர் கூட்டத்துப் பிறந்தோர் விராத்தியர். (211)

2496. பல்லக்கணக்கு வகை

இருவிரல் அகலத்து அறுவிரல் ஆழக்
குழிநிறை யப்பள்ளை யாட்டு மயிர்த்தொகை
பற்றியது ஆகும் பல்லம்என் கணக்கே.

பல்லக்கணக்கு வகை:

இருவிரல் அகலத்து அறுவிரல் ஆழக் குழிநிறையப் பள்ளை யாட்டு மயிர்த்தொகை கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 லாழ நீளத்தொடு
2:1 தொருகுழி நிறையப்
இருவிர லகலத் தொருவிர லாழத்
தொருகுழிப் பெய்த வீட்டம் புதைத்தேழ்
உற்ற பள்ளையாட் டிளமயிற் றோகை
பற்றியதாகும் பல்லமென் கணக்கே. (212)

2497. படை யென்னின் பெயர்

ஒருபெருங் களிறும், ஒருபெருந் தேரும்,
புரவி நான்கும், படைஞர்ஐம் பதின்மரும்
பதாதி என்று பகரப் படுமே.

படையெண்ணின் பெயர்: (3)

1. ஒரு களிறு, 2. ஒரு தேர், 3. புரவி நான்கு, 4. படைஞர் ஐம்பதின்மர்-கொண்ட தொகுப்பு-பதாதி என்று கூறப்படும்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பதாதி வகைப் பெயர்.
2:3-4 படைஞ ரைவரும் (213)

2498. சேனா முகம்

பதாதி மும்மடி **சேனா முகமே**

சேனா முகம்:

பதாதி எண்ணிக்கையினும் மும்மடங்கு கொண்டது.

அதாவது:

1. மூன்று கயிறு, 2. மூன்று தேர், 3. பன்னிரு புரவி, 4. நூற்றைம் பதின்மர் படைஞர். (214)

2499. கும்பி

சேனாமுகம் மும்மடி தானாம் கும்பி.

கும்பி:

சேனாமுகத்தின் எண்ணிக்கையிலும் மும்மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

4. குமுதம், கும்பம் (215)

2500. கணம்

கும்பி மும்மடி கொண்டது கணமே

கணம்:

கும்பியினும் மும்மடங்கு கொண்டது

பாடவேறுபாடு—விளக்கம்

1. குமுதம், குன்பம் (216)

2501. வாகினி

கணம்மும் மடியே **வாகினி** ஆகும்.

வாகினி:

கணத்தினும் மும்மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

கணமும் மடியின் பெயர்வா கினியே. (217)

2502. பிரதனை

வாகினி மும்மடி கொண்டது **பிரதனை.**

பிரதனை:

வாகினியினும் மும்மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 யாகும் பிரதனை, 4. பிரதானை, பிரதானம் (218)

2503. சமுகம்

பிரதனை மும்மடி **சமுகம்** ஆகும்.

சமுகம்:

பிரதனையிலும் மும்மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 யாகும் சமுகம், 4. சமூகம் (219)

2504. அனீகம்

சமுகம் மும்மடி அனீகம் ஆகும்.

அனீகம்:

சமுகத்தினும் மும்மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு-விளக்கம்

1—2 சமுகமும் மடங்கே, 3. அனிகம், (220)

2505. அக்குரோணி

அனீகம் ஐயிருமடி ஆகும் **அக்குரோணி.**

அக்குரோணி:

அனீகத்திலும் பத்து மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

அணிகமை யிருமடங் கக்குரோணி யாகும். (221)

2506. ஒன்று-பத்தின் பெயர்

ஏகம், ஒன்றே; தசம், பத்து ஆகும்.

பத்து-ஒன்று

ஒன்று: ஏகம்; **பத்து:** தசம். (222)

2507. நூற்றுக்கும் ஆயிரத்துக்கும் பெயர்

நூறு சதமே; நூற்றுப்பத்து **ஆயிரம்.**

நூறு-ஆயிரம்

நூறு: சதம், **ஆயிரம்:** நூற்றுப்பத்து

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 சகசிர மாயிரம் (223)

2508. பதினாயிரத்தின் பெயர்

பதினா யிரப்பெயர் அயுதம் ஆகும்.

பதினாயிரம்:

அயுதம்

பாடவேறுபாடு—விளக்கம்

ஆயிரப் பத்துப் பதினாயிர மாகும்
பத்து நூறு தசமே பத்தாயிரம். (224)

2509. நூறாயிரத்தின் பெயர்

அயுதம் நூறே பிரமயுதம் ஆகும்.

நூறாயிரத்தின் பெயர்

பிரமயுதம்: அயுதம் நூறு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

3 பிரமயுதம், பிரதயுதம் (225)

2510. பிரமயுதம்

அயுதம் பத்து நூறாயிரம் பிரமயுதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

4 பிரமயுதம், பிரயுதம
நியுதம் பத்தே பிரேயுத மாகி
இயலும் பத்து நூறா யிரமே. (226)

2511. கோடி

பிரமயுதம் பத்து நூறாயிரம் **கோடி.**

கோடி:

பிரமயுதம் பத்து நூறாயிரம்

பாடவேறுபாடு—விளக்கம்

பிரமயுதம் பத்துக் கோடி யாகும்.
பியுதம் பத்துக் கோடி யாகும்.
பிரதயுதம் பத்தே கோடி யென்ப. (227)

2512. அற்புதம்

கோடி பத்தே அற்புதம் ஆகும்.

அற்புதம்:

கோடி பத்து. (228)

2513. சமுத்திரம்

அற்புதம் பத்தே **சமுத்திரம்** ஆகும்.

சமுத்திரம்:

அற்புதம் பத்து மடங்கு

பாடவேறுபாடு—விளக்கம்

அற்புதம் பத்தே கும்ப மாகும்.
கும்பம் பத்தே மகா கும்ப மாகும்.
மகா கும்பம் பத்தே நிகர்வமாகும் (நிகற்ப மாகும்)
நிகர்வம் பத்தே பற்ப மாகும் (நிகற்பம் பத்தே)
பற்பம் பத்தே மகாபற்ப மாகும்.
மகாபற்பம் பத்தே சங்க மாகும்.
சங்கம் பத்தே சமுத்திர மாகும்.
இவ்வாறு சில பிரதிகளில் காணப்படுகிறது, (229)

2514. அந்தியம்

சமுத்திரம் பத்தே அந்தியம் ஆகும்.

அந்தியம்:

சமுத்திரம் பத்து மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

3 அத்தியம் (280)

2515. மத்தியம்

அந்தியம் பத்தே மத்தியம் ஆகும்.

மத்தியம்:

அந்தியம் பத்து மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

1. அத்தியம் (281)

2516. பரார்த்தம்

மத்தியம் பத்தே பரார்த்தம் ஆகும்.

பரார்த்தம்:

மத்தியம் பத்து மடங்கு கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

3 பாரதம்.

இதன் பின் பின்வரும் மூன்று நூற்பாக்கள் சில பிரதிகளில் உள்ளன.

மகா கும்பம்

நூறு கோடி மகா கும்ப மாகும்.

நிகர்வம்

மகாகும்பம் பத்துநூ றாயிரங்கோடி நிகர்வம்.

மகாபற்பம்

நிகர்வ நூறாயிரங் கோடி மகா பற்பம்.
பரார்த்தம் பத்தே பிரமகற்ப மாகும். (282)

2517. பிரமகற்பம்

பரார்த்தம் பத்தே பிரமகற்பம் ஆகும்.

பிரமகற்பம்

பரார்த்தம் பத்துக் கொண்டது.

பாடவேறுபாடு—விளக்கம்

1 பாரதம்
சங்கப் பாரதம் பத்தே பிரமகற்ப மாகும்.
மகா பற்பம் பத்தே பிரமகற்ப மாகும். (283)

2518. சேந்தன் பெருமை

செம்பொற் குடையான் அம்பர்ச் சேந்தன்,
நன்ன ராளன், நலமிகு நாட்டத்தன்,
பன்னிய சிறப்பின் பன்னிரண் டாவது
பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 கிடையான் 3—4 அம்பற் சேந்தன்
2:3-4 நனிநா கரிகன்
4:4 தொகுதியொடு, பன்னிரு தொகுதியும் பண்பொடு
முற்றின-அச்சுப்பிரதி· (284)

திவாகரம்

சொற்பொருள் அகராதி

திவாகரம்

சொற்பொருள் அகராதி

அ-சுட்டு: அ
இ
உ 1820
அஃகல்-சிறுகல் 1377
அஃகுல்லி-உக்காரி 1104
சிற்றுண்டி 1109
அஃகு-ஊறல் 900
அக்கசாலையர்-கண்ணாளர் 200
அக்காரம்-சருக்கரை 1120
அக்கி-கண் 383
அக்கு-சங்குமணி 1052
சாரியை 1816
மனவு 2217
அக்குரோணி-அனீகத்தினும்
பத்து மடங்கு கொண்டது
2505
அகங்கை-அங்கை
குடங்கை 363
அகடு-வயிறு 355
அகணி-மருதநிலம் 922
அகத்தி-அச்சம் 685
அகத்திடுதல்-கவவு 1632
அகப்பா-அகழ் 989
அகம்-வீடு 952
இடப்பகுதி 1023
அகமகிழ்ச்சி-ஆனந்தம்
இன்பம்
கட்டி
தொய்யல் 1464
அகமலர்ச்சி-செம்மாப்பு 1449
அகமார்க்கம்-அருமையிற்
பாடுவது 1883
அகரம்-ஊர் 930
அகரு-அகில் 630
அகல்-சராவம்
சுத்திகை 1318
அகல்மணி-அரதனம்
சலாகை 1030
அகலம்-மார்பு 359
அகலம்-அகலுள்
அகறல்
ஆய்வு
ஆர்
ஆன்றல்
கண்ணறை
நனவு
நனி
பயன்
பரப்பு
பாடு
பாழி
மேல்
வியலிடம்
விரிவு 1376
நனவு 2063
அகலிடம்-பூமி 352
அகலுள்-நாடு 855
ஊர் 930
மருதநிலத்தூர் 935
பெருமை 1363
அகலம் 1376
அகவல்-ஆசிரியப்பா 1849
எழுத்திலாவோசை 1898

அகவிதழ்-அல்லி 831
அகழ்-அகப்பா
அகழி
கிடங்கு
பரிகம் 989
அகழி-அகழ் 989
அகளங்கன்-புத்தன் 12
அகளம்-மிடா 1315
தாழி 1316
அகறல்-அகலம் 1376
கடத்தல் 1595
அகாதம்-நீர்நிதுபுனல் 965
அகில்-அகரு
காகதுண்டம்
பூழில் 630
முருகு 2167
அகிலம்-பூமி 852
முழுது 1367
அகைத்தல்-வளைத்தல் 1575
அலைப்பு 1672
அங்கணம்-பொல்லாநிலம் 911
முற்றம் 964
அங்கதம்-பாம்பு 534
தோளணி 1205
அரவு
தோளணி 2265
அங்கம்-உடல் 342
அங்கம்-உறுப்பு 397
எலும்பு 408
பதினெண்பாடையுள்
ஒன்று 2449
அங்கராகம்-பூசுவன 1061
அங்கனை-பெண்பெயர் 277
அங்காடி-கூலம் 946
நியமம் 2200
அங்காரகன்-நெருப்பு 45
செவ்வாய் 59
அங்கி-நெருப்பு 45
கார்த்திகை 82
சட்டை 1335
அரி (வடமொழிச்சிதைவு) 2266
புகை 2406
அங்கிதம்-உடற்றழும்பு 400
யானைக்கால் 521
அங்குலி-விரல் 364
அங்கை-அகங்கை 363
அங்கை குவித்துக் கொட்டல்
-கொம்மை 1765
அங்கோலம்-அழிஞ்சில் 679
அச்சம்-அகத்தி 685
அஞர்
அதிர்ப்பு
அலமரல்
அழுங்கல்
இடும்பை
இரிதல்
உலைதல்
கம்பலை
கரிப்பு
கவலை
கூசுதல்
சூர்
துணுக்கம்
துளக்கம்
தெருமரல்
நடுக்கம்
பனி
பனித்தல்
பிறக்கம்
புலம்பு
பொதிர்ப்பு
மிறை
விதிர்ப்பு
வெடிப்பு
வெம்மை
வெருவு
வெறி 1484
கம்பலை 1980
கொன்னை 2014
பனி 2186
கடி 2282
அச்சிரநாள் - கூதிர்க் காலம்
பனிக்காலம் 189

அச்சுதம் - அறுகுவெள்
ளரிசி கூடியது 1078
அச்சுதன் - திருமால் 3
அச்சுவத்தம் - அரசு 637
அச்சுவதி - இரலை
ஏறு
ஐப்பசி
தலைநாள்
புரவி
மருத்துவ நாள்
யாழ் 80
அச்சுவம் - குதிரை 419
அச்சோ - அதிசயம் 1439
அசதி - நயச்சொல் 1805
அசலம் - மலை 856
அசலன் - அருகன் 1
அசறு - குழைசேறு 909
பொல்லா நிலம் 911
அசனம் - சோறு 1095
அசனி - இடியேறு 147
அசுணப் புள் (அசுணமா)
—கேகயப்புள் 544
அசுணம் - இசையில் உயிர்
இழக்கும் 2473
அசுத்தம் - தூய்தன்மை
வாலாமை 1517
அசும்பு - கிணறு 899
ஊறல் 900
பொல்லா நிலம் 911
அசுரநாள் - மூலம் 98
அசுரர் - அவுணர்
தகுவர்
தயித்தியர்
தானவர்
நிசாசரர் 80
அசுரர் மந்திரி - சுக்கிரன் 62
அசேதனம் - அறிவின்மை 1522
அசைச் சொல் - அன்று
ஆம்
இன்று 1809
அரோ
கா
பிற
பிறக்கு
போ
மாது
யா 1813
அசைத்தல் - கட்டல் 1682
அசைதல் - சோம்பு 1481
தங்கல் 1612
துயல்வரல் 1736
தங்கல்
நோதல் 2197
அசை நிலை - அந்தில் 2012
மற்று 2137
அசைப்பு - சொல் 1773
அசோகு - காகோளி
செயலை
பிண்டி 638
அசோகுடைச் செல்வன்-
அருகன் 1
அஞ்சம் - அன்னம் 568
அஞ்சல் — சோம்பு 1481
அஞ்சலி - தொழுதல் 1637
அஞ்சலிகை - வாவல் 586
அஞ்சனம் - கருமை 1391
அஞ்சனம் எழுது கருவி-
கோல் 2108
அஞ்சாமை - சூர் 1927
அஞ்ஞை - அறிவிலோன் 239
அஞர் - அறிவிலோன் 239
வழுக்கு நிலம் 984
